# பிரதேச சபைகளுக்கான நியமத்துணைவிதி

## அத்தியாயம் 1 – 6

**Provincial Gazete No and Date: 1952/16, 2016.02.02**

**Adoptation Gazete No and Date: 2099, 2018.11.23**

| Chapter | Part | Content | Page No |
| --- | --- | --- | --- |
| Chapter -1 | Part I | பிரதேச சபையின் சபைக்கூட்டம் பற்றிய அலுவல்களை கொண்டு நடாத்துதல் பற்றிய நியமத் துணைவிதிகள் | 2A - 14A |
| Chapter -1 | Part II | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன்கடைகள், அழகுக்கலை நிலையங்களை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத்துணைவிதிகள் | 14A - 23A |
| Chapter -1 | Part III | பிரதேச சபை எல்லைக்குள் தகனச்சாலைகள் முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் நிர்வகித்தல், மற்றும் கட்டணம் விதித்தல் பற்றிய நியமத் துணைவிதிகள். | 23A - 30A |
| Chapter -2 | Part I | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிற்றுண்டிச்சாலை, உணவகம், தேநீர்க்கடை, கோப்பிக்கடை மற்றும் இவையொத்த கடைகளை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் | 31A - 40A |
| Chapter -2 | Part II | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஹோட்டல்களை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் | 41A - 52A |
| Chapter -2 | Part III | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் விடுதிகளை (உறங்கு மனைகள்) நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் | 53A - 63A |
| Chapter -2 | Part IV | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வெதுப்பகம் நடாத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் | 63A - 74A |
| Chapter -3 | Part I | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பொது விளையாட்டு மைதானங்களை முறைப்படுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான துணைவிதிகள் | 74A - 79A |
| Chapter -3 | Part II | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பொது வீதிகளுக்கு சேதங்களை ஏற்படுத்தலை மற்றும் அவ்வீதிகளில் போக்குவரத்துக்குத் தடைகளை ஏற்படுத்துவதைத் தவிர்த்தல், முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள். | 80A - 83A |
| Chapter -3 | Part III | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சலவைச்சாலைகளை (லோண்டரி) நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான துணைவிதிகள் | 84A - 91A |
| Chapter -4 | Part I | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் | 91A - 101A |
| Chapter -4 | Part II | பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் | 101A -109A |
| Chapter -4 | Part III | பிரதேச சபை எல்லைப் பகுதிக்குள் நீச்சல் தடாகங்களை நிர்மாணித்தல் மற்றும் பேணிவருதலை ஒழுங்குபடுத்துதல், முறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள். | 110A - 120A |

| | | | |
|---|---|---|---|
| Chapter -5 | Part I | பிரதேச சபை எல்லைப் பகுதிக்குள் பனிக்கட்டித் தொழிற்சாலைகளைக் கொண்டு<br>நடாத்துதலை ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல் முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்<br>தொடர்பான நியமத் துணைவிதிகள் | 120A - 129A |
| Chapter -5 | Part II | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குளிர்பானத் (வாயுப்பானத்) தொழிற்சாலைகள்<br>முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல்,<br>கட்டுப்படுத்தல் பற்றிய நியமத் துணைவிதிகள். | 129A - 137A |
| Chapter -6 | Part I | பிரதேச சபை அதிகார எல்லைப் பகுதிக்குள் பொதுச் சந்தைகளை முறைப்படுத்தல்,<br>ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத்<br>துணைவிதிகள் | 138A - 159A |
| Chapter -6 | Part II | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை<br>கைப்பற்றுதல், பறிமுதல் செய்தல், அகற்றுதல், அழித்தல் தொடர்பான நியமத் துணை விதிகள் | 160A - 163A |
| Chapter -6 | Part III | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற சகிக்க முடியாத<br>தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான<br>தொழில்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், மற்றும் கட்டுப்படுத்தல்<br>தொடர்பான நியமத் துணைவிதிகள் | 164A - 175A |
| Chapter -6 | Part IV | பிரதேச சபை எல்லைக்குள் கொல்களங்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல்,<br>நிர்வகித்தல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் | 175A - 182A |
| Chapter -6 | Part V | பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் இறைச்சி விற்பனையை முறைப்படுத்தல்,<br>ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல்<br>தொடர்பான நியமத் துணை விதிகள் | 182A - 191A |
| Chapter -6 | Part VI | பிரதேச சபையின் மீன் விற்பனையை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை<br>செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகள் | 191A - 200A |

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| | | ரூபா. சதம் |
| 1. | பஸ் வண்டி ஒன்றுக்கு | 25.00 |
| 2. | லொறி ஒன்றுக்கு | 25.00 |
| 3. | வேன் ஒன்றுக்கு | 25.00 |
| 4. | கை, ரைக்ரர் ஒன்றுக்கு | 25.00 |
| 5. | முச்சக்கர வண்டி ஒன்றுக்கு | 25.00 |
| 6. | மிதி வண்டி ஒன்றுக்கு | 25.00 |
| 7. | விற்பனை முகவர் வாகனத்திற்கு | 25.00 |

11-814/14

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர்அதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபை 2018.10.11 ஆம் திகதிய செயலாளரின் VNPS/2018/GM/10/07/10 ஆம் இலக்க தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது.*

**தீர்மானம்**

*உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டு ஓகத்து 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் (பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஏற்புடையதாகும் என வடமாகாண கௌரவ முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரன் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2017ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட்டதுமான 2011/25 ஆம் இலக்க வர்த்தமானியில் (பகுதி IV (அ) - மாகாணசபைகள்) அறிவித்தலிலான நியமத்துணைவிதிகள் 1 தொடக்கம் 21 வரை வவுனியா வடக்கு பிரதேச சபையின் இடப்பரப்பிற்குள் நடைமுறைபடுத்துவது என சபையின் தவிசாளரினால் பகுதி II (B) ஆம் இலக்க 2017 ஆம் ஆண்டின் யூலை மாதம் 17 ஆந் திகதிய அறிவித்தல் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான வவுனியா வடக்கு பிரதேச சபையின் இடப்பரப்பிற்குள் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத்துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் I ஆம் உட்பிரிவின் கீழ் சட்டத்தினை ஏற்றுக்கொள்வது என்று வவுனியா வடக்கு பிரதேச சபையினால் இவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது.*

சபாரத்தினம் தணிகாசலம்,
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
2018, ஒற்றோபர் 26.

11-923/1

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் சிங்கள, ஆங்கில மொழிப் பிரதிகள் வெவ்வேறாக பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1952/16 - 2016 පෙබරවාරි මස 02 වැනි අඟහරුවාදා - 2016.02.02

*1952/16 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாணசபை அறிக்கைகள்

**வடமாகாண மாகாண சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத்துணை விதிகள்) சட்டம்*

**பிரதேசசபைகளுக்கான நியமத்துணைவிதிகள் வரைவு**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) வது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) வது உபபிரிவில் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம் வட மாகாணத்தின் முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு, நிர்மாணம், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம் ஆகியவற்றின் அமைச்சருமாகிய க. வி. விக்னேஸ்வரன் ஆகிய என்னால் ஆக்கப்பட்ட பிரதேச சபைகளுக்கான நியமத் துணைவிதிகளின் வரைவு அத்தியாயம் 1 முதல் அத்தியாயம் 6 வரை இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

*மேற்படி நியமத் துணைவிதிகளின் வரைவு (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் பிரிவு 2 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவுக்கு ஏற்ப வட மாகாண மாகாண சபையின் தீர்மானம் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த அங்கீகாரம் அரச வர்த்தமானியில் வெளியிடப்படும் போது மேலே சொல்லப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2(2)(அ) பிரிவுக்கு அமைவாக வடமாகாணத்திலுள்ள பிரதேச சபைகள் இந்த நியமத் துணை விதிகளை ஏற்றுக் கொள்வதற்கும் இத்தால் அதிகாரம் அளிக்கப்படுவதுடன் மேலே சொல்லப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2(2)(ஆ) பிரிவுக்கு ஏற்ப மேற்படி துணை விதிகளின் வரைவில் உள்ளடக்கிய ஏற்பாடுகளை உள்ளடக்கி துணைவிதிகளை ஆக்குவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 122 ஆம் பிரிவு மூலமாக வடமாகாணத்திலுள்ள பிரதேச சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது.*

*க.வி.விக்னேஸ்வரன்,*
*முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும்,*
*சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு,*
*நிர்மாணம், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு,*
*சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக விடயங்களுக்குப்*
*பொறுப்பான அமைச்சர்,*
*வடமாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*இல.26,சோமசுந்தரம் அவனியூ,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
*2016, சனவரி 27.*

## அத்தியாயம் - 1

## பகுதி I – பிரதேச சபையின் சபைக்கூட்டம் பற்றிய அலுவல்களை கொண்டு நடாத்துதல் பற்றிய நியமத் துணைவிதிகள்

*துணைவிதியின் பெயர்.*

1. இப் பகுதியின் துணைவிதிகள் பிரதேச சபையின் சபைக் கூட்டம் பற்றிய அலுவல்களை மேற் கொண்டு வருதல் பற்றிய நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

*நோக்கம்.*

2. பிரதேச சபைகளின் கூட்டங்களை சட்ட ரீதியான வழிகாட்டல்களுக்கு அமையவும் நடை முறைகளுக்கு ஏற்பவும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 10 - 15 வரையான பிரிவுகளுடன் மற்றும் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(1) பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*சாதாரண கூட்டமும் விசேட கூட்டமும்.*

4. (i) பிரதேச சபையின் சாதாரண கூட்டமானது ஒவ்வொரு மாதத்திலும் முன்கூட்டியே குறிக்கப்பட்ட தினத்திலும் நேரத்திலும் பிரதேச சபை அலுவலகத்தில் நடத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு மாதத்தின் முதல் கிழமையில் அல்லது நெருங்கிய ஒரு தினத்தில் பிரதேச சபைத் தவிசாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒருநாளில் ஒவ்வொரு மாதத்திற்கு ஒன்றாக 12 மாதங்களுக்கும் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். அவ்விதமாக முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திகதியானது 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கமுடைய விடுமுறைகள் சட்டத்தின் கீழ் அரசாங்க விடுமுறைத் தினமொன்றாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய கூட்டம் அடுத்துறும் வேலைநாளில் நடாத்த தீர்மானிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு, அத்தகைய அடுத்துறும் வேலை நாளில் நடத்தப்படலும் வேண்டும். ஒவ்வாரு மாதாந்த கூட்டம், விசேட கூட்டம் கூட்டுவதற்கான அழைப்பிதழை அனுப்புவதற்கான அறிவுறுத்தல் பிரதேச சபைத் தவிசாளரினால் உரிய உரிய கால அவகாசத்தில் செயலாளருக்கு வழங்கப்படல் வேண்டும்.

(ii) (அ) பிரதேச சபையின் சாதாரண கூட்டமொன்று அல்லது விசேட கூட்டமொன்று தொடர்பான அழைப்பு அறிவித்தல் தமிழிலோ சிங்களத்திலோ அல்லது அவ்விரு மொழிகளிலும் அமைதல் வேண்டும். இத்துணைவிதியின் பிரகாரம் கூட்ட அழைப்பிதழ் அனுப்புவதற்கான அறிவித்தல்படி செயலாளரினால் உரிய கூட்டத்தைக் கூட்டுவதற்குரிய நிகழ்ச்சி நிரலும் அழைப்பிதழ் அறிவித்தலும் சபையின் எல்லா உறுப்பினர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் மாதாந்தக் கூட்டமாயின் முதல் மாத வரைபுக் கூட்ட அறிக்கையும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இத்துணை விதியின் பிரகாரம் பிரதேச சபை தவிசாளரினால் வழங்கப்படும் அறிவுறுத்தலை செயலாளர் நிராகரித்தலோ கால தாமதப்படுத்துதலோ கூடாது. பிரதேச சபைத் தவிசாளரின் தீர்மானத்தின்படியோ அல்லது ஆகக் குறைந்தது பிரதேச சபையின் சாதாரண கூட்டங்களுக்கு விதந்து உரைக்கப்பட்ட கூட்ட நடப்பெண்ணாக அமையும் உறுப்பினர்களினால் கையொப்பம் இட்ட எழுத்து மூலமான வேண்டுகோளின்படியோ எந்தவொரு விடயம் பற்றி விசேட கூட்டத்திற்கு அழைக்க முடிவதோடு, அந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட விடயம் பற்றி மட்டுமே கலந்துரையாட முடியும். வேறு எந்தவொரு காரணத்திற்காகவும் வேறு விடயம் பற்றிக் கலந்துரையாடமுடியாது. ஏதேனும் வேண்டுகோளின் பிரகாரம் நடைபெறும் விசேட சபைக் கூட்டம் அக்கோரிக்கை கிடைக்கப்பெற்று ஏழு நாட்களுக்குள் பிரதேச சபைத் தவிசாளரினால் கூட்டப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் பிரதேச சபையின் தவிசாளர், அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்படுத்துகையைப் பெற்றதிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாகச் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்ட மறுத்தால் அல்லது வேண்டுமென்று அசட்டை செய்தால்,

அதன் பின்னர் எந்த நேரத்திலும் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டுவது உதவி ஆணையாளருக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டுமென்பதுடன் அக் கூட்டத்தில் அவர் தலைமை தாங்குதலும் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரைத் தலைமை தாங்கப் பிரதியீடு செய்வதும் அவருக்குச் சட்டபூர்வமானதாதலும் வேண்டும்.

(iii) ஒவ்வொரு சாதாரண கூட்டம் பற்றியும் அந்தந்த கூட்டத்தின் நிகழ்சி நிரல் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறைத் தினங்கள் நீங்கலாக (1901 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பொருள் கோடல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 8(3) இன்படி) அத்தகைய கூட்டம் நடத்தப்படுகின்ற திகதிக்கு குறைந்த பட்சம் நான்கு நாட்களுக்கு முன்னர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒப்படைக்கப்படல் வேண்டும். விசேட கூட்டமாயின் இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (ii) மற்றும் (iii) ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட அறிவித்தலை ஏதேனும் காரணத்தின் நிமித்தம் தனிப்பட்ட முறையில் ஒப்படைக்க முடியாவிடின் ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் பொதுவாக வதிகின்ற இடத்தில் வைக்கப்பட்டால் அது முறையாக ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படும்.

(v) (அ) ஏதேனும் கூட்டத்தில் கூட்ட நடப்பெண் இல்லாவிடின் அக் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஏதும் புரியப்படலாகாது. பிரதேச சபையொன்றின் சாதாரண கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் அக்கூட்டத் தினத்தன்று பதவி வகிக்கின்ற உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்காக அமைதல் வேண்டும். அவ்வுறுப்பினர் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு முழு எண்ணின் பின்னமாக அமையும் சந்தர்ப்பத்தில் அத்தகைய முழு எண்ணின் பின்னத்திற்கு அதிகமான அடுத்த முழு எண் இத்துணைவிதிகளின் கருமத்திற்காக மூன்றிலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் கூட்டத்திற்கு உரிய நேரத்தின் பின்னர் அரை மணித்தியாலம் கழிந்த பிறகு அல்லது கூட்டம் தொடங்கிய பின்னர் எந்த நேரத்திலும் கூட்ட நடப்பெண் இல்லாத சந்தர்ப்பத்தில் அக் கூட்டத்தின் தவிசாளரினால் அக்கூட்டம் அத் திகதியின் பின்னர் பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமலும் அவரால் பொருத்தமானதெனக் கருதப்படுகின்ற நாளொன்றுக்கு ஒத்திவைக்கப்படல் வேண்டும். அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் கூட்ட நடப்பெண் இருந்ததெனில் அக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படத்தக்கதாக இருந்து பணிகள் பின்னர் நடத்தப்படும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அது சம்பந்தமாக பொருத்தமானதைச் செய்ய முடியும்.

(vi) (அ) பிரதேச சபையின் கூட்ட நடப்பெண் உள்ள ஏதேனும் சாதாரண அல்லது விசேட கூட்டத்தில் பிரதேச சபைத் தவிசாளர் பிரதேச சபையின் விருப்பத்துடன் காலத்திற்குக் காலம் கூட்டங்களை ஒத்திவைக்கலாம். அவ்வாறு ஒத்திவைக்கப்படலுக்கு இலக்கான கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எனினும் முற்றுப் பெறாமல் எஞ்சியுள்ள அலுவல்களைத் தவிர்ந்த வேறேதேனும் அலுவல் அவ்வாறு பின்னர் நடத்தப்படுகின்ற ஏதேனும் கூட்டத்தில் பிரதேச சபையின் அனுமதியின்றி மேற்கொள்ளப்படலாகாது.

(ஆ) ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தை இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குள் நடாத்த ஆரம்பக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டாலன்றி ஒத்திவைக்கப்பட்ட கூட்டமொன்று பற்றிய அறிவித்தலை அக்கூட்டத்திற்கு உரிய நேரத்திற்கு குறைந்த பட்சம் மூன்று நாட்களுக்கு முன்னராக உறுப்பினர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(vii) பிரதேச சபையின் கூட்டங்களுக்கு வருகை தந்ததும் செயலாளரின் பொறுப்பில் உள்ள வரவுப் பதிவேட்டில் உறுப்பினர்கள் அனைவரும் வருகைதந்த வரிசைக் கிரமத்தில் பெயர், வந்த நேரம் மற்றும் கையொப்பத்தைப் பதிதல் வேண்டுமென்தோடு அப்பதிவேடு செயலாளரது கட்டுக்காப்பில் வைக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(viii) செய்தித்தாள் நிருபர்களை உள்ளிட்ட விருந்தினர்கள் மற்றும் பொதுமக்கள் சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்ற இடத்தில் அந்தந்த ஆட்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கூடங்களில் இருக்கலாம். எனினும் இவர்களை சபா மண்டபத்தில் இருந்து வெளியேற்றுதலானது மக்களின் நன்மைக்கு உகந்ததென கூட்டத்திற்கு சமுகமளித்துள்ள பிரதேச சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை எண்ணிக்கையுடையோரின் பிரேரணை வழிமொழியப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட அபிப்பிராயமாக அமையுமாயின் அதற்கிணங்க கூட்டத்தின் தவிசாளரினால் கேட்டுக் கொள்ளப்பட்டவிடத்து அவர்கள் சபா மண்டபத்தில் இருந்து வெளியேறுதல் வேண்டும். விருந்தினராக வந்திருக்கும் எந்தவொரு நபரும் சபை அலுவல்களில் எந்த விதத்திலும் சம்பந்தப்படுத்தக் கூடாது என்பதுடன் எந்தவொரு உறுப்பினரும் அவ்வாறு வந்துள்ள எவரையும் பெயரிட்டோ அன்றி சுட்டிக் காட்டியோ பேசுதல் கூடாது.

கூட்டநிகழ்ச்சி ஒழுங்குமுறை.

5. பிரதேச சபைக்கூட்ட அலுவல்கள்:-

(i) கடந்தகூட்ட அறிக்கையை அங்கீகரித்தல்

(ii) தவிசாளரினால் செய்யப்படுகின்ற விசேட அறிவித்தல்கள்

(iii) பிரதேச சபையை விளித்து அனுப்பி வைக்கப்பட்ட நிருபங்கள், மனுக்கள், முறைப்பாடுகள் மற்றும் தொடர்பாடல்களை சபைக்குச் சமர்ப்பித்தல்

(iv) ஒழுங்கான முறையில் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ள வினாக்கள்

(v) ஒழுங்கான முறையில் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

(vi) குழுக்களின் அறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல். அவ்வறிக்கைகளை அவ்வேளையிலேயே பரிசோதனை செய்யவதற்கு பிரதேச சபை தீர்மானித்தாலன்றி அவற்றைப் பரிசோதனை செய்வதற்கான திகதியை நிர்ணயித்தல் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(vii) பெறுகைகள் மற்றும் செலவினங்கள் பற்றிய மாதாந்தக் கூற்றுகள், சேகரித்த வருமானம் பற்றிய முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் பிரதேச சபை சமர்ப்பிப்பதற்குரிய பிற ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதலும் பரிசோதனை செய்தலும்

கூட்ட அழைப்புக்கான அறிவித்தலில் வேறு விடயங்களேதும் காட்டப்பட்டிருப்பின் அவ்விடயங்கள் அங்கு காட்டப்பட்டுள்ள வரிசைக் கிரமத்திலோ விசேட காரணங்களின் நிமித்தம் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற வரிசைக்கிரமத்திலோ மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அங்கத்தவர் முதுமை முறையும் ஆசன ஒதுக்கலும்.

6. பிரதேச சபை உறுப்பினர்களின் முந்துரிமையும் மூப்புரிமையும் முறையே-

(அ) பிரதேச சபைத் தவிசாளர்

(ஆ) உப தவிசாளர்

(இ) மீண்டும் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டதாயின் பிரதேச சபையில் அவர்களின் இடையறாத உறுப்பாண்மை வரிசைக்கிரமப்படி,

(ஈ) ஏனைய உறுப்பினர்கள் தொடர்பிலாயின் அவர்களின் தெரிவு சம்பந்தமாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள முந்துரிமை அடிப்படையிலும்

அமைதல் வேண்டும்.

(i) இத் துணைவிதியின் (i) பிரிவு (இ) பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் உறுப்பினர்கள் இருவரினதோ அதற்கு மேற்பட்டோரினதோ இடையறாத உறுப்பாண்மை சமமானதாக அமையும் சந்தர்ப்பத்தில் மேற்படி உறுப்பினர்கள் இறுதியாகத் தெரிவுசெய்யப்பட்டமை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள முந்துரிமை வரிசைக்கிரமப்படி முந்துரிமையும் மூப்புரிமையும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ii) ஏதேனும் பிரதேச சபைத் தேர்தலின் பின்னர் மேற்படி பிரதேச சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் சம்பந்தமாக தேர்தல்கள் ஆணையாளர்

நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட விதத்தில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையின் வரிசைக்கிரமத்திற்கு உரிய அரசியற் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் இத்துணைவிதிகளின் கருமங்களுக்காக ஏற்புடையதாதல் ஆகாது.

*தலைவரின் பணி. (7-11)*

7. (i) கூட்டத்தின் ஒழுக்கத்தைப் பாதுகாத்தலானது கூட்டமொன்றின் தலைவரது கருமமாக அமைதல் வேண்டுமென்பதோடு கருத்து முரண்பாட்டுக்கு இலக்காகின்ற சகல விதமான ஒழுங்குப் பிரச்சினைகள் தொடர்பிலும் அவரது தீர்மானமே இறுதியானதாக அமைதல் வேண்டும்.

(ii) கூட்டமொன்றின் போது இப்பகுதியின் துணைவிதிகளிலான பணிப்புக்களுக்கு முரணாகச் செயற்படுகின்ற உறுப்பினர் எவரேனும் துணைவிதிகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டுமென கூட்டத்தின் தவிசாளர் தனது நெறிப்படுத்தல் மூலமாக வோ பிறிதோர் உறுப்பினரின் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புதலின் பேரிலோ கட்டளையிட முடியும்.

8. தானோ அல்லது உறுப்பினர்களோ விவாதத்தின் போது முன்வைத்த விவாதங்களை சபைக்குச் சலிப்புத் தட்டும் வண்ணம் மீண்டும் மீண்டும் தொடர்பில்லாதவற்றைக் கூறுவதில் ஈடுபட்டுள்ள உறுப்பினரது நடத்தை பற்றிக் கவனஞ்செலுத்திய பின்னர், அவரது உரையை நிறுத்துமாறு கூட்டத்தின் தவிசாளரினால் கட்டளையிடப்படலாம்.

9. (i) ஒழுக்கத்திற்கு முரணாக பாரதூரமான வகையில் நடந்து கொள்கின்ற உறுப்பினர்களை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இருந்து உடனடியாக நீக்கி அன்றைய தின கூட்டத்தின் எஞ்சிய பகுதி நிறைவடையும் வரை வெளியில் இருக்குமாறு கூட்டத்தின் தவிசாளரினால் கட்டளையிடப்படல் முடியும்.

(ii) இப் பகுதியின் துணைவிதிகளின் கீழ் தனக்குரிய அதிகாரங்கள் போதுமானதாக இல்லையென ஏதேனும் கூட்டத்தின் தவிசாளர், ஏதேனும் சந்தர்ப்பத்தில் கருதுவாரெனின் அவரால் 27 வது துணைவிதியின் (iv) வது பிரிவின் பணிப்புக்களுக் கிணங்க செயலாற்ற முடியும்.

10. ஏதேனும் பிரச்சினை சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற கலந்துரையாடலை ஒத்திவைக்குமாறு உறுப்பினரொருவர் எந்நேரத்திலும் பிரேரணை முன்வைக்க முடியும். அப்பிரேரணை வழிமொழியப்பட்டால் அது பற்றி உடனடியாக வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும். கூட்டமொன்றில் பாரதூரமான ஒழுக்கமீறல் தோன்றிய சந்தர்ப்பத்தில், கூட்டம் ஒத்திவைக்கப்படல் வேண்டுமென கூட்டத்தின் தவிசாளர் அபிப்பிராயப் படின் ஒத்திவைத்தல் பற்றிய வினாவின்றியே கூட்டத்தை அவரால் பணிக்கப்படுகின்ற காலப் பகுதிக்கு ஒத்திவைக்கவோ இடைநிறுத்தவோ முடியும்.

11. இப் பகுதியின் 5வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட விதத்தில் தயாரிக்கப்பட்டவாறு கூட்ட அலுவல்களின் வரிசைக் கிரமத்தில் ஏற்புடைய அலுவல்கள் அனைத்தும் உள்ளடக்கப்படல் வேண்டும். ஏதேனும் சபைக் கூட்டத்தில் பிறிதொரு வரிசைக்கிரமம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலேயொழிய, 5 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட வரிசைக் கிரமத்துக்கமைய கூட்ட அலுவல்கள் நடத்தப்படல் வேண்டும்.

*செயலாளரின் கடமையும் கூட்டக் குறிப்புகளும். (12-13)*

12. (i) பிரதேச சபைக் கூட்டங்களின் அலுவல்கள், பணிப்புக்கள் மற்றும் தீர்மானங்கள் பற்றிய அறிக்கைகளை தமிழ் அல்லது சிங்கள மொழியில் அறிக்கைப் புத்தகமொன்றில் செயலாளரால் பதியப்பட்டு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) செயலாளரினால் சபைக் கூட்டம் பற்றிய அறிக்கைகள் பேணப்படல் வேண்டும் என்பதுடன் சபைக் கூட்டம் முடிவடைந்ததும் கூடிய விரைவில் தவிசாளரினாலோ அல்லது தலைமை தாங்கிய வேறொரு சபை உறுப்பினரால் கையொப்பமிடப்படல் வேண்டும். அத்துடன் செயலாளரினால் அறிக்கைகளின் அச்சுப் பிரதியை கூடிய விரைவில் தயாரிக்கபடல் வேண்டும்.

(iii) அவ்வறிக்கையில் கூட்டத்திற்குச் சமுகமளித்த பிரதேச சபை உறுப்பினர்களின் பெயர்களும் முறையாக எடுக்கப்பட்ட சகல தீர்மானங்களும் உள்ளடக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) எவராவது உறுப்பினர் ஒருவர் கூட்டம் ஆரம்பித்த பின்னர் கூட்டத்திற்குச் சமுகமளித்து இருந்தால், வருகை தந்திருந்த நேரம் அறிக்கையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(v) எவராவது உறுப்பினர் கூட்டம் முடிவடைய முன்னர் சபையை விட்டு வெளியேறியிருந்தால் வெளியேறிய நேரம் அறிக்கையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(vi) ஒவ்வொரு கூட்ட அறிக்கையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படல் வேண்டுமென்பதோடு அடுத்த கூட்டத்தில் அறிக்கை வாசிக்கப்பட்டதாக கருதப்பட்டு வழிமொழியுமாறு கூட்டத்தின் தவிசாளரினால் வினா விடுக்கப்படல் வேண்டும். எதிர்ப்போ பிழை திருத்தமோ இல்லாவிடின் பதியப்பட்டுள்ளவாறு அறிக்கை வழிமொழியப்படல் வேண்டும். இன்றேல் எதிர்ப்போ பிழைதிருத்தமோ இருப்பின் அத்தகைய பிழை திருத்தம் யாதென்பது பற்றி அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட அறிக்கையின் இறுதியில் பிழை திருத்தங்கள் இல்லாவிட்டால் அதனையும் இன்றேல் மேற்படி பிழைத் திருத்தங்களையும் குறித்து அத்தகைய பிழை திருத்தங்களுக்குக் கட்டுப்பட்டதாக அறிக்கையை வழிமொழிந்தமைக்கான சான்றுரையினை கூட்டத்தின் தவிசாளர் அறிக்கைப் புத்தகத்தில் தனது கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(vii) சபைக் கூட்டத்தில் உறுப்பினர்களால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மற்றும் கூற்றுக்கள் சபை அறிக்கைகளில் உள்ளடக்கப்படல் ஆகாது. ஆயினும் எவரேனும் உறுப்பினரால் சபையில் முன்வைக்கப்பட்ட விடயங்களோ கூற்றுக்களோ பின்னர் அறிந்து கொள்ள அவசியப்படுமென பிரதேச சபை கருதுமாயின் அத்தகைய சபைக் கூட்டத்தின் அல்லது கூட்டங்களின் கருமங்களைக் கொண்டு நடாத்துதல் பற்றிய ஒலிப் பதிவு நாடாக்கள் தனிவேறாகத் தயாரிக்கப்பட்டு பிரதேச சபையில் பாதுகாப்பாக வைத்திருக்கவும் உறுப்பினர்கள் மத்தியில் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்க முடியும்.

*13.* ஏதேனும் விடயம், பிரச்சினை அல்லது பிரேரணை தொடர்பில் உடன்படாத உறுப்பினரொருவருக்கு அவ்வாறு உடன்படாமைக்கான காரணங்களை அறிக்கை செய்ய அதிகாரம் இருத்தல் வேண்டுமென்பதோடு, ஆவணமாக அமைய வேண்டிய அத்தகைய உடன்பாடின்மை சம்பந்தப்பட்ட கூட்டத்தின் ஒரு வாரத்திற்குள் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டால் செயலாளரால் அத்தகைய கூட்ட அலுவல்கள் பற்றிய அறிக்கையில் அவ்வாறு உடன்படாமைக்கு ஏதுவான காரணங்கள் குறிக்கப்படல் வேண்டும்.

*குழுக்களும் ஆலோசனை குழுக்களும். (14-16)*

*14.* (i) பிரதேச சபையினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரேரணை வழிமொழிவின் மூலமாக ஒட்டு மொத்தமான பிரதேச சபையையும் குழுவாக மாற்றமுடியும். ஆயினும் அதே விதத்திலான பிரேரணை வழிமொழிவின் மூலமாக அக்குழுவினை மீண்டும் பேரவை நிலைக்கு கொண்டு வந்த பின்னர் அத்தகைய குழுநிலையில் கலந்துரையாடிய விடயங்களின் பெறுபேறுகள் பற்றி பிரதேச சபையினால் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ii) ஒட்டுமொத்தமான பிரதேச சபையின் குழுவின் ஏதேனும் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரதேச சபை மீண்டும் பேரவை நிலைக்குச் செல்ல வேண்டுமென பிரேரிப்பதற்கான அதிகாரம் எந்தவொரு உறுப்பினருக்கும் உண்டு. ஒட்டுமொத்தமான பிரதேச சபையின் குழுவினது கூட்டத் தவிசாளரினால் வினா மீதான வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டுமென்பதோடு, பிரேரணை அங்கீகரிக்கப்பட்டால் பிரதேச சபை உடனடியாக குழு நிலையில் இருந்து பேரவை நிலைக்குச் செல்ல வேண்டும்.

*15.* (i) பிரதேச சபையின் ஏதேனும் கருமத்திற்காக, சபையினால் பொருத்தமானதெனக் கருதப்படுகின்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய அல்லது பகுதியளவில் உறுப்பினர்களையும் பகுதியளவில் பிரதேசத்தின் ஏனையவாசிகளையும் பிரதேச சபை இடப்பரப்பின் கிராமோதய சபைத் தவிசாளர்களையும் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் நியமிக்கலாம்.

(ii) மேற்கூறப்பட்டவாறு நியமிக்கப்பட்ட அத்தகைய ஆலோசனைக் குழுவினால் அதனை நியமித்த ஆண்டின் நிறைவுக்குப் பின்னர் அதன் ஏதேனும் பணிகள் ஈடேற்றப்படலாகாது.

(iii) அத்தகைய ஆலோசனைக் குழுவினது ஒவ்வொரு கூட்டத்தினதும் கூட்ட நடப்பெண் அக்கூட்டம் நடத்தப்படுகின்ற தினத்தில் பதவி வகிக்கின்ற ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்கள் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்காதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு முழு எண்ணின் பின்னமாக அமைகின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய முழு எண்ணின் பின்னத்திற்கு அதிகமான அடுத்த முழு எண் அத்துணைவிதியின் கருமங்களுக்கான மூன்றிலொரு பங்காக கருதப்படல் வேண்டும்.

(iv) ஏதேனும் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கூட்டத்திற்குச் சமுகமளித்திராத சந்தர்ப்பத்தில் சமுகளித்துள்ள உறுப்பினர்களால் அவ்வுறுப்பினர்கள் மத்தியில் இருந்து ஒருவரை மேற்படி குழுவின் தலைவராக தெரிவு செய்து கொள்ளல் வேண்டுமென்பதோடு அவ்வுறுப்பினருக்கு அந்த ஆலோசனைக்குழுவின் தவிசாளர் கொண்டுள்ள சகல விதமான அதிகாரங்களும் இருத்தல் வேண்டும்.

(v) ஆலோசனைக் குழுவொன்று ஏதேனும் அறிக்கைக்கு உடன்பட்டிருப்பின், அவ்வறிக்கையில் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிடல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஆலோசனைக் குழுவின் அலுவல்களை உள்ளடக்கிய அறிக்கையுடன் பிரதேச சபைக்குச் சமாப்பிக்கப்படல் வேண்டும்.

(vi) ஆலோசனைக் குழுக் கூட்டங்களின்போது செய்தித்தாள் நிருபர்களுக்கு பிரவேசிக்க இடமளித்தல் ஆகாது.

(vii) பிரதேச சபையின் நிதி மற்றும் கொள்கைகள் பற்றிய ஆலோசனைக்குழுவின் செயலாளராக பிரதேச சபையின் செயலாளர் பணியாற்ற வேண்டுமென்பதோடு ஏனைய ஆலோசனைக் குழுக்களின் செயலாளராகப் பணியாற்ற பிரதேச சபையின் எவரேனும் உத்தியோகத்தரை நியமிக்க வேண்டியது தவிசாளரின் கடமையாகும்.

(viii) பிரதேச சபையின் ஒவ்வொரு ஆலோசனைக்குழுவினதும் அலுவல்கள் பற்றிய அறிக்கைகளைப் பேணிவருதல் மேற்படி ஆலோசனைக்குழுவின் செயலாளரது கடமையாக அமைதல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு குழு அறிக்கையும் அடுத்துறும் பிரதேச சபையின் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

16. ஏதேனும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களுக்கு வருகை தந்ததும் மேற்படி ஆலோசனைக்குழுவின் செயலாளரின் பராமரிப்பில் உள்ள பதிவேட்டில் ஆலோசனைக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்த வரிசைக் கிரமத்தில் பெயர் வந்த நேரம் மற்றும் கையொப்பத்தைப் பதிதல் வேண்டுமென்பதோடு, அப்பதிவேடு ஆலோசனைக்குழுவின் செயலாளரது கட்டுக்காப்பில் வைக்கப் படலும் வேண்டும்.

17. ஏதேனும் கூட்டத்தின் அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் அல்லது அங்கீகரிப்புக்கள் சம்பந்தமாக :- பிரேரணைகள். (17-18)

(i) ஒரு பிரேரணை சம்பந்தப்பட்டதெனில் அத்தகைய பிரேரணை யாதென்பது;

(ii) பிரேரணையை முன்வைத்த உறுப்பினர் மற்றும் பிரேரணையை வழிமொழிந்த உறுப்பினர் யாவரென்பது;

(iii) பிரேரணைக்குச் சார்பாகவும் எதிராகவும் கருத்துக்களை முன்வைத்த உறுப்பினர்கள் யாவரென்பது;

(iv) பிரேரணையை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் ஏகமனதா இடம்பெற்றதா; அல்லது

(v) பிரேரணை சம்பந்தமாக வாக்கெடுப்பு கோரப்பட்டுள்ள வேளையில் அத்தகைய பிரேரணைக்கு -

(அ) சார்பாக வாக்களித்த உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும்;

(ஆ) எதிராக வாக்களித்த உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும்;

(இ) வாக்களிப்பதில் இருந்து விலகிநின்ற உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும் ; மற்றும்

(ஈ) கூட்டத்திற்கு வருகை தந்திருந்த மற்றும் வாக்கெடுப்பு நடைபெறுகின்ற தருணத்தில் சபா மண்டபத்தில் பிரசன்னமாகவிராத உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும்

(vi) பிரதேச சபைக் கூட்ட அலுவல்களின் வரிசைக்கிரமத்தின் வேறு ஏதேனும் விடயம் சம்பந்தமானதாக அமையின் அத்தகைய விடயம் தொடர்பாக சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் யாதென்பதும். ஒவ்வொரு பிரேரணை அல்லது விடயத்துடன் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

18. (i) பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தல் தொடர்பிலான ஒவ்வொரு அறிவித்தலும் எழுத்தில் அமைதல் வேண்டுமென்பதோடு, அந்த அறிவித்தலைச் செய்கின்ற உறுப்பினரால் அது கையொப்பமிடப்பட்டிருத்தலும் வேண்டும். சனி, ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை நாட்கள் நீங்கலாக பிரதேச சபைக் கூட்டத்திற்கு முன்னர் ஏழு நாட்கள் அவ்வறிவித்தல் செயலாளரின் பொறுப்பில் இருந்தாலன்றி அத்தகைய பிரேரணை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படல் ஆகாது.

(ii) பிரேரணை தொடர்பான சகல விதமான அறிவித்தல்களும் கிடைக்கின்ற விதத்தில் திகதியும் இலக்கமும் இடப்பட்டு அவை கிடைக்கப்பெற்ற வரிசைக் கிரமத்தில் செயலாளரால் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படல் வேண்டும்

(iii) பிரேரணை பற்றிய ஏதேனும் அறிவித்தல் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட முன்னர் தவிசாளரிடம் அது சமாப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அது ஒழுங்குவிதிகளுக்கு முரணானதென அவர் அபிப்பிராயப்படுவாரெனில், அப்பிரேரணை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படலாகாதென அவரே பணித்து, அவ்வறிவித்தலைச் செய்த உறுப்பினருக்கு அதுபற்றி அறிவிக்க செய்வித்தல் வேண்டும்.

(iv) அறிவித்தல் மூலமாக செய்யப்படுகின்ற ஒவ்வொரு பிரேரணையும் பிரதேச சபையின் அலுவல்களின் நிர்வாகம் மீது தாக்கமேற்படுத்துகின்ற ஏதேனும் பிரேரணையுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

(v) முந்திய ஆறு மாதங்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு பிரேரணையையும் முடிவுறுத்துவதற்கான பிரேரணையோ முந்திய ஆறு மாதங்களுக்குள் நிராகரிக்கப்பட்ட பிரேரணையை ஒத்த பெறுபேறுகளைப் பெற்றுத் தருகின்ற வேறு பிரேரணையொன்றையோ சமர்ப்பித்தலானது, அவ்வாறு சமர்ப்பிப்பதாக பிரேரிக்கின்ற உறுப்பினரது கையொப்பத்திற்கு மேலதிகமாக மேலும் நான்கு பிரதேச சபை உறுப்பினர்களின் கையொப்பமிடப்பட்ட அறிவித்தலை கொடுத்து, நிகழ்ச்சி நிரலில் அது பற்றித் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய இப்பகுதியின் துணைவிதிகளுடன் அமைந்தொழுகுவதாகக் கருதப்படலாகாது. அப்பிரேரணை சம்பந்தமாக உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அடுத்த ஆறு மாதகாலப் பகுதிக்குள் அதனையொத்த பிரேரணையொன்றை சமர்ப்பிக்க எந்தவோர் உறுப்பினருக்கும் அதிகாரம் இருத்தலாகாது.

(vi) எந்தவொரு பிரேரணையும், முன்மொழியப்பட்டு வழிமொழியப்படும் வரை விவாதத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கருதப்படலாகாது.

(vii) எந்தவோர் உறுப்பினருக்கும், தனது ஆசனத்தில் இருந்து எழுந்து நின்று தலைமைப்பீடத்திற்குச் சிரம் தாழ்த்தி, மரியாதை செலுத்துவதன் மூலமாக, விவாதத்தின் பிந்திய கூட்டமொன்றில் உரையாற்ற தனக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றி, ஏதேனும் பிரேரணையையோ திருத்தத்தையோ முறையாக வழிமொழிய முடியும்.

(viii) ஏற்கனவே அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள பிரேரணைகள் தொடர்பாகச் செயலாற்றி முடிந்ததும் முன்னரே அறிவித்தல் கொடுக்கப்படாத ஏதேனும் பிரேரணையை பிரதேச சபைக்குச் சமர்ப்பிப்பதற்காக சபையின் அனுமதியைக் கோருகின்ற பிரேரணையொன்றை உடனடியாக முன்வைக்க உறுப்பினர் ஒருவருக்கு உரிமையுண்டு. இருந்த போதிலும் உறுப்பினரால் அதற்கு முன்னராக எழுத்துமூலம் கையொப்பமிடப்பட்டு செயலாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(ix) பிரேரணையொன்று கூட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டு வழிமொழியப்பட்டு அது தொடர்பான விவாதம் முற்றுப்பெற்ற பின்னர் கூட்டத்தின் தவிசாளரினால் அப்பிரேரணை அங்கீகரிக்கப்படுதல் தொடர்பாக வினா விடுக்கப்படல் வேண்டும்.

(x) எவரேனும் உறுப்பினரால் முன்வைக்கப்பட்ட பிரேரணையையோ அல்லது திருத்தத்தையோ பிரதேச சபையினால் கொடுக்கப்பட்ட அனுமதியுடன் அந்த உறுப்பினரால் மீளப்பெற்றுக் கொள்ள (வாபஸ்) முடியும். அத்தகைய அனுமதியை விவாதமின்றி வழங்கல் வேண்டும். ஏதேனும் பிரேரணையைச் சமர்ப்பிப்பவரால் அனுமதி கோரப்பட்ட பின்னர் அவ்வனுமதி நிராகரிக்கப்பட்டாலேயன்றி, அப்பிரேரணை தொடர்பில் உரையாற்ற எந்தவோர் உறுப்பினருக்கும் அதிகாரம் இருத்தலாகாது.

(xi) மீளப்பெற்றுக் கொள்ளப்பட்ட (வாபஸ்) ஏதேனும் பிரேரணை பின்னர் நடத்தப்படுகின்ற ஏதேனும் கூட்டத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்பட முடியும். எனினும் இத் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட ஆறு மாதக்காலப் பகுதிக்குள் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பிரேரணைக்கு உள்ளார்ந்த ரீதியில் ஒத்ததாக அமைகின்ற எந்தவொரு பிரேரணையும் சமர்ப்பிக்கப்படல் ஆகாது.

(xii) (அ) பிரேரணைக்கு கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு திருத்தமும் எழுத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு, பிரேரிக்கும் உறுப்பினரால் அத்தகைய எழுத்திலான திருத்தமோ, திருத்தங்களோ செயலாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(ஆ) பிரேரணைக்கு கொண்டு வரப்படுகின்ற ஒவ்வொரு திருத்தமும் அது சமர்ப்பிக்கப்படுகின்ற தருணத்தில் கலந்துரையாடப்படுகின்ற பிரேரணையுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

(இ) பிரேரணைக்கு கொண்டு வரப்படுகின்ற ஒவ்வொரு திருத்தமும் அது சமர்ப்பிக்கப்பட முன்னர் சபையில் வாசிக்கப்படல் வேண்டும்.

(ஈ) எந்தவொரு திருத்தமும் வழிமொழியப்பட்டாலன்றி கலந்துரையாடப்படலோ பிரதேச சபைக்குச் சமர்ப்பிக்கப்படலோ ஆகாது.

(உ) திருத்தமொன்றை முறையாக வழிமொழிந்த உறுப்பினரொருவருக்கு அதன் பின்னர் அதுபற்றி உரையாற்ற உரிமை இருத்தல் வேண்டும்.

(ஊ) கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் பிரேரணைக்கான திருத்தத்தை முன்மொழிந்து வழிமொழியப்பட்டுள்ளவிடத்து முதலாவது திருத்தத்திற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு முடியும் வரை இரண்டாவதோ அதற்குப் பிந்திய திருத்தமோ சமர்ப்பிக்கப்படலாகாது. திருத்தமொன்று, அங்கீகரிக்கப்பட்டால் அத்தகைய திருத்திய பிரேரணை மூலப் பிரேரணையின் இடத்தைப்பெறல் வேண்டுமென்பதோடு, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அவை அத்தகைய திருத்தப்பட்ட பிரேரணை சம்பந்தப்பட்ட திருத்தங்களாக அமைதல் வேண்டும்.

*வாக்களிப்பு நடைமுறை.*

*19.* (i) ஏதேனும் விடயம், பிரச்சினை மற்றும் பிரேரணை அங்கீகரிக்கப்படுதல் பற்றிக் கூட்டத் தலைவரினால் வினா விடுக்கப்படல் வேண்டுமென்பதோடு, அவ்வாறு வினா விடுக்கப்பட்ட பின்னர் எந்தவோர் உறுப்பினராலும் அது தொடர்பில் வாக்கெடுப்பு கோரப்படாவிட்டால் அப்பிரேரணை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். ஆயினும் அத்தகைய பிரேரணை தொடர்பில் ஏதேனும் உறுப்பினரால் வாக்கெடுப்பு கோரப்படுமாயின் அல்லது இரகசிய வாக்கெடுப்பு கோரப்படுமாயின் கூட்டத் தலைவரினால் வாக்கெடுப்பு நடாத்த ஆவன செய்யப்படல் வேண்டும்.

(ii) இத்துணைவிதியின் (i) வது பிரிவில் குறிப்பிடப்பட்ட விதத்தில் ஏதேனும் விடயம், பிரச்சினை மற்றும் பிரேரணை சம்பந்தமாக வாக்கெடுப்பு அவசியமாகுமிடத்து –

(அ) அத்தகைய வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பாக அமையாதவிடத்து, செயலாளரால் இப் பகுதியின் *6* வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களின் முந்துரிமை வரிசைக் கிரமப்படி ஒவ்வொரு உறுப்பினரதும் விருப்பம் அந்த உறுப்பினர்களிடம் தனித்தனியாகக் கேட்கப்பட்டு அதற்கிணங்க வாக்குகளைக் குறிப்பதன் மூலமாக வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும் ,

இன்றேல்,

(ஆ) அத்தகைய வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பாக அமையுமிடத்து, செயலாளரால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனியாக விநியோகிக்கப்படுகின்ற வாக்குச்சீட்டு மீது அவ்வுறுப்பினரின் இரகசிய வாக்கினைப் பதியச் செய்வித்து அதற்கிணங்க வாக்குகளை எண்ணல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (ii) வது பிரிவில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் வகையில் செயலாளரால் வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட பின்னர் மேற்படி விடயம், பிரச்சினை அல்லது பிரேரணை தொடர்பில் பிரதேச சபை மேற்கொள்ளும் அங்கீகாரம் கூட்டத்தை விசாளரினால் பிரகடனஞ் செய்யப்படல் வேண்டும்.

(iv) பிரதேச சபையிலோ முழு பிரதேச சபையையும் உள்ளடக்கிய குழுவிலோ ஏதேனும் வினா விடுக்கப்பட்டால் வருகை தந்துள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தான் வாக்களிப்பதிலிருந்து விலகி நிற்பின் ஒழிய தனது வாக்கினைச் சார்பாகவோ எதிராகவோஅளித்தல் வேண்டும்.

(v) வாக்கெடுப்பு கோரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் எவரேனும் உறுப்பினர் வாக்களிப்பதில் இருந்து விலகி நிற்பின் செயலாளர் அவ்வுறுப்பினரின் பெயரை வாக்களிப்பதிலிருந்து விலகி நின்ற உறுப்பினராக அறிக்கையில் பதிதல் வேண்டும்.

(vi) ஏதேனும் விடயம், பிரச்சினை அல்லது பிரேரணை சம்பந்தமாக பிரதேச சபையிலோ அல்லது முழு பிரதேச சபையும் குழுவாக மாறியுள்ள வேளையிலோ ஏனைய உறுப்பினர்களுடன் பொதுவில் கூட்டத்தின் தவிசாளருக்கும் ஆரம்ப வாக்கு இருத்தல் வேண்டுமென்பதோடு, ஏதேனும் பிரச்சினையின் பேரில் வாக்குகளின் எண்ணிக்கை சமமானதாக அமையின்அறுதியிடும் வாக்கும் அவருக்கு உரித்தாதல் வேண்டும்.

*அங்கத்தவர் கடமைகள். (20-21)*

*20.* இப் பகுதியின் *27*வது துணைவிதியின் (i) வதுபிரிவின் கீழ் சேவை இடைநிறுத்தப்பட்ட அல்லது (iv) வது பிரிவின் கீழ் வெளியேறுமாறு பணிக்கப்பட்ட உறுப்பினர்கள் பிரதேச சபா மண்டபத்தில் இருந்து உடனடியாக நீங்குதல் வேண்டும்.

*21.* பிரதேச சபையிலோ ஒட்டு மொத்தமான பிரதேச சபையின் குழுவிலோ பரிசோதனை செய்யப்படுகின்ற விடயம் சம்பந்தமாக உரையாற்றும்போது கீழே காட்டப்பட்ட பணிப்புக்களைத் தீவிரமாக கடைப்பிடித்தல் வேண்டும்.

(i) கூட்டத்தின்போது ஒவ்வொரு உறுப்பினரும் கூட்டத்தின் தலைவரை விளித்து உரையாற்ற வேண்டுமென்பதோடு, குழுநிலை தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் எழுந்து நின்று உரையாற்றல் வேண்டும்.

(ii) எந்தவோர் உறுப்பினரும் உரையாற்றுகையில் இப் பகுதியின் துணைவிதிகளின் பணிப்புக்களுக்கு முரணாயின் ஒழிய அவரைக் குறுக்கீடு செய்தல் ஆகாது.

(iii) எவரேனும் உறுப்பினர் தனது உரையை நிகழ்த்தி முடிந்ததும் தனது ஆசனத்தில் அமர வேண்டும். அவ்வேளையில் சபையில் உரையாற்ற விரும்புகின்ற வேறொரு உறுப்பினர் உரையாற்றுதல் வேண்டும்.

(iv) எவரேனும் உறுப்பினர் தனது உரையைக் குறித்துக் கொண்ட உரையாக வாசித்தல் ஆகாது. ஆயினும் தனது வாதங்களை நிரூபிக்கும் பொருட்டு எழுத்திலான அல்லது அச்சிடப்பட்ட கட்டுரைகளில் இருந்து மேற்கோள் காட்டுவதற்காக பிரித்தெடுத்த பகுதியை அவர் வாசிக்க முடியும்.

(v) கூட்டமொன்றில் ஒரே நேரத்தில் இரண்டு உறுப்பினர்களுக்கு உரையாற்ற அவசிய மேற்படின், கூட்டத்தின் தவிசாளரினால் தான் கண்ணுற்ற முதலாவது உறுப்பினரை உரையாற்றுமாறு அறிவிக்கலாம்.

(vi) ஒவ்வொரு உறுப்பினரும் தனது அவதானிப்புரைகளை கவனத்திற் கொள்ளப்படுகின்ற விடயப்பரப்பிற்கு மாத்திரம் வரையறுக்க வேண்டும்.

(vii) ஒவ்வொரு 'உறுப்பினராலும் பிறிதோர் உறுப்பினர் மீது முறையற்ற வகையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படல் ஆகாது.

(viii) தனிப்பட்ட விடயங்கள் சார்ந்த சகல விதமான உரைகளையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

(ix) உறுப்பினரொருவரால் பிரதேச சபையின் எதிரில் உள்ள பிரச்சினை பற்றியோ அதற்கான ஏதேனும் திருத்தங்கள் பற்றியோ உரையாற்றப்படலாம்.

(x) ஒழுங்குப் பிரச்சினை பற்றித்தான் குற்றமற்றவர் என்பதற்கான விளக்கங்களைக் கூற அவசியமேற்படுகின்ற சந்தர்ப்பத்திலோ, பிரதேச சபை குழுவாக மாறியுள்ள சந்தர்ப்பத்திலோ அன்றி எந்தவோர் உறுப்பினரும் பிரதேச சபையின் எதிரில் உள்ள விடயம் பற்றி ஒரு தடவைக்கு மேலாக உரையாற்றுதல் ஆகாது.

(xi) சபை எதிர்நோக்குகின்ற பிரச்சினையொன்று இல்லாதிருப்பினும் கூட உறுப்பினரொருவரால் பிரதேச சபையின் விருப்பத்துடன் தனிப்பட்ட தன்மையிலான விளக்கமளித்தலை மேற்கொள்ள முடியும். ஆயினும் அவரது செயற்பாடுகளை தவறற்றதென நிரூபிப்பதற்காக மாத்திரம் அத்தகைய விளக்கமளித்தல் வரையறுக்கப்படல் வேண்டுமென்பதோடு, அவ்விடயம் விவாதத்திற்கு உள்ளடக்கப்படல் ஆகாது.

(xii) ஏதேனும் பிரேரணை அங்கீகரிப்பின் அல்லது பிரேரணையின் முன்மொழிபவரால், சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் அந்தப் பிரேரணை அங்கீகரிப்பு அல்லது பிரேரணை பற்றி பிரதேச சபையில் உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட்ட பின்னரும் சபைக்கு வினா விடுக்கப்பட முன்னரும் விடையளிக்கப்பட முடியும். ஆயினும் அவரது உரையானது முன்னர் உரை நிகழ்த்திய பேச்சாளர்களுக்கு விடையளிப்பதற்காக மாத்திரம் வரையறுக்கப்படல் வேண்டுமென்பதோடு, விவாதத்திற்கான புதிய விடயங்களை சமர்ப்பிப்பதாக அமைதல் ஆகாது. தொடர்ந்தும் அவ்வாறே விடையளிப்பதற்கான உரிமையானது திருத்தமொன்றினை முன்மொழிபவருக்கு உரித்தாதலாகாது.

22. (i) பிரதேச சபையின்அலுவல்களுடன் தொடர்புடைய வினாக்கள் தலைவரிடம் கேட்கப்பட முடியும். கேள்விகளும் பதில்களும்.

(ii) ஏதேனும் வினாதொடர்பில், ஞாயிற்றுக்கிழமையும் அரசாங்க விடுமுறைத் தினங்களும் நீங்கலாக குறைந்த பட்சம் முழுமையாக ஏழு நாட்கள் அவகாசம் கொடுத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு வினாவுக்குமான எழுத்திலான விடையை கூட்டத்தின் போது கூட்டத்தின் தவிசாளர் வாசித்தல் வேண்டும்.

(iv) ஏதேனும் வினா தொடர்பில் உறுப்பினர் ஒருவர் பிரதேச சபையில் உரையாற்றலாகா தென்பதுடன், ஏதேனும் வினாவின் சொற்றொடரில் அவ்வினாவைத் தெளிவுபடுத்திக் கொள்ள அவசியமான அளவினைவிட ஏதேனும் விவாதத்தை அல்லது ஏதாவது நோக்கத்தை உருவாக்கிக் கொள்ளல் அல்லது அபிப்பிராயம் தெரிவித்தல் அல்லது விடயங்களை எடுத்துரைத்தல் உள்ளடங்கலாகாது.

(v) கூட்டத்தில் விடையளிக்கப்பட்ட விடயம் அல்லது சம்பவம் பற்றி மேலும் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக எவரேனும் உறுப்பினரால் குறைநிரப்பு வினா எழுப்பப்பட முடியும். ஆயினும் தனது கருத்திற்கிணங்க ஏதேனும் குறை நிரப்பு வினா மூலமாக வினாக்களின் விடயப் பரப்புடன் தொடர்புடையதாக இந்த துணைவிதியில் இதற்கு முன்னர் உள்ள ஏற்பாடுகள் மீறப்படுமாயின் அவ்வினாவை எழுப்ப இடமளியாமல் இருக்க கூட்டத்தின் தவிசாளருக்கு இயலுமென்பதோடு, அத்தகைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்புடைய குறைநிரப்பு வினா பிரதேச சபையின் கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்படலாகாது.

*முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும் கையாளல்.*

23. (i) மனு அல்லது நிருபம் பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படுமாயின் எவரேனும் உறுப்பினர் அந்த மனுவின் அல்லது நிருபத்தின் நோக்கினை சுருக்கமாக வெளிப்படுத்த வேண்டும்.

(ii) எவரேனும் உறுப்பினர் ஒட்டுமொத்தமாக கௌரவமான தொனியிலன்றியும் எழுதிய ஆளின் பெயர் மற்றும் முகவரி உள்ளடக்கப்படாமலும் எந்தவொரு மனுவையும் நிருபத்தையும் அல்லது வேறு தொடர்பாடலை பிரதேச சபைக்குச் சமர்ப்பித்தல் ஆகாது.

(iii) மனு அல்லது நிருபம் வாசிக்கப்படல் வேண்டுமென எந்தவொரு உறுப்பினரும் பிரேரிக்க முடியும். பிரேரணையைச் சமர்ப்பிக்கும் போது அது வாசிக்கப்படல் வேண்டுமென எக்காரணத்தின் நிமித்தம் எதிர்பார்க்கப்படுகின்றதென்பதை சுருக்கமாக் கூறுதல் வேண்டும்.

(iv) அப்பிரேரணை தொடர்பாக விவாதமொன்றுக்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது என்பதுடன் பிரேரணையை முறையாக வழிமொழிந்தாலன்றி மனு அல்லது நிருபம் பற்றி உறுப்பினர் உரை நிகழ்த்தலாகாது.

(v) அப்பிரேரணை வழிமொழியப்பட்டால் சம்பந்தப்பட்ட மனுவோ நிருபமோ வாசிக்கப்படல் வேண்டுமா என்ற கேள்வியைக் கேட்க வேண்டும்.

(vi) பிரதேச சபை உறுப்பினர் ஒருவரால் முன்வைக்கப்படும் மனு, விஞ்ஞாபனம், முறைப்பாடு அல்லது வேறு ஆவணங்களை பிறிதொரு பிரதேச உறுப்பினர் முன்வைத்தல் ஆகாது.

(vii) பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனு அல்லது நிருபம் பற்றி பொருத்தமான நடவடிக்கையின் பொருட்டு தலைவரிடம் அல்லது அது சம்பந்தமாக இறுதி நடவடிக்கையின் பொருட்டு அறிக்கை சமர்ப்பிக்க நிர்வாகக் குழுவொன்றிடம் ஆற்றுப்படுத்துமாறு உறுப்பினரால் பிரேரிக்கப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(viii) நிர்வாகக் குழுவில் மூன்று பிரதேச சபை உறுப்பினர்களாவது இடம்பெறல் வேண்டும்.

(ix) நிர்வாகக் குழுவானது விடங்களை விசாரணை செய்து அவ்வறிக்கையை பொதுக் கூட்டத்தில் முன்வைக்க வேண்டும்.

(x) விசாரணை அறிக்கையை கவனத்தில் எடுப்பதற்காக பொதுக் கூட்டம் நிர்வாகக் கூட்டமாக மாற்றப்பட்டு இவ்வறிக்கை முழுமையாக ஆராய்ந்து தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(xi) ஏதேனும் சாட்சியாளர்களிடமிருந்து சாட்சிகள் விசாரிக்கப்படக் கருதப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய சாட்சிகள் விசாரணைக்குரிய தினத்திற்கு குறைந்தபட்சம் மூன்று நாட்களுக்கு முன்னர் அவசியப்படுகின்ற மனுதாரராலோ உறுப்பினராலோ அச்சாட்சிக்காரர்களின் பெயர்கள், வதிவிடங்கள் மற்றும் தொழில்களை உள்ளடக்கிய பட்டியலொன்று செயலாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதோடு அச்சாட்சிகளை விசாரிக்க சமுகமளிக்குமாறு செயலாளரால் அச்சாட்சியாளர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படலும் வேண்டும்.

(xii) அழைப்பாணைகள் அச்சாட்சியாளர்கள் வருகை தர வேண்டிய நேரத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக கையளிக்கப்படவோ அல்லது அவர்களின் வதிவிடத்தில் சேர்ப்பிப்பதற்கோ செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(xiii) மனுவினை விசாரணை செய்யும் நடவடிக்கைகள் சபையில் மனுத் தொடர்பாக முதற் தடவையாக கலந்துரையாடப்படும் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் முடிவடைய வேண்டும்.

*நிறைவேற்றக் கூடாத பணிகள் (24-27).*

24. ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய பின்னர் அதனை எழுப்பிய உறுப்பினர் அமரவேண்டுமென்பதோடு, கூட்டத்தின் தவிசாளரினால் அப்பிரச்சினை தீர்க்கப்படும் வரை கூட்டத்தில் தவிசாளரின் அனுமதியுடன் அன்றி வேறு எந்த உறுப்பினரும் உரையாற்றல் ஆகாது. அதன் பின்னர் பிரச்சினையை எழுப்பிய வேளையில் பிரதேச சபையில் உரையாற்றிக் கொண்டிருந்த உறுப்பினருக்கு தான் கூட்டத்தின் தலைவரது, பிரதேச சபையினது அல்லது பிரதேச சபையின் குழுவின் தீர்மானத்திற்கு அமைந்தொழுகுவதாயின் தனது உரையை மீண்டும் தொடர்வதற்கான உரிமை இருத்தல் வேண்டும். அவர் அவ்வாறு அமைந்தொழுகாவிடின் அவருக்கு மீண்டும் உரையாற்றுவதற்கு வாய்ப்பளிப்பதை கூட்டத்தின் தவிசாளரினால் நிராகரிக்க முடியும்.

25. தன்னால் பிரயோகிக்கப்பட்ட தகாத வார்த்தைகள் சம்பந்தமாக விடயங்களை எடுத்துரைக்காத அல்லது அந்த வார்த்தைகளை மீளப்பெறுதல் (வாபஸ்) பெற்றுக் கொள்ளாத அல்லது அவ்வார்த்தைகளைப் பிரயோகித்தல் பற்றி பிரதேச சபை திருப்தியுறும் வகையில் கவலையைத் தெரிவிக்காத உறுப்பினரைக் குறைகூறுதல் பொருத்தமானதென பிரதேச சபை கருதுகின்ற வேளையில் அவர் தொடர்பாக பிரதேச சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியும்.

26. கூட்டமொன்றில் தவிசாளர் உரையாற்ற விருப்பம் தெரிவிக்கின்ற வேளையில் அப்போது உரையாற்றிக் கொண்டிருக்கின்ற எவரேனும் உறுப்பினர் உடனடியாக தனது ஆசனத்தில் அமரல் வேண்டும்.

27. (i) தலைமைப்பீடத்தின் அதிகாரத்திற்கு கட்டுப்படாத அல்லது பிரதேச சபையின் அலுவல்களுக்கு மீண்டும் மீண்டும் அத்துடன் வேண்டுமென்றே இடையூறு விளைவிப்பதன் மூலமாக இப் பகுதியின் துணைவிதிகளின் பணிப்புகளுக்கு முரணாகச் செயற்படுகின்ற எவரேனும் உறுப்பினர், கூட்டமொன்றின் தவிசாளரினால் பெயர் குறிக்கப்படல் இயலுமென்பதோடு, எவரேனும் உறுப்பினராலோ கூட்டத்தின் தலைவராலோ, "அந்த உறுப்பினரின் பிரதேச சபை சேவை இடைநிறுத்தப்படல் வேண்டும்" எனச் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரணையின் பேரில் கூட்டத்தின் தவிசாளரினால் உடனடியாக வினா விடுக்கப்படல் வேண்டும். அத்தகைய பிரேரணைக்கு திருத்தஞ் செய்யவோ, ஒத்திவைக்கவோ அல்லது விவாதத்திற்கு இடமளித்தலோ ஆகாது.

(ii) அத்தகைய ஏதேனும் பிரேரணையொன்று அங்கீகரிக்கப்பட்டு இத்துணைவிதிகளின் கீழ் எவரேனும் உறுப்பினரின் சபைச் சேவை இடைநிறுத்தப்பட்டால் முதல் தடவைக்கு அத்தகைய இடைநிறுத்தம் ஒரு மாத காலத்திற்காகவும், இரண்டாவது தடவையாக செய்யப்படுகின்ற இடைநிறுத்தம் இரண்டு மாதங்களுக்காகவும், மூன்றாவது தடவை அல்லது அதற்குப் பிந்திய ஏதேனும் தவறொன்றின்போது செய்யப்படுகின்ற இடைநிறுத்தம் மூன்று மாதங்களுக்காகவும் அமைதல் வேண்டும்.

(iii) வருகை தந்துள்ள உறுப்பினர்கள் சிலர் ஒன்று சேர்ந்து தவிசாளரின் கூட்டத்தின் அதிகார பலத்தைப் பொருட்படுத்தாமல் நடந்து கொண்டாலன்றி ஒரு தடவையில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பெயர் குறித்தல்ஆகாது.

(iv) இப் பகுதியின் துணைவிதிகளின் கீழ் சபைச் சேவை இடைநிறுத்தப்பட்ட எவரேனும் உறுப்பினர் அல்லது ஒருசில உறுப்பினர்களை சபா மண்டபத்தில் இருந்து வெளியேறுமாறு கூட்டமொன்றின் தவிசாளர் விடுத்த கட்டளைக்கு அமைந்தொழுகுதலை, அத்தகைய இடைநிறுத்தல் காலப்பகுதிக்குள் ஏதேனும் சந்தர்ப்பத்தில் மறுத்தால் தவிசாளர் தமது முடிவை வலியுறுத்துவதற்கு தேவைப்படும் அத்தகைய நடவடிக்கையை எடுக்குமாறு பணிக்கலாம்.

பொருள் கோடலும் வரைவிலக் கணமும்.

28. இப் பகுதியின் இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

"செயலாளர்" என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவேரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"கூட்டத்தின் தலைவர்" என்பது, அப்போதைக்கு பிரதேச சபைக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கின்ற பிரதேச சபையின் தவிசாளரையோ அவர் இல்லாத சந்தர்ப்பத்தில் தலைமை வகிக்கின்ற உப தவிசாளரையோ கருதுவதோடு, தவிசாளரும் உபதவிசாளரும் இல்லாத ஏதேனும் சந்தர்ப்பத்தில், அன்றைய தினக்கூட்டத்தில் தலைமை வகிப்பதற்காக உறுப்பினர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற வேறு எவரேனும் உறுப்பினரும் அதில் அடங்குதல் வேண்டும்.

"தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்" என்பது, தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகத்தைக் கருதுவதோடு ஏதேனும் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி உத்தியோகத்தரும் அதில் உள்ளடங்குதல் வேண்டும்.

"ஒலிப் பதிவு நாடா" என்பது, இயந்திர மூலமாக பதிவு செய்யப்பட்ட ஏதேனும் ஒலியைக் களஞ்சியப்படுத்தக்கூடிய இறுவட்டுக்களும் தரவுகளைக் களஞ்சியப்படுத்தக்கூடிய வேறு ஏதேனும் விதத்திலான சாதனமும் அதில் அடங்குதல் வேண்டும்.

**பகுதி II - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன்கடைகள், அழகுக்கலை நிலையங்களை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகள்**

துணைவிதியின் பெயர்.

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன்கடைகள், அழகுக்கலை நிலையங்களை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

நோக்கம்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கள் சட்டத்தின் 3ஆம் பிரிவுக்குஅமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சூழல் மாசடையாமல் தடுத்தல், பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (xxiii) உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்த துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்ற வேண்டிய பணிகள்(4-25).

4. இணைப்பு 1 இலுள்ள விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் வருடாந்த உரிமப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது உரிமப் பத்திரதாரரின் பணியும், பொறுப்புமாகும்.

5. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு சிகை அலங்கரிப்பு நிலையம், நாவிதன்கடை, அழகுக்கலை நிலையம் என்பவற்றுக்கு உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை தூய்மையாகவும் புதுப்பித்த நிலையிலும் பேணிவருதல் வேண்டும்

(ii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

(iii) மேற்படி சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், இருபுறமும் சாந்து பூசப்பட்டு அல்லது மேற்பரப்பு சீமெந்தினால் மினுக்கப்பட்டு, தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை(சீலிங்) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் , மேற்படி உட்கூரை நில மட்டத்திலிருந்து 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்கள் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப் பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை.

(vi) கூரையானது ஏதேனும் நிரந்தரதிண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்.

(vii) ஒவ்வொரு அறையிலும் உட்புறத் தரை சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது நில ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டுமென்பதுடன், சுவரும் தரையும் சேரும் இடங்களை சுத்தப்படுத்துவதை இலகுவாக்கும் வகையில் வளைவு வடிவத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஒரு வாடிக்கையாளருக்கு சேவை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் அளவு ஆகக் குறைந்தது 1.5 மீற்றருக்கு குறையாதவாறு ஒரு சந்தர்ப்பத்தில் சேவை வழங்கும் வாடிக்கையாளாரின் எண்ணிக்கைக்கேற்ற அளவிலான இடவசதி இருத்தல் வேண்டும்.

(ix) வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகையில் கழுவுவதற்காக நீர் உபயோகப்படுத்தப்படின், அதற்கேதுவாக பேசின் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்ப துடன், பாவனையின் பின்னர் கழிவு நீர் பாய்ந்தோடுவதற்கு போதியளவு நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) பிரதேச சபையினால் கழிவுநீர் வடிகாலமைப்பு பேணிவரப்படுவதாயின் உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை பிரதேச சபையின் அறிவுறுத்தலுக்கமைய கழிவுநீர் வடிகாலமைப்புக்கு வழிந்தோடச் செய்ய முடியும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் மேற்படி கழிவுநீரை, நீர் உறிஞ்சிக்கொள்ளும் குழியொன்றுக்கு வடிந்தோடச் செய்தல் வேண்டும். இல்லையேல் சுத்திகரிப்புச் செய்து பொதுநீர்வடிகாலொன்றுக்கு விடுவித்தல் வேண்டும். மேற்படி நீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்காத வகையில் மூடிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கிணற்றிலிருந்து பதினைந்து மீற்றர் தூரத்திற்குக் குறையாத தூரத்தில் இது அமைந்திருத்தல் வேண்டும்.

(xi) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் உபயோகத்திற்காக ஆகக் குறைந்தது ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒன்று என்ற வகையில் ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாருக்கும் தனித்தனியே மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் உட்புறம் வீட்டுச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படல் ஆகாதென்பதுடன், வீடொன்றாக உபயோகிக்கும் பாகத்திலிருந்து தனிவேறாக இருத்தல் வேண்டும்.

(xiii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சாதாரண தீயணைப்பு உபகரணங்கள் இயங்குநிலையில் இருத்தல் வேண்டுமென்பதுடன், இடத்திற்கு மின்னிணைப்பு இருப்பின் மேலதிகமாக மின்சாரத் தீயணைப்பு உபகரணங்களும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xiv) கட்டடத்தின் உட்பகுதிக்கு போதியளவு வெளிச்சத்தைப் பெறக்கூடிய ஏற்பாடுகளையும் செய்திருத்தல் வேண்டும்.

06. தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டுமென இப்பகுதியின் 5 ஆம் துணைவிதியில் விதிக்கப்பட்டுள்ள சகல பகுதிகளும் அவ்வாறே ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒருமுறையேனும் தீந்தை பூசுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது உரிமப் பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

07. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் தரை ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு தடவை கிருமிநாசினிகள் உபயோகித்து கழுவப்படுதல் வேண்டும்.

08. உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் வாடிக்கையாளர்களுக்காக திறந்திருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் போதியளவு நீர்வழங்கல் வசதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

09. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவைகளை மேற்கொள்கையில் உபயோகிக்கும் உபகரணங்கள் மற்றும் கருவிகளைக் கிருமி நீக்கும் பொருட்டு போதுமானளவு நீரைக் கொதிக்க வைக்கும் போதிய வசதிகள் அல்லது கிருமி நீக்கும் பொறிமுறையொன்று அத்துடன் கிருமி நீக்கும் பொருட்டு பாவிப்பதற்குப் போதியளவு பாத்திரங்கள் இருத்தல் வேண்டும்.

10. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பணிபுரிபவர்களுக்கு அவர்களின் சேவைகளை மேற்கொள்ளும் பொழுது கைகளைக் கழுவிக்கொள்ள வசதியாக பேசின் மற்றும் சவர்க்காரம் அல்லது திரவச்சவர்க்காரம் இருத்தல் வேண்டும்.

11. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் வாடிக்கையாளரின் உபயோகத்திற்காக வெள்ளை நிறமுடைய அல்லது வேறு இளநிறங்களைக் கொண்ட (கடும் நிறங்கள் அல்லாத) துவாய்கள் மற்றும் போதியளவு எண்ணிக்கைகொண்ட மேலாடைக் கவசங்கள் வழங்கி இருத்தல் வேண்டும்.

12. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் வெட்டப்படும் சிகை மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களைப் போடுவதற்கான நன்றாக மூடக்கூடிய மூடியைக் கொண்டதும் அங்குமிங்கும் கொண்டு செல்லக்கூடியதுமான பாத்திரங்கள் இருத்தல் வேண்டும்.

13. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் மின்சாரத்தின் மூலம் இயங்கும் உபகரணங்கள் உபயோகிக்கப்படுவதாயின், வாடிக்கையாளரின் மேசை ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் ஒரு பாதுகாப்பு மின்சாரப் பிளக் வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

14. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியால் பணிக்கப்பட்டவாறு போதியளவு முதலுதவி உபகரணங்களும் மருந்துகளுடன்கூடிய முதலுதவிப் பெட்டியொன்றும் இருத்தல் வேண்டும்.

15. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் வாடிக்கையாளர்களுக்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட வர்களுக்கும் வசதியாக உபயோகத்திற்கெடுக்கக்கூடியவாறு போதுமான படிக்கங்கள் வழங்கி இருத்தல் வேண்டும்

16. உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியரும் -

(i) தினந்தோறும் நீராடிய அல்லது உடலைக் கழுவிய பின்னர் மாத்திரமே சேவையில் ஈடுபடுகின்றனர் என்பதனையும்

(ii) அணியும் ஆடை அணிகள் சுத்தமாகவும் சுகாதார நிலையிலும் உள்ளன என்பதையும்

(iii) நகங்களை வெட்டி அழுக்கற்று வைத்திருக்கின்றனர் என்பதையும்

(iv) ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பணி தொடங்குவதற்கு முன்னர் சவர்க்காரம் அல்லது திரவச்சவர்க்காரம் உபயோகித்து கைகளைக் கழுவிக்கொள்கின்றனர் என்பதையும்

உறுதி செய்துகொள்ளல் உரிமப்பத்திரதாரரின் கடமையாகும்.

17. உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் -

(i) உபகரணங்கள் பாவிக்கப்படும் ஒவ்வொரு தடவையின் பின்னரும் கிருமி நீக்கம் செய்தலையும்

(ii) தூரிகைகள் மற்றும் சீப்பு போன்றவை ஒவ்வொரு நாளும் பாவனைக்கு முன்னர் நன்றாகக் கழுவிச் சுத்திகரித்து கிருமி நீக்கம் செய்தலையும்

(iii) சகல பேணிகள், கோப்பைகள் மற்றும் சவர்க்காரத் தூரிகைகள், சீப்புக்கள் போன்றவை, பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு தடவையின் பின்னரும் கொதிநீரில் அமிழ்த்தி கழுவுதலையும் உறுதி செய்துகொள்ளல் உரிமப்பத்திரதாரரின் கடமையாகும்.

18. உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் -

(i) சிகை அல்லது சவரஞ் செய்கையில் அப்புறப்படுத்தப்படும், வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் அல்லது வேறு கழிவுப் பொருட்களை கூட்டித் துப்புரவாக்கியோ அல்லது மின்சார மூலம் உறிஞ்சி இழுக்கும் இயந்திரத்தின் மூலம் சேகரித்து அதற்காக ஒதுக்கப்பட்ட பாத்திரத்தில் இடுதலையும்

அத்துடன்

(ii) சிகை அல்லது சவரஞ் செய்வதற்கு உபயோகிக்கப்படும் சவரக் கத்தியில் சவர அலகினை (பிளேட்) ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் புதிதாக மாற்றுதலையும் உறுதி செய்துகொள்ளல் உரிமப்பத்திரதாரரின் கடமையாகும்.

19. உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் நாளாந்த நடவடிக்கைகளின் முடிவில் அல்லது தேவைப்படின் நாளொன்றுக்குப் பல தடவைகள் என்றவாறு வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் உள்ளிட்ட பாத்திரத்திலுள்ள உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது நிலத்தில் ஒரு மீற்றருக்குக் குறையாத ஆழத்தில் புதைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் உரிமப்பத்திரம் பெறுநரின் கடப்பாடாகும். அவ்வாறு அப்புறப்படுத்தப்படும் வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் அல்லது வேறு கழிவுப் பொருட்கள் காற்றில் பறந்து செல்லல் அல்லது சுற்றாடலில் ஏதேனும் இடத்திற்கு பறந்து செல்வதைத் தடுக்கும் நடவடிக்கை எடுத்தல் உரிமப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

20. உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேரும் வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் இப் பகுதியின் 19 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு அகற்றுவதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் பிரதேச சபையின் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நடைமுறையின் கீழ் பணிக்கப்பட்டவாறு பிரதேச சபையின் குப்பை சேகரித்தல் வாகனத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21. உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உபயோகிக்கப்படும் பாத்திரங்களை அவற்றிலுள்ள கழிவுப் பொருட்களை அகற்றிய பின்னர் சுத்தஞ் செய்து கிருமிநாசினி இடுதல் உரிமப்பத்திரதாரரின் கடமையாகும்.

22. உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் நிலையத்தின் உட்பகுதியில் வெளிப்படையாக தெரியக்கூடிய இடத்தில் அறவிடவேண்டிய கட்டணங்கள் காட்சிப்படுத்தப்படவேண்டும்.

23. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் தொழில்புரிபவர்களின் அடையாளத்தையும், பெயரையும், முகவரியையும் குறித்துக்கொள்ளும் பதிவேட்டை உரிமம் பெற்றவர் பராமரித்தல் வேண்டும். பிரதேச தவிசாளர் அல்லது பிரதேச ஆணையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் வேண்டும்போது பரிசோதிப்பதற்கு அனுமதிப்பது உரிமம் பெற்றவரின் கடமையாகும்.

24. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் உரிமையாளர் அவரது பெயரையும் "உத்தரவுபெற்ற சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன் கடைகள், அழகுக்கலை நிலையங்கள்" என்ற வசனத்தை மும்மொழிகளில் எழுதப்பட்ட பலகையொன்றினை உரிமப்பத்திர இடத்தில் வெளிப்படையாக காட்சிக்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*25.* உரிமப்பத்திரம் பெற்றுக் கொண்டுள்ள இடத்தில் பணிபுரிகின்ற சகல ஊழியர்களும் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒருமுறையாவது மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துதல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள் (26 - 34)

*26.* குறித்த பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உரிய தொழிலுக்காக வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரம் இருந்தாலன்றி யாராயினும் ஆளொருவரினால் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன் கடைகள், அழகுக்கலை நிலையமொன்றை நடாத்திச் செல்லலாகாது.

*27.* (i) எவரொருவரும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன் கடைகள், அழகுக்கலை நிலையங்களில் எந்தவொரு விலங்கையும் வைத்திருத்தல் அல்லது அவ்வாறு வைத்திருப்பதற்கு இடமளித்தலாகாது.

(ii) உரிமப்பத்திரதாரர் துணிகளைக் கழுவும் செயற்பாட்டுக்காக அனுமதிக்கப்படாத இரசாயனப் பதார்த்தங்களையோ அல்லது ஒவ்வாமையை ஏற்படுத்தும் பொருட்களையோ பயன்படுத்தல் கூடாது.

*28.* (i) ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி முடிந்தாலன்றி, மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தலோ ஆகாது.

(ii) நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப்பத்திரத்திற் குரிய இடத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

*29.* இப்பகுதியின் துணைவிதிகளுக்கமைய உரிமப்பத்திரத்தைப் பெற்றுள்ள இடத்தைப் பகல் அல்லது இரவு வேளைகளில் நித்திரை செய்யும் அல்லது உணவு உண்ணும் இடமாகப் பாவித்தல் ஆகாதென்பதோடு, வேறு எந்தவோர் ஆளையும் அவ்வாறு பாவிக்க இடமளித்தல் ஆகாது .

*30.* ஏதேனும் உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில்,

(i) எந்தவொரு இரத்தம் நிறுத்தும் பென்சில் வகையிலான தூரிகை அல்லது வேறு பொருட்கள்;

(ii) ஏதாவது இரத்தப்பெருக்கை நிறுத்தக்கூடிய செயல்களுக்கான சீனக்காரமோ அல்லது வேறு பொருளையோ (அது தூள் வகையாக அல்லது திரவமாக இருந்தாலன்றி) எந்தவோர் வாடிக்கையாளருக்காகவும் உபயோகப்படுத்த இடமளித்தல் ஆகாது.

*31.* எந்தவொரு உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உரிமப்பத்திரம் பெறுநரால் சுத்தமான நிலையில் அல்லாத மேலாடைக் கவசங்கள் அல்லது கழுவிய பின்னர் முதற் தடவையாகப் பாவிக்கும் துவாய் அல்லாத ஏதேனும் துவாய் அல்லது மேலாடைக் கவசமாக வாடிக்கையாளரின் பாவனைக்காக உபயோகித்தல் ஆகாது.

*32.* இப்பகுதியின் துணைவிதிக்கு அமைய உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்திற்கு விநியோகிக்கப்பட்ட உரிமப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களைத் தவிர்ந்த வேறு எந்தவொரு கருமத்தையும் பிரதேச தவிசாளர் அல்லது பிரதேச அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் எழுத்து மூலமான அனுமதி இருந்தால் அன்றி செய்தல் ஆகாது.

*33.* எவரொருவராலும் ஏதாவது சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன் கடைகள், அழகுக்கலை நிலையங்கள் என்பவற்றில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள படிக்கங்கள் தவிர வேறு இடங்களில் எச்சில் துப்பக்கூடாது.

*34.* உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் இலங்கைச் சட்டத்தால் தடை செய்யப்பபட்ட, அல்லது சுகாதார வைத்திய அதிகாரியால் தடைசெய்யப்பட்ட எந்தப் பொருட்களையும் பாவித்தல் கூடாது.

*35.* இந்த துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன் கடைகள், அழகுக்கலை நிலையங்களை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப் பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும். பிரதேச சபையின் பணி.

*36.* (i) யாதாயினுமொரு சிகை அலங்கரிப்பு நிலையங்கள், நாவிதன் கடைகள், அழகுக்கலை நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அமைவாக உச்ச கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப் பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச ஆணையாளருக்கு தத்துவமுண்டு. அறவீடுகளும் கட்டணங்களும்.

(ii) பிரதேச சபையினால் விதிக்கப்படுகின்ற வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணம் தொடர்பான அறிவித்தலை வர்த்தமானில் வெளியிடுவது பிரதேச சபை தவிசாளரின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பணியாதல் வேண்டும்.

*37.* இப்பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும். தத்துவங்களை ஒப்படைத்தல்.

*38.* இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும். உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.

*39.* (i) இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் உரிமப் பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபை தவிசாளர் அல்லதுஅதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. பரிசோதனை நடைமுறையும் தத்துவமும் (39-41).

(ii) நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபை தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

*40.* இப் பகுதியின் 35 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபை தவிசாளர் அல்லது பிரதேச அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

*41.* இப் பகுதியின் 40 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு.

*42.* உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினும் ஒருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளர் சபை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும். முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

துணைவிதிகளை மீறுதல்.

43. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறொன்றாகும்.

அபராதமும் தண்டனையும்.

44. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.

45. இப்பகுதியின் இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச தவிசாளர்எனப் பொருள்படுவார்.

"செயலாளர்" என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேச தவிசாளர்" என்பது ஏதேனும் பிரதேச ம் தொடர்பிலாயின் இந்த பிரதேச சபைக்கு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற அல்லது கூட்டிணைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற பிரதேச சபையின் பிரதேச ஆணையாளர் எனப் பொருள்படும். இந்த பிரதேச சபையின் தவிசாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவரும் ஆணையாளரின் தத்துவங்களுள் அல்லது கடமைகளுள் எவற்றையேனும் புரிவதற்கு அல்லது அதன் கீழ் நிறைவேற்றுவதற்கு பிரதேச சபை கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தத்துவமளிக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் ஒருவரும் இந்த அலுவலருக்கு அவ்வாறு தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள அளவும் இதில் உள்ளடங்கும் .

"பிரதேச சபை" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

"பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்" என்பது குறித்த உத்தரவுப் பத்திரம் பெற்ற இடத்தில் வாடிக்கையாளருக்கு சேவை வழங்கிக் கொண்டிருக்கும் எந்த நேரமுமாகும்.

**இணைப்பு I**

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் , நாவிதன் கடைகள் , அழகுக்கலை நிலையங்களை நடாத்துவதற்கான வியாபார வரி / வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20........**

1. தொழில் நிலையத்தின் பெயர் : ...........................................................................................................

2. (i) தொழில் நிலையம் அமைந்துள்ள இடம்: வட்டாரம்....................................... ஆதன இல: ..................

(ii) வீதியின் பெயர் :.............................................................................................................................

(iii) கிராம அலுவலர் பிரிவு இல:............................................ பிரிவின் பெயர்:.......................................

3. விண்ணப்பதாரியின் விபரம்:

(i) முழுப்பெயர் : ......................................................................................................................

(ii) நிரந்தர முகவரி : ..................................................................................................................

(iii) கிராம அலுவலர் பிரிவு :........................................................................................................

(iv) அடையாள அட்டை இல. :.......................................................................................................

(v) தொலைபேசி இல. :...............................................................................................................

(vi) மின்னஞ்சல் முகவரி :...........................................................................................................

4. (i) தொழில் ஆரம்பிக்கப்பட்ட திகதி:.............................................................................................

(ii) தொழிலின் தன்மை:.....................................................................................................................

(iii) தொழில் நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்

(அ) பெயர் : ........................................................................................................................

(ஆ) தொலைபேசி இல. :...........................................................................................................

5. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i) உரிமையாளரின் பெயர்:.........................................................................................................

(ii) முகவரி :..................................................................................................................................

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா : ஆம்:...................................... இல்லை :.....................................

ஆம் எனில் உரிம இல. :............................................................ திகதி:......................................................

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20.......ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

..................... .........................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

....................................

தவிசாளர் / செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம்:................................... ஆதன இல:...............................
வீதியின் பெயர்:..........................................................................
உரிமையாளரின் பெயர்:........................................................................
ஆதன விபரம்:................................................................................
ஆண்டுப் பெறுமதி:........................... வீதவரி நிலுவை.................. உண்டு...............இல்லை............

............ ........................
திகதி நிர்வாக உத்தியோகத்தர்/பகுதி தலைவர்.

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:......................................................................
செலுத்த வேண்டிய கட்டணம்:...............................................................
பிரிவு A B C .......................................
குறிப்பு.......................................
................ .................................
திகதி வருமானப் பரிசோதகர்.

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

**பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை**

.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................

......................... .................................
திகதி பொதுச் சுகாதார பரிசோதகர்.

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................

................ ....................................
திகதி பிரதம சுகாதார வைத்திய அதிகாரி.

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம்:................ உபயோகம் மற்றும்:.............................. சுற்றுச்சூழல் உரிமம்:................................. சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :................................ குடிபுகு சான்றிதழ் :.................................. மதுவரி உரிமம்:..........................

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................
............................. ...............................
திகதி பிரதம வருமானப் பரிசோதகர்.

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

............... ..............................
திகதி செயலாளர்

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை.

........... .............................
திகதி பிரதேசசபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல:.................. பற்றுச்சீட்டு திகதி:......................................
உரிம இல. :.......................... உரிமத் திகதி :..........................

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

................................ ................................
திகதி இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது

................ ..............................
திகதி செயலாளர்.

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

........... .............................
திகதி பிரதேசசபைத் தவிசாளர்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

---

**பகுதி III – பிரதேச சபை எல்லைக்குள் தகனச்சாலைகள் முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் நிர்வகித்தல், மற்றும் கட்டணம் விதித்தல் பற்றிய நியமத் துணைவிதிகள்.**

*துணைவிதியின் பெயர்.*

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் தகனசாலைகளை ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டண அறவீடு தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என இவை அழைக்கப்படலாம்.

*நோக்கம்.*

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுகாதாரம், சௌக்கியத்தைப் பாதுகாத்தல், பொதுப்பயன்பாட்டு சேவை, அசைவற்ற ஆதனத்தைப் பேணுதல் மற்றும் முகாமை செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*துணைவிதியை உருவாக்குவதற் கான சட்ட ஏற்பாடுகள்.*

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 126(vi) (இ) மற்றும் (ix) (ஓ) பிரிவுகளின் கீழ் இடுகாடுகள், சுடுகாடுகள் கட்டளைச் சட்டத்திற்கமைவாக பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்தத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*நிறைவேற்ற வேண்டிய பணிகள். (4-7)*

4. இப்பகுதியின் 8வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் (இதனகத்துப் பின்னர் "விண்ணப்பதாரி" என அறியப்படும்) எவரேனும் ஆள், இங்கு கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களுடன் இங்கு இரண்டாவது அட்டவணைக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(i) மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையிலான தொடர்பினை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு,-

(அ) விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ் அல்லது

(ஆ) மரணமடைந்தவரின் பிறப்புச் சான்றிதழ் அல்லது

(இ) விண்ணப்பதாரியின் விவாகச் சான்றிதழ் அல்லது

(ஈ) மரணமடைந்தவர் வசித்த பிரிவின் கிராம உத்தியோகத்தரால்

வழங்கப்பட்ட சான்றிதழ்

(ii) மரணமடைந்தவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் விசாரணை நடாத்தப்பட்டிருந்தால், அத்தகைய விசாரணையை நடாத்திய நீதவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியினால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச்சட்டத்தின் 41 (உ) பந்தியின் கீழ் பூதவுடலைத் தகனம் செய்ய அனுமதியளித்து வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது இறந்து பிறந்த சடலமாயின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 43 (ஆ) பந்தியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்

அத்துடன்

(iii) மரணமடைந்தவரின் மரணச் சான்றிதழ்.

5. வாரத்தின் எல்லா நாட்களிலும் முற்பகல் 07.00 மணியிலிருந்து பிற்பகல் 07.00 மணி வரை தகனம் செய்வதற்காக பூதவுடலைப் பொறுப்பேற்கவும் தகனம் செய்யவும் முடியும். வேறு நேரங்களில் சடலமொன்று தகனம் செய்யப்படவேண்டுமெனில் அதற்காக பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் விசேட அனுமதி பெறல் வேண்டும். ஒரு நாளில் தகனம் செய்யப்படும் அதிகூடிய சடலங்களின் எண்ணிக்கையானது சபையால் தீர்மானிக்கப்பட்டு தகனச்சாலையின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

6. (i) ஒவ்வொரு பூதவுடலும் தகனம் செய்யப்பட்டு எழுபத்திரண்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பதாரியால் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் அத்தகைய பூதவுடலின் அஸ்தி பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

(ii) எனினும் விண்ணப்பதாரியின் எழுத்திலான வேண்டுகோளின் பேரில் பிரதேச சபைத் தவிசாளர்அல்லது பிரதேச ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகைய அஸ்தியை தகன நிலையத்தின் பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துக்கொள்ளும் கால எல்லையை நீடித்துக்கொள்ள முடியும்.

(iii) இத் துணைவிதியின் (ii) பிரிவின் கீழ் அஸ்தி தகனநிலைய பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்திருப்பதற்கு நீடிக்கப்பட்ட காலம், தகனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(vi) அவ்வாறு அஸ்தி அப்புறப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலம் முடிவுற்ற பின்னரும் எடுத்துச் செல்லப்படாத அஸ்தியை அகற்றுவதற்கு பிரதேச தவிசாளர்அல்லது பிரதேச ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது தகன நிலைய பொறுப்பாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(v) எவரேனும் விண்ணப்பதாரியால் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை தகன நிலைய வளவினுள் அல்லது ஏதேனும் மயானத்தில் புதைப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாதல் வேண்டும்.

7. இப் பகுதியின் 12ஆம் துணைவிதியின் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும்-

(i) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு எவரேனும் ஆள் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளவிடத்து, பூதவுடலைத் தகனம் செய்வதற்காக கையளிப்பதற்கு அவர் அல்லது

அவரின் அதிகாரம் பெற்ற ஆளுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் பங்குகொள்ளும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் ;

அத்துடன்

(ii) தகனம் செய்யப்பட்ட ஏதேனும் பூதவுடலின் அஸ்தியைப் பொறுப்பேற்க உரிய தினம் அல்லது அத்தினத்திற்கு முன்னர் அனுமதிப்பத்திரம் பெறுநரின் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடன் வருகைதரும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் தகன நிலைய வளவினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்களும் எனக் கருதப்படல் வேண்டும்.

*நிறைவேற்றக் கூடாத பணிகள் (8- 13).*

8. (i) பிரதேச தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் தகன நிலையத்தில் எந்தவோர் பூதவுடலும் தகனம் செய்யப்படுதல் ஆகாது.

(ii) முறையான அனுமதிப்பத்திரத்தின் மூலம் தகனம் செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள சடலமொன்று அனுமதி வழங்கப்பட்டுள்ள நேரத்துக்குள் தகனம் செய்யப்படுவதனை நீதிமன்றத்தால் அல்லது பொலிஸ் தலைமையதிகாரியால் வழங்கப்படும் எழுத்துமூலமான கட்டளையொன்றினால் மாத்திரமே இடைநிறுத்த இயலும். ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு பதிலாக மாற்று நேரத்தை வழங்கிட அல்லது அதற்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை மீளச் செலுத்துவதற்கு பிரதேச சபை வகைகூறலுக்கு உட்படாது என்பதுடன் மீளச் செலுத்துமாறு கோருவதற்கு விண்ணப்பதாரிக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

9. இறந்துபோன எவரினதும் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் நீதிவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியினால் நடாத்தப்பட்டு, அத்தகைய விசாரணையின் முடிவில் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அத்தகைய நீதிவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியினால் அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலேயொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது.

10. இறந்துபோன எவரினதும் மரண சான்றிதழின் 7 வது நிரலில் "மரணத்திற்கான காரணம் அடக்கம் செய்யப்படும் அல்லது தகனம் செய்யப்படும் இடம்' என்பதில், பிரதேச சபையின் ஏற்புடைய தகனநிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது.

11. ஏதேனும் தகன நிலையத்தின், தகன கூடத்தில் சடலம் வைக்கப்பட்டு அதன் பாதுகாப்பு கதவுகள் மூடப்பட்ட பின்னர் கூடத்தின் மூடப்பட்ட பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகத்தினுள் தகன நிலைய பொறுப்பாளர் அல்லது அவரின் உதவியாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளும் உட்பிரவேசித்தல் ஆகாது.

12. பிரதேச தவிசாளர்அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அல்லது தகன நிலைய பொறுப்பாளரின் அனுமதியின்றி ஏதேனும் தகன நிலைய வளவினுள் எவரும் பிரவேசித்தல் ஆகாது.

13. ஏதேனும் தகன நிலைய வளவினுள் எவரொருவரும்,-

(i) அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்ளல்

(ii) தகன நிலைய வளவினுள் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு சேதமேற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படுதல்

(iii) தகன நிலையத்தின் பொறுப்பாளரின் அல்லது அவருடைய எவரேனும் உதவியாளரின் கடமைகளுக்குத் தடை ஏற்படுத்தல்

(iv) தகன நிலைய வளவிற்குள் ஏதேனும் அலங்கரிப்புகளைச் செய்தல் அல்லது அறிவித்தல்களை ஒட்டுதல்

ஆகாது.

*பிரதேச சபையின் பணி (14 - 20).*

14. பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பப்பத்திரத்தின் பேரில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்படின், அவ்வாறான விண்ணப்பப்பத்திரங்கள் கிடைக்கப்பெறும் வரிசைக் கிரமத்திற்கமைய இங்கு மூன்றாவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்தல் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பணியாதல் வேண்டும். இப்பதிவேடு விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் பிரதேச சபை அலுவலகத்தில் பேணப்படுதல் வேண்டும்.

15. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய ஏதேனும் பூதவுடல் தகனம் செய்வதற்குப் பொறுப்பேற்கத் தீர்மானிக்கப்படுமாயின், இப் பகுதியின் 20வது துணைவிதிக்கமைய விதிக்கப்பட்ட உரிய கட்டணத்தை அறவிட்ட பின்னர் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அதற்கான அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரத்திற்கு அமைய தகனம் செய்வதற்குரிய பூதவுடல் தகன நிலைய பொறுப்பாளரிடம் கொண்டுவந்து பொறுப்பிக்க வேண்டிய தினம் மற்றும் நேரம் அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

16. ஏதேனும் காரணத்தின் பேரில் தகனம் செய்வதற்காக பூதவுடலைப் பொறுப்பேற்காவிடின், பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அதற்கேதுவாக அமைந்த காரணங்களுடன் அதுபற்றி உடனடியாக விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

17. ஒவ்வொரு தகன நிலையத்திலும் தகனம் செய்யப்பட்ட ஒவ்வொரு பூதவுடல் தொடர்பாக நான்காவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேடொன்று தகன நிலையத்தின் பொறுப்பாளரால் பேணப்பட்டு வருதல் வேண்டும்.

18. பூதவுடலை அடக்கம் செய்வதற்கு உகந்த நிலையில் தகன நிலையத்தைப் பராமரித்துக் கொண்டு நடாத்துதல் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாதல் வேண்டும்.

19. தகனச் சாலையில் சடலமொன்று தகனம் செய்யப்படுகின்றபோது இடம்பெறும் தொழில் நுட்ப கோளாறு காரணமாக சற்று நேரத்தில் மீண்டும் முந்திய நிலைக்கு கொண்டு வர முடியாத சந்தர்ப்பத்தில் அந்தச் சடலம் அல்லது சடலத்தின் பகுதி கௌரவத்துடன் அடக்கம் செய்யும் அல்லது எரிக்கும் உரிமை பிரதேச சபைக்கு உரித்தானதாகும்.

20. ஏதேனும் தகன நிலையத்தின் புனரமைப்பு அல்லது பராமரிப்பு கருமத்திற்காக அத்தகைய தகன நிலையத்தை மூடிவைப்பதாயின், அது பற்றிய அறிவித்தலொன்றை மூன்று மொழிகளிலும், பூதவுடல்கள் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்திலும் தகன நிலைய வளவினுள் பிரவேசிக்கும் இடத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய விதத்தில் காட்சிக்கு வைத்தல் பிரதேச சபைத் தவிசாளர்அல்லது பிரதேச ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாதல் வேண்டும்.

*அறவீடுகளும் கட்டணங்களும்.*

21. (i) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணம் பிரதேச சபையின் பிரேரணை தீர்மானத்தின் மூலமாக விதிக்கப்படல் முடியுமென்பதோடு அவ்வாறான தீர்மானம் வழிமொழிதல் மூலமாக காலத்திற்குக் காலம் திருத்தம் செய்ய முடியும்.

(ii) இத் துணைவிதியின் மேலே (i) பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற அல்லது காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும் கட்டணங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு தகன நிலையத்தை ஒதுக்கிக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இடத்திலும் தகன நிலையத்திலும் தெளிவாக புலப்படக்கூடிய இடத்தில் காட்சிக்கு வைக்கப்படுதலும் வேண்டும்.

(iii) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணங்கள் இங்கு முதலாவது அட்டவணையில் காட்டப்பட்ட வகைப்படுத்தலின் கீழ் விதிக்கப்பட முடியும்.

22. இப்பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும். தத்துவங்களை ஒப்படைத்தல்.

23. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் பூதவுடலை தகன நிலைய பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அத்தகைய நேரத்தில் பூதவுடலைக் கையளிக்க தாமதம் காரணமாக விண்ணப்பதாரி அல்லது மரணமடைந்தவரின் உரிமையுள்ள வேறு எவரேனும் ஆளுக்கு ஏற்படும் ஏதேனும் அசௌகரியம் அல்லது நட்டம் சம்பந்தமாக பிரதேச சபை அல்லது பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் வகைப் பொறுப்புக்கு கட்டுப்படல் ஆகாது. எவ்வாறாயினும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நாளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம்.

24. இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் தகனச்சாலையில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. பரிசோதனை நடைமுறையும் தத்துவமும்.

25. அனுமதிப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும். முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

26. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும். துணைவிதிகளை மீறுதல்.

27. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும். அபராதமும் தண்டணையும்.

28. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து, பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச சபைப் தவிசாளர் எனப் பொருள்படும்.

"செயலாளர்" என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவேரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேசசபை" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"தகன நிலைய கூடம்" என்பது, தகனம் செய்வதற்காக பூதவுடல் வைக்கப்படுகின்ற கூடமும் அத்தகைய கூடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வெளிக்கூடமும் எனப் பொருள்படும்.

"தகன நிலைய வளவு" என்பது, முழுதகன நிலையமும் அதற்குச் சொந்தமான பூமியும் எனப் பொருள்படும்.

"தகன நிலையத்தின் பொறுப்பாளி" என்பது, அப்போதைக்கு பிரதேச சபையின் தகன நிலையத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் ஊழியர் எனப் பொருள்படும்.

"அஸ்தி"என்பது, ஏதேனும் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட பின்னர் பூதவுடலினதும் அதுவைக்கப்பட்ட பெட்டியில் ஏதேனும் எரியாது எஞ்சிய பொருட்களும் எனப்பொருள்படும்.

"பூதவுடல்" என்பது, மரணமடைந்த எவரேனும் ஆளுடைய முழுப் பூதவுடல் அல்லது உயிரற்றுப் பிறந்த குழந்தையின் பூதவுடல் அல்லது பூதவுடலின் ஏதேனும் பாகமும் எனப் பொருள்படும்.

## முதலாவது அட்டவணை

### 21(iii) ஆவது துணைவிதி

### தகன நிலையத்தைப் பாவிக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள்

ரூபா. சதம்

1. அதிகாரப் பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு
2. அதிகாரப் பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரல்லாதவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு
3. அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வதியும் வயது வந்த ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு
4. அதிகாரப் பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரல்லாதவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு
5. அதிகாரப் பிரதேசத்தில் வதியும் சமுர்த்தி பெறுநர் குடும்பத்தைச் சார்ந்த வயது வந்த ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு
6. அதிகாரப் பிரதேசத்தில் வதியும் சமுர்த்தி பெறுநர் குடும்பத்தைச் சார்ந்த வயது வந்த ஒருவரல்லாதவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு

இங்கு வயது வந்த ஒருவரல்லாதவர் என்பது, வயது 12 வருடங்களுக்குக் குறைந்த பிள்ளையொன்றென்று கருதப்படும்.

## இரண்டாவது அட்டவணை

### 4 ஆவது துணைவிதி
### (முன்பக்கம்)

(இரண்டு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்).

................ பிரதேச சபையின் தகன நிலையத்தில் பூதவுடலொன்று தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தல்

01. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : ...............................................................
முகவரி : .....................................................................................
தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ...........................................................
கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :................................................

02. மரணமடைந்தவரின் முழுப் பெயர் : ...............................................................
பால் : பெண்ணா/ஆணா : ...........................................................................
வதிந்திருந்த இடத்தின் முகவரி : ...................................................................
கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் : ................................................
தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ............................................................

03. மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரருக்கும் உள்ள தொடர்பு : ......................................
(உறுதிப்படுத்துவதற்கு 4 ஆவது துணைவிதியின் (i) பிரிவில் குறிப்பிட்ட சான்றிதழ்களை இணைக்கவும்)

04. மரணச் சான்றிதழின் பதிவு இலக்கமும் திகதியும் : ...................................................
(மரணச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

05. மரணத்தைப் பதிவுசெய்த செயலாளரின் பெயரும் பிரிவும் : ...........................................

06. மரணத்திற்கான காரணம் : .......................................................................

07. மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடத்தப்பட்டிருப்பின்
(4வது துணைவிதியின் (ii) பிரிவில் குறிப்பிடப்பட்ட சான்றிதழை இணைக்கவும்)
விசாரணை உத்தியோகத்தரின் பெயரும் அந்தஸ்தும் - .................................................
விசாரணை நடத்தப்பட்ட தினம் : - ...................................................................
விசாரணை உத்தியோகத்தரின் முடிவு: - ..............................................................
பூதவுடலைத் தகனம் செய்வதற்கு மரண பரிசோதகர் அனுமதி வழங்கியுள்ளாரா............................

08. தகனம் செய்வதற்குக் கோரும் தினமும் நேரமும் (விருப்பத்தின் அடிப்படையில்)

| | தினம் | நேரம் | | தினம் | நேரம் |
|---|---|---|---|---|---|
| i. | 20........ . | .... மணி | iii. | 20.... | ........ மணி |
| ii | 20........ | ..... மணி | iv. | 20.... | ........ மணிஷ |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் இங்கு காட்டப்பட்டுள்ள தகவல்களின் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஏற்புடைய சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன.

திகதி : .......................

.......................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**இரண்டாவது அட்டவணை**

திரு/திருமதி/செல்வி : ......................................................

**பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரித்தல்**

ஐயா/அம்மணி,

உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மறு பக்கத்தில் விண்ணப்பப்பத்திரத்தின் பிரகாரம், அனுமதிப்பத்திரம் கீழே காட்டப்பட்டுள்ள காரணங்களின் பேரில் நிராகரிக்கப்படுவதாக கவலையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

i .. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
ii .. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
iii. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
iv. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
v. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

......................................
பிரதேச சபைத் தவிசாளர்
அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :.....................

தகன நிலைய பொறுப்பாளி,
............................................... தகன நிலையம்.

**சடலத்தை தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்**

(அ) ........................................என்பவரின் பூதவுடலை 20......மாதம்............ஆம் திகதி முற்பகல்/ பிற்பகல்................மணிக்கு ...........................தகன நிலையத்தில் தகனம் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்குகிறேன்.

(ஆ) மறுபக்க விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் 6 வது துணைவிதியின் பிரகாரம் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

(இ) 20...........திகதிய...............இலக்கத்தைக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் ரூ............. அறவிடப்பட்டுள்ளது.

(ஈ) இவ்வனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்களைச் சார்ந்ததாக 17 வது துணைவிதியின் பிரகாரம் ஏற்புடைய பதிவேட்டில் பதிந்த பின்னர் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும். அனுமதிப்பத்திர பதிவேட்டின் தொடர் இலக்கம் ...........ஆகும்.

......................................
பிரதேச சபைத் தவிசாளர்,
அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி : 20.............

**மூன்றாவது அட்டவணை**

........... பிரதேச சபையின் தகன நிலையத்தில் பூதவுடல் தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்களின் பதிவேடு

| தொடர் இல | மரணமடைந்தவரின் பெயர் | தே.அ.அ.இல | ஆண் /பெண் பால் நிலை | மரணமடைந்த தினம் | மரணச் சான்றிதழ் பதிவு செய்த | | விண்ணப்பதாரியின் | | | | நீதிவான் திடீர் மரண பரிசோதகரின் கட்டளையின் | | அனுமதிப்பத்திர இல. | பற்றுச்சீட்டு | | தகனம் செய்ய ஒதுக்கப் பட்ட | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இல. | திகதி | பெயர் | இறந்தவருக்குள்ள தொடர்பு | முகவரி | தே.அ.அ.இல | தொடர்பு இல. | திகதி | | இலக்கம் | தொகை | திகதி | நேரம் |
| | 01. | | | | | | | | | | | | | | | | |
| | 02. | | | | | | | | | | | | | | | | |
| | 03. | | | | | | | | | | | | | | | | |
| | 04. | | | | | | | | | | | | | | | | |
| | 05. | | | | | | | | | | | | | | | | |

**நான்காவது அட்டவணை**

**........... பிரதேச சபை தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட பூதவுடல்கள் பற்றிய பதிவேடு**

| தொடர் இல. | மரணமடைந்தவரின் பெயர் | தே.அ.அ.இல. | ஆண் /பெண் பால் நிலை | அனுமதிப்பத்திரங்கள் பதிவேட்டின் தொடர். இல. | மரணமடைந்த தினம் | மரணச் சான்றிதழ் பதிவு செய்த | | விண்ணப்ப தாரியின் விபரம் | | அனுமதிப்பத்திர இல. | பற்றுச்சீட்டு | | தகனம் செய்ய ஒதுக்கப் பட்ட | | அஸ்தி எடுத்துச் சென்ற திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இல. | திகதி | பெயர் | தே.அ.அ.இல. | | இலக்கம் | தொகை | திகதி | நேரம் | |
| | 01. | | | | | | | | | | | | | | |
| | 02. | | | | | | | | | | | | | | |
| | 03. | | | | | | | | | | | | | | |
| | 04. | | | | | | | | | | | | | | |
| | 05. | | | | | | | | | | | | | | |

### அத்தியாயம் - 2

### பகுதி I - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிற்றுண்டிச்சாலை, உணவகம், தேநீர்க்கடை, கோப்பிக்கடை மற்றும் இவையொத்த கடைகளை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிற்றுண்டிச்சாலை, உணவகம், தேநீர்க்கடை, கோப்பிக்கடை மற்றும் இவையொத்த கடைகளை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என இவை அழைக்கப்படலாம். துணைவிதியின் பெயர்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன. நோக்கம்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix)(ஏ) பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்தத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

4. இணைப்பு 01 இலுள்ள விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் வருடாந்த உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியும், பொறுப்புமாகும். நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4-17).

5. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே எந்தவொரு சிற்றுண்டிச்சாலை, உணவகம், தேநீர்க்கடை, கோப்பிக்கடை மற்றும் இவையொத்த கடை என்பவற்றுக்கு பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை தூய்மையாகவும் புதுப்பித்த நிலையிலும் பேணிவருதல் வேண்டும்.

(ii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

(iii) மேற்படி சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், இருபுறமும் சாந்து பூசப்பட்டு அல்லது மேற்பரப்பு சீமெந்தினால் மினுக்கப்பட்டு, தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் சமையலறை தவிர்ந்த வேறு அறைகள் பலகையினால் அல்லது யாதாயினும் உலோகத்தகடு வகையினால் அல்லது பலகை மற்றும் யாதாயினும் உலோக வகையினால் நிர்மாணிக்கப்பட்டு தீந்தை பூசப்பட்டிருப்பது இந்த நியமத்திற்கு உட்பட்டதாகக் கருதப்படும்.

(iv) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை (சீலிங்) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். மேற்படி உட்கூரை நில மட்டத்திலிருந்து 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்கள் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப்பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை.

(vi) கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்.

(vii) ஒவ்வொரு அறையிலும் தளப்பகுதி சீமெந்து இடப்பட்டு சாந்து பூசப்பட்டு மினுக்கப்படல் அல்லது பீங்கான் கற்கள் (நில ஓடுகள்) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை சேகரிப்பதற்காகக் கழிவுகளைச் சேகரிக்கும் தொட்டிகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஈக்கள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் நுழைய முடியாதவாறு மூடிகளால் மூடி இருத்தல் வேண்டும்

(ix) சமையலறையில் வைக்கப்படுகின்ற பாத்திரங்களில் ஈக்கள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் நுழைய முடியாதவாறு மூடிவைப்பதற்கான மூடிகளால் மூடி இருத்தல் வேண்டும்.

(x) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை அகற்றுவதற்கு இப் பகுதியின் 11ஆம் துணைவிதிக்கு அமைய செயற்படக்கூடியவாறு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xi) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் நுகர்வோரின் உபயோகத்திற்கு வைக்கப்பட்டுள்ள மற்றும் சமையலறையில் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு மேசையும்,

(அ) பலகையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளபோது அவற்றின் கால்கள் மினுக்கப்பட்டு பூச்சுப் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மேசைகளின் மேற்றளம் மினுக்கப்பட்ட நீர் ஊடுருவாத பொருட்களால் அல்லது இணைப்புகளற்ற துருப்பிடிக்காத உலோகத்தகட்டினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதாவது உலோகங்களால் அமைக்கப்பட்டிருப்பின் அவற்றின் கால்கள் பூச்சுப் பூசப்பட்டு இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்றளம் மினுக்கப்பட்ட நீர் ஊடுருவாத பொருட்களால் அல்லது இணைப்புகளற்ற துருப்பிடிக்காத உலோகத்தகட்டினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் பயன்படுத்தப்படுகின்ற நீர் மனித உபயோகத்திற்கு உகந்ததென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டுள்ள தரச்சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இத்தரச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும். தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்படுகின்ற நீர் இந்த இடத்தில் பயன்படுத்தப்படுமாயின் மேற்படி தரச்சான்றிதழ் பெறப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(xiii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற நீர் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடையாது தடுத்துக்கொள்வதற்குப் போதுமானளவு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(xiv) வாடிக்கையாளர்கள் பயன்படுத்துகின்ற பாத்திரங்களைக் கழுவுவதற்காக தனியொரு இடத்தைப் பேணிவருதல் வேண்டும்.

(xv) வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் உபயோகத்திற்காக ஆகக் குறைந்தது ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒன்று என்ற வகையில் ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாருக்கும் தனித்தனியே மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறான மலசலகூடங்கள் சமையலறை, உணவு பரிமாறுமிடங்கள் அல்லது களஞ்சிய அறைகள் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புபடாதவாறு சுகாதாரத்தைப் பேணக்கூடியவாறான தூரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvi) ஒவ்வொரு மலசலகூடத்தின் சுவர்கள் செங்கல் அல்லது சீமெந்துக்கற்கள் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுவர்களாக இருக்கும் போது அவை சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மினுக்கப்பட்டு தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். துருப்பிடிக்காத உலோகங்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுவர்களாக இருக்கும் போது அவற்றின் மேற்புறத்தே தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். நிலப்பகுதி சீமெந்தினால் சாந்து பூசப்பட்டு மினுக்கப்பட்டு அல்லது நிலஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவையாற்றுகின்றவர்களின் உபயோகத்திற்காக குளியலறைகள் போதியளவு நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும். இத்துணை விதியின் (xvi)

பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மலசலகூடங்களுக்கு ஏற்புடைய நியதிகள் மேற்படி குளியலறைகளின் நிலம் மற்றும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(xviii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பயன்படுத்துகின்ற நீரினை அனைத்து அறைகளுக்கும் பாதுகாப்பானவாறு குழாய் மூலமாக வழங்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(xix) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் வாடிக்கையாளர்களின் உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் வாடிக்கையாளர்களின் கைகள், வாய் கழுவும் வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டுமென்பதுடன் துருப்பிடிக்காத உலோகத்தகடுகள் அல்லது பீங்கான் ஓட்டு மண்ணைப் பயன்படுத்தி செய்யப்பட்டோ அல்லது மினுக்கப்பட்டோ அல்லது செங்கற்கள் அல்லது சீமெந்துக் கற்களினால் செய்யப்பட்ட பீங்கான் கற்கள் (நிலஓடுகள்) பதிக்கப்பட்ட பேசின்கள் கழுவுவதற்காக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xx) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் எந்தவொரு பகுதியிலும் உபயோகத்தின் பின்னர் வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் தடைகளின்றி வழிந்தோடுவதற்கு உகந்த வடிகாலமைப்பு ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xxi) பிரதேச சபையினால் கழிவுநீர் வடிகாலமைப்பு பேணிவரப்படுவதாயின் உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை பிரதேச சபையின் அறிவுறுத்தலுக்கமைய கழிவுநீர் வடிகாலமைப்புக்கு வழிந்தோடச் செய்ய முடியும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் மேற்படி கழிவுநீரை, நீர் உறிஞ்சிக்கொள்ளும் குழியொன்றுக்கு வடிந்தோடச் செய்தல் வேண்டும். இல்லையேல் சுத்திகரிப்புச் செய்து பொது நீர்வடிகாலொன்றுக்கு விடுவித்தல் வேண்டும். மேற்படி நீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்காத வகையில் மூடிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கிணற்றிலிருந்து பதினைந்து மீற்றர் தூரத்திற்குக் குறையாத தூரத்தில் இது அமைந்திருத்தல் வேண்டும்.

(xxii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சாதாரண தீயணைப்பு உபகரணங்கள் இயங்குநிலையில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த இடத்திற்கு மின்னிணைப்பு இருப்பின் மேலதிகமாக மின்சாரத் தீயணைப்பு உபகரணங்களும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xxiii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் தேநீர், கோப்பி,பால் அல்லது ஏனைய பானங்கள் தயாரிக்கப்படுகின்ற பகுதி இணைப்புகளற்ற துருப்பிடிக்காத உலோகத்தகடு அல்லது பீங்கான் கற்கள் பதிக்கப்பட்ட அல்லது வேறு நீர் ஊடுருவாத யாதாயினுமொன்றினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

6. தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டுமென இப் பகுதியின் 5ஆம் துணைவிதியில் விதிக்கப்பட்டுள்ள சகல பகுதிகளும் அவ்வாறே ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறையேனும் தீந்தை பூசுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

7. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை ஆகக்குறைந்தது நாளொன்றுக்கு இரு தடவை வீதம் பெருக்குதல் வேண்டும்.

8. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் கழிவுநீர் வழிந்தோடும் வடிகான்களை நாளொன்றுக்கு ஆகக்குறைந்தது இரு தடவை வீதம் நீரினால் கழுவி சுத்தம் செய்தல் வேண்டும்.

9. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள குளியலறைகள், மலசலகூடங்களை ஆகக்குறைந்தது நாளொன்றுக்கு இரு தடவை வீதம் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் தெளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் துர்நாற்றம் வீசாதவாறு பேணிவருதல் வேண்டும்.

10. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உணவுகளை சமைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு, காட்சிப்படுத்துவதற்கு மற்றும் வாடிக்கையாளர்களின் உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுகின்ற தளபாடங்கள், பொருட்கள், உபகரணங்கள், பாத்திரங்கள் அனைத்தும் அவை ஒவ்வொன்றும் பயன்படுத்தப்பட முன்னரும் பயன்படுத்தப்பட்ட பின்னரும் சவர்க்காரம் அல்லது திரவச் சவர்க்காரம் பயன்படுத்தி சுத்தமான நீரினால் கழுவி சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

11. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் அவ்வப் பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுப்பொருட்களும் இப் பகுதியின் 12ஆம் துணைவிதியில் உட்பிரிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டு, ஊடுருவாத பொருளொன்றினால் உருவாக்கப்பட்டுள்ள தொட்டிகளில் இடப்படல் வேண்டும். மேற்படி கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு ஒருமுறை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்படல் வேண்டுமென்பதுடன் மேற்படி தொட்டிகளில் கழிவுப் பொருட்களைக் கொட்டும் போதும் அவற்றை அகற்றும் போதும் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் தொட்டிகளை நல்லமுறையில் மூடிவைத்தல் வேண்டும்.

12. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் அவற்றை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

(ஆ) கண்ணாடி

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்

(ஈ) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள்

(ஊ) உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின் போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும்

(எ) அபாயகரமான கழிவுகள்

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் இடுவது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபை தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளல் வேண்டும்.

13. உரிமப்பத்திரம் பெற்றுள்ள ஒவ்வொரு இடத்தையும் எலிகள், ஈக்கள், பூச்சி வகைகள் அல்லது பிற பிராணிகள் உட்புகாதவாறு பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் உணவு அல்லது குடிபானங்களைத் தயார் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற பொருட்கள் மற்றும் தயார் செய்யப்படுகின்ற உணவுகள் அல்லது குடிபானங்கள் மேற்படி பிராணிகள் மாசடைவதைத் தடுப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

14. வாடிக்கையாளர்களால் கோரப்படும் உணவு வகைகளைப் பரிமாறும் போது அவற்றைக் கைகளினால் தொடக்கூடாது என்பதுடன் மேற்படி உணவைப் பரிமாறுவதற்காகக் கரண்டிகள் அல்லது இடுக்கிகள் அல்லது முள்ளுக்கரண்டிகள் அல்லது வேறுவகையிலான உபகரணங்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

15. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உணவு அல்லது குடிபானங்களை தயார் செய்வதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் பாதுகாப்பு முகக்கவசம், கைக்கவசம். சுத்தமான, வெள்ளைநிற மேலாடை (ஏப்பிரன்), தலைப்பாகை (தொப்பி) மற்றும் தேவையான பிறபாதுகாப்பு உறைகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் கடமையில் ஈடுபடும் ஒவ்வொரு ஊழியரும் எல்லா சந்தர்ப்பங்களின் போதும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நன்கு உடலை கழுவுவதன் மூலம் அல்லது குளிப்பதன் மூலம் சுத்தம் செய்து கொண்டு அவற்றை அணிந்து கொள்வதனையும் உறுதி செய்து கொள்ளல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

16. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பணிபுரிகின்ற சகல ஊழியர்களுக்கும் சுத்தமான குடிநீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தம் செய்வதற்கான தூரிகை மற்றும் சவர்க்காரம் அல்லது திரவச்சவர்க்காரம் வழங்கப்பட்டிருத்தல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

17. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

18. குறித்த வியாபாரத்திற்காக பிரதேசச் சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரம் இருந்தாலன்றி யாராயினும் ஆளொருவரினால் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிற்றுண்டிச்சாலை, உணவகம், தேநீர்க்கடை, கோப்பிக்கடை மற்றும் இவையொத்த கடைகளை நடாத்திச் செல்லுதல் ஆகாது.

நிறைவேற்றக் கூடாத பணிகள் (18 - 23) .

19. (i) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் உணவு உற்பத்தி அல்லது உணவு பரிமாறலில் ஈடுபடும் எந்தவொரு பணியாளரும் சுகாதாரக்கேடான அல்லது அருவருக்கத்தக்க எந்தவிதமான நடவடிக்கையிலும் ஈடுபடுதல் கூடாது.

(ii) எந்தவொரு பணியாளரும் அருகே வசிப்பவர்களுக்கு இடைஞ்சல், தொந்தரவு, அமைதியின்மை மற்றும் இடர்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் பாடல்களைப் பாடுதல், இசைத்தட்டுகளை ஒலிக்கும் கருவிகளை செயற்படுத்தல் அல்லது அநாவசியமானவாறு ஒலி எழுப்பலாகாது.

20. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் நிலத்தில் அல்லது ஆங்காங்கே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கொட்டப்படுதல் கூடாது.

21. (i) ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி முடிந்தாலன்றி, மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தலோ ஆகாது.

(ii) நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப்பத்திரத்திற்குரிய இடத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

22. எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இப் பகுதியின் 24ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கொள்வனவை மறுத்தல் அல்லது அதற்கு தடையாக இருத்தல் ஆகாது.

23. (i) 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச்சட்டத்தின் கீழ் 1991.08.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் (அதி விசேடமானது) வெளியிடப்பட்ட கீழே அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ள பாலுக்கு தேவைப்படும் குறைந்தபட்ச சேர்மானப் பொருட்களை கொண்டிருக்காத தரக்குறைவான பால், பால் பொருட்கள் எதனையும் யாராயினும் உரிமம் பெற்றவர் வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது.

(ii) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த அல்லது கலப்படம் செய்யப்பட்ட முழு ஆடைப்பால் எதனையும் எவரும் விற்பனை செய்தல் கூடாது.

24. பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஏதேனுமொரு உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள

பிரதேச சபையின் செயற்பணி (24 - 25).

அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதேனும் உணவு வகையின் மாதிரியை பரிசோதனை நோக்கத்திற்காக அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளல் சட்டபூர்வமானதாகும்.

25. இந்த துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலை, உணவகம், தேநீர்க்கடை, கோப்பிக்கடை மற்றும் இவையொத்த கடையொன்றை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உரிமப்பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

அறவீடுகளும் கட்டணங்களும்.

26. யாதாயினுமொரு சிற்றுண்டிச்சாலை, உணவகம், தேநீர்க்கடை அல்லது கோப்பிக்கடை மற்றும் இவையொத்த கடையை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 149 பிரிவுக்கு அமைவாக உச்சக் கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு தத்துவமுண்டு.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

27. இத் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல் லுபடிக் காலம்.

28. இத்துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (29- 32).

29. இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

30. இத் துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபை தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

31. இப் பகுதியின் 25ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபை தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

32. இப் பகுதியின் 31ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு.

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

33. உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் முதல்வருக்கு அல்லது பிரதேச சபையின் ஆணையாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

துணைவிதிகளை மீறுதல்.

34. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

*அபராதமும் தண்டணையும்*

*35.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

*பொருள் கோடலும் வரை விலக்கணமும்*

*36.* இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட தவிசாளர் பிரதேச தவிசாளர் எனப் பொருள்படுவார்.

"செயலாளர்" என்பவர் ஏதேனும் பிரதேசம் தொடர்பிலாயின் அந்த பிரதேச சபைக்கு உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது உரிய பணிக்காக பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

"சிற்றுண்டிச்சாலை அல்லது உணவகம்" என்பது விற்பனை செய்வதற்காக சமைத்த மற்றும் ஏனைய உணவுகளைத் தயார் செய்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற அல்லது பரிமாறுகின்ற அல்லது பரிமாறி உட்கொள்கின்ற இடமொன்றாக பொருள்படுவதுடன், ஒருவேளை உணவுக்காக உட்கொள்வதற்குப் பொருத்தமான வேறு ஏதேனும் தயார் செய்யப்பட்டுள்ள உணவு வகை அல்லது யாதாயினும் சிற்றுண்டி உணவு வகையை விற்பனை செய்வதற்காகத் தயார் செய்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற இடமொன்றையும் இது உள்ளடக்கும்.

"தேநீர்க் கடை அல்லது கோப்பிக் கடை" என்பது பேக்கரி (வெதுப்பக) உற்பத்திகள் அல்லது வேறு சிற்றுண்டி உணவுகளுடன் அல்லது உணவுகளின்றி தேநீர் அல்லது கோப்பி அல்லது அவையொத்த குடிபானங்களைத் தயாரித்து விற்பனைக்காக பேணிவரப்படுகின்ற இடமொன்றாகக் கருதப்படும்.

"பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்" என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

**அட்டவணை 1 - பாலுக்குத் தேவைப்படும் சேர்வைப் பொருள்**

| நிரை I பாலின் இனம் | நிரை II பால் வகை | நிரை III பாற் கொழுப்பு ஆகக் குறைந்த நூற்று வீதம் | நிரை IV பாற் கொழுப்பு தவிர்ந்த பாற் திண்மங்களின் ஆகக் குறைந்த நூற்று வீதம் |
|---|---|---|---|
| 1. எருமைப்பால் | பச்சை, பாசிச்சர் முறையில் காய்ச்சப்பட்டது அல்லது கிருமி நீக்கப்பட்டது. | 7.0 | 9.0 |
| 2. பசுப்பால் | மேற்படி | 3.5 | 8.5 |
| 3. தரப்படுத்தப்பட்டது | பாசிச்சர் முறையில் காய்ச்சப் பட்டது அல்லது கிருமி நீக்கப் பட்டது. | 3.25 | 8.25 |
| 4. தணிக்கப்பட்டது | மேற்படி | 2.0 | 8.5 |
| 5. சுவையூட்டப்பட்டது | மேற்படி | 2.0 | 7.2 |
| 6. ஆடை நீக்கியது அல்லது கொழுப்பற்றது | மேற்படி | - | 8.5 |

இணைப்பு 01

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சிற்றுண்டிச்சாலை, உணவகம், தேநீர்க்கடை, கோப்பிக்கடை மற்றும் இவையொத்த கடைகளின் வியாபார வரி/வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் - 20....**

1. வியாபார நிலையத்தின் பெயர் : ..........................................................................................................

2. (i) வியாபார நிலையம் அமைந்துள்ள இடம்: வட்டாரம்....................................... ஆதன இல..................

(ii) வீதியின் பெயர் :...........................................................................................................................

(iii) கிராம அலுவலர் பிரிவு இல. :........................................... பிரிவின் பெயர்:........................................

3. (i) விண்ணப்பதாரியின் பெயர்: ....................................................................................................

(ii) முழுப்பெயர் : ..............................................................................................................

(iii) நிரந்தர முகவரி : ...........................................................................................................

(iv) கிராம அலுவலர் பிரிவு :.................................................................................................

(v) ஆள் அடையாள அட்டை இல. :.........................................................................................

(vi) தொலைபேசி இல. :.........................................................................................................

(vii) மின்னஞ்சல் முகவரி :.......................................................................................................

4. (i) வியாபார ஆரம்பிக்கப்பட்ட திகதி:.......................................................................................

(ii) வியாபாரத்தின் தன்மை: ....................................................................................................

(iii) கைத்தொழில்/தொழில் நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்

(அ) பெயர் : .......................................................................................................

(ஆ) தொலைபேசி இல. :..........................................................................................

(iv) முன்னைய தொழில் :..........................................................................................................

5. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i) உரிமையாளரின் பெயர்:..........................................................................................................................

(ii) முகவரி :......................................................................................................................................

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா : ஆம்:...................................... இல்லை :....................................

ஆம் எனில் உரிம இல. :........................................................ திகதி:......................................................

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20.......ஆண்டுக்கான கைத்தொழில்/வியாபார உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

..................... .........................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

...................................
தவிசாளர்/செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம்:.................................. ஆதன இல:..............................
வீதியின் பெயர்:..........................................................................
உரிமையாளரின் பெயர்:.......................................................................
ஆதன விபரம்:...............................................................................
ஆண்டுப் பெறுமதி:........................... வீதவரி நிலுவை.................. உண்டு...............இல்லை............

............ ........................
திகதி நிர்வாக உத்தியோகத்தர்,
பகுதித் தலைவர்.

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:.....................................................................
செலுத்த வேண்டிய கட்டணம்:...............................................................
பிரிவு A B C .......................................
குறிப்பு.......................................

................. .................................
திகதி வருமானப் பரிசோதகர்.

**பிரதம சுகாதார வைத்திய அலுவலரின் அறிக்கைக்காக**

பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

......................... ................................
திகதி பொதுச் சுகாதார பரிசோதகர்.

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

................ ....................................

திகதி பிரதம சுகாதார வைத்திய அதிகாரி.

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம்:................ உபயோகம் மற்றும்:............................ சுற்றுச்சூழல் உரிமம்:.............................. சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :.................................... குடிபுகு சான்றிதழ் :.................................. மதுவரி உரிமம்:..............................

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

............................. ...............................

திகதி பிரதம வருமானப் பரிசோதகர்.

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

................ ...............................

திகதி செயலாளர்.

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை

........... .............................

திகதி பிரதேசசபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல:................... பற்றுச்சீட்டு திகதி:.......................................
உரிம இல. :........................... உரிமத் திகதி :...........................

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

................................. ................................

திகதி இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது

................. ...............................

திகதி செயலாளர்.

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

........... .............................

திகதி பிரதேசசபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**பகுதி II - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஹோட்டல்களை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்**

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஹோட்டல்களை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என இவை அழைக்கப்படலாம். *துணைவிதியின் பெயர்*

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *நோக்கம்*

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix)ஏ உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்*

4. இணைப்பு 01 இலுள்ள விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் வருடாந்த உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியும், பொறுப்புமாகும். *நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4 -19).*

5. நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டத்தின்படி வெளியிடப்பட்ட ஏற்புடையதான ஒழுங்கு விதிகளிற்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே, பிரதேச சபை தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு ஹோட்டலையும் நடாத்துவதற்கு உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை தூய்மையாகவும் புதுப்பித்த நிலையிலும் பேணிவருதல் வேண்டும்.

(ii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

(iii) மேற்படி சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், இருபுறமும் சாந்து பூசப்பட்டு அல்லது மேற்பரப்பு சீமெந்தினால் மினுக்கப்பட்டு, தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் சமையலறை தவிர்ந்த வேறு அறைகள் பலகையினால் அல்லது யாதாயினும் உலோகத்தகடு வகையினால் அல்லது பலகை மற்றும் யாதாயினும் உலோக வகையினால் நிர்மாணிக்கப்பட்டு தீந்தை பூசப்பட்டிருப்பது இந்த நியமத்திற்கு உட்பட்டதாகக் கருதப்படும்.

(iv) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் ஒவ்வொரு அறையிலும் சீலிங் (உட்கூரை) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி சீலிங் நில மட்டத்திலிருந்து 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்கள் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப்பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை.

(vi) கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்.

(vii) ஒவ்வொரு அறையிலும் தளப்பகுதி சீமெந்து இடப்பட்டு சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மினுக்கப்படல் அல்லது பீங்கான் கற்கள் (நில ஓடுகள்) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை சேகரிப்பதற்காகக் கழிவுகளைச் சேகரிக்கும் தொட்டிகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஈக்கள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் நுழைய முடியாதவாறு மூடிகளால் மூடி இருத்தல் வேண்டும் .

(ix) சமையலறையில் வைக்கப்படுகின்ற பாத்திரங்களில் ஈக்கள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் நுழைய முடியாதவாறு மூடிகளால் மூடி இருத்தல் வேண்டும்

(x) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை அகற்றுவதற்கு இப் பகுதியின் 13ஆம் துணைவிதிக்கு அமைய செயற்படக்கூடியவாறு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xi) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் நுகர்வோரின் உபயோகத்திற்கு வைக்கப்பட்டுள்ள மற்றும் சமையலறையில் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு மேசையும்,

(அ) பலகையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளபோது அவற்றின் கால்கள் மினுக்கப்பட்டு பூச்சுப் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மேசைகளின் மேற்றளம் மினுக்கப்பட்ட நீர் ஊடுருவாத பொருட்களால் அல்லது இணைப்புகளற்ற துருப்பிடிக்காத உலோகத்தகட்டால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதாவது உலோகங்களால் அமைக்கப்பட்டிருப்பின் அவற்றின் கால்கள் பூச்சுப் பூசப்பட்டு இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்றளம் மினுக்கப்பட்ட நீர் ஊடுருவாத பொருட்களால் அல்லது இணைப்புகளற்ற துருப்பிடிக்காத உலோகத்தகட்டினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் பயன்படுத்தப்படுகின்ற நீர் மனித உபயோகத்திற்கு உகந்ததென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டுள்ள தரச்சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இத்தரச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும். தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்படுகின்ற நீர் இந்த இடத்தில் பயன்படுத்தப்படுமாயின் மேற்படி தரச்சான்றிதழ் பெறப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(xiii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற நீர் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடையாது தடுத்துக்கொள்வதற்குப் போதுமானளவு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(xiv) வாடிக்கையாளர்கள் பயன்படுத்துகின்ற பாத்திரங்களைக் கழுவுவதற்காக தனியொரு இடத்தைப் பேணிவருதல் வேண்டும்.

(xv) வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் உபயோகத்திற்காக ஆகக் குறைந்தது ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒன்று என்ற வகையில் ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாருக்கும் தனித்தனியே மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறான மலசலகூடங்கள் சமையலறைகள், உணவு பரிமாறுமிடங்கள் அல்லது களஞ்சிய அறைகள் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புபடாதவாறு சுகாதாரத்தைப் பேணக்கூடியவாறான தூரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvi) ஒவ்வொரு மலசலகூடத்தின் சுவர்கள் செங்கல் அல்லது சீமெந்துக்கற்கள் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுவர்களாக இருக்கும் போது அவை சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மினுக்கப்பட்டு தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும்.துருப்பிடிக்காத உலோகங்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுவர்களாக இருக்கும் போது அவற்றின் மேற்புறத்தே தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். நிலப்பகுதி சீமெந்தினால் சாந்து பூசப்பட்டு மினுக்கப்பட்டு அல்லது நிலஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவையாற்றுகின்றவர்களின் உபயோகத்திற்காக குளியலறைகள் போதியளவு நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும். இத்துணை விதியின் (xvi) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மலசலகூடங்களுக்கு ஏற்புடைய நியதிகள் மேற்படி குளியறைகளின் நிலம் மற்றும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(xviii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பயன்படுத்துகின்ற நீரை அனைத்து அறைகளுக்கும் பாதுகாப்பானவாறு குழாய் மூலமாக வழங்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(xix) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் வாடிக்கையாளர்களின் உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் வாடிக்கையாளர்களின் கைகள், வாய் கழுவும் வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டுமென்பதுடன் துருப்பிடிக்காத உலோகத்தகடுகள் அல்லது பீங்கான் ஓட்டு மண்ணைப் பயன்படுத்தி செய்யப்பட்டோ அல்லது மினுக்கப்பட்டோ அல்லது செங்கற்கள் அல்லது சீமெந்துக் கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட பீங்கான் கற்கள் (நிலஓடுகள்) பதிக்கப்பட்டு கழுவுவதற்கான பேசின்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xx) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் எந்தவொரு பகுதியிலும் உபயோகத்தின் பின்னர் வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் தடைகளின்றி வழிந்தோடுவதற்கு உகந்த வடிகாலமைப்பு ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xxi) பிரதேச சபையினால் கழிவுநீர் வடிகாலமைப்பு பேணிவரப்படுவதாயின் உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை பிரதேச சபையின் அறிவுறுத்தலுக்கமைய கழிவுநீர் வடிகாலமைப்புக்கு வழிந்தோடச் செய்யமுடியும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் மேற்படி கழிவுநீரை, நீர் உறிஞ்சிக்கொள்ளும் குழியொன்றுக்கு வடிந்தோடச் செய்தல் வேண்டும். இல்லையேல் சுத்திகரிப்புச் செய்து பொது நீர்வடிகாலொன்றுக்கு விடுவித்தல் வேண்டும். மேற்படி நீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்காத வகையில் மூடிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கிணற்றிலிருந்து பதினைந்து மீற்றர் தூரத்திற்குக் குறையாத தூரத்தில் இது அமைந்திருத்தல் வேண்டும்.

(xxii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சாதாரண தீயணைப்பு உபகரணங்கள் இயங்குநிலையில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த இடத்திற்கு மின்னிணைப்பு இருப்பின் மேலதிகமாக மின்சாரத் தீயணைப்பு உபகரணங்களும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xxiii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் தேநீர், கோப்பி, பால் அல்லது ஏனைய பானங்கள் தயாரிக்கப்படுகின்ற பகுதி இணைப்புகளற்ற துருப்பிடிக்காத உலோகத்தகடு அல்லது பீங்கான் கற்கள் பதிக்கப்பட்ட அல்லது வேறு நீர் ஊடுருவாத யாதாயினுமொன்றினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(xxiv) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எல்லா படுக்கை அறைகளிலும் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தூங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தின் அளவு ஒருவருக்கு ஆகக் குறைந்தது நான்கு சதுரமீற்றராக (2M நீளம் x 2Mஅகலம்) இருத்தல் வேண்டும். ஒவ்வொரு படுக்கையறையிலும் உடைகளை வைப்பதற்கான ஒரு அலுமாரி அல்லது கெபினட்டும், துவாய் அல்லது பொருட்களை வைப்பதற்கான மர அல்லது உலோகச் சட்டமும் இருத்தல் வேண்டும். தங்கியிருப்பவரின் அல்லது தங்கியிருப்பவர்களின் பொருட்களை வைத்திருப்பதற்கான மேசை மற்றும் மலசலகூடத்துடனான குளியலறையும் இருத்தல் வேண்டும்.

6. தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டுமென இப் பகுதியின் 5ஆம் துணைவிதியில் விதிக்கப்பட்டுள்ள சகல பகுதிகளும் அவ்வாறே ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறையேனும் தீந்தை பூசுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

7. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் பெருக்க வேண்டும். கழிவுநீர் வழிந்தோடும் வடிகால்களை நாளொன்றுக்கு ஆகக் குறைந்தது இரண்டு தடவை வீதம் சுத்தம் செய்து நீரினால் கழுவுதல் வேண்டும்.

8. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையையும் வாடிக்கையாளர் ஒருவர் பயன்படுத்திய பின்னர் மற்றொரு வாடிக்கையாளர் பயன்படுத்த இடமளிப்பதற்கு முன்னர் மேற்படி படுக்கை அறையிலுள்ள கட்டில்களின் படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், போர்வை, துவாய் மற்றும் பயன்படுத்தப்பட்ட வேறு துணி வகைகளைக் கழுவி சுத்தம் செய்தே மற்றைய வாடிக்கையாளருக்குப் பயன்படுத்த

இடமளிக்க வேண்டும். அத்துடன் பின்னர் வருகை தருகின்ற வாடிக்கையாளருக்கு மேற்படி அறையைப் பயன்படுத்த இடமளிப்பதற்கு முன்னர் குறித்த அறையின் சாளரங்களை ஆகக் குறைந்தது நான்கு மணித்தியாலங்களேனும் பூரணமாக திறந்து வைத்திருத்தல் வேண்டும். ஆயினும் அறைகள் குளிரூட்டப்பட்டு இயங்கு நிலையில் இருக்குமிடத்து அடுத்த வாடிக்கையாளரை அனுமதிப்பதற்கான கால இடைவேளை குறைந்தது முப்பது நிமிடங்களாவது இருத்தல் வேண்டும்.

9. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் தங்குபவர்களின் அடையாளத்தையும், பெயரையும், முகவரியையும் குறித்துக்கொள்ளும் பதிவேட்டை உரிமம் பெற்றவர் பராமரித்தல் வேண்டும். பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் வேண்டும்போது பரிசோதிப்பதற்கு அனுமதிப்பது உரிமம் பெற்றவரின் கடமையாகும்.

10. ஒவ்வொரு உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையும் படிக்கட்டுகளும் மண்டபஅறையும் வடிகால்களும் மற்றும் இந்த இடத்திற்கு உரித்தான காணியும் ஒவ்வொரு நாளும் நண்பகலுக்கு முன்னர் குப்பைகள் கூட்டப்பட்டு சுத்தம் செய்வது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

11. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள குளியலறைகள், மலசலகூடங்கள் ஆகக்குறைந்தது நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் தெளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் துர்நாற்றம் வீசாதவாறு பேணிவருதல் வேண்டும். எவ்வாறாயினும், வாடிக்கையாளர்கள் தங்கியிருக்கும் யாதாவதொரு அறையின் குளியலறை, மலசலகூடம் என்பவற்றை நாளொன்றுக்கு ஒரு தடவை சுத்தம் செய்வது போதுமானதெனக் கருதப்படலாம்.

12. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உணவுகளை சமைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு, காட்சிப்படுத்துவதற்கு மற்றும் வாடிக்கையாளர்களின் உபயோகத்திற்கென பயன்படுத்தப்படுகின்ற தளபாடங்கள், பொருட்கள், உபகரணங்கள், பாத்திரங்கள் அனைத்தும் அவை ஒவ்வொன்றும் பயன்படுத்தப்பட முன்னரும் பயன்படுத்தப்பட்ட பின்னரும் சவர்க்காரம் அல்லது திரவச்சவர்க்காரம் பயன்படுத்தி சுத்தமான நீரினால் கழுவி சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாதல் வேண்டும்.

13. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் அவ்வப் பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுப்பொருட்களும் இப் பகுதியின் 14ஆம் துணைவிதியின் பிரிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டு, ஊடுருவாத பொருளொன்றினால் உருவாக்கப்பட்டுள்ள தொட்டிகளில் இடப்படல் வேண்டும். மேற்படி கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு ஒருமுறை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்படல் வேண்டுமென்பதுடன் மேற்படி தொட்டிகளில் கழிவுப் பொருட்களைக் கொட்டும் போதும் அவற்றை அகற்றும் போதும் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் தொட்டிகளை நல்லமுறையில் மூடிவைத்தல் வேண்டும்..

14. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் அவற்றை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

(ஆ) கண்ணாடி

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்

(ஈ) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள்

(ஊ) உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின் போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும்

(எ) அபாயகரமான கழிவுகள்

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் இடுவது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபைத் தவிசாளர் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளல் வேண்டும்.

*15. உரிமப்பத்திரம் பெற்றுள்ள ஒவ்வொரு இடத்தையும் எலிகள், ஈக்கள், பூச்சி வகைகள் அல்லது பிற பிராணிகள் உட்புகாதவாறு பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் உணவு அல்லது குடிபானங்களைத் தயார் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற பொருட்கள் மற்றும் தயார் செய்யப்படுகின்ற உணவுகள் அல்லது குடிபானங்கள் மேற்படி பிராணிகளால் மாசடைவதைத் தடுப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.*

*16. வாடிக்கையாளர்களால் கோரப்படும் உணவு வகைகளைப் பரிமாறும் போது அவற்றைக் கைகளினால் தொடக்கூடாது என்பதுடன் மேற்படி உணவைப் பரிமாறுவதற்காகக் கரண்டிகள் அல்லது இடுக்கிகள் அல்லது முள்ளுக்கரண்டிகள் அல்லது வேறுவகையிலான உபகரணங்களைப் பயன்படுத்தல் வேண்டும்.*

*17. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உணவு அல்லது குடிபானங்களை தயார் செய்வதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் பாதுகாப்பு முகக்கவசம், கைக்கவசம், சுத்தமான வெள்ளைநிற மேலாடை (ஏப்பிரன்), தலைப்பாகை (தொப்பி) மற்றும் தேவையான பிற பாதுகாப்பு உறைகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் கடமையில் ஈடுபடும் ஒவ்வொரு ஊழியரும் எல்லா சந்தர்ப்பங்களின் போதும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நன்கு உடலை கழுவுவதன் மூலம் அல்லது குளிப்பதன் மூலம் சுத்தம் செய்து கொண்டு அவற்றை அணிந்து கொள்வதனையும் உறுதி செய்து கொள்ளல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.*

*18. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பணிபுரிகின்ற சகல ஊழியர்களுக்கும் சுத்தமான குடிநீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தம் செய்வதற்கான தூரிகை மற்றும் சவர்க்காரம் அல்லது திரவச்சவர்க்காரம் வழங்கப்பட்டிருத்தல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.*

*19. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.*

*நிறைவேற்றக் கூடாத பணிகள் (20 - 29).*

*20. குறித்த பிரதேச தவிசாளர்அல்லது பிரதேச ஆணையாளரினால் உரிய வியாபாரத்துக்காக வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரம் இருந்தாலன்றி யாராயினும் ஆளொருவரினால் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஹோட்டலொன்றை நடாத்திச் செல்லலாகாது.*

*21. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் படுக்கையறைகளாக குறித்து ஒதுக்கப்பட்டுள்ள அறையொன்றல்லாத வேறு எந்தவொரு அறையிலும் ஆளொவரும் தூங்குவதற்கு இடமளித்தலாகாது.*

*22. இப் பகுதியின் 5ஆம் துணைவிதியின்* (xxiv) *ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த இடவசதிகளுடன் இணங்காத ஆட்களின் எண்ணிக்கையானோர் யாதாயினும் படுக்கை அறையில் தூங்குவதற்கு உரிமப்பத்திரதாரர் இடமளித்தலாகாது.*

*23. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் யாதாயினுமொரு அறை அல்லது உணவு சமைக்கும் இடமொன்றில் அல்லது உணவு உட்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு பகுதியில் எந்தவொரு விலங்கையும் வைத்திருத்தலாகாது.*

*24. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுப்பொருட்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிலத்தில் அல்லது ஆங்காங்கே கொட்டப்படுதல் கூடாது.*

*25.* (i) ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி முடிந்தாலன்றி, மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய

இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தலோ ஆகாது.

(ii) நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப்பத்திரத்திற்குரிய இடத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

26. (i) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் உணவு உற்பத்தி அல்லது உணவு பரிமாறலில் ஈடுபடும் எந்தவொரு பணியாளரும் சுகாதாரக்கேடான அல்லது அருவருக்கத்தக்க எந்தவிதமான நடவடிக்கையிலும் ஈடுபடுதல் கூடாது.

(ii) எந்தவொரு பணியாளரும் அருகே வசிப்பவர்களுக்கு இடைஞ்சல், தொந்தரவு, அமைதியின்மை மற்றும் இடர்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் பாடல்களைப் பாடுதல், இசைத்தட்டுகளை ஒலிக்கும் கருவிகளை செயற்படுத்தல் அல்லது அநாவசியமானவாறு ஒலி எழுப்பலாகாது.

27. எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இப் பகுதியின் 30ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கொள்வனவை மறுத்தல் அல்லது அதற்கு தடையாக இருத்தல் ஆகாது.

28. (i) 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச்சட்டத்தின் கீழ் 1991.08.01 திகதிய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் (அதி விசேடமானது) வெளியிடப் பட்ட கீழே அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ள பாலுக்கு தேவைப்படும் குறைந்தபட்ச சேர்மானப் பொருட்களை கொண்டிருக்காத தரக்குறைவான பால், பால் பொருட்கள் எதனையும் யாராயினும் உரிமம் பெற்றவர் வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது.

(ii) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த அல்லது கலப்படம் செய்யப்பட்ட முழு ஆடைப்பால் எதனையும் எவரும் விற்பனை செய்தல் கூடாது.

29. யாதாயினுமொரு உரிமப் பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் படுக்கையறையானது -

(i) தனி படுக்கை அறையில் ஒரு கட்டிலுக்கு மேலதிகமாகவும்

(ii) இரட்டையர் படுக்கை அறையில் இரட்டை கட்டில் ஒன்றுக்கு அல்லது தனிநபர் கட்டில்கள் இரண்டுக்கு மேலதிகமாகவும்

(iii) மூவருக்கான படுக்கை அறையில் இரட்டைக் கட்டில் ஒன்றும், தனிநபர் கட்டில் ஒன்றுக்கும் அல்லது தனிநபர் கட்டில்கள் மூன்றுக்கு மேலதிகமாகவும்

(iv) குடும்ப அறையொன்றில் இரண்டு இரட்டையர் கட்டில்களும், தனிநபர் கட்டிலொன்றும் அல்லது ஒரு இரட்டையர் கட்டிலும், மூன்று தனிநபர் கட்டில்களும் அல்லது தனிநபர் கட்டில்கள் ஐந்துக்கு மேலதிகமாகவும் கொண்டிருத்தல் கூடாது.

(v) அத்துடன் யாதாயினுமொரு ஹோட்டலின் தனி அறையில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் அல்லது இரட்டையருக்கான அறையில் இரண்டு பேருக்கு மேற்பட்டவர்கள் அல்லது மூவருக்கான அறையில் மூன்று பேருக்கு மேற்பட்டவர்கள் அல்லது அவ்வாறு எல்லா அறைகளிலும் தூங்குவதற்கு உரிமப்பத்திரதாரர் இடமளித்தலாகாது. எவ்வாறாயினும் இந்த ஏதாவதொரு அறையில் தூங்கும் யாராயினும் ஆளொருவர் 12 வயதுக்குக் குறைவான ஒருவராக உள்ள போது இந்தப் பிரிவின் நியதிகளுக்காக அவர் ஆளொருவராக கருதப்படலாகாது.

*பிரதேச சபையின் செயற்பணி (30 - 31).*

30. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச ஆணையாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஏதேனுமொரு உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதேனும் உணவு வகையின் மாதிரியை பரிசோதனை நோக்கத்திற்காக அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளல் சட்டபூர்வமானதாகும்.

31. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபை தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

அறவீடுகளும் கட்டணங்களும்.

32. யாதாயினுமொரு ஹோட்டலை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக உச்ச கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச ஆணையாளருக்கு தத்துவமுண்டு.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

33. இப்பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல் லுபடிக் காலம்.

34. இந்த துணைவிதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (35 - 38).

35. இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

36. இத்துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

37. இப் பகுதியின் 31ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

38. இப் பகுதியின் 37ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு .

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

39. உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினும் ஒருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலர்களால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

துணை விதிகளை மீறுதல்.

40. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

அபராதமும் தண்டணையும்.

41. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல்

வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122 (2) ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள் கோடலும் வரை விலக்கணமும்.

42. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படுவார்.

"செயலாளர்" என்பவர் ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்

"பிரதேச சபை" என்பது பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"நகர அபிவிருத்தி அதிகார சபை" என்பது 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபை எனப் பொருள்படும்.

"பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்" என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

"ஹோட்டல்" என்பது விற்பனை செய்வதற்காக சமைத்த மற்றும் ஏனைய உணவுகளைத் தயார் செய்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற இடமொன்றாகக் கருதப்படுவதுடன், ஒருவேளை உணவுக்காக உட்கொள்வதற்குப் பொருத்தமான வேறு ஏதேனும் தயார் செய்யப்பட்டுள்ள உணவு வகை அல்லது யாதாயினும் சிற்றுண்டி உணவு வகையை விற்பனை செய்வதற்காக தயார் செய்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற இடமொன்று அல்லது மேற்படி பணிகளுடன் வாடிக்கையாளர்கள் தங்கியிருப்பதற்கு இடவசதிகளைச் செய்து கொடுக்கின்ற இடமொன்றாக கருதப்படும்.

"குடும்பஅறை" என்பது, ஒரே தடவையில் ஐந்து பேர் தங்குவதற்கான போதியளவு வசதிகள் மற்றும் இரட்டை கட்டில்கள் இரண்டும் தனிநபர் கட்டில் ஒன்று அல்லது இரட்டைக் கட்டிலொன்றும், தனிநபர் கட்டில்கள் மூன்றும் அல்லது தனிநபர் கட்டில்கள் ஐந்தும் உள்ள அறையும்,

"மூவர் அறை" என்பது, ஒரே நேரத்தில் மூன்று பேர் தங்குவதற்கு போதியளவு இட வசதிகளைக் கொண்டுள்ளதும், இரட்டை கட்டிலொன்றும், தனிநபர் கட்டிலொன்றும், அல்லது தனிநபர் கட்டில்கள் மூன்றைக் கொண்ட அறையும்,

"இரட்டையர் அறை" என்பது, ஒரேநேரத்தில் இருவர் தங்குவதற்கு போதியளவு இடவசதிகளையும், ஒரு இரட்டையர் கட்டிலும் அல்லது தனிநபர் கட்டில்கள் இரண்டும் உள்ள அறையும்,

"தனிநபர் அறை" என்பது, ஒரு ஆளுக்கு மாத்திரம் தங்குவதற்கு போதியளவு வசதிகளைக் கொண்டுள்ள தனிநபர் கட்டில் ஒன்றுள்ள அறையும்,

"இரட்டைக் கட்டில்" என்பது, ஆகக் குறைந்தது 200 சென்றி மீற்றர் நீளமும், 125 சென்றி மீற்றர் அகலமும் கொண்ட மெத்தையுடனான கட்டிலும்,

"தனிநபர் கட்டில்" என்பது ஆகக் குறைந்தது 200 சென்றி மீற்றர் நீளமும், 95 சென்றி மீற்றர் அகலமும் கொண்ட மெத்தையுடனான கட்டிலும், எனப் பொருள்படும்.

**அட்டவணை 1 - பாலுக்குத் தேவைப்படும் சேர்வைப் பொருள்**

| நிரல் I<br>பாலின் இனம் | நிரல் II<br>பால் வகை | நிரல் III<br>பாற் கொழுப்பு ஆகக் குறைந்த நூற்று வீதம் | நிரல் IV<br>பாற் கொழுப்பு தவிர்ந்த பாற் திண்மங்களின் ஆகக் குறைந்த நூற்று வீதம் |
|---|---|---|---|
| 1. எருமைப்பால் | பச்சை, பாசிச்சர் முறையில் காய்ச்சப்பட்டது அல்லது கிருமி நீக்கப்பட்டது. | 7.0 | 9.0 |
| 2. பசுப்பால் | மேற்படி | 3.5 | 8.5 |
| 3. தரப்படுத்தப்பட்டது | பாசிச்சர் முறையில் காய்ச்சப் பட்டது அல்லது கிருமி நீக்கப் பட்டது. | 3.25 | 8.25 |
| 4. தணிக்கப்பட்டது | மேற்படி | 2.0 | 8.5 |
| 5. சுவையூட்டப்பட்டது | மேற்படி | 2.0 | 7.2 |
| 6. ஆடை நீக்கியது அல்லது கொழுப்பற்றது | மேற்படி | - | 8.5 |

**இணைப்பு 01**

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஹோட்டல்களை நடாத்திச் செல்வதற்கான வியாபார வரி/வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20........**

1. வியாபார நிலையத்தின் பெயர் : ....................................................................................................

2. (i) வியாபார நிலையம் அமைந்துள்ள இடம்: வட்டாரம்....................................... ஆதன இல....................

(ii) வீதியின் பெயர் :....................................................................................................

(iii) கிராம அலுவலர் பிரிவு இல. :............................................ பிரிவின் பெயர்:......................................

3. (i) விண்ணப்பதாரியின் பெயர்: ....................................................................................................

(ii) முழுப்பெயர் : ....................................................................................................

(iii) நிரந்தர முகவரி : ....................................................................................................

(iv) கிராம அலுவலர் பிரிவு :....................................................................................................

(v) அடையாள அட்டை இல :....................................................................................................

(vi) தொலைபேசி இல. :....................................................................................................

(vii) மின்னஞ்சல் முகவரி :....................................................................................................

4. (i) வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி:........................................................................................................

(ii) வியாபாரத்தின் தன்மை: ........................................................................................................

(iii) கைத்தொழில் நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்

(அ) பெயர் : ........................................................................................................

(ஆ) தொலைபேசி இல. :........................................................................................................

5. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்-

(i) உரிமையாளரின் பெயர்:........................................................................................................

(ii) முகவரி :........................................................................................................

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா : ஆம்:...................................... இல்லை :......................................

ஆம் எனில் உரிம இல:.......................................................... திகதி:..........................................................

7. ஹோட்டலிலுள்ள -

(i) தனிநபர்அறைகளின்எண்ணிக்கை :......................................................................................

(ii) இரட்டையர் அறைகளின்எண்ணிக்கை:- ..............................................................................

(iii) மூவர்அறைகளின்எண்ணிக்கை :- .....................................................................................

(iv) குடும்பஅறைகளின்எண்ணிக்கை:- .........................................................................................

(v) ஒரே நேரத்தில் தங்கக் கூடியவர்களின் மொத்த எண்ணிக்கை: .................................................

8. ஹோட்டலில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை (முகாமையாளர் உள்ளடங்கலாக):-.........................................................................................................................

9. மலசலகூடங்கள் -

(i) ஆண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை:- ....................................................................

(ii) பெண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை:- .......................................................

(iii) ஆண் வாடிக்கையாளர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை:- ...............................

(iv) பெண் வாடிக்கையாளர்களுக்கான கழிவறைகளின் எண்ணிக்கை:- ...........................................

10. குளியலறைகள் -

(i) ஆண்களுக்கான குளியலறைகளின் எண்ணிக்கை:- ...................................................................

(ii) பெண்களுக்கான குளியலறைகளின் எண்ணிக்கை:- ................................................................

11. சமையலறைகளின் எண்ணிக்கை:- ....................................................................................................

12. நீர் வழங்கும் மூலம்:- ........................................................................................................

13. திண்மக் கழிவுப்பொருட்களை இறுதியாக அகற்றும் முறையியல்:

........................................................................................................................................
........................................................................................................................................
........................................................................................................................................

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்ட கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20...... ஆண்டுக்கான கைத்தொழில்/ தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

.................... .........................

திகதி. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக -

..................................,
தவிசாளர்/செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம்:.................................. ஆதன இல:...............................
வீதியின் பெயர்:.........................................................................
உரிமையாளரின் பெயர்:.......................................................................
ஆதன விபரம்:...............................................................................
ஆண்டுப் பெறுமதி:.......................... வீதவரி நிலுவை.................. உண்டு...............இல்லை............

............ ........................ ,
திகதி நிர்வாக உத்தியோகத்தர்/
பகுதித் தலைவர்.

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:.......................................................................
செலுத்த வேண்டிய கட்டணம்:...............................................................
பிரிவு A B C .......................................
குறிப்பு.......................................

................ .................................,
திகதி வருமானப் பரிசோதகர்.

**பிரதம சுகாதார வைத்திய அலுவலரின் அறிக்கைக்காக**

பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை

..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

......................... ................................,
திகதி பொதுச் சுகாதார வைத்திய பரிசோதகர்.

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

............... ..................................,
திகதி பிரதம சுகாதார அதிகாரி.

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம்:............... உபயோகம் மற்றும்:........................... சுற்றுச்சூழல் உரிமம்:.............................
சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :........................... குடிபுகு சான்றிதழ் :..................... மதுவரி உரிமம்:............................

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

............................ ..............................,
திகதி பிரதம வருமானப் பரிசோதகர்.

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

............... ..............................,
திகதி செயலாளர்.

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை.

........... ............................,
திகதி பிரதேசசபைத் தவிசாளர்,
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல:.................. பற்றுச்சீட்டு திகதி:.....................................
உரிம இல. :.......................... உரிமத் திகதி :..........................

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

................................ ...............................,
திகதி இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

................ ..............................,
திகதி செயலாளர்.

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

........... ............................,
திகதி பிரதேசசபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

## பகுதி III - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் விடுதிகளை (உறங்கு மனைகள்) நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் விடுதிகளை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம். துணைவிதியின் பெயர்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன. நோக்கம்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix) (உ) உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

4. இணைப்பு 01 ஐ இலுள்ள விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியும் பொறுப்புமாகும். நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4 - 14).

5. நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டத்தின்படி வெளியிடப்பட்ட ஏற்புடையதான ஒழுங்கு விதிகளிற்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே, பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு விடுதியையும் நடாத்துவதற்கு உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை தூய்மையாகவும் புதுப்பித்த நிலையிலும் பேணி வருதல் வேண்டும்.

(ii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்கு குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்

(iii) மேற்படி சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், இருபுறமும் சாந்து பூசப்பட்டு மேற்பரப்பு சீமெந்தினால் மினுக்கப்பட்டு, தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் சமையலறை தவிர்ந்த வேறு அறைகள் பலகையினால் அல்லது யாதாயினும் உலோகத்தகடு வகையினால் அல்லது பலகை மற்றும் யாதாயினும் உலோக வகையினால் நிர்மாணிக்கப்பட்டு தீந்தை பூசப்பட்டிருப்பது இந்த நியமத்திற்கு உட்பட்டதாகக் கருதப்படும்.

(iv) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை(சீலிங்) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி உட்கூரை நிலமட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு அறைக்கும், வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்களைத் திறந்தவுடன், அச்சாளரக் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப்பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை.

(vi) கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்.

(vii) ஒவ்வொரு அறையிலும் தளப்பகுதி சீமெந்து இடப்பட்டு சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மினுக்கப்படல் அல்லது பீங்கான் கற்கள் (நில ஓடுகள்) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்..

(viii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை சேகரிப்பதற்காகக் கழிவுகளைச் சேகரிக்கும் தொட்டிகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஈக்கள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் நுழைய முடியாதவாறு மூடிகளால் மூடி இருத்தல் வேண்டும்.

(ix) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை அகற்றுவதற்காக இப் பகுதியின் 11ஆம் துணைவிதிக்கு அமைய செயற்படக்கூடியவாறு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் பயன்படுத்தப்படுகின்ற நீர் மனித உபயோகத்திற்கு உகந்ததென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டுள்ள தரச்சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இத்தரச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும். தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்படுகின்ற நீர் இந்த இடத்தில் பயன்படுத்தப்படுமாயின் மேற்படி தரச்சான்றிதழ் பெறப்பட்டிருப்பதாக கருதப்படும்.

(xi) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற நீர் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடையாது தடுத்துக்கொள்வதற்குப் போதுமானளவு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(xii) வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் உபயோகத்திற்காக ஆகக் குறைந்தது ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒன்று என்ற வகையில் ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாருக்கும் தனித்தனியே மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறான மலசலகூடங்கள் சமையலறைகள், களஞ்சிய அறைகள் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புபடாதவாறு சுகாதாரத்தைப் பேணக்கூடியவாறான தூரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xiii) ஒவ்வொரு மலசலகூடத்தின் சுவர்கள் செங்கல் அல்லது சீமெந்துக் கற்கள் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுவர்களாக இருக்கும்போது அவை சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மினுக்கப்பட்டு தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். துருப்பிடிக்காத உலோகங்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுவர்களாக இருக்கும்போது அவற்றின் மேற்புறத்தே தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். நிலப்பகுதி சீமெந்தினால் சாந்து பூசப்பட்டு மினுக்கப்பட்டு அல்லது நிலஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xiv) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவையாற்றுகின்றவர்களின் உபயோகத்திற்காக குளியல் அறைகள் போதியளவு நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும். இத்துணைவிதியின் (xiii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மலசலகூடங்களுக்கு ஏற்புடைய நியதிகள் மேற்படி குளியலறைகளின் நிலம் மற்றும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(xv) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பயன்படுத்துகின்ற நீரை அனைத்து அறைகளுக்கும் பாதுகாப்பானவாறு குழாய் மூலமாக வழங்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvi) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் வாடிக்கையாளர்களின் உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் வாடிக்கையாளர்களின் கைகள், வாய் கழுவும் வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டுமென்பதுடன் துருப்பிடிக்காத உலோகத்தகடுகள் அல்லது பீங்கான் ஓட்டு மண்ணைப் பயன்படுத்தி செய்யப்பட்டோ அல்லது மினுக்கப்பட்டோ அல்லது செங்கற்கள்

அல்லது சீமெந்துக் கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட பீங்கான் கற்கள் (நிலஓடுகள்) பதிக்கப்பட்டு கழுவுவதற்கான பேசின்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvii) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தின் எந்தவொரு பகுதியிலும் உபயோகத்தின் பின்னர் வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் தடைகளின்றி வழிந்தோடுவதற்கு உகந்த வடிகாலமைப்பு ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xviii) பிரதேச சபையினால் கழிவுநீர் வடிகாலமைப்பு பேணிவரப்படுவதாயின் உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை பிரதேச சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம் மேற்படி கழிவுநீர் வடிகாலமைப்புக்கு வழிந்தோடச் செய்ய முடியும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் மேற்படி கழிவுநீரை, நீர் உறிஞ்சிக்கொள்ளும் குழியொன்றுக்கு வடிந்தோடச் செய்தல் வேண்டும். இல்லையேல் சுத்திகரிப்புச் செய்து பொது நீர்வடிகாலொன்றுக்கு விடுவித்தல் வேண்டும். மேற்படி நீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்காத வகையில் மூடிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கிணற்றிலிருந்து பதினைந்து மீற்றர் தூரத்திற்குக் குறையாத தூரத்தில் இது அமைந்திருத்தல் வேண்டும்.

(xix) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சாதாரண தீயணைப்பு உபகரணங்கள் இயங்குநிலையில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த இடத்திற்கு மின்னிணைப்பு இருப்பின் மேலதிகமாக மின்சாரத் தீயணைப்பு உபகரணங்களும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xx) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எல்லா படுக்கை அறைகளிலும் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தூங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தின் அளவு ஒருவருக்கு ஆகக் குறைந்தது நான்கு சதுரமீற்றராக (2mநீளம் x 2mஅகலம்) இருத்தல் வேண்டும் ஒவ்வொரு படுக்கையறையிலும் உடைகளை வைப்பதற்கான ஒரு அலுமாரி அல்லது கெபினட்டும், துவாய் அல்லது பொருட்களை வைப்பதற்கான மர அல்லது உலோகச் சட்டமும் இருத்தல் வேண்டும். தங்கியிருப்பவரின் அல்லது தங்கியிருப்பவர்களின் பொருட்களை வைத்திருப்பதற்கான மேசை மற்றும் மலசலகூடத்துடனான குளியலறையும் இருத்தல் வேண்டும்.

(xxi) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் புகை நன்றாக வெளியே போகும் வாயுடன் கூடிய சமையலறைக்கென தனியான அறையொன்று இருத்தல் வேண்டும்.

6. தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டுமென இப் பகுதியின் 5ஆம் துணைவிதியில் விதிக்கப்பட்டுள்ள சகல பகுதிகளும் அவ்வாறே ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறையேனும் தீந்தை பூசுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

7. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையையும் வாடிக்கையாளர் ஒருவர் பயன்படுத்திய பின்னர் மற்றொரு வாடிக்கையாளர் பயன்படுத்த இடமளிப்பதற்கு முன்னர் மேற்படி படுக்கை அறையிலுள்ள கட்டில்களின் படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், போர்வை, துவாய் மற்றும் பயன்படுத்தப்பட்ட வேறு துணி வகைகளைக் கழுவி சுத்தம் செய்தே மற்றைய வாடிக்கையாளருக்குப் பயன்படுத்த இடமளிக்க வேண்டும். அத்துடன் பின்னர் வருகை தருகின்ற வாடிக்கையாளருக்கு மேற்படி அறையைப் பயன்படுத்த இடமளிப்பதற்கு முன்னர் குறித்த அறையின் சாளரங்களை ஆகக் குறைந்தது நான்கு மணித்தியாலங்களேனும் பூரணமாக திறந்து வைத்திருத்தல் வேண்டும். ஆயினும் அறைகள் குளிரூட்டப்பட்டு இயங்கு நிலையில் இருக்குமிடத்து அடுத்த வாடிக்கையாளரை அனுமதிப்பதற்கான கால இடைவேளை குறைந்தது முப்பது நிமிடங்களாக இருத்தல் வேண்டும்.

8. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் தங்குபவர்களின் அடையாளத்தையும், பெயரையும், முகவரியையும் குறித்துக்கொள்ளும் பதிவேட்டை உரிமம் பெற்றவர் பராமரித்தல் வேண்டும். பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் வேண்டும்போது பரிசோதிப்பதற்கு அனுமதிப்பது உரிமம் பெற்றவரின் கடமையாகும்.

9. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் பெருக்க வேண்டும். கழிவுநீர் வழிந்தோடும் வடிகால்களை நாளொன்றுக்கு ஆகக் குறைந்தது இரண்டு தடவை வீதம் சுத்தம் செய்து நீரினால் கழுவுதல் வேண்டும்.

(ii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள ஒவ்வொரு இடத்திலும் உள்ள ஒவ்வொரு அறையும் படிக்கட்டுகளும், மண்டப அறையும், வடிகால்களும் மற்றும் அந்த இடத்திற்கு உரித்தான காணியையும் ஒவ்வொரு நாளும் நண்பகலுக்கு முன்னர் குப்பைகளை பெருக்கி சுத்தம் செய்வது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

10. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள குளியலறைகள், மலசலகூடங்கள் ஆகக்குறைந்தது நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் தெளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் துர்நாற்றம் வீசாதவாறு பேணிவருதல் வேண்டும். எவ்வாறாயினும், வாடிக்கையாளர்கள் தங்கியிருக்கும் யாதாவதொரு அறையின் குளியலறை, மலசலகூடம் என்பவற்றை நாளொன்றுக்கு ஒரு தடவை சுத்தம் செய்வது போதுமானதெனக் கருதப்படலாம்.

11. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் அவ்வவ் பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுப்பொருட்களும் இப் பகுதியின் 12 ஆம் துணைவிதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வகைப் படுத்தப்பட்டு ஊடுருவாத பொருளொன்றினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள தொட்டியொன்றில் இடப்பட வேண்டுமென்பதுடன், மேற்படி கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது ஒருமுறை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மேற்படி தொட்டிகளில் கழிவுப் பொருட்களைக் கொட்டும் போதும் அவற்றை அகற்றும் போதும் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் நல்லமுறையில் மூடிவைத்தல் வேண்டும்.

12. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் கழிவுப் பொருட்களை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) உக்கக் கூடிய கழிவுப் பொருட்கள்;

(ஆ) கண்ணாடி;

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்;

(ஈ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்;

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள்;

(ஊ) உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப் பொருட்களின் மீதிப்பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின்போது கிடைக்கின்ற ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகள்;

(எ) அபாயகரமான கழிவுகள்

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்கள் அல்லது தாங்கிகள் வைப்பது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும் .

(ii) மேலே (i) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதிக் கழிவகற்றல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

13. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாதல் வேண்டும்.

*14.* உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பணிபுரிகின்ற சகல ஊழியர்களுக்கும் சுத்தமான குடிநீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தம் செய்வதற்கான தூரிகை மற்றும் சவர்க்காரம் அல்லது திரவச்சவர்க்காரம் வழங்கப்பட்டிருத்தல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

*15.* பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உரிய வியாபாரத்திற்காக வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரம் இருந்தாலன்றி யாராயினும் ஆளொருவரினால் ஏற்புடைய பிரதேச சபை எல்லைக்குள் விடுதியொன்றை நடாத்திச் செல்லல் ஆகாது. நிறைவேற்றக் கூடாத பணிகள் (15 - 22).

*16.* உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் படுக்கையறைகளாக குறித்தொதுக்கப்பட்டுள்ள அறையொன்றில் அன்றி வேறு எந்தவொரு அறையிலும் ஆளெவரும் தூங்குவதற்கு இடமளித்தலாகாது.

*17.* இப் பகுதியின் 5ஆம் துணைவிதியில் (xx)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த இடவசதிகளுடன் இணங்காத ஆட்களின் எண்ணிக்கையானோர் யாதாயினும் படுக்கை அறையில் தூங்குவதற்கு உரிமப்பத்திரதாரர் இடமளித்தலாகாது.

*18.* யாதாயினுமொரு உரிமப் பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் படுக்கையறை யானது -

(i) தனி படுக்கை அறையில் ஒரு கட்டிலுக்கு மேலதிகமாகவும்;

(ii) இரட்டையர் படுக்கை அறையில் இரட்டை கட்டில் ஒன்றுக்கு அல்லது தனிநபர் கட்டில்கள் இரண்டுக்கு மேலதிகமாகவும்;

(iii) மூவருக்கான படுக்கை அறையில் இரட்டைக் கட்டில் ஒன்றும், தனிநபர் கட்டில் ஒன்றுக்கும் அல்லது தனிநபர் கட்டில்கள் மூன்றுக்கு மேலதிகமாகவும் அவ்வாறு எல்லா அறைகளிலும்;

(iv) குடும்ப அறையொன்றில் இரண்டு இரட்டையர் கட்டில்களும், தனிநபர் கட்டிலொன்றும் அல்லது ஒரு இரட்டையர் கட்டிலும், மூன்று தனிநபர் கட்டில்களும் அல்லது தனிநபர் கட்டில்கள் ஐந்துக்கு மேலதிகமாகவும் கொண்டிருத்தல் கூடாது;

(v) அத்துடன் யாதாயினுமொரு விடுதியின் தனி அறையில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் அல்லது இரட்டையருக்கான அறையில் இரண்டு பேருக்கு மேற்பட்டவர்கள் அல்லது மூவருக்கான அறையில் மூன்று பேருக்கு மேற்பட்டவர்கள் தூங்குவதற்கு உரிமப்பத்திரதாரர் இடமளித்தலாகாது. எவ்வாறாயினும் இந்த ஏதாவதொரு அறையில் தூங்கும் யாராயினும் ஆளொருவர் 12 வயதுக்குக் குறைவான ஒருவராக உள்ள போது இந்தப் பிரிவின் நியதிகளுக்காக அவர் ஆளொருவராக கருதப்படலாகாது.

*19.* யாதாயினுமொரு விடுதியை சட்டத்திற்கு முரணான பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள இடமளிக்காதிருப்பது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன் யாராயினுமொருவர் விடுதியிலுள்ள பிற தங்கியிருப்பவர்களுக்கு அல்லது விடுதிக்கு அருகே வசிப்பவர்களுக்கு இடைஞ்சல், தொந்தரவு, அமைதியின்மை மற்றும் இடர்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் பாடல்களைப் பாடுதல், இசைத்தட்டுகளை ஒலிக்கும் கருவிகளை செயற்படுத்தல் அல்லது அநாவசியமானவாறு ஒலி எழுப்பலாகாது.

*20.* உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் எந்தவொரு பகுதியிலும் விலங்குகள் எவற்றையும் வைத்திருத்தலாகாது.

*21.* உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுப்பொருட்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிலத்தில் அல்லது ஆங்காங்கே கொட்டப்படுதல் கூடாது.

*22.* (i) ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி முடிந்தாலன்றி, மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய இடமொன் றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தலோ ஆகாது.

(ii) நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப் பத்திரத்திற்குரிய இடத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

*பிரதேச சபையின் செயற்பணி.*

*23.* இந்த துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள விடுதி ஒன்றை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

*அறவீடுகளும் கட்டணங்களும்.*

*24.* யாதாயினுமொரு விடுதியை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக உச்சக் கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவது பிரதேச சபை செயலாளருக்கு சட்ட பூர்வமானதாகும்.

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

*25.* இப்பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல் லுபடிக் காலம்.*

*26.* இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (27 - 30).*

*27.* இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபை தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

*28.* இத் துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

*29.* இப்பகுதியின் 23ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

*30.* இப் பகுதியின் 29ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபை தவிசாளர் அல்லது பிரதேச ஆணையாளருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு .

*முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.*

*31.* உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினும் ஒருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலர்களால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

*துணைவிதிகளை மீறுதல்.*

*32.* இந்தத் துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறொன்றாகும்.

*அபராதமும் தண்டனையும்.*

*33.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம்

இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவின் (இ) உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

34. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து, பொருள் கோடலும் வரை விலக்கணமும்.

“பிரதேச சபை தவிசாளர்” என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச தவிசாளர் எனப் பொருள்படும்.

“செயலாளர்” என்பவர் ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

“பிரதேச சபை” என்பது பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பிரதேச த்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

“அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்” என்பது உரிய பணிக்கு பிரதேச தவிசாளர்அல்லது பிரதேச ஆணையாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

“நகர அபிவிருத்தி அதிகார சபை” என்பது 1978ம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபை எனப் பொருள்படும்.

“உரிமப்பத்திரதாரர்” என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவர் எனவும்,

“உரிமப்பத்திரம் பெற்ற இடம்” என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

“விடுதி” அல்லது ”உறங்குமனை” என்பது வீடு அல்லது வீட்டின் ஒரு பகுதியை கட்டணம் அறவிடுவதன் மூலம் குறித்த வீட்டின் குடும்ப அங்கத்தவர் தவிர்ந்த வேறு இருவருக்கு மேற்பட்ட ஆட்கள் தங்குவதற்கு கொடுக்கப்படும் இடம் எனப் பொருள்படும். எனினும் அதற்குள் வைத்தியசாலை அல்லது இணைப்பு வீடு உள்ளடங்காது.

“பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்” என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

“குடும்பஅறை” என்பது, ஒரே தடவையில் ஐந்து பேர் தங்குவதற்கான போதியளவு வசதிகள் மற்றும் இரட்டை கட்டில்கள் இரண்டும் தனிநபர் கட்டில் ஒன்று அல்லது இரட்டைக் கட்டிலொன்றும், தனிநபர் கட்டில்கள் மூன்றும் அல்லது தனிநபர் கட்டில்கள் ஐந்தும் உள்ள அறையும்,

“மூவர் அறை” என்பது, ஒரே நேரத்தில் மூன்று பேர் தங்குவதற்கு போதியளவு இட வசதிகளைக் கொண்டுள்ளதும், இரட்டை கட்டிலொன்றும், தனிநபர் கட்டிலொன்றும், அல்லது தனிநபர் கட்டில்கள் மூன்றைக் கொண்ட அறையும்,

"இரட்டையர் அறை" என்பது, ஒரேநேரத்தில் இருவர் தங்குவதற்கு போதியளவு இடவசதிகளையும், ஒரு இரட்டையர் கட்டிலும் அல்லது தனிநபர் கட்டில்கள் இரண்டும் உள்ள அறையும்,

"தனிநபர் அறை" என்பது, ஒரு ஆளுக்கு மாத்திரம் தங்குவதற்கு போதியளவு வசதிகளைக் கொண்டுள்ள தனிநபர் கட்டில் ஒன்றுள்ள அறையும்,

"இரட்டைக் கட்டில்" என்பது, ஆகக் குறைந்தது 200 சென்றி மீற்றர் நீளமும், 125 சென்றி மீற்றர் அகலமும் கொண்ட மெத்தையுடனான கட்டிலையும்,

"தனிநபர் கட்டில்" என்பதனால் ஆகக் குறைந்தது 200 சென்றி மீற்றர் நீளமும், 95 சென்றி மீற்றர் அகலமும் கொண்ட மெத்தையுடனான கட்டிலையும், குறிக்கும்.

**இணைப்பு 01**

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் விடுதிகளை (உறங்கு மனைகள்) நடாத்திச் செல்வதை வியாபார வரி/வியாபார உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20** .......

1. வியாபார நிலையத்தின் பெயர் : ..........................................................

2. (i) வியாபார நிலையம் அமைந்துள்ள இடம்: வட்டாரம்....................................... ஆதன இல.:...................

(ii) வீதியின் பெயர் :..........................................................

(iii) கிராம அலுவலர் பிரிவு இல. :........................................... பிரிவின் பெயர்:.......................................

3. (i) விண்ணப்பதாரியின் பெயர்: ..........................................................

(ii) முழுப்பெயர் : ..........................................................

(iii) நிரந்தர முகவரி : ..........................................................

(iv) கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் :..........................................................

(v) அடையாள அட்டை இல. :..........................................................

(vi) தொலைபேசி இல. :..........................................................

(vii) மின்னஞ்சல் முகவரி :..........................................................

4. (i) வியாபார ஆரம்பிக்கப்பட்ட திகதி:..........................................................

(ii) வியாபாரத்தின் தன்மை:..........................................................

(iii) கைத்தொழில்/தொழில் நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்

(அ) பெயர் : ..........................................................

(ஆ) தொலைபேசி இல. :..........................................................

(iv) முன்னைய தொழில் :..........................................................

5. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i) உரிமையாளரின் பெயர்:..........................................................

(ii) முகவரி :..........................................................

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா : ஆம்:....................................... இல்லை :.......................................

ஆம் எனில் உரிம இல.:............................................................ திகதி:.......................................................

7. விடுதியிலுள்ள,-

(i) தனிநபர் அறைகளின் எண்ணிக்கை:........................................................................................................

(ii) இரட்டையர் அறைகளின் எண்ணிக்கை:...................................................................................................

(iii) மூவர் அறைகளின் எண்ணிக்கை:........................................................................................................

(iv) குடும்ப அறைகளின் எண்ணிக்கை:........................................................................................................

(v) ஒரே நேரத்தில் தங்கக் கூடியவர்களின் மொத்த எண்ணிக்கை:.........................................................

8. விடுதியில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை (முகாமையாளர் உள்ளடங்களாக):-

..........................................................................................................................

9. மலசலகூடங்கள்,-

(i) ஆண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை:............................................

(ii) பெண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை:............................................

(iii) ஆண் வாடிக்கையாளர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை:...............

(iv) பெண் வாடிக்கையாளர்களுக்கான கழிவறைகளின் எண்ணிக்கை :.............

10. குளியலறைகள்:-

ஆண்களுக்கான குளியலறைகளின் எண்ணிக்கை:..........................................................................

பெண்களுக்கான குளியலறைகளின் எண்ணிக்கை:..........................................................................

11. சமையலறைகளின் எண்ணிக்கை :...................................................................................................

12. நீர் வழங்கும் மூலம் :..........................................................................................................................

13 திண்மக் கழிவுப் பொருட்களை இறுதியாக அகற்றும் முறையியல்:

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்ட கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20....... ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

..................... .........................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

....................................

தவிசாளர்/செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம்:................................... ஆதன இல:...............................
வீதியின் பெயர்:...........................................................................
உரிமையாளரின் பெயர்:.........................................................................
ஆதன விபரம்:...............................................................................
ஆண்டுப் பெறுமதி:........................... வீதவரி நிலுவை.................. உண்டு................இல்லை............

............ ........................,
திகதி நிர்வாக உத்தியோகத்தர்/
பகுதித் தலைவர்.

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:.....................................................................
செலுத்த வேண்டிய கட்டணம்:...............................................................
பிரிவு A B C .......................................
குறிப்பு.......................................

................ .................................
திகதி வருமானப் பரிசோதகர்.

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

**பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை**

........................................................................................................................................................
........................................................................................................................................................
........................................................................................................................................................
........................................................................................................................................................

......................... ................................
திகதி பொதுச் சுகாதார பரிசோதகர்.

**சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கை**

........................................................................................................................................................
........................................................................................................................................................
........................................................................................................................................................
........................................................................................................................................................

............... ...................................
திகதி பிரதம சுகாதார வைத்திய அதிகாரி.

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம்:................ உபயோகம் மற்றும்:............................ சுற்றுச்சூழல் உரிமம்:..............................
சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :............................ குடிபுகு சான்றிதழ் :...................... மதுவரி உரிமம்:.............................

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.
........................................................................................................................................................
........................................................................................................................................................
........................................................................................................................................................
........................................................................................................................................................

............................. ..............................
திகதி பிரதம வருமானப் பரிசோதகர்.

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

................ ...............................
திகதி செயலாளர்.

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை

............ ..............................
திகதி பிரதேசசபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல:.................. பற்றுச்சீட்டுத் திகதி:......................................

உரிம இல. :........................... உரிமத் திகதி :...........................

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

................................. ................................
திகதி இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது

................. ...............................
திகதி செயலாளர்

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

............ ..............................
திகதி பிரதேசசபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**பகுதி IV - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வெதுப்பகம் நடாத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்**

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வெதுப்பகம் நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம். *துணைவிதியின் பெயர்.*

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *நோக்கம்.*

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix)(ஏ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

4. இணைப்பு I இலுள்ள விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியும், பொறுப்புமாகும். *நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4-24).*

5. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே, பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு வெதுப்பகத்திற்கும் உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) வெதுப்பகமானது விறகையோ அல்லது மின்சாரத்தையோ அல்லது எந்த விதத்தில் சக்தி பெறப்பட்டு வெப்பத்தை பெற்றுக் கொண்டாலும் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை தூய்மையாகவும் புதுப்பித்த நிலையிலும் பேணிவருதல் வேண்டும்.

(ii) வெதுப்பகத்தின் ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்க ளைத் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப்பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை.

(iii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை(சீலிங்) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி உட்கூரை நிலமட்டத்திலிருந்து 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் உட்கூரையானது வெள்ளைநிற தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு அறையிலும் தளப்பகுதி சீமெந்து இடப்பட்டு சாந்து பூசப்பட்டு மினுக்கப்படல் அல்லது பீங்கான் கற்கள் (நில ஓடுகள்) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) வெதுப்பகத்தின் மூடுலை அடுப்பு (போறணை) அமைந்துள்ள அறைச் சுவரின் உயரம் நில மட்டத்தில் இருந்து உட் வரை ஆகக் குறைந்தது மூன்று (03) மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(vi) மேலும் சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், இருபுறமும் சாந்து பூசப்பட்டு அல்லது மேற்பரப்பு சீமெந்தினால் மினுக்கப்பட்டு, தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் ஏனைய அறைகள் அலுமினியம் அல்லது வேறு துருப்பிடிக்காத உலோக பொருளுடன் பலகை பயன்படுத்தி சுவர் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பலகையின் மேற்பரப்புக்கு வண்ணச்சாயம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) வெதுப்பகத்திலுள்ள மரப்பலகையினால் செய்யப்பட்ட சகல பொருத்தல்களும் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) கூரையானது ஏதேனும் நிரந்தரப் பொருளினால் வேயப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் அகலமானது ஆகக் குறைந்தது ஒரு மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்.

(ix) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் பயன்படுத்தப்படுகின்ற நீர் மனித உபயோகத்திற்கு உகந்ததென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டுள்ள தரச்சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இத்தரச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும். தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்படுகின்ற நீர் இந்த இடத்தில் பயன்படுத்தப்படுமாயின் மேற்படி தரச்சான்றிதழ் பெறப்பட்டிருப்பதாக கருதப்படும்.

(x) உரிமப்பத்திரம் பெற்ற இடத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற நீர் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடையாது தடுத்துக்கொள்வதற்குப் போதுமானளவு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(xi) உற்பத்தி நடவடிக்கையின் போது உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் பயன்படுத்துகின்ற நீரினை அனைத்து அறைகளுக்கும் பாதுகாப்பானவாறு குழாய் மூலம் வழங்குவதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) பிரதேச சபையினால் கழிவுநீர் வடிகாலமைப்பு பேணிவரப்படுவதாயின் உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை பிரதேச சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம் மேற்படி கழிவுநீர் வடிகாலமைப்புக்கு வழிந்தோடச் செய்ய முடியுமென்பதுடன் அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில், மேற்படி கழிவுநீரை, நீர் உறிஞ்சிக்கொள்ளும் குழியொன்றுக்கு வடிந்தோடச் செய்தல் வேண்டும். இல்லையேல் சுத்திகரிப்புச் செய்து பொது நீர்வடிகாலொன்றுக்கு விடுவித்தல் வேண்டும். மேலும் மேற்படி நீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்காதவாறு மூடிவைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் இது அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கிணற்றிலிருந்து பதினைந்து மீற்றர் தூரத்திற்குக் குறையாத தூரத்தில் இது அமைந்திருத்தல் வேண்டும்.

(xiii) இப் பகுதியின் 13ஆம் துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ளவாறு கழிவுகளை அகற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

(xiv) உரிமப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கின்ற வெதுப்பகத்திற்கு விறகின் மூலம் சக்தி பெறப்படுமாயின்

(அ) மூடுலை அடுப்பின் (போறணை) புகை போக்கியின் மேல் முனையானது நிலமட்டத்திலிருந்து ஆகக்குறைந்தது 7.5 மீற்றருக்கு மேலே நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மூடுலை அடுப்பிலிருந்து அகற்றப்படுகின்ற சாம்பல் மற்றும் மீதி விறகுகளை அகற்றுவதற்காக கொண்டு செல்வதற்கு போதியளவான கொள்கலன் ஒன்று வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) வெதுப்பகத்தின் மூடுலை அடுப்பிற்கு வெளிப்புற சுவரில் தீந்தை அல்லது சுண்ணாம்பு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) எரிபொருளைக் களஞ்சியப்படுத்துவதற்காக தனியான அறையொன்றோ அல்லது இடமொன்றோ இருத்தல் வேண்டும்.

(xv) உரிமப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்கின்ற வெதுப்பகமானது, மின்சாரத்தின் மூலம் சக்தி செயற்படுவதாயின் -

(அ) வெதுப்பக உபகரணங்களுக்கு மின்சார இணைப்பைப் பெற்றுக் கொடுக்கின்ற 'பிளக்'குகள் பாதுகாப்பான நிலையில் காணப்பட வேண்டுமென்பதுடன் உயர் வோல்ற் மற்றும் மின்சாரக் கசிவுகளின் போது சுயமாக இயங்குகின்ற தன்னியக்க உபகரணங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) வெதுப்பக அமைவிடத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்கம்பிகள் மற்றும் மின் சுற்றுக்களின் திறந்த ஓரப்பகுதிகள் பெட்டிகளினால் மூடப்பட்டு மின்கசிவுகள் ஏற்படாதவாறு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

6. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பொதுவான தீயணைப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் மின்சார வசதிகள் பெறப்பட்டிருப்பின் மின்சாரத் தீயணைப்புக் கருவிகளும் தேவையான அளவில், இயங்கு நிலையில் பேணப்படல் வேண்டும்.

7. தீந்தை பூசப்பட்டிருக்க வேண்டுமென இப் பகுதியின் 5ஆம் துணைவிதியில் விதிக்கப்பட்டுள்ள சகல பகுதிகளும் அவ்வாறே ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறையேனும் தீந்தை பூசப்படுதல் வேண்டும்.

8. மாவினைப் பிசைந்து கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு மேசைகளுடைய அறையின் நிலப்பகுதியும் மாதாந்தம் குறைந்தது ஒருமுறையேனும் கழுவுதல் வேண்டும்.

9. மாவினை பிசைவதற்கு பயன்படுத்துகின்ற சகல மேசைகளினதும் மேற்பரப்பு மிருதுவாக்கப்பட்டு அதன் ஒன்றிணைக்கும் பகுதிகளுக்கு இடையே இடைவெளிகள் இல்லாதவாறு அவைகள் ஒன்றிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அல்லாத விடத்து அவை துருப்பிடிக்காத உருக்கினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

10. உரிமப்பத்திரம் பெற்றுக் கொண்டுள்ள வெதுப்பகத்தில் பணிபுரிகின்ற சகல ஊழியர்களும் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துதல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

11. வெதுப்பகம் மற்றும் அதன் சுற்றுச் சூழல், வடிகான்கள், தளபாடங்கள், உபகரணங்கள் போன்றவை சுத்தமாகவும் ஒழுங்கான முறையில் பேணி வருதல் வேண்டும்.

12. வெதுப்பகத்தில் பணிபுரிகின்ற சகல ஊழியர்களும் பாதுகாப்பு முகக்கவசம், கைக்கவசம். சுத்தமான வெள்ளைநிற மேலாடை, (ஏப்பிரன்) தலைப்பாகை (தொப்பி) மற்றும் தேவையான பிற பாதுகாப்பு உறைகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் கடமையில் ஈடுபடும் ஒவ்வொரு ஊழியரும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நன்கு உடலை கழுவுவதன் மூலம் அல்லது குளிப்பதன் மூலம் சுத்தம் செய்து கொண்டு எல்லா சந்தர்ப்பங்களின் போதும் அவற்றைஅணிந்து கொள்வதனையும் உறுதி செய்து கொள்ளல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

13. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் அவ்வவ் பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுப்பொருட்களும் துணைவிதியின் 14 ஆம் துணைவிதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டு ஊடுருவாத பொருளொன்றினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள தொட்டியொன்றில் இடப்பட வேண்டுமென்பதுடன், மேற்படி கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது மாதத்தில் இருமுறை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மேற்படி தொட்டிகளில் கழிவுப் பொருட்களை கொட்டும் போதும் அவற்றை அகற்றும் போதும் மட்டுமன்றி ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் மேற்படி தொட்டிகளை நல்லமுறையில் மூடிவைத்தல் வேண்டும்.

14. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் அவற்றை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

(ஆ) கண்ணாடி

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்

(ஈ) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள்

(ஊ) உற்பத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின் போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும்

(எ) அபாயகரமான கழிவுகள்

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் இடுவது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளல் வேண்டும்.

15. வெதுப்பக உபயோகத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற மா மற்றும் ஏனைய சேர்மானப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக புறம்பான அறையொன்றை பயன்படுத்தல் வேண்டும். இந்த அறையானது போதுமான அளவு காற்றோட்ட வசதி கொண்டதாக இருத்தல் வேண்டும். மேலும் எலிகள், ஈக்கள், பூச்சி வகைகள் அல்லது பிற பிராணிகள் உட்புகாதவாறு பாதுகாப்பானதாகவும் இருத்தல் வேண்டும்.

16. இப் பகுதியின் 15ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டதற்கமைவாக களஞ்சிய அறையில் மாவினைக் களஞ்சியப்படுத்தும் போது நில மட்டத்திலிருந்து 20 சென்ரி மீற்றர் உயரத்திலான ஒரு தட்டின் மீது அமைக்கப்படுகின்ற இறாக்கையை பயன்படுத்த வேண்டும் என்பதுடன் குறித்த இறாக்கை வெறுமையான நிலையில் அங்கும் இங்கும் எடுத்துச் செல்லக்கூடிய வகையில் வடிவமைத்துக் கொள்ளலும் வேண்டும். மேலும் குறித்த இறாக்கையின் கீழ் பகுதியில் எலிகள், ஈக்கள், பூச்சி வகைகள் அல்லது பிற பிராணிகள் தங்கியிருப்பதை தடுப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இது ஆகக் குறைந்தது சுவரிலிருந்து 23 சென்ரி மீற்றர் தூரத்தில் இருத்தல் வேண்டும்.

17. இப் பகுதியின் 16ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள இறாக்கையை ஆகக் குறைந்தது மாதத்திற்கு இருமுறையேனும் அறைக்கு வெளியே எடுத்து சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

18. பணியாளர்களின் உபயோகத்திற்காக ஆகக் குறைந்தது ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒன்று என்ற வகையில் ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாருக்கும் தனித்தனியே மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும். வெதுப்பக பண்டங்களை உற்பத்தி செய்கின்ற அறைகள், களஞ்சிய அறைகள் அல்லது விற்பனை செய்யவுள்ள விற்பனை செய்வதற்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள வெதுப்பக உற்பத்திகள் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புபடாதவாறு அல்லது சுகாதாரத்தைப் பேணக்கூடியவாறான தூரத்தில் அவ்வாறான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

19. இந்த வெதுப்பகத்தில் பணிபுரிகின்ற சகல ஊழியர்களுக்கும் சுத்தமான குடிநீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தம் செய்வதற்கான தூரிகை மற்றும் சவர்க்காரம் அல்லது திரவ சவர்க்காரம் வழங்குதல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்

20. இந்த துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள எல்லா வெதுப்பகங்களிலும் படிக்கல்லுடனான தராசு, இலத்திரனியல் தராசு அல்லது வேறு ஏதேனும் வகையிலான ஏற்றுக் கொள்ளப்பட்ட தராசை வைத்திருத்தல் மற்றும் எவரேனும் வாடிக்கையாளரினால் கோரிக்கை விடப்படுமிடத்து விற்பனை செய்யவுள்ள அல்லது விற்பனை செய்வதற்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள வெதுப்பக உற்பத்திகளின் நிறையை நிறுத்துப் பார்ப்பது அல்லது நிறுத்துக் காட்டுவது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

21. ஏதேனும் ஒரு வெதுப்பகத்திலிருந்து வெதுப்பக உற்பத்திகளை விற்பனைக்காக எடுத்துச் செல்லும் போது தூசு, நீர் அல்லது வேறு கழிவுப் பொருட்கள் அதில் கலப்பதை தடுப்பதற்கு பாதுகாப்பானவாறு மூடப்பட்டுள்ள பெட்டிகளைப் பயன்படுத்துவது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

22. வெதுப்பகம் உரிமையாளர் அவரது பெயரையும் 'உத்தரவுபெற்ற வெதுப்பகம்' என்ற வசனத்தை மும்மொழிகளில் எழுதப்பட்ட பலகையொன்றினை உரிமப்பத்திர இடத்தில் வெளிப்படையாக காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

23. வெதுப்பக உற்பத்திப் பொருட்களை விற்பனைக்காக கொண்டு செல்லும் ஆட்கள், தவிசாளரினால் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் கையொப்பமிடப்பட்ட அனுமதியட்டையை வைத்திருத்தல் வேண்டும்.

24. தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் பரிசோதனை செய்து கொள்வதற்காக சகல ஊழியர்களதும் (பாண் வியாபாரிகள் உட்பட) பெயர்களையும் விலாசத்தையும் உள்ளடக்கிய பட்டியலை உரிமப்பத்திரதாரர் வைத்திருத்தல் வேண்டும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள் (25-33)

25. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இணைப்பு 1 இல் உள்ள விண்ணப்பப்படிவம் மூலம் கோரப்படுகின்ற கோரிக்கைகளை மீது உரிய பணிக்காக வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரம் இருந்தாலன்றி எவரேனும் ஆளொருவரினால் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வெதுப்பகமொன்றை நடாத்திச் செல்லல் ஆகாது.

26. வெதுப்பக உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற மா மற்றும் பிற சேர்மானப் பொருட்கள் காலாவதியாகும் திகதியானது போதுமான காலப்பகுதியைக் கொண்டிருந்தாலன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தப் பொருட்களை வெதுப்பக உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தலாகாது.

27. (i) ஏதேனும் நோயினால் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி முடிந்தாலன்றி, மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ அல்லதுபணியில் ஈடுபடுதலோ அல்லது யாதாயினுமொரு பணியில் ஈடுபடுவதற்கு இடமளித்தலோ ஆகாது.

(ii) நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப்பத்திரத்திற்குரிய வெதுப்பகத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

28. வெதுப்பக உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பதற்கு அனுமதிக்கப்படாத இரசாயனப் பொருட்கள், நிறமூட்டிகள் என்பவற்றை பயன்படுத்தலாகாது.

29. இந்த துணைவிதியின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்ட எந்தவொரு வெதுப்பகத்திலும், எந்தவொரு நபரும் நித்திரை கொள்ளல் கூடாது என்பதுடன் வெதுப்பகத்தின் தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் அல்லது பொருட்கள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு பொருளையும் இதில் வைப்பதற்கோ அல்லது களஞ்சியப்படுத்துவதற்கோ செயற்படக்கூடாது. எவ்வாறாயினும் வெதுப்பகத்தின் ஊழியர்களுக்கு புறம்பாக ஒதுக்கப்பட்ட ஓர் இளைப்பாறும் அறையோ அல்லது உணவு உட்கொள்ளும் அறையோ இதில் உள்ளடக்கப்படலாகாது.

30. வெதுப்பக உற்பத்திகளுக்கு மனிதர்கள் பயன்படுத்துவதற்கு தகுதியற்ற நீரைப் பயன்படுத்தலாகாது என்பதுடன் வெதுப்பக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் நீர் நிலத்துக்கு கீழுள்ள நீர்த் தாங்கியில் சேமித்து வைக்குமிடத்து இந்த இடத்திலிருந்து 18 மீற்றருக்கும் குறைவான தூரத்தில் கழிவுக்கிடங்கோ அல்லது போரணைக் கிடங்கோ அல்லது கரிக்கிடங்கோ இருத்தலாகாது.

31. உரிமப்பத்திரம் பெற்றுள்ள வெதுப்பகத்தின் யாதாயினுமொரு இடமொன்றில் அல்லது ஒரு பகுதியில் எந்தவொரு விலங்கையும் வைத்திருத்தலாகாது.

32. உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் எச்சில் துப்புவதற்காக வைக்கப்பட்டுள்ள படிக்கங்களைத் தவிர்ந்த வேறு இடங்களில் எவரொருவரும் எச்சில் துப்பக்கூடாது.

33. எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இப் பகுதியின் 34 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கொள்வனவை மறுத்தல் அல்லது அதற்கு தடையாக இருத்தல் ஆகாது.

பிரதேச சபையின் செயற்பணி (34- 35).

34. பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஏதேனுமொரு உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள வெதுப்பக உற்பத்தி மாதிரியை பரிசோதனை நோக்கத்திற்காக அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளல் சட்டபூர்வமானதாகும்.

35. இந்த துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள வெதுப்பகம் ஒன்றை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு

உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தலைரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

*அறவீடுகளும் கட்டணங்களும்.*

36. யாதாயினுமொரு வெதுப்பகமொன்றை நடாத்திச் செல்வதற்கு உச்சக் கட்டணத்தை விஞ்சாத வகையில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 149 பிரிவுக்கு அமைவாக வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு தத்துவமுண்டு.

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

37. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கோ கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.*

38. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (39 - 42).*

39. இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

40. இத் துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

41. இப்பகுதியின் 35 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றவேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குத் தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

42. இப் பகுதியின் 41ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றுவதை தவிர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்ட உரிமப்பத்திரம் பிரதேச சபைத் தவிசாளருக்கு இரத்துச் செய்வதற்கு சட்டரீதியான தத்துவம் உண்டு.

*முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.*

43. உரிமப்பத்திரதாரரோஅல்லதுயாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

*துணைவிதிகளை மீறுதல்.*

44. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

*அபராதமும் தண்டனையும்.*

45. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில்

குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.

46. இப்பகுதியின் துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள். கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப்பொருள்படும்.

'பிரதேச சபை' என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது உரிய பணிக்காக பிரதேச சபைத் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'உரிமப்பத்திரதாரர்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

'உரிமப்பத்திரம் பெற்ற இடம்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

'வெதுப்பக உற்பத்தி' என்பது விற்பனைக்காக அல்லது பிற எவரேனும் ஆளொருவரின் கொள்வனவின் மீது ஏதேனும் வெதுப்பகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாண், கேக், பணிஸ், பிஸ்கட் அல்லது ஏதேனும் இனிப்புப் பண்டங்கள் எனப் பொருள்படும்.

'வெதுப்பகம்' என்பது விற்பனைக்காக அல்லது பிற எவரேனும் ஆளொருவரின் கொள்வனவின் மீது பாண், கேக், பணிஸ், பிஸ்கட் அல்லது ஏதேனும் இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி செய்கின்ற இடமொன்று எனப் பொருள்படும் என்பதுடன் இவ்வாறு உணவுகளைத் தயாரிக்கின்ற அல்லது இவ்வாறான தயாரிப்பதற்கான பொருட்களை களஞ்சியப்படுத்தும் ஏதேனும் ஒரு இடமும் இதில் உள்ளடங்கும்.

**இணைப்பு - 01**

**பிரதேச சபை**

**வெதுப்பக வியாபார உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20......**

1. வியாபார நிலையத்தின் பெயர் :-----.

2. (i) வியாபார நிலையம் அமைந்துள்ள இடம் : வட்டாரம் : -----. ஆதன இல. :-----.

(ii) வீதியின் பெயர் :-----.

(iii) கிராம அலுவலர் பிரிவு இல. :-----. பிரிவின் பெயர் :-----.

3. (i) விண்ணப்பதாரியின் பெயர் :-----.

(ii) முழுப்பெயர் :-----.

(iii) நிரந்தர முகவரி :-----.

(iv) கிராம அலுவலர் பிரிவு :-----.

(v) அடையாள அட்டை இல. :-----.

(vi) தொலைபேசி இல. :-----.

(vii) மின்னஞ்சல் முகவரி :-----.

4. (i) வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி :-----.

(ii) வியபாரத்தின் தன்மை :-----.

(iii) கைத்தொழில்/தொழில் நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்

(அ) பெயர் :-----.

(ஆ) தொலைபேசி இல. :-----.

(iv) முன்னைய தொழில்:-----.

5. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i) உரிமையாளரின் பெயர் :-----.

(ii) முகவரி :-----.

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா : ஆம் :-----. இல்லை :-----.

ஆம் எனில் உரிம இல. :-----. திகதி :-----.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20.................. ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :-----.

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

-----,
தவிசாளர்/செயலாளர்/
அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம் :-----. ஆதன இல. :-----.

வீதியின் பெயர்:-----.

உரிமையாளரின் பெயர் :-----.

ஆதன விபரம்:-----.

ஆண்டுப் பெறுமதி :----. வீதவரி நிலுவை :----.

உண்டு :----. இல்லை :----.

------,
நிர்வாக உத்தியோகத்தர்/
பகுதித் தவிசாளர்

திகதி :-----.

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:-----.

செலுத்த வேண்டிய கட்டணம் :-----.

பிரிவு A B C :-----.

குறிப்பு :-----.

------,
வருமானப் பரிசோதகர்

திகதி :-----.

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

**பொதுச்சுகாதார பரிசோதகரின் அறிக்கை**

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

------,
பொதுச் சுகாதார பரிசோதகர்

திகதி :-----.

**சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கை**

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

-----,
பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி

திகதி :-----.

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :-----. உபயோகம் மற்றும் :-----. சுற்றுச்சூழல் உரிமம் :-----.

சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :-----.

குடிபுகு சான்றிதழ் :-----. மதுவரி உரிமம் :-----.

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

------,
பிரதம வருமானப் பரிசோதகர்.

திகதி :-----.

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

------,
செயலாளர்.

திகதி :-----.

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை

------,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-----.

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. :-----. பற்றுச்சீட்டு திகதி :-----.

உரிம இல. :-----. உரிமத் திகதி :-----.

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

------,
இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

திகதி :-----.

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

------,
செயலாளர்

திகதி :-----.

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

------,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

திகதி :-----.

---

## அத்தியாயம் - 3

### பகுதி I - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பொது விளையாட்டு மைதானங்களை முறைப்படுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான துணைவிதிகள்

துணைவிதியின் பெயர்.

01. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பொது விளையாட்டு மைதானங்களை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

நோக்கம்.

02. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் சமுதாய அபிவிருத்திக்காக விளையாட்டு மைதான வசதிகளைச் செய்து கொடுத்தல், அசைவற்ற ஆதனத்தை பேணுதல் மற்றும் முகாமை செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

03. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(vi) (இ) பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு இந்தத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4 - 6).

04. பிரதேச சபைக்கு உரித்தான யாதாயினுமொரு விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கின்ற யாராயினுமொருவர் இணைப்பு 1 உள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இப்பகுதியின் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நியதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் மட்டுமே பிரதேச சபைக்கு உரித்தான யாதாயினுமொரு விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரமொன்று பிரதேச சபை தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்படும்.

06. விளையாட்டு மைதானத்தை பயன்படுத்த உத்தேசிக்கின்ற யாராயினும் ஒருவர் விளையாட்டு மைதானமொன்றை ஒதுக்கிக்கொள்ள எதிர்பார்க்கின்ற திகதிக்கு ஆகக்குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். குறித்த கோரிக்கைக்கு அமைய ஒதுக்குவதானது இப்பகுதியின் 7ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு உட்படுதல் வேண்டும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள்

07. (i) யாராயினும் நபரொருவர் பிரதேச சபைக்கு உரித்தான ஏதேனுமொரு விளையாட்டு மைதானத்திற்கு சேதங்களை விளைவித்தலாகாது அல்லது அவ்வாறு சேதங்களை ஏற்படுத்த இடமளித்தலாகாது என்பதுடன் விளையாட்டு மைதானத்திற்குள் மாடுகள், பன்றிகள்,

குதிரைகள், மட்டக் குதிரைகள், கோவேறுகழுதை, நாய்கள் அல்லது வேறு விலங்கினங்களையோ கொண்டு செல்லலாகாது. மேலும் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சயையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் பெற்றுக் கொண்ட அனுமதிப்பத்திரமின்றி எந்தவொரு வாகனத்தையும், எந்தவொரு விளையாட்டு மைதானத்திற்குள்ளும் கொண்டு செல்லலாகாது.

(ii) யாராயினும் நபரொருவர் குடிபோதையில் இருத்தலாகாது, முறைகேடாக நடந்து கொள்ளலாகாது, போதைவஸ்துக்களைப் பயன்படுத்திவிட்டு இருத்தலாகாது மற்றும் வெளித்தரப்பினருக்கு அநாவசியமாக அசௌகரியங்களை ஏற்படுத்தலாகாது.

(iii) யாராயினுமொருவர் ஒதுக்கிக் கொண்ட விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்ட பணிக்காக அன்றி வேறு எந்தவொரு பணிக்கும் பயன்படுத்திக் கொள்ளலாகாது.

(iv) விளையாட்டு மைதானமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரமொன்றை, எந்தவொரு காரணத்திற்காகவும் வேறு நபரொருவருக்கு பொறுப்பளிக்கலாகாது.

(v) தளபாடங்களும் பொருத்துக்களும், மின்சார உபகரணங்கள், நீர் வழங்கல் உபகரணங்கள் மற்றும் விளையாட்டு மைதானத்தில் உள்ள பிரதேச சபைக்கு சொந்தமான சொத்துக்கள் என்பவற்றுக்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர் அல்லது அவரது பிரதிநிதிகள் அல்லது அங்கு மைதானத்தைப் பயன்படுத்துநர் அல்லது பார்வையாளர் யாராவது ஒருவர் நட்டத்தை ஏற்படுத்தலாகாது.

*பிரதேச சபையின் செயற்பணி (8-12)*

08. (i) விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரமொன்றுக்கான கோரிக்கைக்குரிய ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் பிரதேச சபை அலுவலகத்திற்கு பெற்றுக்கொள்கின்ற ஒழுங்குமுறைக்கு அமைவாக கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

(ii) விளையாட்டு மைதானமொன்றைப் பயன்படுத்துவதற்காகக் கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்களில் யாதாயினுமொரு விளையாட்டு அல்லது விளையாட்டுடன் தொடர்பான விடயங்களுடன் சம்பந்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

09. இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கிக்கொள்ளப்பட்டுள்ள யாதாயினுமொரு விளையாட்டு மைதானத்துக்கான மேற்படி ஒதுக்கிக்கொண்டதை இரத்துச்செய்வதற்கு விண்ணப்பதாரருக்கு அவசியமாகின்ற சந்தர்ப்பமொன்றில் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் அனுமதிக்க முடியும்.

(i) ஒதுக்கிக்கொண்டதை இரத்துச் செய்வதற்கு விண்ணப்பிக்கும்போது

(அ) விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக இருப்பின், செலுத்தப்பட்ட கட்டணத்தில் ஐந்து சதவீதமும்,

(ஆ) விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாக இருப்பின், செலுத்தப்பட்ட கட்டணத்தில் பத்து சதவீதமும்,

(இ) விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக இருப்பின், செலுத்தப்பட்ட கட்டணத்தில் பதினைந்து சதவீதமும்,

(ஈ) விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு பதினைந்து நாட்களுக்கு முன்னதாக இருப்பின் செலுத்தப்பட்ட கட்டணத்தில் இருபத்தைந்து சதவீதமும்,

(உ) விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக இருப்பின் செலுத்தப்பட்ட கட்டணத்தில் ஐம்பது சதவீதமும்,

(ஊ) விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக இருப்பின் செலுத்தப்பட்ட கட்டணத்தில் எழுபத்தைந்து சதவீதமும்,

பிரதேச சபை நிதியத்திலிருந்து மீளளிக்கப்படமாட்டாது.

(ii) விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்டதை இரத்துச் செய்யக் கோருவது, விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொள்ளப்பட்டுள்ள திகதிக்கு மூன்று நாட்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் எனின் செலுத்தப்பட்ட கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

யாதாயினுமொன்றுக்கு ஒதுக்கிக் கொண்டதை இரத்துச் செய்து கொள்ளும் போது மேற்படி ஒதுக்கிக் கொண்டமைக்காக செலுத்தப்பட்ட பாதுகாப்புவைப்புத்தொகை முழுவதையும் மீளப் பெற்றுக் கொள்ளும் உரிமை விண்ணப்பதாரருக்கு உண்டு.

10. யாராயினுமொருவர் விளையாட்டு மைதானமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்காக சமர்ப்பிக்கின்ற கோரிக்கைக்கு இடமளிக்காத சந்தர்ப்பமொன்றில், அவ்வாறு இடமளிக்காமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு இயன்றவரை விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தன்று அல்லது நியாயமான கால எல்லைக்குள் அது பற்றி உரிய விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவிப்பது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாகும்.

11. இந்தத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விளையாட்டு மைதானமொன்றை யாதாயினுமொரு பணிக்காக ஒதுக்கப்படாதுள்ள எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி விளையாட்டு மைதானத்தில் விளையாடுவது அல்லது விளையாட்டுப் பயிற்சி நடவடிக்கைகளிற்காக கட்டணமின்றி பயன்படுத்திக் கொள்ள இடமளிப்பது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாதல் வேண்டும்.

12. இந்தத்துணை விதிகளின் கீழ் ஒதுக்கிக்கொள்ளப்பட்டுள்ள யாதாயினுமொரு விளையாட்டு மைதானம் அவ்வாறு ஒதுக்கிக் கொள்ளளப்பட்ட தினத்தில் பிரதேச சபையின் யாதாயினும் அத்தியாவசியமான பணிக்கு அவசியமாகும் பட்சத்தில், மேற்படி ஒதுக்கிக் கொடுத்ததை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறாயினும் இவ்வாறு இரத்துச் செய்யப்படுவதாயின்,

(i) மேற்படி இரத்துச்செய்வதை விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்ட தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அவர் செலுத்தியுள்ள கட்டணம் மற்றும் வைப்புத்தொகையை முற்றாக அவருக்கு மீளச்செலுத்த வேண்டும். அத்துடன் இவ்வாறான இரத்துச் செய்தல்கள் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்திற்கு முன்னர் மூன்று நாட்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படலாகாது.

(ii) மூன்று நாட்களிற்கு குறைவான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை ஒதுக்கிக்கொண்டுள்ள தினத்தில் அவசரமான மற்றும் விசேடமான தேவையின் அடிப்படையில் இரத்துச் செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் இரத்துச் செய்யப்படுவதனால் ஏற்படும் நியாயமான இழப்பீட்டை அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு வழங்குதல் வேண்டும். ஆயினும் மேற்படி அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்யாமையால் ஏற்படும் இழப்பீட்டை விட அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு இழப்பீடு வழங்குவது பிரதேச சபைக்கு நன்மையை ஏற்படுத்தும் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படல் வேண்டும்.

மேலே (i) வது பிரிவின் பிரகாரம் ஏதேனும் ஒதுக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் பிரதேச சபையினால் விசேட தேவையின் அடிப்படையில் இரத்துச்செய்யப்படும் சந்தர்ப்பத்தின் போது அனுமதி பெற்றநபருக்கு அல்லது நிறுவனத்திற்கு ஏற்பட்ட அல்லது ஏற்படும் இழப்புக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாக பிரதேச சபை பொறுப்பாளியாகமாட்டாது.

13. (i) இணைப்பு II குறிப்பிடப்பட்டுள்ள கட்டண முறைக்கு அமைய பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு விளையாட்டு மைதானங்களை ஒதுக்குவது தொடர்பான கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகையை விண்ணப்பதாரி செலுத்திய பின்னரே அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும். *அறவீடுகளும் கட்டணங்களும் (13-14).*

(ii) விளையாட்டு மைதானத்தினை பயன்படுத்திக்கொள்ள இடமளிப்பதாயின் சபையினால் அவ்வப்போது தீர்மானித்த கட்டணத்தையும் வைப்புப்பணத் தொகையையும் மூன்று நாட்களுக்குமுன் செலுத்துமாறு அறிவிப்பது பிரதேச சபைச் செயலாளருக்கு சட்டபூர்வமானதாகும்.

14. யாதாயினுமொரு பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை உரிய பணிக்குப் பயன்படுத்திய பின்னர்

(i) விளையாட்டு மைதானம் அல்லது அதன் ஒரு பகுதிக்கு அல்லது விளையாட்டு மைதானத்திலுள்ள பிரதேச சபையின் சொத்துக்களிற்கு யாதாயினும் நட்டங்கள் ஏற்பட்டிருப்பின் அந்த நட்டத்தின் பெறுமதி மற்றும்

(ii) விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட கால எல்லையிலும் பார்க்க மேலதிகமாக பயன்படுத்தப்பட்ட காலத்திற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணம் வைப்பிலிருந்து கழித்துக்கொண்ட மிகுதித் தொகையை விண்ணப்பதாரருக்கு மீளச்செலுத்த முடியும்.

15. இப்பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும். *தத்துவங்களை ஒப்படைத்தல்.*

16. (i) இந்த துணைவிதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எத்தனை நாட்களுக்கு அல்லது எத்தனை மணித்தியாலங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதோ அத்தகைய காலப் பகுதிகளுக்கே செல்லுபடியானதாகும். *உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.*

(ii) அனுமதிச்சீட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட யாதாயினுமொரு பணிக்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை அவ்வாறு ஒதுக்கிக்கொண்ட தினத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமாயின் விண்ணப்பதாரர் அது பற்றி எழுத்துமூலம் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பிக்க முடியும். மேற்படி கோரிக்கைக்கு அமைய ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்தை திருத்தியமைப்பதானது 9 ஆவது, 10 ஆவது துணை விதிகளின் நியதிகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

17. விளையாட்டு மைதானத்தை உரிய காலப்பகுதிக்குள் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. *பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (17-18).*

18. இப்பகுதியின் துணை நியதிகளின் கீழ் பாவனைக்காக அனுமதிச் சீட்டு பெற்றுள்ள விளையாட்டு மைதானமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது அனுமதிச் சீட்டு பெற்றவரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

19. அனுமதிப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும். *முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.*

20. இந்த துணைவிதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். *துணைவிதிகளை மீறுதல்.*

அபராதமும் தண்டனையும்.

21. (i) இப்பகுதியின் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளிற்கு முரண்படும் அல்லது மீறும் சந்தர்ப்பமொன்றில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வது சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

(ii) மைதானத்திற்கோ அல்லது மைதானத்தில் உள்ள உடமைகளுக்கோ ஏற்படும் சேதங்களுக்கான நட்டஈட்டானது அனுமதிச் சீட்டை பெற்றவரிடமிருந்து அறவிடுவது பிரதேச சபைக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.

22. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப்பொருள்படும்.

'பிரதேச சபை' என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'அனுமதிச் சீட்டை பெற்றவர்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் அனுமதிச் சீட்டை பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படும்.

'விளையாட்டு மைதானம்' என்பது விளையாடுவதற்காக பிரதேச சபையினால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள யாதாயினும் விளையாட்டு மைதானம் எனக் கருதப்படுவதுடன், விளையாட்டு மைதானத்தைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள மதில் அல்லது வேலி அல்லது அதனுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள யாதாயினுமொரு கட்டடம் அல்லது யாதாயினும் நிர்மாணிப்பின் ஒரு பகுதி அல்லது யாதாயினும் பொருத்தல் அல்லது உபகரணம் இதில் உள்ளடங்கும்.

'விளையாட்டு' என்பது, 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள்கோடல் என கருதப்படல் வேண்டும்.

**இணைப்பு - I**

**பிரதேச சபையின் விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

(01) விண்ணப்பதாரரின் பெயர் :-----.

முகவரி :-----.

தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

(02) விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துவதற்கான நோக்கம் :-----.

(03) தேவையான நாளும் நேரமும் :-----.

| திகதி முதல் | திகதி வரை | நேரம் |
|---|---|---|
| .................................... | .................................... | .................................... |
| .................................... | .................................... | .................................... |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதி செய்கின்றேன். இந்த விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொடுத்தால் மேற்படி விளையாட்டு மைதானத்தின் கட்டடங்களுக்கு, நிர்மாணிப்புகளுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் பொருத்தல்களுக்கு ஏதாவது இழப்புகள் ஏற்படும் பட்சத்தில் குறித்த இழப்புகளை எனது வைப்புத்தொகையிலிருந்து பிரதேச சபை அறவிட்டுக் கொள்வதற்கு இணங்குகின்றேன் என்பதுடன், மேற்படி வைப்புத் தொகை உரிய அறவீட்டுக்குப் போதியதாக இல்லாத பட்சத்தில் மேலதிமாகத் தேவைப்படுகின்ற தொகைகளை பிரதேச சபைக்குச் செலுத்தவும் இணங்குகின்றேன். மேலும் விளையாட்டு மைதானங்களை முறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் கண்காணிப்புச் செய்வது தொடர்பான துணைவிதிகளின் ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கும் இணங்குகின்றேன்.

-------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி ....................

**இணைப்பு II**

**இப்பகுதியின் 13 ஆம் துணைவிதியின் பிரகாரம் விளையாட்டு மைதானமொன்றைப் பயன்படுத்துவதற்கு இடமளிப்பதற்காக அறவிடப்படுகின்ற கட்டணமுறை**

| இல. | விளையாட்டு மைதானத்தின் பெயர் | கட்டணம் | வைப்புத்தொகை | மேலதிகமான ஒரு மணித்தியாலத்திற்கான கட்டணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| 01. | | . . . . . . . . | . . . . . . . | . . . . . . . . . . . |
| 02. | | . . . . . . . . | . . . . . . . | . . . . . . . . . . . |
| 03. | | . . . . . . . . | . . . . . . . | . . . . . . . . . . . |
| 04. | | . . . . . . . . | . . . . . . . | . . . . . . . . . . . |

**பகுதி II - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பொது வீதிகளுக்கு சேதங்களை ஏற்படுத்தலை மற்றும் அவ்வீதிகளில் போக்குவரத்துக்குத் தடைகளை ஏற்படுத்துவதைத் தவிர்த்தல், முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்.**

*துணைவிதியின் பெயர்.*

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பொது வீதிகளுக்கு சேதங்களை ஏற்படுத்தலை மற்றும் அவ்வீதிகளில் போக்குவரத்துக்குத் தடைகளை ஏற்படுத்துவதைத் தவிர்த்தல், முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

*நோக்கம்.*

2. பிரதேச சபைக்கு உரித்தான பொது வீதிகளுக்கு சேதங்களை ஏற்படுத்துவதை தவிர்த்தல் கண்காணிப்புச் செய்தல் மற்றும் வீதிகளில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்துவதைத் தடுத்தல் ஆகிய நோக்கத்துடன் இத் துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*துணைவிதியை உருவாக்கு வதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள்சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (vii) (இ) மற்றும் (உ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்த துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*நிறைவேற்ற வேண்டிய பணிகள்.*

4. (i) பிரதேச சபைக்கு உரித்தான யாதாயினும் பொது வீதிகளுடன் தொடர்புடைய பொதுவடிகான்கள் ஊடாக எந்தவொரு காணிக்கும் நுழைவதற்கு அவசியமான நீளத்தைக் கொண்ட பாலம், மேடை அல்லது வில்வளைவொன்றை பிரதேச சபையின் அனுமதியுடன் நிர்மாணிப்பது மேற்படி காணியின் உரிமையாளர் அல்லது வசிப்பாளரின் பணியாதல் வேண்டும்.

(ii) மரங்கள், கற்கள், மணல் அல்லது மண் போன்றவற்றை வாகனத்தில் எற்றுச் செல்லும் போது பிரதேச சபை வீதிகளைப் பயன்படுத்துவதாயின் அவ்வீதிகளுக்கு ஏற்படும் நட்டங்களை அல்லது சேதங்களை ஈடுசெய்வதற்கான வெவ்வேறு வகையான வாகனங்களுக்கு காலத்திற்கு காலம் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசரிக்கப்படுகின்ற வெவ்வேறுபட்ட கட்டணங்களை செலுத்தி முறையான அனுமதிப்பத்திரத்தை பொருட்களை வாகனத்தில் கொண்டு செல்லுபவர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

*நிறைவேற்றக் கூடாத பணிகள் (5-18).*

5. யாராயினும் ஆளொருவர் பிரதேச சபைக்கு உரித்தான ஏதேனுமொரு வீதிக்குச் சேதங்களை விளை வித்தலாகாது என்பதுடன் வீதியில் அல்லது நடைபாதையில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகாது.

(i) வியாபாரம் செய்தல்.
(ii) அகற்றிச்செல்வதற்காக இயங்கச் செய்ய முடியாத அல்லது வேறு அனர்த்தங்கள் காரணமாக வேறு இடத்திற்கு ஓட்டிச் செல்ல முடியாத ஏதேனும் காரணங்களினாலன்றி வீதியின் ஒதுக்கப்படாத இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைத்தல்.
(iii) வாகனங்களைப் பழுதுபார்த்தல் அல்லது வாகனங்களைக் கழுவுதல்.
(iv) சேதமடைந்த வாகனங்களின் பாகங்களை வைத்திருத்தல்.
(v) யாதாயினுமொரு வீதியில் மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் புதுப்பித்தலுக்கு பிரதேச சபை யின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் தவிர கற்கள், மணல், பீப்பாக்கள், மண், செங்கற்கள் அல்லது பலகைகளை இறக்குதல் அல்லது வைத்திருத்தல்.

6. யாதாயினுமொரு வீதியின் ஊடாக காணப்படுகின்ற வடிகாலொன்றை நிரப்புதல் அல்லது அதற்கு சேதமேற்படுத்தல் அல்லது யாதாயினுமொரு வடிகான் ஊடாக வழிந்தோடும் நீர் இலகுவாக வடிந்தோடுவதில் தடைகளை ஏற்படுத்துவதை எவரும் செய்தலாகாது.

7. வீடமைப்பு, பிரதேச அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஐம்பது அடிகளுக்கு மேற்பட்ட அகலத்தைக் கொண்டுள்ள (15.24 மீற்றர்) வீதிகளுக்கு தெரு எல்லைகள் நிர்ணயிக்கப்படாதுள்ள யாதாயினுமொரு வீதியின் நடுக்கோட்டிலிருந்து இருபத்தைந்து அடிகளுக்குள் (7.62 மீற்றர்) எந்த வகையிலுமான நிர்மாணிப்புகளையும் எவரும் மேற்கொள்ளலாகாது என்பதுடன் வேறு ஏதேனுமொரு நிர்மாணிப்புக்காக கொண்டுவரப்பட்டுள்ள யாதாயினுமொரு நிர்மாணிப்புப் பொருட்களை எந்தவொரு வீதியிலோஅல்லது அதன் பகுதிகளிலோ வைத்திருத்தல் ஆகாது.

*8. இப் பகுதியின் 19 ஆம் துணைவிதியின் கீழ் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் விடுக்கப்பட்டுள்ள கட்டளைக்கு முரணாக செயற்படுதலாகாது அல்லது அவ்வாறான யாதாயினுமொரு கட்டளைக்கு அமைய செயற்படுகின்ற ஆளொருவருக்கு தடை ஏற்படுத்தலாகாது அல்லது அவ்வாறு தடை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக செயற்படலாகாது.*

*9. பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வெளியிடப்பட்டுள்ள எழுத்து மூலமான அங்கீகாரம் இருந்தாலன்றி ஆளெவரும் பிரதேச சபைக்கு உரித்தான எந்தவொரு வீதியிலும் தேங்கிக் கிடக்கின்ற கற்கள், பீப்பாக்கள், மணல், மண் அல்லது வேறு யாதாயினுமொரு பொருளை சேகரித்தல் அல்லது ஒன்று குவித்தல் அல்லது வெளியே எடுத்துச் செல்லலாகாது.*

*10. காணியின் அல்லது காணியிலுள்ள கட்டிடத்தின் மழைநீர் அல்லது கிணறு சுத்திகரிப்பின்போது வெளியேற்றப்படுகின்ற நீர் தவிர்ந்த ஏனைய நீரினை கழிவுநீரை உறிஞ்சிக் கொள்ளும் குழியொன்றுக்கு வடிந்தோடச் செய்தல் வேண்டும் என்பதுடன் பிரதேச சபைக்கு உரித்தான வீதியொன்றிற்கு அல்லது வீதியூடாக செல்லும் வடிகாலொன்றுக்கு வழிந்தோடச் செய்தலாகாது*

*11. யாதாயினுமொரு வாகனத்தில் பொருட்கள், தூசு, மணல் என்பன கொண்டு செல்லும் போது சிறு துண்டுகளாக பறந்து செல்வதைத் தடுக்கின்ற மேற்புற மூடியொன்று அல்லது மறைப்பொன்று இருந்தாலன்றி ஆளெவரும் அவ்வாறான எந்தவொரு பொருளையும் பிரதேச சபைக்கு உரித்தான வீதியொன்றில் கொண்டு செல்லலாகாது.*

*12. எவரொருவராலும் ஏதாவது பாதைக்குச் சொந்தமான ஏதாவது மைல்கல், தூண், எல்லைக்கல், எல்லைத்தூண், மின்கம்பம், குறிகாட்டித்தூண், பாலம், போக்கு, படலை, மறைப்பு, திடல், கான், பாதுபாப்புச்சுவர், எடுத்துக்காட்டி, சங்கிலிவேலி, பெயர்ப்பலகை, சமிக்ஞைப்பலகை என்பவற்றை அழித்தல், கழற்றிப் போடுதல் அல்லது அலங்கோலமாக்குதல், மறுபக்கம்புரட்டி விடுதல் அல்லது அவற்றுக்கு இடையூறு ஏற்படுத்தல் அல்லது அவற்றின்மீது ஏதாவது சுவரொட்டி அறிவித்தல் (போஸ்டர் )அல்லது கையெழுத்துப்பிரதியை ஒட்டுதல் கூடாது.*

*13. ஏதாவது வீதியினைப் பாவிப்பதைத் தற்காலிகமாகத் தடுப்பதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு எவராவது அதிகாரம் பெற்ற ஒருவரின் பணிப்பின் பிரகாரம் அங்கு போடப்பட்டுள்ள அல்லது கட்டப்பட்டுள்ள ஏதாவது வேலி, தூண், கற்பலகைகள் அல்லது வேறு தடைகளை எவரொருவரும் அகற்றுதல் கூடாது.*

*14. ஏதாவது வாகனம் அல்லது வண்டில், அவ் வாகனத்தின் அல்லது வண்டிலின் சில்லுகளுக்கு பக்கவாட்டாக மரம், பலகைகள், இரும்பு அல்லது வேறு பொருட்கள் அவற்றின் பக்கங்களுக்கு அப்பால் நீண்டிருக்கும் வகையில் அவ் வாகனங்களை அல்லது வண்டிலை செலுத்துதலோ அன்றி தரித்து வைத்திருத்தலோ கூடாது.*

*15. வாகனம் அல்லது வண்டிலொன்றில் மரம் அல்லது வேறு பொருட்களை வீதியில் இழுத்துச் செல்லுதல் அல்லது அவற்றை வீதியில் இழுபடவிடுதல் கூடாது.*

*16. ஏதேனும் வீதியின் மேற்புறத்தில் அல்லது அதன் குறுக்கே ஓர் அணையை அல்லது குழியை அல்லது வடிகாலை அல்லது வாய்க்காலை அமைத்தலோ அல்லது வீதியை ஊடறுத்து நீர்க்குழாய் அமைத்தலோ அமைக்க முயற்சித்தலோ கூடாதென்பதுடன் ஏதேனும் வேறு முறையில் வீதியின் மேற்புறத்தை உடைத்தல் அல்லது சேதப்படுத்தல் கூடாது.*

*17. வாகனப் போக்குவரத்திற்கான எடையை பிரதேச சபை தீர்மானிக்காதவிடத்து கொங்கிறீற் செய்யப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட கற்கள் பதிக்கப்பட்ட வீதிகளில் ஐந்து (05) தொன்களுக்கு மேலான எடையுள்ள வாகனப் போக்குவரத்து மேற்கொள்ளப்படலாகாது.*

*18. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் பிரதேச சபை வீதியை பயன்படுத்துவதற்கான அனுமதியேயன்றி குறித்த பொருட்களை ஏற்றிச்செல்லுவதற்கான அனுமதிப்பத்திரமாக கருதப்படலாகாது.*

பிரதேச சபையின் செயற்பணி.

19. பிரதேச சபைக்கு உரித்தான யாதாயினுமொரு வீதியை பராமரித்தல் அல்லது புதுப்பிப்பதற்குத் தேவையான பணிக்காக –

(i) மேற்படி வீதியை முற்றாக அல்லது வீதியின் ஒரு பகுதியை அல்லது வீதியில் யாதாயினுமொரு திசையை நோக்கிப் பயணிக்கின்ற ஏதேனும் பாதைவழியை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வாகனப் போக்குவரத்திற்காக மூடிவிடுவதற்கு

(ii) யாதாயினுமொரு நிர்மாணிப்பு பொருளை அல்லது பொருட்களை மேற்படி வீதியின் ஒரு பகுதியில் சேகரித்து வைப்பதற்கு

(iii) வீதிக்கு அருகே உள்ள காணியொன்றினுள் நுழைவதற்கு அல்லது நிர்மாணிப்புப் பொருட்களை குறித்த காணியில் வைத்திருப்பதற்கு (காணி உரிமையாளருக்கு மேற்படி நடவடிக்கை தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டு இயலுமானவரை அவரது ஒத்திசைவை பெற்றுக்கொள்ளல் வேண்டும்)

(iv) மேற்படி வீதிக்கு அருகே உள்ள காணியின் யாதாயினும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படாதவாறு குறித்த காணி ஊடாக வாகனப் போக்குவரத்திற்கு இடமளிப்பதற்கு குறித்த காணி உரிமையாளரின் அனுமதியுடன் (காணி உரிமையாளருக்கு மேற்படி நடவடிக்கை தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டு இயலுமானவரை அவரது ஒத்திசைவை பெற்றுக்கொள்ளல் வேண்டும்)

பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவமுண்டு.

அறவீடுகளும் கட்டணங்களும்.

20. இப்பகுதியின் 4 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பொருட்களை ஏற்றிச்செல்வதற்காக பிரதேச சபை வீதிகளைப் பயன்படுத்துவதன் பொருட்டு காலத்திற்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்படும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு பிரதேச சபைக் சட்டத்தின் 70 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்கு உரிமையுண்டு. இப்பிரிவின் கீழ் ஏதேனும் வாகனம் ஒன்றிற்கு மேற்பட்ட உள்ளூராட்சிமன்ற எல்லைக்குள் பயன்படுத்தப்படுகின்றவிடத்து பிரதானமாக பயன்படுத்துகின்ற ஒரு உள்ளூராட்சி மன்றத்திற்கு மட்டுமே அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

21. இப்பகுதியின் துணைவிதிகளின் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கோ கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக்காலம்.

22. இப் பகுதிகளின் துணைவிதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல அனுமதிப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி அனுமதிப்பத்திரம் எந்த நாளுக்கு வழங்கப்பட்டதோ அந்த நாளில் மட்டும் செல்லுபயாகும். மேலும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட தடவைகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

23. அனுமதிப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவர் எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

துணைவிதிகளை மீறுதல்(24-25).

24. இந்த துணைவிதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

25. இப் பகுதியின் 7ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளை மீறி யாராவது ஆளொருவர் பிரதேச சபைக்கு உரித்தான யாதாயினுமொரு வீதியில் அல்லது அதன் பகுதியில் ஏதேனும் நிர்மாணிப்புப் பொருளொன்றை வைத்துள்ள சந்தர்ப்பமொன்றில் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் மேற்படி நிர்மாணிப்புப் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுவது அல்லது பிரதேச சபைக்கு உடைமையாக்கிக் கொள்ள செயற்படுவது சட்டபூர்வமானதாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பட்டமை காரணமாக குறித்த நிர்மாணிப்புப் பொருட்களை வீதியில் வைத்திருந்த அல்லது வைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ள ஆளுக்கு ஏற்படுகின்ற ஏதேனும் நட்டம் அல்லது இழப்பு அல்லது சேதம் தொடர்பாக குறித்த பொருட்களை அகற்றுவதற்குச் செயற்பட்ட அலுவலர் அல்லது பிரதேச சபை

பொறுப்புக்கூறக் கட்டுப்படுவதில்லை. மேலும் தொடர்ந்தும் அவ்வாறு அகற்றப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு நட்ட ஈட்டையும் செலுத்துவதற்கு பிரதேச சபை அல்லது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் உட்பட வேண்டியதில்லை.

அபராதமும் தண்டணையும்.

26. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம்ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமெருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள் கோடலும் வரைவிலக்கணமும்

27. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து-

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படுவார்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

'பிரதேச சபை' என்பது பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'பொது வீதி' என்பது பிரதேச சபைக்குள் உள்ள யாதாயினுமொரு வீதி, பொதுவழி, பெருந்தெரு, ஒழுங்கை, தெரு, ஒடுக்கப்பாதை, படிக்கட்டு, பாலம், நடைப்பாலம் கருதப்படுவதுடன், பிரதேச சபைக்குள் யாதாயினுமொரு வீதி, பொதுவழி, பெருந்தெரு, ஒழுங்கை, தெரு, ஒடுக்கப்பாதை, படிக்கட்டுக்கு தொடர்பாக பொருத்தப்பட்டுள்ள அல்லது நாட்டப்பட்டுள்ள யாதாயினும் தூரத்தை காட்டும் அடையாளம், எல்லைக்கல், எல்லைத்தூண், தெருவிளக்குத்தூண், பாலம் அல்லது எந்தவொரு வகையிலுமான மதகு, நீர்க்கடவை, மதில், மேல்வளைவு, அணைக்கட்டு, வடிகால், வாய்மடை, உதவிச்சுவர், கைத்தாங்கி, சங்கிலிவேலி, சமிக்ஞைப்பலகை, வீதிப்பெயர்ப்பலகை அல்லது வீதிக்கு அருகே உள்ள நடை பாதையும் இதில் உள்ளடங்கும்.

'வாகனம்' என்பது மோட்டார் போக்குவரத்து கட்டளைச் சட்டத்தின் கீழ் அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள்கோடல் எனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் மாட்டுவண்டி, மிதிவண்டி அல்லது சக்கரம் பொருத்தப்பட்ட கைவண்டி அல்லது இயந்திரம் பொருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்துக்குள் வராத வேறு வகையில் செயற்படுகின்ற வண்டிகள் எனக் கருதப்படும்.

'சேதம் ஏற்படுத்தல்' என்பது அழித்தல், நீக்குதல், திரிபுபடுத்தல், மறுபுறம் கவிழ்த்தல், அகற்றல், வேறு ஏதேனுமொரு வகையில் சேதப்படுத்தல், ஒரு பகுதியின் மீது சுவரொட்டி அல்லது துண்டுப் பிரசுரம் ஒட்டுதல் அல்லது பூச்சு அல்லது வேறு வகையான பூச்சுக்கள் அல்லது தார் பூசுதல் எனக் கருதப்படுவதுடன் ஏதேனுமொரு பெயர்ப் பலகையின் எழுத்துக்களை திருத்தியமைத்தல், அழித்தல், சுரண்டல் அல்லது நீக்குதலும் இதில் உள்ளடங்கவேண்டும். ஆயினும் பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலரினால் ஒரு வீதியை புதுப்பிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஏதும் பணி இதில் உள்ளடங்கலாகாது.

## பகுதி III - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சலவைச்சாலைகளை (லோண்டரி) நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பான துணைவிதிகள்

துணைவிதியின் பெயர்.

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற சலவைச்சாலைகளை (லோண்டரி) முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல், கண்காணிப்புச் செய்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

நோக்கம்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

துணைவிதியை உருவாக்கு வதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix) (த) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்த துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்ற வேண்டிய பணிகள்(4-5).

4. இணைப்பு 01 இலுள்ள விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் வருடாந்த உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியும், பொறுப்புமாகும்.

5. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு சலவைச்சாலைக்கும் உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை தூய்மையாகவும் புதுப்பித்த நிலையிலும் பேணிவருதல் வேண்டும்.

(ii) இடத்திலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்பதுடன் மேற்படி சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இருபுறமும் சாந்து பூசப்பட்டு தீந்தை தீட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்.

(iv) இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி சீலிங் நிலமட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு அறைக்கும், வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்களைத் திறந்தவுடன், அவ் சாளரக் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப்பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை.

(vi) அழுக்குத்துணிகள் மற்றும் கழுவப்பட்ட துணிகளுக்கான தனித்தனி அறைகள் இருத்தல் வேண்டும்.

(vii) பணியாளர்களின் உபயோகத்திற்காக ஆகக் குறைந்தது ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒன்று என்ற வகையில் ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாருக்கும் தனித்தனியே மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) பிரதேச சபையினால் கழிவுநீர் வடிகாலமைப்பு பேணிவரப்படுவதாயின் உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை பிரதேச சபையின் அறிவுறுத்தலுக்கமைய கழிவுநீர் வடிகாலமைப்புக்கு வழிந்தோடச் செய்ய முடியும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் மேற்படி கழிவுநீரை, நீர் உறிஞ்சிக்கொள்ளும் குழியொன்றுக்கு வடிந்தோடச் செய்தல் வேண்டும். இல்லையேல் சுத்திகரிப்புச் செய்து பொது நீர்வடிகாலொன்றுக்கு விடுவித்தல் வேண்டும். மேற்படி நீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்காத வகையில் மூடிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கிணற்றிலிருந்து பதினைந்து மீற்றர் தூரத்திற்குக் குறையாத தூரத்தில் இது அமைந்திருத்தல் வேண்டும்.

(ix) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சாதாரண தீயணைப்பு உபகரணங்கள் இயங்குநிலையில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த இடத்திற்கு மின்னிணைப்பு இருப்பின் மேலதிகமாக மின்சாரத் தீயணைப்பு உபகரணங்களும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள சகல ஊழியர்களும் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துதல் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

*நிறைவேற்றக் கூடாத பணிகள் (6-8)*

6. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உரிய தொழிலுக்காக வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரம் இருந்தாலன்றி யாராயினும் ஆளொருவரினால் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சலவைச்சாலையொன்றை நடாத்திச் செல்லலாகாது.

7. (i) சலவைச்சாலையொன்றினை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வீட்டுப் பணிகளுக்காக பயன்படுத்தலாகாது.

(ii) சலவைச்சாலையொன்றில் எந்தவொரு விலங்கையும் வைத்திருத்தல் அல்லது அவ்வாறு வைத்திருப்பதற்கு இடமளித்தலாகாது.

(iii) அழுக்குத் துணிகள் மற்றும் கழுவப்பட்ட துணிகளை ஒன்றாக வைத்திருத்தல் அல்லது அவ்வாறு வைத்திருப்பதற்கு இடமளித்தலாகாது.

(iv) துணிகளைக் கழுவும் செயற்பாட்டுக்காக அனுமதிக்கப்படாத இரசாயனப் பதார்த்தங்களையோ அல்லது ஒவ்வாமையை ஏற்படுத்தும் பொருட்களையோ பயன்படுத்தல் கூடாது.

(v) துணிகளை அழுத்தும் பணிக்காக (Ironing) சிரட்டைக்கரி அல்லது ஏதாவது பொருத்தமான கரிவகைகள் பயன்படுத்தப்படுமாயின் அவற்றிலிருந்து அகற்றப்படுகின்ற எச்சப்பகுதிகளை நீர் இட்டு அணைத்த பின்னர் தனியானதொரு தொட்டியில் இடுவதற்கு வசதி செய்தல் வேண்டும் என்பதுடன் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திற்குள் கரித்துண்டுகளை உற்பத்தி செய்வதற்காக தேங்காய் சிரட்டைகள் அல்லது வேறு பொருட்களை எரித்தல் கூடாது.

(vi) பிரதேச சபையால் அனுமதிக்கப்படாத அல்லது பிரதேச சபையால் ஒதுக்கப்படாத எந்தவொரு இடத்திலும் உரிமப்பத்திரம் பெற்றிருப்பவர் கழுவுதல், உலர்த்துதல் ஆகாது.

(vii) எல்லா சலவைச் சாலையாளரும் அன்றைய தினம் வேலை முடிந்ததும் சலவைச் சாலையிலிருந்து வெளியேற முன்பு அவரால் பாவிக்கப்பட்ட நெருப்பு அல்லது வெளிச்சம் என்பவற்றை அணைத்து விடவோ அல்லது அவற்றை அணைத்துவிட ஏற்பாடு செய்யப்படவேண்டுவதுடன் ஏதாவது கட்டடத்தின் அல்லது அங்குள்ள துணிகளின் பாதுகாப்பிற்கு அபாயம் விளைவிக்கக்கூடிய வெளிச்சத்தையோ, நெருப்பையோ எந்த நேரத்திலும் ஏற்றுவதற்கோ அல்லது ஏற்றி வைப்பதற்கோ இடமளிக்கக்கூடாது.

8. (i) ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி

முடிந்தாலன்றி, மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தலோ ஆகாது.

(ii) நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப் பத்திரத்திற்குரிய இடத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

*பிரதேச சபையின் செயற்பணி.*

9. இத் துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள சலவைச்சாலையொன்றை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

*அறவீடுகளும் கட்டணங்களும்.*

10. யாதாயினுமொரு சலவைச்சாலையை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 பிரிவுக்கு அமைவாக உச்சக் கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப் பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச சபையின் செயலாளருக்குத் தத்துவமுண்டு.

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

11. இப்பகுதியின் துணைவிதியில் பிரதேச சபையின் தவிசாளருக்கு சட்டபூர்வமானதாகும் அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தர வுப் பத்திரத்தின் செல்லுபடிக்காலம்.*

12. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும் தத்துவமும் (13-15).*

13. (i) இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

(ii) இத்துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவி களை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

14. இப் பகுதியின் 9 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

15. இப்பகுதியின் 14ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அதில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு.

*முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்*

16. உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

17. இப் பகுதியில் துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறொன்றாகும். துணைவிதிகளை மீறுதல்

18. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும். அபராதமும் தண்டனையும்

19. இந்த துணைவிதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து, பொருள் கோடலும் வரைவிலக்கணமும்

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

'பிரதேச சபை' என்பது பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்' என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

'உரிமப்பத்திரதாரர்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

'உரிமப்பத்திரம் பெற்ற இடம்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

'சலவைச்சாலை' என்பது, துணிகளை கழுவும் தொழிலொன்றை மேற்கொள்ளும் ஒருவர் துணிகளை கழுவுதல், உலர்த்துதல் மூலம் சுத்தம் செய்தல் அல்லது அழுத்தம் செய்தல் ஆகிய யாதாயினுமொரு பணியை அல்லது பல பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனுமொரு வகையிலான கட்டடம் அல்லது யாதாயினுமொரு காணி அல்லது இடம் அல்லது வளவு எனக் கருதப்படுவதுடன் அவ்வாறான யாதாயினும் துணிகளை களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்ற ஏதேனுமொரு கட்டடமும் அவ்வாறான ஆளொருவரினால் அல்லது அவரின் தொழில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற யாதாயினுமொரு கிணறு, தாங்கி அல்லது நீர் பெற்றுக் கொள்ளப்படுகின்ற வேறு மூலங்களும் இதில் உள்ளடங்கும்.

**இணைப்பு - 01**

**பிரதேச சபை**

**சலவைச்சாலையை நடாத்துவதற்கு வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20.....**
**(துணிகளை கழுவுதல்,அழுத்தம்செய்தல்/அழுத்தம் செய்தலுடன் துணிகளை கழுவுதல், உலர்த்துதல் மூலம் சுத்தம் செய்தல்)**

1. தொழில் நிலையத்தின் பெயர் :-----.
2. (i) தொழில் நிலையம் அமைந்துள்ள இடம் : வட்டாரம்: -----. ஆதன இல. :-----.
   (ii) வீதியின் பெயர் :-----.
   (iii) கிராம அலுவலர் பிரிவு இல. :-----. பிரிவின் பெயர் :-----.

3. (i) விண்ணப்பதாரியின் பெயர் :-----.
   (ii) முழுப்பெயர் :-----.
   (iii) நிரந்தர முகவரி :-----.
   (iv) கிராம அலுவலர் பிரிவு :-----.
   (v) அடையாள அட்டை இல. :-----.
   (vi) தொலைபேசி இல. :-----.
   (vii) மின்னஞ்சல் முகவரி :-----.

4. (i) தொழில் ஆரம்பிக்கப்பட்ட திகதி :-----.
   (ii) தொழிலின் தன்மை (துணிகளை கழுவுதல், அழுத்தம் செய்தல்/ அழுத்தம் செய்தலுடன் துணிகளை கழுவுதல், உலர்த்துதல் மூலம் சுத்தம் செய்தல்) :-----.
   (iii) தொழில் நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்
      (அ) பெயர் :-----.
      (ஆ) தொலைபேசி இல. :-----.
   (iv) முன்னைய தொழில்:-----.

5. (i) தொழில் நிலையத்தில் அழுக்குத் துணிகளை கழுவுமிடம் அமைந்துள்ளதா அல்லது தனியாக வேறிடத்தில் அமைந்துள்ளதா? :-----.
   (ii) கழுவும் நிலையம் அமைந்திருப்பின் துணைவிதியில் வேண்டப்பட்டவாறு கழிவுநீர் வடிகாலமைப்பு செய்யப்பட்டதா?:-----.
   (iii) வேறான இடத்தில் அழுக்கு துணிகளை கழுவுமிடம் அமைந்திருப்பின் அவ்விடம் பிரதேச சபையால் அனுமதிக்கப்பட்டுள்ளதா?:-----.

6. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்
   (i) உரிமையாளரின் பெயர் :-----.
   (ii) முகவரி :-----.

7. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா : ஆம் :-----. இல்லை :-----.
   ஆம் எனில் உரிம இல. :-----. திகதி :-----.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20.................. ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :-----.

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

-----,
தவிசாளர்/செயலாளர்/
அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம் :-----. ஆதன இல. :-----.

வீதியின் பெயர்:-----.

உரிமையாளரின் பெயர் :-----.

ஆதன விபரம் :-----.

ஆண்டுப் பெறுமதி :----. வீதவரி நிலுவை :----.

உண்டு :----. இல்லை :----.

------,
நிர்வாக உத்தியோகத்தர்/
பகுதித் தவிசாளர்.

திகதி :-----.

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:-----.

செலுத்த வேண்டிய கட்டணம் :-----.

பிரிவு A B C :-----.

குறிப்பு :-----.

------,
வருமானப் பரிசோதகர்.

திகதி :-----.

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

பொதுச்சுகாதார பரிசோதகரின் அறிக்கை

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

------,
பொதுச் சுகாதார பரிசோதகர்.

திகதி :-----.

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

------,
சுகாதார வைத்திய அதிகாரி.

திகதி :-----.

---

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :-----. உபயோகம் மற்றும் :-----. சுற்றுச்சூழல் உரிமம் :-----.

சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :-----.

குடிபுகு சான்றிதழ் :-----. மதுவரி உரிமம் :-----.

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

------,
பிரதம வருமானப் பரிசோதகர்.

திகதி :-----.

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

------,
செயலாளர்.

திகதி :-----.

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை

------,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-----.

**நானாவித இறைவரிப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. :-----.    பற்றுச்சீட்டு திகதி :-----.

உரிம இல. :-----.    உரிமத் திகதி :-----.

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

------,
இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

திகதி :-----.

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

------,
செயலாளர்.

திகதி :-----.

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

------,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-----.

**அத்தியாயம் - 4**

**பகுதி I - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்**

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என இவை அழைக்கப்படலாம். *துணைவிதியின் பெயர்.*

2. பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் காட்சிப்படுத்தப்படுகின்ற சகல விளம்பர அறிவித்தல்களை பிரதேச சபை எல்லைக்குள் பொதுமக்களின் பாதுகாப்பையும் வசதிகளையும் சௌகரியங்களையும் உறுதி செய்வதற்கேற்றவாறு கட்டுப்படுத்தலும் நிர்வகித்தலும் இதன் நோக்கமாகும். *நோக்கம்.*

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 126 உபபிரிவின் (vii) (ஊ) மற்றும் (xxx) கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்த துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

*நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4 - 12).*

*4.* (i) *யாதாயினுமொரு விளம்பர அறிவித்தலை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் காட்சிப்படுத்துவதற்காக உரிமப் பத்திரம் பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற ஒவ்வொரு ஆளும், ஆகக் குறைந்தது மேற்படி விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்த உத்தேசித்துள்ள திகதிக்கு நான்கு நாட்களுக்கு முன்னர் இதன் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பிரதேச சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.*

(ii) *இத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டும் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்கு உரிமப்பத்திரம் வழங்கப்படும்.*

5. (i) *உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துடனும் மி.மீ. 210 × 297 அளவான கடதாசியில் 1:1000 எனும் அளவுத்திட்டத்திற்கு அமையத் தயார் செய்யப்பட்ட மாதிரி விளம்பர அறிவித்தலின் பிரதி மற்றும் விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்த உத்தேசித்துள்ள இடம் அல்லது இடங்களின் மி.மீ. 210 × 297 அளவான கடதாசியில் 1:1000 எனும் அளவுத்திட்டத்திற்கு அமையத் தயார் செய்யப்பட்ட நிலவரைபடம் அல்லது வரைபடத்தை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், விளம்பர அறிவித்தலின் துல்லியமான நீளம் மற்றும் அகலம் என்பன அதில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

(ii) *விண்ணப்பதாரர் அல்லாத வேறு ஆளொருவருக்கு அல்லது ஏதும் அமைப்புக்கு உரித்தான இடமாக உள்ள சந்தர்ப்பத்தில் அவ் ஆள் அல்லது குறித்த அமைப்பினால் மேற்படி விளம்பர அறிவித்தலை குறித்த இடத்தில் காட்சிப்படுத்த அங்கீகாரம் வழங்கியிருப்பதை உறுதி செய்கின்ற எழுத்து மூலமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*6. காட்சிப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு அறிவித்தலுக்குமென வெளியிடப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தின் இலக்கத்தை அவ்வறிவித்தல் அல்லது அறிவித்தலைக் காட்சிப்படுத்தும் போது ஒவ்வொரு அறிவித்தலினதும் வலது பக்க கீழ் மூலையில் குறிப்பிடுதல் உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.*

*7. இந்தத் துணை விதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்ள சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவது பூர்த்தியடைகின்ற நாளிலிருந்து நாற்பத்தியெட்டு மணித்திலாயங்களிற்குள் குறித்த விளம்பர அறிவித்தல் மற்றும் அதற்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள வேறு பொருட்களின் பகுதிகளை அவ்விடத்திலிருந்து அல்லது இடங்களிலிருந்து அகற்றிக் கொள்ள செயற்படுவது குறித்த உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.*

*8.* (i) *தேறிய தொகை புண்ணிய கருமங்களுக்காக பயன்படுத்தப்படும் ஏதாவது நிகழ்ச்சிக்கான விளம்பர அறிவித்தல்கள், ஏதாவது நிகழ்ச்சி நடத்தப்படும் இடத்தில் அந் நிகழ்ச்சிக்கு தொடர்புடையவற்றை காட்சிப்படுத்தும் விளம்பரங்கள், அரசினால் அல்லது மாகாணசபையால் அல்லது உள்ளூராட்சி மன்றத்தால் வெளிப்படுத்தும் விளம்பரங்கள், மதரீதியான, அரசியல் அல்லது நேரடியாக அல்லது மறைமுகமான வர்த்தக விளம்பரமற்ற பொதுமக்கள் கூட்டம் சம்பந்தமான விளம்பர அறிவித்தல்கள் என்பவற்றுக்கான கட்டணத்தை விலக்களிக்கலாம். ஆயினும் உரிய அனுமதிப்பத்திரத்தை இத் துணைவிதிகளின்படி பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலும் பளபளக்கும் ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை அல்லது விமானப் பெயர்ப்பலகை என்பனவற்றுடன் இத் துணைவிதியின்படி கட்டணம் செலுத்தி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

(ii) *ஏதேனும் தொழில் நிலையத்தின் பெயர், இலக்கம் மற்றும் முகவரியுடன் வேறு ஏதேனும் வர்த்தகப் பண்டத்தின் அல்லது சேவையின் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும், ஏதேனும் வீட்டின், ஏதேனும் விதத்திலான வர்த்தகப் பண்டத்தின் அல்லது சேவையின் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும், அவ் விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல்கள் இப்பகுதிக்கான துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்படல் வேண்டும். இந்த துணைவிதியின் ஏற்பாடுகள் சம்பந்தமாக*

அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய ஆளாக அத்தகைய தொழில் நிலையத்தின் அல்லது வீட்டின் உரிமையாளர், முகாமையாளர் அல்லது அவ்வேளையில் அதன் நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆள் கருதப்படல் வேண்டும்.

(iii) பிரதேச சபை அதிகார எல்லைப் பரப்பினுள் பேணிவரப்படுகின்ற யாதாயினுமொரு தொழில் நிலையம் அல்லது கைத்தொழில்சாலையின் பெயர், முகவரி மற்றும் மேற்படி தொழில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொழிலின் தன்மை அல்லது கைத்தொழில்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளின் தன்மையை வெளிப்படுத்துகின்ற அறிவித்தல் பலகை ஒன்று மாத்திரம் மேற்படி தொழில் நிலையத்தில் அல்லது கைத்தொழில்சாலையின் முன்புறம் காட்சிப்படுத்தப்படல், வீட்டுப் பெயர்ப் பலகை மற்றும் யாதாயினுமொரு சொத்தை குத்தகைக்கு வழங்க அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது வாடகைக்கு விடுவதற்காக குறித்த சொத்தின் மீது காட்சிப்படுத்தப்படுகின்ற 'குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது' அல்லது 'விற்பனைக்கு உள்ளது' அல்லது 'வாடகைக்கு விடப்படவுள்ளது' எனக் குறிப்பிடப்படுகின்ற ஒரு விளம்பர அறிவித்தலுக்கு மாத்திரம் விதிப்பனவுகள் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும். ஆயினும் இந்த துணைவிதியிலுள்ள ஏனைய நியதிகள் ஏற்புடையதாகும். எவ்வாறாயினும், அவ்வகையிலான அறிவித்தல் பலகைகள் ஒன்றுக்கு மேற்பட்ட அளவில் காட்சிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவ்வாறு அதிகரிக்கின்ற ஒவ்வொரு விளம்பர அறிவித்தல் பலகைக்கும் இந்தப் பகுதியின் துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

9. விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் ஏதேனும் விளம்பர பலகையின் சொந்தக்காரர் அல்லது குத்தகை பெறுநர்

(i) அத்தகைய விளம்பர பலகையை நன்கு புதுப்பிக்கப்பட்ட நிலையிலும் பாதுகாப்பான நிலையிலும் பேணுதல் வேண்டும். அத்துடன்

(ii) அத்தகைய விளம்பர பலகையின் முன்புறத்தில் துலாம்பரமான நிலையில் தெளிவான வாசிக்கக்கூடிய எழுத்துக்களில் அவரது பெயரையும் முகவரியையும் தொலைபேசி இலக்கத்தையும் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

10. பாதை அல்லது நடைபாதையை பாவிப்பவர்களுக்கு ஆபத்தில்லாத வகையில் விமானப் பெயர்ப்பலகை பொருத்தப்பட வேண்டுமென்பதுடன் ஏதாவது சந்தர்ப்பத்தில் இந்த விமானப் பெயர்ப்பலகை உடைந்து விழுந்து எவராவது ஒருவருக்கு அல்லது சொத்துக்களுக்கு நட்டம் ஏற்பட்டால் அந்த விமானப் பெயர்ப்பலகையின் உரிமையாளரால் அந்த நட்டத்தை அந்த நபருக்கு அல்லது சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டும் என்பதுடன் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு நட்டஈட்டை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

11. விமானப் பெயர்ப்பலகை பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டப் பொறியியலாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக தயாரிக்கப்பட்டு அவரின் அனுமதியுடனே காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

12. (i) ஏதேனும் விளம்பர அறிவித்தலை நிர்மாணிக்கும் பொருட்டு பாவிக்கப்பட்ட எவ்விதமான நிர்மாண தாங்கியோ, பொருத்தியோ, அதற்காக பாவிக்கப்பட்ட வேறு ஏதேனும் பொருள் காரணமாகவோ அல்லது அத்தகைய விளம்பர அறிவித்தலில் வெளிப்படுத்தப்பட்ட அர்த்தம் அல்லது உணரப்படும் வேறு அர்த்தம் காரணமாகவோ ஏதேனும் தரப்பினருக்கு நேரிடுகின்ற அல்லது நேரிடக்கூடிய ஏதேனும் நட்டம் அல்லது சேதம் சம்பந்தமாக அனுமதிப்பத்திரம் பெறுநர் பொறுப்புவகிக்க கட்டுப்படல் வேண்டும்.

(ii) காட்சிக்கான செல்லுபடியான உரிமப்பத்திரத்தைப் பெற்று காட்சிப்படுத்துகின்ற எந்தவொரு அறிவித்தலுக்கும் ஏற்படுகின்ற யாதாயினும் சேதம் அல்லது திரிபுபடுத்தல் அல்லது அகற்றல் தொடர்பாக பிரதேச சபை எவ்வகையிலும் பொறுப்புக்கு உட்படுவதில்லை.

நிறைவேற்றக் கூடாத பணிகள் (13-20).

13. (i) பிரதேச சபைத் தவிசாளரால் அக்கருமத்திற்காக இங்கு இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியில் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு அமைய வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இருந்தாலேயொழிய எவரேனும் ஆளினால் பிரதேச சபை அதிகார எல்லைப் பரப்பினுள் பகிரங்க இடங்களிலிருந்து பார்க்கும் போது புலப்படக்கூடியதாக எந்தவொரு விளம்பர அறிவித்தலையும் காட்சிப்படுத்துதலோ காட்சிக்கு வைக்கச் செய்வித்தலோ ஆகாது.

(ii) காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்த போதிலும் ஏதேனும் விளம்பர அறிவித்தல் பகிரங்க இடமொன்றில் இருந்து பார்க்கும்போது புலப்படக்கூடியவாறு ஏற்புடைய அனுமதிப்பத்திரத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள இடமொன்றில் அல்லது இடங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் காட்சிக்கு வைக்கப்படுவதோ அவ்வாறு வைக்கச் செய்வித்தலோ ஆகாது.

14. அறிவித்தலைக் காட்சிப்படுத்த விண்ணப்பிக்கின்ற இடத்திற்கு வேறு ஆளொருவருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தின் செல்லுபடியான கால எல்லை நிறைவடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் குறித்த விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்த போதிய இடவசதியும் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள மற்றும் தொடர்ந்தும் செல்லுபடியான உரிமப்பத்திரத்தின் கீழ் காட்சிப்படுத்தப்படுகின்ற யாதாயினுமொரு விளம்பரப் பலகையிலுள்ள அறிவித்தல் கட்புலனாவதற்கு தடை ஏற்படாதவாறு அதன் அருகே அறிவித்தல் பலகையொன்றை காட்சிப்படுத்துவதற்கு உரிமப்பத்திரமொன்றை வெளியிடுவதற்கு தடை இருத்தலாகாது.

15. (i) காட்சிப்படுத்துவற்காக விண்ணப்பிக்கின்ற அறிவித்தல் ஆபாசமான அல்லது வெறுக்கத்தக்க அல்லது ஒழுக்கத்திற்கு முரணான அல்லது ஏதேனும் காலாச்சாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற அல்லது யாதாயினுமொரு சமயத்திற்கு அல்லது இனத்திற்கு அல்லது இனப்பிரிவினருக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற அல்லது அவ்வாறான நிலை உருவாக இடமுள்ளவாறான காட்சிகள் அல்லது பதப்பிரயோகங்களை உள்ளடக்கியுள்ள அறிவித்தலாக இருத்தலாகாது.

(ii) யாதாயினுமொரு எழுத்து மூலமான சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ள அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ள வகையிலான விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்தலாகாது.

16. விளம்பர அறிவித்தலுக்கு அருகாமையால் பயணிக்கின்ற யாராயினும் ஆளொருவருக்கு அல்லது வாகனத்திற்கு தடைகள் அல்லது விபத்துக்கள் ஏற்படுகின்றவாறு ஆளெவரும் எந்தவொரு விளம்பர அறிவித்தலையும் பொருத்தலாகாது. மேலும் வாகனம் ஓட்டிச் செல்கின்ற யாராயினுமொரு சாரதியின் கவனத்தை திசை திருப்புகின்றவாறான அல்லது அவரின் பார்வைக்கு தடையை, பாதிப்பை ஏற்படுத்துகின்றவாறான மின் வெளிச்சங்களை பொருத்தல் அல்லது எதிரொளி ஏற்படும் வகையில் யாராயினுமொருவர் விளம்பரங்களை காட்சிப்படுத்தலாகாது.

17. யாதாயினுமொரு வகையிலான விளம்பர அறிவித்தலொன்றை எவரும் பொது வழிபாட்டுத் தலங்கள், பூங்காக்கள், பாலங்கள், வீதிகள், மின்கம்பங்கள், தொலைத்தொடர்புக் கம்பங்கள் என்பவற்றிலோ அல்லது அவ்வாறான இடமொன்றுக்கு அருகே உள்ள மரம், மரத்தின்தண்டு, கிளை அல்லது வேறொரு பகுதியில் அல்லது யாதாயினுமொரு பொதுக் கட்டடத்திற்குத் தொடர்புபடுத்திப் பொருத்தல், ஒட்டுதல், தொங்கவிடுதல், கட்டிவைத்தல் அல்லது காட்சிப்படுத்தலாகாது.

18. விளம்பரமொன்று, பாதசாரிகளின் பயன்பாட்டுக்கென நிர்மாணிக்கப்பட்ட மேம்பாலத்தில் காட்சிப்படுத்தப்பட்டு, ஒட்டப்பட்டு அல்லது இணைக்கப்பட்டு இருந்தாலொழிய அல்லது பிரதேச பொறியியலாளரால் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தரால் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையில் நிர்மாணிக்கப்பட்டு நிறுவப்பட்ட முன் நீண்டுகொண்டிருக்கும் சைகையாக இருந்தாலொழிய ஏதேனும் தெருவின் அல்லது வீதியின் வண்டிப்பாதைக்கு மேல் அல்லது அதற்கு குறுக்காக முன்நீண்டிருக்கும் விளம்பரத்தை காட்சிப்படுத்தலாகாது.

19. (i) எந்தவொரு நபரும் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உரிமப்பத்திரம் விதத்திற்கு மாறாகவோ அல்லது மாதிரிப் படிவ வடிவத்தில் அல்லாத எந்தவொரு விளம்பர அறிவித்தலையும் வாகனத்தில் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்யலாகாது.

(ii) எந்தவொரு நபரும் பிரதேச சபையின் அனுமதிக்கு மேலதிகமாக பொலிஸ் அத்தியட்சகரினால் அனுமதிக்கப்படாத பளபளக்கும் ஒளியூட்டப்பட்ட விளம்பர அறிவித்தலுடன் கூடிய ஏதாவது வாகனத்தை வீதியில் அல்லது ஏதாவது பாதையில் ஓட்டிச்செல்லல் கூடாது.

20. யாதாயினுமொரு விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக இந்தத் துணை விதிகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரம் மூலம் மேற்படி விளம்பர அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்து அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ள கூற்றைச் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட சட்டபூர்வமான அங்கீகாரம் உள்ளடங்கியிருப்பதாக கருதப்படலாகாது என்பதுடன், அவ்வாறு புரிந்து கொள்ளவும் கூடாது.

பிரதேச சபையின் பணி (21 - 24).

21. (i) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் பிரதேச சபைக்குச் சொந்தமான இடத்தில் விளம்பர அறிவித்தல்களைக் காட்சிப்படுத்துவதற்காக இடமளிக்கின்ற பிரதேசங்கள் யாவை என பிரதேச சபை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

(ii) சமர்ப்பிக்கப்பட்டுள்ள யாதாயினுமொரு விண்ணப்பபடிவத்திற்காக இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றை வழங்கத் தேவையான நியதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பட்சத்தில் அது பற்றி பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரருக்கு மேற்படி அறிவித்தல் கிடைத்த பின்னர் அவர் துணை விதியின் 25(i) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிமப்பத்திரக் கட்டணம் மற்றும் 22(i) துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைத் தொகையை பிரதேச சபைக்குச் செலுத்திய பின்னர் குறித்த உரிமப்பத்திரத்தை வழங்குவது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாதல் வேண்டும்.

(iii) விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்காக இடமளிக்கப்படுகின்ற பிரதேசங்கள் பற்றி முன்னதாகவே பிரதேச சபை மேற்கொள்ளும் தீர்மானம் தொடர்பான அறிவித்தலை வர்த்தமானியில் பகிரங்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாகுமென்பதுடன், மேற்படி அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி அல்லது அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள எதிர்வரும் திகதியொன்று முதல் அமுலுக்கு வருதல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் கீழ் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற எந்தவொரு பிரதேசத்திலும் பிரதேச சபைக்கு உரித்தான ஏதேனும் காணியில் அல்லது பிரதேச சபையினால் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய பெற்றுக் கொள்ளும் வேறு யாராவது ஆளொருவருக்கு உரித்தான காணியில் விளம்பரப் பலகைகளை நிர்மாணித்துப் பேணிவருவதற்கு பிரதேச சபைக்கு தத்துவமிருத்தல் வேண்டும்.

(v) (ii) ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள யாதாயினுமொரு கட்புல விளம்பர பலகையில் விளம்பர அறிவித்தலொன்றை காட்சிப்படுத்துவதற்காக பிரதேச சபையினால் முன்னதாகவே தீர்மானிக்கப்பட்ட கட்டணமொன்றை காட்சிப்படுத்து வோரிடமிருந்து அறவிட்டுக் கொள்ளும் தத்துவம் பிரதேச சபைக்கு உரித்தாதல் வேண்டும்.

(vi) இப்பகுதியின் 25 ஆம் துணைவிதியின் பந்தி (i) இன் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபையினால் விதிக்கப்படுகின்ற வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணம் தொடர்பான அறிவித்தலை வர்த்தமானில் வெளியிடுவது பிரதேச சபையின் தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

22. (i) விளம்பர அறிவித்தலொன்றை காட்சிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கின்ற யாதாயினுமொரு விண்ணப்பப் படிவத்துக்காக உரிமப்பத்திரம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பிணைத் தொகையை விண்ணப்பதாரர் பிரதேச சபையில் வைப்பிலிடும் வரை பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் குறித்த விண்ணப்பப்படிவத்திற்கு உரிமப்பத்திரம் வழங்கலாகாது.

(ii) யாதாயினுமொரு விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக உரிமப்பத்திரம் வழங்க முன்னர் பிரதேச சபையில் வைப்பிலிட வேண்டிய பிணைப்பணம் தொடர்பாக பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானத்தை வர்த்தமானியில் வெளியிடுவது பிரதேச சபையின் தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

23. (i) இப் பகுதியின் 7ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விளம்பரப் பலகை அகற்றப்பட்ட பின்னர் பிரதேச சபையின் தவிசாளர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு எழுத்து மூலம் செய்யப்படுகின்ற கோரிக்கையின் அடிப்படையில் குறித்த உரிமப்பத்திரத்தை பெறுவதற்கு ஏற்கனவே பிரதேச சபையில் வைப்பிலிட்டுள்ள பிணைப்பணத்தை உரிமப்பத்திரதாரர் மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

(ii) (i) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்து மூலமான கோரிக்கை கிடைத்த பின்னர் மேற்படி பிணைப்பணத்தை உரிமப்பத்திரதாரருக்கு விடுவிக்க முன்னர்,

(அ) இப் பகுதியின் 7ஆம் துணைவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளை உரிமப்பத்திரதாரர் முறையாக நிறைவேற்றியுள்ளாரா என்பதையும்

(ஆ) அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளம்பர பலகையிலாக இருக்கும் பட்சத்தில், குறித்த அறிவித்தலை அகற்றும் போது அல்லது உரிமப்பத்திரதாரர் பொறுப்புக்கூற வேண்டியதொரு விடயம் காரணமாக மேற்படி விளம்பர பலகைக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்வது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பணியாதல் வேண்டும்.

(iii) உரிமப்பத்திரதாரர் இப் பகுதியின் 7ஆம் துணைவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செயற்பட்டிருப்பதாக மற்றும் பிரதேச சபையின் கட்புல விளம்பரப் பலகைக்கு சேதம் இடம்பெறவில்லையென, (ii) (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உறுதி செய்து கொள்ளும் போது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் திருப்தி யடைந்தாலேயன்றி மேற்படி பிணைப்பணத்தை உரிமப்பத்திரதாரருக்கு முற்றாக விடுவித்தலாகாது. யாராயினுமொரு உரிமப்பத்திரதாரர் இப் பகுதியின் 7ஆம் துணைவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செயற்படத் தவறியுள்ள போது அல்லது பிரதேச சபையின் கட்புல விளம்பரப்பலகைக்கு சேதம் ஏற்பட்டுள்ள போது, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அப்பணியை நிறைவேற்றல் அல்லது கட்புல விளம்பரப் பலகையை புதுப்பித்தல் அல்லது அவ்விரு பணிகளுக்கும் பிரதேச சபை தாங்கிக் கொள்ள நேரிடுகின்ற செலவினத்தை வைப்புத் தொகையிலிருந்து குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதுடன், மிகுதியான தொகையை மாத்திரம் உரிமப்பத்திரதாரருக்கு திருப்பிச் செலுத்த முடியும்.

(iv) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படும் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகையானது, வைப்புச் செய்யப்பட்டுள்ள பிணைப் பணத்திலும் பார்க்க அதிகமானதாக உள்ள போது அவ்வாறு மேலதிகமாக அறவிடப்பட வேண்டிய தொகையை உரிமப்பத்திரதாரர் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும்.

(v) எவ்வாறாயினும் பிணைப்பணம் விடுவிக்க உரிமப்பத்திரதாரரின் எழுத்துமூலமான கோரிக்கை கிடைத்து 14 நாட்களுக்குள் பிணைப்பணம் மீளளித்தல் வேண்டும். அவ்வாறில்லாவிடின் என்ன காரணத்திற்காக பிணைப்பணம் மீளளிக்க முடியாதென்ற காரணத்தை 14 நாட்களுக்குள் உரிமப்பத்திரதாரருக்கு எழுத்துமூலம் சேர்ப்பித்தல் வேண்டும்.

24. பிரதேச சபையால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றிக் காட்சிப்படுத்தப்படும் சகல விளம்பர அறிவித்தல்களும் அப்புறப்படுத்தப்பட்டு பிரதேச சபையின் கீழ் கொண்டுவருவதற்கும் அல்லது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

*அறவீடுகளும் கட்டணங்களும்.*

25. (i) யாதாயினுமொரு விளம்பரத்தை காட்சிப்படுத்துவதற்காக பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 149 ஆம் உபபிரிவுக்கு அமைவாக உச்சக் கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச சபைச் செயலாளருக்குச் சட்டபூர்வமானதாகும். அத்துடன்

(ii) (அ) பிரதேச சபையினால் இந்தத் துணைவிதிகளின் கீழ் பிரதேச சபைக்கு சொந்தமான இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்புல விளம்பரப் பலகையாக உள்ள பட்சத்தில், குறித்த கட்புல விளம்பரப் பலகையில் விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்காக 21 ஆவது துணைவிதியின் (V) ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணத்தையும் வாடகையையும் பிரதேச சபைக்குச் செலுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) விண்ணப்பதாரிக்கோ அல்லது வேறு ஆளுக்கோ அல்லது ஏதேனும் நிறுவனத்துக்கு சொந்தமான இடமாக அமையுமிடத்து விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் கட்டணத்தை விண்ணப்பதாரி பிரதேச சபைக்கு செலுத்தியிருத்தல் வேண்டும்.

(iii) அத்துடன் இப் பகுதியின் 22ஆம் துணைவிதியில் குறிப்பிட்டவாறு பிணைத் தொகையையும் செலுத்துதல் வேண்டும்.

(vi) சபையால் காலத்திற்கு காலம் தீர்மனிக்கப்படுகின்ற தற்காலிக அனுமதிப்பத்திரங்களிற்கான கட்டணங்களை தற்காலிக அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் நபர் செலுத்துதல் வேண்டும்.

(v) ஏதேனும் விளம்பர அறிவித்தலின் காட்சிக்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் காலம் நிறைவடைந்த பின்னர் தொடரும் வருடத்திலும் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்த அவசியமாகின்ற வேளையில் அத்தகைய தொடரும் வருடத்திலும் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக புதிய அனுமதிப்பத்திரமொன்று பெறப்படல் வேண்டும். ஆயினும் விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்திற்காக தொடரும் வருடத்தில் அறவிட பிரதேச சபை அங்கீகரித்துள்ள அனுமதிப்பத்திரக் கட்டணம் எதுவாயிருப்பினும் அத்தகைய விளம்பர அறிவித்தலின் காட்சிப்படுத்தலுக்காக விநியோகிக்கப்படுகின்ற புதிய அனுமதிப்பத்திரத்திற்கு முன்னர் அங்கீகரித்த அதே அனுமதிப்பத்திர கட்டணமே அறவிடல் வேண்டும்.

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

26. இத் துணைவிதியில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் செயலாளருக்கோ எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தர வுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.*

27. (i) இத்துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

(ii) முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நாட்களிற்கு மட்டும் செல்லுபடியாகும்.

*பரிசோதனை நடைமுறையும், தத்துவமும்.*

28. (i) ஏதேனும் விளம்பர அறிவித்தலை பொருத்துவதற்காக பாவிக்கப்படும் ஏதேனும் வகையைச் சேர்ந்த காட்சிப்பலகை, தாங்கி, நிர்மாணிப்பு அல்லது பொருத்தி, சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் அல்லது எவரேனும் ஆளுக்கோ அல்லது எவரேனும் ஆளின் ஆதனத்துக்கோ ஆபத்து விளைவிக்கக்கூடிய அல்லது சேதம் ஏற்படுத்தக்கூடிய வகையில் நிலவுகின்ற வேளையில் அதனை இரண்டு வார காலப்பகுதிக்குள் இயல்பு நிலைக்கு கொண்டுவருமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற அறிவித்தல் மூலமான பணிப்புரை விடுக்க பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ii) (i) பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எவரேனும் ஆள் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகளுக்கு அமைவாக செயலாற்றுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மேற்படி விளம்பர அறிவித்தலுக்காக வழங்கியுள்ள அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல் அல்லது அவ் விளம்பர அறிவித்தலை அகற்றுதல் சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

(iii) மேலே பிரிவு (ii) இன் ஏற்பாடுகளின் கீழ் யாதாயினுமொரு உரிமப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பிணைப் பணம் பிரதேச சபைக்கு உரித்தாதல் வேண்டும் என்பதுடன், குறித்த பிணைப் பணத்தை வேண்டி நிற்பதற்கு வேறு ஆளெவருக்கும் உரிமை இருத்தலாகாது.

(iv) அவசியம் ஏற்படுமிடத்து 14 நாட்களிற்கு குறைந்த தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்குவது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்டபூர்வமானதாகும். ஆயினும் இத் துணைவிதியில் குறிப்பிட்ட நிபந்தனைகள் தற்காலிக அனுமதிப்பத்திர விடயத்திலும் ஏற்புடையதாகும்.

*முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.*

29. உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

*துணைவிதிகளை மீறுதல் (30-31).*

30. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறொன்றாகும்.

31. இந்தத் துணை விதிகளின் யாதாயினுமொரு நியமம் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், குறித்த மீறல் தொடர்பாக கவனம் செலுத்துமாறு அனுப்பப்படுகின்ற அறிவித்தலுடன், வெளியிடப்பட்டுள்ள யாதாயினுமொரு உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு.

*அபாராதமும் தண்டனையும்.*

32. (i) இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

*பொருள் கோடலும் வரை விலக்கணமும்.*

33. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

'செயலாளர்' என்பது, ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

'பிரதேச சபை' என்பது, பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது, உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலப்பகுதி' என்பது, சூரியன் உதயத்திலிருந்து அஸ்தமனம் வரையான காலப்பகுதி' எனக் கருதப்படும்.

'பிரதேசப் பொறியியலாளர் அல்லது தகுதிவாய்ந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர்' என்பது, உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் பொறியியலாளர் எனப் பொருள்படும்.

'உரிமப்பத்திரதாரர்' என்பது, இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

'உரிமப்பத்திரம் பெற்ற இடம்' என்பது, இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப் படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

'பொலிஸ் அத்தியட்சகர்' என்பது, குறித்த பணிக்காக தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் எழுத்து மூலமான ஆவணமொன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்திலுள்ள யாராயினுமொரு அலுவலர் எனக் கருதப்படுவார்.

'கட்டவுட்' என்பது, பலகை அல்லது வேறு யாதாயினுமொரு பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள ஏதேனும் சட்டகத்தில் ஒட்டப்படுகின்ற அல்லது பொருத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தலும்,

'கட்புல விளம்பரப் பலகை' என்பது, மக்களின் தகவலுக்காக அல்லது கவனத்திற்காக காட்சிப்படுத்தப்படுகின்ற யாதாயினுமொரு விளம்பர அறிவித்தலை பொருத்தல் அல்லது தொங்கவிடுவதற்காக நிர்மாணிக்கப்படுகின்ற எந்தவொரு நிரந்தர பலகையும்,

'விளம்பர அறிவித்தல்' என்பது, எவரேனும் ஆளினால் ஏதேனும் காணியிலோ, கட்டிடத்திலோ வாகனத்திலோ நிர்மாணிப்பிற்கு மேலாக அல்லது அதன் மீது முழுமையாகவோ பகுதியளவிலோ காட்சிப்படுத்தப்படுகின்றதும் மக்களின் அறிந்துகொள்ளல் அல்லது கவனத்தின் பொருட்டு காட்சிப்படுத்துகின்ற, ஒட்டுகின்ற, பொருத்துகின்ற, நிர்மாணிக்கின்ற, தொங்கவிடப்படுகின்ற அல்லது வேறு விதமாக இடஅமைவு செய்யப்படுகின்ற பிரச்சாரக் கருமத்திற்காக பாவிக்கப்படுகின்ற ஏதேனும் எழுத்து, சொல் அல்லது உருவப்படக் குறிப்பினை உள்ளடக்குகின்ற விளம்பர அறிவித்தல், பெனர் அல்லது கட்அவுட் அல்லது வேறுவிதமான மாதிரியுரு, விளம்பரத்தாள் அறிவித்தல், வர்த்தக அறிவித்தலையும் கருதுகின்றது.

**இணைப்பு 1**

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் விளம்பரம் அமைப்பதற்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் :-----.
2. நிரந்தரமுகவரி :-----.
3. தே. அ. அ. இல. :-----.
4. கை. தொ. பே. இல. :-----. நிரந்தர : ----.
5. மின் அஞ்சல் முகவரி :-----.
6. விளம்பரமாதிரி இணைக்கப்பட்டுள்ளது: ☐

7. அமைவிட மாதிரி இணைக்கப்பட்டுள்ளது: ☐

8. விளம்பரத்தின்தன்மை : ஒருபக்கம் ☐ இருபக்கம் ☐ ஒளியேற்றப்பட்டது ☐

9. அனுமதி கோரப்படும் காலம் : இருந்து ----- வரை -----.

10. விளம்பரத்தின்அளவு : நீளம் :----- அகலம் :----- உயரம் :-----.

11. விளம்பர இடம்பற்றிய விபரம்.- தனியார் காணி/வீதி அபிவிருத்தித் திணைக்கள வீதி/பிரதேச சபை ஆதனம்

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்கு முரணானவை என்பது தெரியவரும் பட்சத்தில் குறித்த பதாதை எதுவித முன்அறிவித்தலுமின்றி வெட்டி அகற்றி பிரதேச சபைக்கு உரியதாக்குவதற்கு உட்படுவேனென இணங்குகின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**அலுவலக உபயோகத்திற்கு**

**பிரதம இறைவரிப்பரிசோதகர்**

குறித்த இடத்தில் ......................... அளவுடைய விளம்பரம் அமைப்பது பொருத்தமானது/பொருத்தமற்றது

------,
இறைவரிப்பரிசோதகர்.

திகதி :-----.
பிரதேச சபைத் தவிசாளர்/செயலாளர்,
மேற்படி விளம்பர அமைப்பை சிபார்சு செய்கிறேன்/செய்யவில்லை.

------,
இறைவரிப்பரிசோதகர்.

திகதி :-----.
விளம்பரத்தின் அளவு நீளம் ............ அகலம் ............... பரப்பு (சதுர அடி) .............

| விபரம் | தனியார் காணி | வீதி அபிவிருத்தித் திணைக்கள வீதி (RDA) | பிரதேச சபை ஆதனம் | பிரதேச சபை வீதி |
|---|---|---|---|---|
| ஒப்பந்தம் உண்டு | | | | |
| நிலவாடகை | | | | |
| வெளிப்படுத்தல் கட்டணம் | | | | |
| மொத்தக் கட்டணம் | | | | |
| VAT | | | | |
| NBT | | | | |
| மொத்தத் தொகை | | | | |

------,
முகாமை உதவியாளர்.

திகதி :-----.

குறித்த விளம்பரம் அனுமதியளிக்கப்படுகின்றது/ அனுமதியளிக்கப்படவில்லை.

------,
தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-----.

திகதி :-----. பற்றுச்சீட்டு இல. :-----.

கோவை இலக்கம் :-----.

------,
நிர்வாக உத்தியோகத்தர்.

திகதி :-----.

**தவிசாளர்**

குறித்த விளம்பரம் சரியான இடத்தில் சரியான அளவில்/வேறு இடத்தில் வேறு அளவில் அமைக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

------,
வெளிக்கள உத்தியோகத்தர் (திட்டமிடல் பகுதி).

திகதி :-----.

**பகுதி II - பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்**

1. பிரதேச சபை எல்லைக்குள் உள்ள வீதிகளில் மோட்டார் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என இவை அழைக்கப்படலாம். *துணைவிதியின் தலைப்பு.*

2. பிரதேச சபை எல்லைக்குள் பொருத்தமான இடங்களில் வாகனத் தரிப்பிடங்களை பராமரிப்பதன் மூலம் வாகனங்களின் நெரிசல்களை கட்டுப்படுத்தல், பயணிகளைப் பாதுகாத்தல் மற்றும் மோட்டார் வாகன விபத்துகளைத் தடுத்தல் ஆகிய நோக்கங்களுடன் இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *நோக்கம்.*

3. பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 மற்றும் (vii) (ஏ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்த துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடு.*

4. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அல்லது பிரதேச சபை எல்லை ஊடாக செல்லுகின்ற ஏதேனும் வீதி ஒன்றில் அல்லது பாதையொன்றில் செல்லுகின்ற எந்தவொரு வாகனத்தின் சாரதியினாலும் இப் பகுதியின் 23 ஆம் துணைவிதியின் (ii) ஆம் பிரிவு நியதிகளின் கீழ் பொருத்தப்பட்டுள்ள வீதிச் சமிக்ஞையொன்றில் அல்லது சமிக்ஞைகளின் மூலம் காட்டப்படுகின்ற நியதிகளை பின்பற்றுதல் வேண்டும். *நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4-15).*

5. எல்லா வாகன தரிப்பிடங்களிலும் நிறுத்துவதற்காக வருகின்ற வாகனங்கள் நுழைவாயிலிலும் வெளிச் செல்லும் வாயிலிலும் இலகுவாக வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடியவாறு மும்மொழிகளிலும் அறிவித்தல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இந்த இடங்களுக்குள் பிரவேசிக்கும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக வரும் போதும் இதிலிருந்து வெளியேறிச் செல்லும் போதும் வாகனத்தை ஓட்டிச் செல்ல வேண்டிய திசையை இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளுவதற்கு இயலச் செய்யும் வகையில் 20 சென்றி மீற்றர் அகல வெள்ளை நிறத்திலான கோடொன்றுடனான அம்புக்குறியீடொன்றும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

6. எல்லா வாகன தரிப்பிடங்கள் அமைந்துள்ள நிலப் பிரதேசங்களும் தார் அல்லது கொங்கிறீட் இடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இந்த வாகன தரிப்பிடங்களை உபயோகப்படுத்துபவர்களின் பயன்பாட்டுக்காக ஆண், பெண் இருசாராருக்குமாக வெவ்வேறான மலசல கூடங்கள் இருத்தல் வேண்டும் . அவ்வாறே இந்த இடத்தில் தேங்கி நிற்கின்ற நீரை இலகுவாக வழிந்தோடச் செய்யும் பொருட்டு வடிகால்கள் அமைக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

7. எல்லா வாகன தரிப்பிடங்களிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடவசதிகளை ஒதுக்கும் போது வாகன தரிப்பிடத்திற்குள்ளே வருவதற்கும் இதிலிருந்து வெளியேறிச் செல்வதற்கும் வாகனங்களுக்கு போதுமான ஓடு பாதை உருவாக்கியிருத்தல் வேண்டும்.

8. ஏதேனும் வாகனமொன்று வாகன தரிப்பிடத்திற்குள் ஓட்டிச் செல்லும் போதும், நிறுத்தும் போதும் அதற்குள்ளே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறேதும் வாகனமொன்றுக்கு இடையூறாக இல்லாதவாறு ஒவ்வொரு வாகனத்தையும் நிறுத்தி வைப்பதற்கு வாகன தரிப்பிடத்திற்குள் போதுமானளவு இடவசதிகளை ஒதுக்கி இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வாகனத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள 10 சென்றி மீற்றர் அகலத்தைக் கொண்ட எல்லையை வெள்ளைக் கோட்டினால் குறித்துக் காட்டுதலும் வேண்டும்.

9. (i) ஏதேனும் வாகனதரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களில் கட்டண அறவீட்டுக்கு இதனகத்துப் பின்னர் 'வாகன தரிப்பிட பொறுப்பாளர்' என குறிப்பிடப்படுகின்ற -

(அ) பிரதேச சபையில் பணிபுரிகின்ற எவரேனும் ஊழியர் ஒருவரை;

அல்லது

(ஆ) பிரதேச சபையினால் பகிரங்க கேள்வி கோரலின் மூலம் தெரிவுசெய்யப்படுகின்ற ஏதேனும் வெற்றிகரமான கேள்விதாரர் ஒருவருக்கு அல்லது இந்த கேள்விதாரரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற அவரது உப முகவரை பயன்படுத்தலாம்.

(ii) எவ்வாறாயினும் ஏதேனும் மோட்டார் வாகனமொன்றை நிறுத்தி வைப்பதற்கு அறவிடப்படும் கட்டணம் இத் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணத்தை விஞ்சாதவாறு ஒவ்வொரு வாகனத்தையும் நிறுத்தி வைப்பதற்காக அறவிட்ட கட்டணத்தை இந்தப் பகுதியின் முதலாவது இணைப்பில் ஒழுங்குபடுத்திக் காட்டப்படுகின்ற பற்றுச்சீட்டில் குறிப்பிட்டு வாகன சாரதிக்கு வழங்குதல் வேண்டும்.

10. (i) இப் பகுதியின் 26ஆம் துணைவிதியின் (ii) ஆம் பிரிவின் கீழ் நிறுத்தி வைப்பதற்காக இடமளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் வகையைச் சார்ந்த வாகனமொன்றை நிறுத்தி வைப்பதற்கு வாகனத் தரிப்பிடத்திற்கு பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தில் இந்த வாகனத் தரிப்பிட நுழை வாயிலுக்கு அருகாமையில் இந்த வாகனத்தின் சாரதிக்கு இந்தப் பகுதியின் இரண்டாம் இணைப்பில் முறையாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நுழைவு அனுமதியை காட்டுகின்ற நுழைவு அனுமதி அட்டையொன்றை வழங்குவது வாகனத்தரிப்பிட பொறுப்பாளரின் கடமையாகும்.

(ii) நுழைவு அனுமதி அட்டையுடன் எல்லா வாகனங்களும் வாகனத் தரிப்பிடத்திலிருந்து வெளிச்செல்ல முன்னர் -

(அ) (i) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டையை வாகனத் தரிப்பிட பொறுப்பாளருக்கு மீளக் கொடுப்பதும்;

(ஆ) இப் பகுதியின் 28 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்ட பொருத்தமான இட அளவினைக் கொண்ட வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணத்தை வாகனத் தரிப்பிட பொறுப்பாளருக்கு செலுத்துவதும்; அத்துடன்

(இ) செலுத்தப்படுகின்ற கட்டணத்திற்கு பொருத்தமான துணைவிதியின் 9 ஆம் பிரிவின் (ii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதும் இந்த வாகன சாரதியின் பணியாக இருத்தல் வேண்டும்.

11. பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது வாகனத் தரிப்பிட பொறுப்பாளரினால் அல்லது எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரினால் ஏதேனும் வாகனத் தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்படுகின்ற ஏதேனும் வாகனமொன்றின் உரிமையாளரிடம் அல்லது சாரதியிடம் வாகனத்திற்காக வழங்கப்பட்ட நுழைவு அனுமதி அட்டையை பரிசோதனை செய்வதற்கு கோரப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் இதை பரிசோதனை செய்வதற்காக வழங்குவது இந்த வாகனத்தின் உரிமையாளரின் அல்லது சாரதியின் பணியாக இருத்தல் வேண்டும்.

12. பிரதேச எல்லைக்குள் தாபிக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனத் தரிப்பிடத்திற்குள் நிறுத்தி வைக்கப்படுகின்ற –

(i) அரசாங்க வாகனங்களும்;
(ii) மாகாண சபை வாகனங்களும்;
(iii) மாகாணத்துக்குள் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஏதேனும் உள்ளூராட்சி மன்றங்களின் வாகனங்களும்;
(iv) நீர் வழங்கல், தொலைபேசி, மின்சாரம் போன்ற வழங்கல் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் திருத்த அல்லது பராமரிப்பு பணியிலுள்ள வாகனங்களும்.

இந்த துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு அமைய கட்டணங்கள் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. ஏதேனும் அரசாங்க கூட்டுத்தாபனமொன்றின் அல்லது நியதிச் சட்டசபையின் ஏதேனும் வாகனமொன்றுக்கு இப் பகுதியின் 28ம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்புடையதாகுதல் வேண்டும்.

13. (i) அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் வாகனம் நிறுத்திவைக்கப்பட்டுள்ள இடத்தில் வாகனம் நிறுத்தப்பட்டிருந்தால் அந்த வாகனத்தை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தும் பணிக்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது வாகனத் தரிப்பிட பொறுப்பாளர் நடவடிக்கை எடுப்பது சட்டபூர்வமாகுதல் வேண்டும். அதற்கு பொலிஸாரின் உதவியை நாடலாம்.

(ii) அவ்வாறு அப்புறப்படுத்தும் பொழுது வாகனத்திற்கு ஏற்படும் ஏதேனும் சேதத்திற்கு பிரதேச சபையிடமிருந்து வாகன உரிமையாளர் அல்லது சாரதியால் நட்டத்தைக் கோர முடியாது. அந்த வாகனத்தை அப்புறப்படுத்துவதற்காக வாகனத்தை குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு செல்லுவதற்கான செலவையும் இதனைப் பாதுகாக்கும் செலவையும் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது தரிப்பிடப் பொறுப்பாளரால் மதிப்பீடு செய்யப்படும் வேறு செலவுகளையும் உரிமையாளர் அல்லது சாரதி பிரதேச சபைக்குச் செலுத்தல் வேண்டும்.

(iii) வழங்கப்பட்டுள்ள எல்லா அனுமதிப்பத்திரங்களும் அது வழங்கப்பட்டது ஏதாவது வாகனமொன்றிற்காயின் அந்த வாகனத்தை அறிந்து கொள்ளும் இலக்கத்தை அதில் குறிப்பிடப்பட வேண்டுவதுடன் அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் கால எல்லைக்கு மட்டும் அது செல்லுபடியாகும்.

(iv) அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் அனைவரும் அவ் வாகனத்தின் வெளியிலிருந்து தெரியக்கூடிய விதத்தில் வாகனத்திற்குள் வெளிப்படையாகத் தெரியும் இடத்தில் காட்சிப்படுத்தி வைத்தல் வேண்டும்.

14. பிரதேச சபையினால் விசேடமாக வாகன நிறுத்துமிடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் கட்டணத்தைச் செலுத்தி மாதாந்த அனுமதிப் பத்திரத்தை எவரும் ஒப்பந்த மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

15. பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் நிச்சயிக்கப்படும் கட்டணத்தைச் செலுத்தி எந்த நிறுவனமும் வாகனத் தரிப்பிடத்தை ஒதுக்கிக்கொள்ளலாம்.

நிறைவேற்றக் கூடாத பணிகள் (16-22).

16. ஏதேனும் தனியார் வாகனத் தரிப்பிடத்தை பிரதேச சபையின் அனுமதியின்றி எவரும் நடத்துதல் ஆகாது.

17. இப் பகுதியின் 4ஆம் துணைவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் இப் பகுதியின் 23ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் வீதி சமிக்ஞை ஒன்றின் ஊடாக விதிக்கப்பட்டுள்ள ஏதேனும் எல்லையொன்றின்-

(i) வீதியின் அல்லது பாதையின் ஏதேனும் பகுதியொன்றில் அல்லது மாநாகர சபை எல்லைக்குள் வேறு எந்த விதத்திலுமான வீதியொன்றில் அல்லது பாதையொன்றின் அருகாமையிலுள்ள ஏதேனும் கட்டடமொன்றில் அல்லது அதற்கருகாமையில் ஏற்படுகின்ற ஏதேனும் நெருப்பை அல்லது வேறு ஏதேனும் அனர்த்தமொன்றை கட்டுப்படுத்தும் பணிக்கு பயன்படுத்தப்படுகின்ற பிரதேச சபையின் தீயணைப்பு வண்டியொன்றுக்கு அல்லது வேறு ஏதேனும் வாகனமொன்றுக்கு;

(ii) இந்த வீதியின் அல்லது பாதையின் ஏதேனும் பகுதியொன்றில் அல்லது மாநாகர சபை எல்லைக்குள் வேறு எந்த விதத்திலுமான வீதியொன்றில் அல்லது பாதையொன்றில் ஏற்படுகின்ற வாகன நெரிசல்களை தவிர்த்துக் கொள்வதற்கு அல்லது பிரதேச சபை எல்லைக்குள் ஏற்படுகின்ற வேறு ஏதேனும் எதிர்பாரா நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்படுகின்ற கட்டளையொன்றுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு;

இப் பகுதியின் 4ஆம் துணைவிதியின் நியதிகளை மீறுவதாக கருதப்படல் ஆகாது.

18. (i) எவரேனும் ஆளொருவரினால் ஏதேனும் வாகனத் தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைப்பதற்கு இடமளிப்பதற்கு பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள வகையை அல்லது வகுப்பைச் சார்ந்த வாகனமொன்றாக இருந்தாலன்றி வேறு எந்த விதத்திலுமான வாகனமொன்று அல்லது மோட்டார் வாகனமல்லாத வேறேதேனும் வாகனமொன்று வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைப்பதற்கு அல்லது வாகனத் தரிப்பிடத்திற்குள் நுழைவதற்கு அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல் ஆகாது.

(ii) வாகனத் தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்படுகின்ற ஏதேனும் வாகனமொன்றை இந்த வாகனத் தரிப்பிடத்திலிருந்து அகற்றுவதற்கு இந்த வாகனத்தை இயங்கச் செய்வதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் இந்த வாகனத்தை இழுத்துச் செல்வதற்கு வாகனத் தரிப்பிடத்திற்குள் வருகின்ற ஏதேனும் பிற வாகனமொன்று இந்த வாகனத் தரிப்பிடத்திற்குள் பிரவேசிப்பதற்கு போதுமான அளவு இடவசதிகள் இருப்பின் அவ்வாறு வருகின்ற பிற வாகனமொன்றுக்கு (i) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடுகள் ஏற்புடையதாக இருத்தல் ஆகாது. எவ்வாறாயினும், இந்த வாகனத்தை இழுத்துச் செல்லும் போது வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறு வாகனங்களுக்கு ஏதேனும் தடையையோ அல்லது பாதிக்கும் விதத்திலோ இழுத்துச் செல்லல் ஆகாது.

19. எவரேனும் ஆளொருவரினால் ஏதேனும் வாகனத் தரிப்பிடத்திற்குள் -

(i) வாகனத்தை கழுவுவதற்கு அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல்;
(ii) ஏதேனும் வாகனமொன்றை அகற்றும் நோக்கத்திற்காக இந்த வாகனத்தை இயங்கச் செய்வதற்கு தேவையான திருத்தமொன்றை அல்லது சக்கரத்தை மாற்றும் நோக்கத்திற்காக அல்லாத வேறு ஏதேனுமொரு திருத்தம் செய்தல் ;
(iii) (ii) ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் திருத்தம் ஒன்றுக்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு விடயங்கள் தொடர்பில் கவனத்திற்கு எடுத்துக் கொண்டால் அன்றி தேவையற்ற அல்லது இடையூறாகவுள்ள ஏதேனும் சத்தம் ஒன்றையோ அல்லது சத்தங்களையோ ஏற்படுத்துதல்;

(iv) இந்த வாகனத் தரிப்பிட பொறுப்பாளரின் அனுமதியின்றி வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து இந்த வாகனத் தரிப்பிடத்திலேயே வேறு இடத்திற்கு எடுத்துச் சென்று நிறுத்துதல்;

(v) இந்த வாகனத் தரிப்பிடத்தின் ஓடுபாதை அல்லது நுழைவு அல்லது வெளிச் செல்லும் வாயிலை தடைசெய்கின்றவாறு வாகனங்களை நிறுத்தி வைத்தல்;

(vi) விபத்துகளை தடுப்பதற்கு அல்லது வாகனத்தின் அல்லது அங்கு தரித்து நிற்பவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அல்லது இந்த நோக்கத்திற்காக அன்றி ஏதேனும் வாகனமொன்றில் பொருத்தப்பட்டுள்ள விபத்துகளை அறிவிக்கும் உபகரணங்களை சத்தமிடச் செய்தல்;

(vii) தரித்து வைக்கப்பட்டுள்ள அல்லது இந்த வாகனத் தரிப்பிடத்திற்குள் நுழைகின்ற அல்லது இதற்கு வெளியே செல்லுகின்ற ஏதேனும் வாகனமொன்றிலிருந்து சைகை ஒலியை எழுப்புதல்;

(viii) மதுபான பாவனை அல்லது வெற்றிலை எச்சில் துப்புதல் அல்லது முறையற்ற வார்த்தை பிரயோகம் அல்லது கலவரம் செய்தல் அல்லது நல்லொழுக்கமற்ற செயலில் ஈடுபடல்;

ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது.

20. ஏதேனும் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்படுகின்ற ஏதேனும் வாகனமொன்றின் சேதம் அல்லது பாதிப்பு தொடர்பிலான பொறுப்பானது இந்த வாகனத்தை வாகனத் தரிப்பிடத்திற்குள் நிறுத்தி வைக்கின்ற ஆளுடைய பொறுப்பாகுமேயன்றி ஏதேனும் வாகனமொன்றுக்கு வாகனத் தரிப்பிடத்திற்குள் ஏற்படுகின்ற ஏதேனும் சேதம் அல்லது பாதிப்பு தொடர்பில் பிரதேச சபையோ அல்லது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது வாகனத் தரிப்பிட பொறுப்பாளரோ பொறுப்புக்கு உட்படலாகாது.

21. இப் பகுதியின் 5 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் வாகனமொன்று உள்ளே அமைந்துள்ள வாகன ஓடுபாதையில் வாகனத்தைச் செலுத்த வேண்டிய திசையைக் காட்டுகின்ற குறியீடு இடப்பட்டுள்ள திசைக்கு மாற்றமான திசைக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு வாகனத்தையும் ஓட்டிச் செல்லலாகாது.

22. ஏதேனும் வாகனத் தரிப்பிடத்திலுள்ள நிருமாணிப்புகளுக்கு அல்லது அதன் உள்ளேயுள்ள ஏதேனும் உபகரணங்களுக்கு சேதத்தை விளைவித்தல் அல்லது மாற்றமடையச் செய்தல் எவரேனும் ஆளொருவரினாலும் மேற்கொள்ளப்படலாகாது.

23. (i) பிரதேச சபை எல்லையின் ஏதேனும் பாதையில் அல்லது வீதியில் ஏதேனும் ஒரு பகுதியில்- *பிரதேச சபையின் பணி (23-27).*

(அ) மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதை தடைசெய்தல்;
(ஆ) மட்டுப்படுத்துதல்;
(இ) ஒரு பக்கத்தில் மாத்திரம் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு இடமளித்தல்;
(ஈ) பொருட்களை ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு தடை செய்தல் அல்லது மட்டுப்படுத்துதல் ;
(உ) பயணிகளை ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு தடை செய்தல்;
(ஊ) பஸ் தரிப்பிடங்களை அடையாளமிடல் ;
(எ) ஒரு பக்கத்திற்கு மாத்திரம் வாகனத்தை செலுத்தும் வீதிகளை அல்லது பாதைகளை அடையாளப்படுத்தி பயணிக்கக் கூடிய திசையை தீர்மானித்தல் ;
(ஏ) பொது வாகனத் தரிப்பிடத்தை அடையாளப்படுத்தி வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு இடமளித்தல்;

ஆகியவற்றுக்கான தத்துவங்கள் பிரதேச சபைக்கு உண்டு.

(ii) பிரதேச சபையினால் (i) ஆம் பிரிவின் கீழ் உள்ள ஏதேனும் மட்டுப்படுத்தல்களின் பின்னர் இந்த மட்டுப்படுத்தல்கள் தொடர்பில் வீதி சமிக்ஞைகளை உரிய இடத்தில் பொருத்துதல்

பிரதேச சபையின் தவிசாளரின் பணியாகும். இந்த மட்டுப்படுத்தல் தொடர்பிலான வீதி சமிக்ஞைகள் மோட்டார் வாகன சட்டத்தின் 164 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவையினால் ஆக்கப்பட்ட 1987 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 13 ஆம் திகதியிட்ட 444/18 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் I ஆம் பகுதியின் (i) ஆம் பந்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமைவாகவிருந்தாலன்றி இந்த கட்டளைகளில் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கும் உட்படுதல் வேண்டும்.

24. எல்லா வாகன தரிப்பிட சுற்றுச்சூழலிலும் தேங்கி நிற்கின்ற கழிவுகளை நாளாந்தம் அகற்றுவதும் இந்த இடத்தில் பேணப்படுகின்ற மலசல கூடங்களை நாளாந்தம் தொற்று நீக்கியைப் பயன்படுத்தி துப்பரவாக வைத்திருப்பதும் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பொறுப்பாகும்.

25. எல்லா வாகனத் தரிப்பிட பொறுப்பாளர்களும் இந்தப் பணியில் ஈடுபடுகின்ற காலப்பகுதிக்குள் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு வாகன தரிப்பிட பொறுப்பாளர்களை இலகுவில் இனங்கண்டு கொள்வதற்கு இயலச் செய்யும் வகையிலான உடையை அணிந்திருக்கச் செய்தல் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பொறுப்பாகும்.

26. (i) பிரதேச சபை எல்லைக்குள், இதனகத்துப் பின்னர், 'வாகனத் தரிப்பிடம்' என அழைக்கப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கும் பணிக்காக-

(அ) பிரதேச சபையின் ஏதேனும் காணித் துண்டொன்றினை;

அல்லது

(ஆ) வேறு ஏதேனும் சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு அமைவாக இந்த சபைக்குரிய ஏதேனும் காணித் துண்டொன்றை ஒதுக்கிக் கொள்வதற்கு பிரதேச சபைக்கு தத்துவம் இருத்தல் வேண்டும்.

(ii) ஏதேனும் வானத் தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கக் கூடிய வாகன வகைகளையும் நிறுத்திவைக்கக் கூடிய உச்ச வாகன எண்ணிக்கையும் எவ்வளவு என்பது பற்றிய தீர்மானத்தை பிரதேச சபை மேற்கொள்ளலாம்.

(iii) வாகன தரிப்பிடத்தின் நுழை வாயிலில் பகிரங்கமாக தெரியுமாறு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படும் கட்டணங்களை மும்மொழியிலும் காட்சிப்படுத்துவது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பொறுப்பாகும்.

27. எல்லா வாகனத் தரிப்பிடங்களும் ஆகக் குறைந்தது வாகன நுழைவுக்காக ஒரு நுழைவாயிலும் வெளிச் செல்லவதற்காக ஒரு வாயிலும் என இரண்டு வெவ்வேறான வாயில்கள் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், வானத் தரிப்பிடத்திற்குள் வாகனத்தைத் திருப்புவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியொன்று இருப்பின் ஒரே தடவையில் இரண்டு வாகனங்கள் இருமருங்கிலும் பயணஞ் செய்யக் கூடியவாறான இரட்டிப்பு ஓடு பாதையும் வாயிலின் இடவசதியுள்ள சந்தர்ப்பத்தில் வாகனங்கள் நுழைவதற்கும், வெளிச் செல்வதற்குமாக ஒரு வாயில் மாத்திரம் இருக்கலாம்.

அறவீடுகளும் கட்டணங்களும்.

28. (i) பிரதேச சபைக்கு சொந்தமான வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களிற்காக பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் ஒரு கட்டணத்தை அறவிடுவது பிரதேச சபைச் செயலாளருக்கு சட்டபூர்வமானதாகும்;

(ii) யாதாயினுமொரு தனியார் வாகனத் தரிப்பிடத்தை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக உச்சக் கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச சபைச் செயலாளருக்கு தத்துவமுண்டு;

(iii) ஏதேனும் தனியார் வாகன தரிப்பிடத்திற்குள் வாகனத்தை நிறுத்துவதற்காக பிரதேச சபையினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்றவாறு கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மேலும் பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற தனியார் வாகனத் தரிப்பிட அறவீடுகளின் இருபத்தைந்து வீதத்தை பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டும். அதற்கான தனியான ஒப்பந்தம் ஒன்றும் செய்துகொள்ளப்பட வேண்டும். இதற்காக பிரதேச சபையால் அனுமதிக்கப்பட்ட பற்றுச் சீட்டு புத்தகங்களை மாத்திரமே இந்த அறவீடுகளுக்கு உபயோகித்தல் வேண்டும்;

(iv) பிரதேச சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள் நிறுத்துமிடங்களில் வாகனம் இரவு நேரங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருக்குமாயின் அதற்காக காலத்திற்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்படும் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்;

(v) பிரதேச சபைக்கு சொந்தமான வாகனத் தரிப்பிடங்களில் கட்டணம் அறவிடும் உரிமையை வருடாந்த குத்தகைகாரரிடம் ஒப்படைத்து ஒப்பந்த பிரகாரம் குத்தகையாக அறவிடும் தத்துவமும் பிரதேச சபைக்கு உண்டு;

(vi) எவ்வாறாயினும் சகல கட்டண விபரங்களும் இலங்கை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

29. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

*அனுமதிச் சீட்டின் செல்லுபடிக் காலம்.*

30. (i) இந்த துணைவிதி பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் நிச்சயிக்கப்படும் நேரத்திற்குள் செயற்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து செயற்படுத்தும் நேரம் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணிவரையாகும்;

(ii) இத்துணைவிதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல தனியார் உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (31-32).*

31. இப்பகுதியின் துணைவிதிகளின் நியதிகளை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு தத்துவம் பெறுகின்ற உரிய காலப்பகுதி எனப்படுவது பொது வாகனத் தரிப்பிடத்தில் வாகனங்களை நிறுத்தும் எல்லாச் சந்தர்ப்பங்களும் எனப்பொருள்படும்.

32. இப்பகுதியின் துணைவிதிகளின் நியதிகளின் கீழ் அனுமதிச் சீட்டு பெற்றுள்ளமையை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு பரிசோதனைக்கான உதவிகளை வழங்குவது அனுமதீச்சீட்டு வைத்திருப்பவரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காக தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

*முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.*

33. அனுமதிப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் முதல்வருக்கு அல்லது பிரதேச சபையின் ஆணையாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

*துணைவிதிகளை மீறுதல்.*

34. இந்த துணைவிதிகளின் உள்ளடக்கப்பட்ட ஒன்றையோ அல்லது பலவற்றையோ மீறுதல் தவறொன்றாகும்.

அபராதமும் தண்டணையும்.

35. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள் கோடலும் வரை விலக்கணமும்.

36. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து–

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

'பிரதேச சபை' என்பது பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'அனுமதிச்சீட்டு பெற்றவர்' என்பது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனம் நிறுத்துமிடத்தில் வாகனத்தை நிறுத்துவதற்காக அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டவராகும்.

'வீதி' என்பது பிரதேச சபைக்குரிய ஏதேனும் பாதையொன்று,தெருவொன்று, நெடுஞ்சாலையொன்று, ஒழுங்கையொன்று, நடைபாதையொன்று, ஒற்றையடிப் பாதையொன்று, படிக்கட்டொன்று ஒற்றை மரப் பாலமொன்று அல்லது பயணிகளின் பாலமொன்று எனப் பொருள்படுவதுடன் பிரதேச சபைக்குரிய ஏதேனும் ஒழுங்கையில் வீதியில் நெடுஞ்சாலையில், ஒழுங்கையில், நடைபாதையில் ஒற்றையடிப் பாதையில், படிக்கட்டில் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் தூரத்தைக் குறிக்கின்ற குறியீடு எல்லைக்கல், எல்லைக்கணு, விளக்குக் கம்பம், பாலம், ஏதேனுமொரு விதத்திலுமான மதகு, நீர் கடவை, சுவர், வில் வளைவு, அணை, வடிகான், மடைக்கதவு, அணைக்கட்டு, மதில், வழிகாட்டி, சங்கிலி, வேலி, சமிக்ஞை, வீதி பெயர்ப் பலகை, வீதிக்கருகாமையிலுள்ள நடைபாதை போன்றவையும் இதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

'வாகனம்' என்பது, மோட்டார் வாகனங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் வாகனத்திற்காக வழங்கப்பட்ட பொருள்கோடல் எனக் கருதப்படல் வேண்டுமென்பதொடு வண்டி, துவிச்சக்கர வண்டி, அல்லது சில்லுகள் பொருத்தப்பட்டு இயந்திர மூலமாகவோ வேறு வகையிலோ இயக்கப்படுகின்ற உபகரணமென கருதப்படும்.

**அட்டவணை**

**இணைப்பு I**

***09 ஆம் துணைவிதியின் (ii) பிரிவு***

*...................................... 2 சபை*

*.................................................. வாகனத் தரிப்பிடம்*

*வாகனத்தை நிறுத்துவதற்கான கட்டணம்*

*பற்றுச்சீட்டு இலக்கம் :----.*

*வாகன இலக்கம் :----.*

*திகதி ( 20.......)*

*வந்த நேரம் (மு.ப / பி.ப. :----.*

*வெளிச்சென்ற நேரம் (மு.ப / பி.ப. :----.*

*அறவிட்ட கட்டணம் (ரூபா :----.*

**இணைப்பு II**

***10ஆம் துணை விதியின் (i) பிரிவு***

*அட்டையின் முன் பக்கம்*

*................. 2 சபை*

*............. வாகனத் தரிப்பிடம்*

*அட்டையின் மறுபக்கம்*

இந்த அட்டையை கைமாற்றம் செய்யதலாகாது

வாகனத் தரிப்பிடத்தை விட்டு வெளியேறும்போது
இதை பாரம் கொடுக்கல் வேண்டும்

**பகுதி III பிரதேச சபை எல்லைப் பகுதிக்குள் நீச்சல் தடாகங்களை நிர்மாணித்தல் மற்றும் பேணிவருதலை ஒழுங்குபடுத்துதல், முறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்.**

*துணை விதியின் பெயர்.*

1. இந்த பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நீச்சல் தடாகங்களை நிர்மாணித்தல் மற்றும் பேணிவருதலை ஒழுங்குபடுத்துதல், முறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான நியமத்துணை விதிகள் என அழைக்கப்படலாம்.

*நோக்கம்.*

2. பிரதேச சபை எல்லைப் பரப்பிற்குள் பேணிவரப்படுகின்ற நீச்சல் தடாகங்கள் உரிய தரம் கொண்டதாக வும் உபயோகிப்பவர்களின் பாதுகாப்பும் ஆரோக்கியமும் பேணிவரப்படுதலை உறுதிப்படுத்தல் இதன் நோக்கமாகும்.

*துணை விதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய பிரிவு 126 உப பிரிவு (ix) (து) இன் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு இந்த துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*நிறைவேற்ற வேண்டிய பணிகள் (04-10).*

4. இணைப்பு 1 இலுள்ள விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் வருடாந்த உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியும், பொறுப்புமாகும்.

5. இந்தத் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே, பிரதேச சபையின் தவிசாளரினால் எந்தவொரு நீச்சல் தடாகத்திற்கும் உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) முன்னராக குளிப்பதற்காகவும் நீச்சல் தடாகத்திற்காகவும் வழங்கப்படும் நீர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியால் விதந்துரைக்கப்பட்ட தரம் கொண்டதாக காணப்படுதல் வேண்டும்.

(ii) (i) பிரிவில் குறிப்பிட்ட நீர் வழங்கலுக்காக போதுமானளவு கிருமிநாசினிகள் இடப்பட அவசியமான வேலைத்திட்டம் அமுலில் இருத்தல் வேண்டும்

(iii) தடாகத்தில் நீந்துவதற்கு முன்னராக குளிப்பதற்கான நீர்பூக்குழாய் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) நீச்சல் தடாகத்திலுள்ள முழு நீரையும் 24 மணித்தியாலங்களில் இரண்டு தடவைகள் சுத்திகரிப்பு செய்வதற்கும் கிருமி நீக்கம் செய்வதற்குமான நீர்ச் சுற்றோட்ட பம்பியைக் கொண்ட வடிகட்டல் தொகுதி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) நீச்சல் தடாகத்தின் ஒவ்வோர் இடத்தினதும் ஆழம் எவ்வளவு என்பது தடாக மேடையில் தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) நீச்சல் தடாகத்தைச் சுற்றி குறைந்தபட்சம் 8 மீற்றர்களுக்கு ஒன்று வீதம் அமையத்தக்கதாக தடாகத்திற்குள் இறங்கவும் தடாகத்தில் இருந்து வெளியேறவும் துருப்பிடிக்காத உருக்கிலான ஏணிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) நீச்சல் தடாகத்திற்கு நீர் நிரப்பிய பின்னர் அதன் அடித்தளமும் பக்கச்சுவர்களும் தெளிவாகப் புலப்படத்தக்க வகையிலான நிறம் கொண்டதாக நிலஓடுகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) பன்னிரண்டு வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு நீந்த இடமளிக்கப்படுமாயின் அதன்பொருட்டு 1 மீற்றர் ஆழத்தை விஞ்சாத தனிவேறான பகுதியொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ix) நீச்சல் தடாகத்தில் நீர்மேல் பாய்வதற்காக பரண் அமைக்கப்பட்டிருக்குமாயின் அவை கொங்கிறீட்டினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அதன்மீது ஏறுவதற்காக இரும்பு அல்லது உருக்கினால் ஆக்கப்பட்ட பலம்பொருந்திய ஏணிப்படி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) தடாகத்தைப் பாவிப்பவர்களுக்கு போதுமான அளவு உயிர்ப்பாதுகாப்பு மற்றும் முதலுதவி வசதிகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xi) நீச்சல் தடாகத்தைப் பாவிப்பவர்களுக்கு ஆண், பெண் என்ற வகையில் வெவ்வேறாக உடை மாற்றுவதற்கான இடங்களும் மலசலகூடங்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) உடைமாற்றும் அறைகளிலும் மலசலகூடங்களிலும் குளிக்கும் அறைகளிலும் நிலத்தில் நீர் வழிந்தோடியக்கூடியவாறு அமைந்திருப்பதோடு எந் நேரமும் சுத்தமான நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். தினந்தோறும் அதற்கு பொருத்தமான கிருமிநாசினிகளை தெளிக்க வேண்டும்.

(xiii) பிற்பகல் 6.30 மணிக்குப் பின்னரும் நீந்த இடமளிப்பதாயின் தடாகத்தின் உட்புறமும் வெளிப்புறமும் போதுமான அளவில் மின்சார வெளிச்சம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xiv) அனைத்து நீச்சல் தடாகங்களிலும் தேங்கியிருக்கும் குப்பை கூழங்களையும் நீரின் மேற்பகுதியில் மிதக்கும் மாசுக்களையும் தினத்திற்கு ஒருமுறையாவது அல்லது அதை அப்புறப்படுத்தத் தேவையான தடவைகளில் அப்புறப்படுத்த வேண்டும்.

(xv) அடைக்கப்பட்ட பிரதேசம் முழு நேரத்திலும் நல்ல நிலையிலும் சுத்தமான, சுகாதாரமான நிலையிலும் பேணப்படல் வேண்டும்.

(xvi) மலசலகூடங்கள் மற்றும் குளிப்பதற்கான இடங்களில் பாவிக்கப்பட்ட நீர் தங்குதடையின்றி வழிந்தோடத்தக்க வகையில் வடிகான் தொகுதி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvii) அடியில் படியும் கழிவுப்பொருட்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை வீதம் அகற்றப்படல் வேண்டும்.

(xviii) நீச்சல் தடாகத்தின் முழுமையான நீர் கொள்ளளவு குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இருதடவை வீதம் சுத்திகரிக்கப்படுதலும் நோய்க் கிருமிகள் நீக்கப்படுதலும் வேண்டும்.

(xix) உரிமப்பத்திரம் பெற்ற சகல நீச்சல் தடாகங்களிலும் கீழே குறிப்பிடப்படுவனவற்றை அளப்பதற்காக பரிசோதனைத் தொகுதி அல்லது பரிசோதனை உபகரணங்கள் இருத்தல் வேண்டும்.

(அ) அதி கூடிய கிருமி நாசினிகள்

(ஆ) பி.எச். மதிப்பீடு

(இ) மொத்தக் காரத்தன்மை அத்துடன் சயனூரிக் அமிலம் அல்லது குளோரினேற்றப்பட்ட அசியோசயனேனும் ஆகியவற்றில் ஒன்றை பயன்படுத்தும்போது

(ஈ) நீச்சல் தடாகத்தின் நீரில் சயனூரிக் அமிலத்தின் செறிவு

6. (i) நீச்சல் தடாகத்தில் நிரப்பப்பட்டுள்ள நீரின் கிருமித்தொற்று நீக்குவதற்காக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியால் விதிக்கப்பட்டவாறான வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அவராலேயே விதிக்கப்படுகின்றவாறான உபகரணங்களும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மலசலகூடங்களிலும் தடாகத்தில் நீந்துவதற்கு முன்னராக குளிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்ளிலும் நீர்ப்பூக்குழாய்கள் பொருத்தப்பட்டுள்ள இடங்களின் நிலமும் சுவர்களும் நிலஓடுகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

7. (i) உபயோகத்திற்கு எடுக்கும் காலங்களில் எல்லா நீச்சல் தடாகங்களிலும் கீழே காணப்படும் சகல விதிகளுக்கும் ஏற்ப இரசாயனப் பொருட்களாலும் அல்லது செயன்முறைகளின் மூலமும் தொடர்ச்சியாக கிருமி அழிப்புக்கள் செய்யப்படல் வேண்டும்.

(அ) தொற்றுநீக்கி அல்லது தொற்று நீக்கும் நடைமுறை குடிநீரைத் தொற்று நீக்குவதற்கு நியமமானதொரு நடைமுறையாக அல்லது தொற்றுநீக்கியாக இருத்தல் வேண்டும்.

(ஆ) தரப்பரிசோதனை செயல் ஒழுங்குவிதிகளில் இலகுவாகவும் பிழையில்லாமலும் அளவிடக்கூடிய தரப் பெறுபேறுகள் அதிலிருந்து கிடைக்க வேண்டும்.

(இ) நீச்சசல் தடாக நீரைப் பரிகரிப்பதில் வழமையாகப் பயன்படுத்தப்படுகின்ற ஏனைய இரசாயனப் பொருட்களுடன் பயன்படுத்துவதற்கு ஒத்ததாக இருத்தல் வேண்டும்.

(ஈ) பணிப்புகளுக்கிணங்க பயன்படுத்தப்படும்போது, ஏற்றுக்கொள்தகு குளோரி னேற்றத்துக்கப்பால் நீருக்கு நச்சுத்தன்மைகளை அது அளித்தல் கூடாது.

(ii) கிருமிநாசினியின் இயங்கு காரணி குளோரின் ஆக இருப்பின் நியமமுறை ஒன்றினால் அளவிடப்பட்டவாறு நிலையுறுதி அற்றதாய் கட்டற்றுகிடைக்கக்கூடியதாகவுள்ள குளோரின் அளவு நீச்சல் தடாக நீரின் பீ.எச் அளவிற்கு ஏற்ப சம்பந்தப்பட்டவர்களினால் கீழே காணப்படும் அளவைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும்.

| பி.எச். | (சயனூரிக் அமிலத்தால் நிலைப்படுத்தப்படாத) ஆகக்குறைந்த கட்டற்றுக் கிடைக்கக்கூடியதாக வுள்ள எஞ்சியுள்ள குளோரின் |
|---|---|
| 7.5 | 0.40 |
| 7.6 | 0.50 |
| 7.7 | 0.60 |
| 7.8 | 0.70 |
| 7.9 | 0.80 |
| 8.0 | 1.00 |

(iii) கட்டற்றுக் கிடைக்கக்கூடியதாகவுள்ள எஞ்சியுள்ள குளோரினை நிலைப்படுத்துவதற்கு சயனூரிக்கமிலம் பயன்படுத்தப்படின், அல்லது குளோரினேற்றப்பட்ட ஐசோசயனேற்று கலவை ஒன்று தொற்று நீக்கும் இரசாயனப் பொருளாக பாவிக்கப்படுமாயின் நீரிலான சயனூரிக் அமிலத்தின் செறிவு ஆகக் குறைந்தது 30 மி.கி./ லீ. ஆகவும் ஆனால் 100மி.கி/லீற்றரை விஞ்சாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் நியமமுறையொன்றால் அளவிடப்பட்டவாறாக கட்டற்று கிடைக்கக்கூடியதாகவுள்ள எஞ்சியுள்ள குளோரின் அளவு நீச்சல் தடாக நீரின் பி.எச். பெறுமானத்தைப் பொறுத்து ஆகக் குறைந்தது பின்வரும் செறிவிலாவது இருத்தல் வேண்டும். பி.எச். ஆகக் குறைந்த கட்டற்று கிடைக்கக்கூடியதாகவுள்ள எஞ்சியுள்ள குளோரினின் மி.கி.லீ. (சயனூரிக் அமிலம் ஆகக்குறைந்தது 30 மி.கி.லீற்றருக்கு சமமாக ஆனால்100 மி.கி.லீற்றருக்கு அதிகமாகவல்லாது உள்ளது)

| | |
|---|---|
| 7.5 | 1.00 |
| 7.6 | 1.25 |
| 7.7 | 1.50 |
| 7.8 | 1.75 |
| 7.9 | 2.00 |
| 8.0 | 2.50 |

(iv) நீச்சல் தடாக நீரின் தொற்றுகை, குளோரின் கலவைகளுள் ஒன்றல்லாத ஓர் இரசாயனப் பொருளினால் அல்லது நடைமுறையினால் எய்தப்படின் தொற்று நீக்கும் செயற்பாடானது 7.5 என்ற பி.எச். பெறுமானத்தில் நிலையானது ஆக்கப்படாத கட்டற்று கிடைக்கக்கூடியதாகவுள்ள குளோரினின் 0.4 மி.கி/லீற்றர் செறிவினால் வழங்கப்பட்டதற்கு ஆகக்குறைந்தது சமமானதாகவாவது இருத்தல் வேண்டும்.

(v) (i) கிருமிவியல்சார் பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்ட மாதிரிகள், தடாகம் பயன்படுத்தப்படும்போது எடுக்கப்படுதல் வேண்டும் என்பதோடு எஞ்சியுள்ள தொற்று நீக்கி செயலற்றதாக்கப்படுதலும், நீரின் கிருமிவியல்சார் பரிசோதனைக்கான நியம முறையொன்றின் மூலம் பரிசோதனை செய்யப்படுதலும் வேண்டும்.

(ii) நீச்சல் தடாக நீர் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தலாகாது

(அ) நியம ஏகாரி தட்டு எண்ணிக்கையினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஒரு மில்லி லீற்றருக்கு 200 கூட்டங்களுக்கு மேல்

(ஆ) கோலிபோம் அங்கிகள், அத்துடன் 100 மில்லி லீற்றரில் ஈ கோலிவகை 1ஐச் சேர்ந்த அங்கிகள் இல்லாதிருத்தல் வேண்டும்.

(vi) சகல நீச்சல் தடாகங்களிலுமான நீர் பாவிக்கப்படும் சந்தர்ப்பங்ளில் கீழே காணப்படும் இரசாயன, பௌதீக பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) 7.5 க்கு குறையாததும் 8.0 க்கு மேற்படாததுமான பீ.எச் பெறுமானத்தினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு காரத்தன்மையுடையதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) மீதைல் ஆரெஞ்சுப் பரிசோதனையினால் அளவிடப்பட்டவாறு ஆகக் குறைந்தது 50 மி.கி/ லீற்றர் கொண்ட, ஆனால் 150 மி.கி/லீற்றர்க்கு மேற்படாத மொத்தக் காரத்தன்மையை உடையதாகவிருத்தல் வேண்டும்.

(இ) நீச்சல் தடாகத்தின் பக்கத்தில் இருந்து பார்க்குமிடத்து நீச்சல் தடாகத்தின் மிக்க ஆழமான இடத்தில் 15 சென்ரி மீற்றர்(6 அங்குலம்) சுற்றளவுள்ள கறுப்பும் வெள்ளையும் சேர்ந்த தட்டம் ஒன்று தெளிவாகத் தெரியக்கூடிய விதத்தில் இருக்க வேண்டும்.

8. (i) சகல நீச்சல் தடாகங்களும் பாவனையிலுள்ள போது அதன் நடவடிக்கைகள் பற்றி முறையான அறிக்கைகளை வைத்துக்கொள்ள வேண்டுவதுடன் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரம் வழங்கப்பட்ட சபையின் உத்தியோகத்தரால் அந்த அறிக்கையைப் பரிசோதனை செய்ய இடமளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ii) நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையில் சம்பந்தப்பட்டவர்களினால் கீழே காணப்படும் விடயங்கள் சம்பந்தமான நாளாந்த குறிப்புகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(அ) பாவைனைக்கான ஆரம்பிக்கப்படும் நேரமும் பாவிக்கப்படும் மணித்தியாலங்களும்;

(ஆ) குளிப்பவர்களின் எண்ணிக்கை;

(இ) குளிப்பவர்கள் ஆகக்கூடியவர்கள் இருக்கும் சந்தர்ப்பங்கள்;

(ஈ) நீர்ப்பரப்பு ;

(உ) சுத்திகரிக்கும் குழாயும் வடிகட்டிகள் செயற்படும் நேரமும் உபயோகப்படுத்தும் கணக்கினைப் பதியும் மானியும்;

(ஊ) பாவிக்கப்படும் இரசாயனத் திரவங்களின் அளவு;

(எ) பகுதிக் கிருமிநாசினி மானி;

(ஏ) பி.எச்.மானி ;

(ஐ) வேறு இரசாயன சேர்க்கைகள் மானி;

(ஒ) நீச்சல் தடாகத்தின் ஆழமான பகுதியின் நீரின் தெளிவு;

(ஓ) உபகரணம் பராமரித்தலும் பழுதுபார்த்தலும்.

09. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் அவ்வவ் பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுப்பொருட்களும் இப் பகுதியின் 10ஆம் துணைவிதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டு ஊடுருவாத பொருளொன்றினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள தொட்டியொன்றில் இடப்பட வேண்டுமென்பதுடன், மேற்படி கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது ஒருமுறை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மேற்படி தொட்டிகளில் கழிவுப் பொருட்களைக் கொட்டும் போதும் அவற்றை அகற்றும் போதும் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் மேற்படி தொட்டிகளை நல்லமுறையில் மூடிவைத்தல் வேண்டும்:

10. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் கழிவுப் பொருட்களை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) உயிரியல் படியிறக்கம் செய்யப்படக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(ஆ) கண்ணாடி;

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்;

(ஈ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்;

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்களின் உலோகப் பகுதிகள் ;

(ஊ) உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின் போது கிடைக்கின்ற உற்பத்திப் பொருட்களின் பகுதிகள் அல்லது ஏனைய உப உற்பத்திப் பொருட்களின் பகுதிகள்;

(எ) அபாயகரமான கழிவுகள் ;

ஒவ்வொரு வகையான கழிவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் இட்டு மூடிவைப்பது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபையின் தவிசாளரினால் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதிக் கழிவகற்றல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*நிறைவேற்றக் கூடாத பணிகள் (11-12).*

11. (i) பிரதேச சபையின் தவிசாளரினால் அப்பணிக்காக இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமப்பத்திரமொன்று இருந்தாலேயன்றி எவரேனுமொருவரால் பிரதேச சபை அதிகார எல்லைப் பரப்பினுள் நீச்சல் தடாகமொன்றை தாபிக்கவோ, நிர்வகிக்கவோ, இயக்கவோ, நடத்தவோ ஆகாது.

(ii) (i) ஆவது பிரிவில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் இப்பிரிவின் துணை விதிகள் அமுலுக்குவரும் நாளாகும்போதும் பிரதேச சபை அதிகார எல்லைப் பரப்பினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் நீச்சல் தடாகமொன்றை பேணிவருவதற்கான உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள இப்பிரிவின் துணை விதிகள் அமுலுக்குவரும் திகதியில் இருந்து 03 மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதோடு அக்காலப்பகுதி

நிறைவடைந்த பின்னர் உரிமைப்பத்திரமொன்றைப் பெறாமல் அத்தகைய நீச்சல் தடாகமொன்று பேணிவரப்படலாகாது.

12. நீந்துவதற்காக வருகின்ற வாடிக்கையாளர் எவரும் முன்னராகவே குளிக்காமலும் நீச்சலுக்கான உடைகளைப் பாவிக்காமலும் நீச்சல் தடாகத்தை எவ்விதத்திலும் பாவித்தல் ஆகாது.

பிரதேச சபையின் பணி.

(13-15)

13. இந்த துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள நீச்சல் தடாகம் பேணிவரப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபையின் தவிசாளரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

14. இப் பகுதியின் 13ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவோர் உரிமப்பத்திரதாரரும் அத்தகைய அறிவித்தலில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னராக அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்ற வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலான விடயங்களை எழுத்தில் சமர்ப்பித்துள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய அறிவித்தலில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவத்தை பிரதேச சபையின் தவிசாளரைக் கொண்டிருத்தல் வேண்டும். எனினும் அவ்விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலம் பதினான்கு நாட்களை விஞ்சலாகாது.

15. இப் பகுதியின் 14ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவோர் உரிமப்பத்திரதாரரும் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாக விதிக்கப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்படுகின்ற தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் விடுக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றுதலை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்த இடத்திற்காக வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தை பிரதேச சபையின் தவிசாளரினால் இரத்துச் செய்தல் சட்டமுறையானதாக அமைதலும் வேண்டும்.

16. (i) யாதாயினுமொரு நீச்சல் தடாகமொன்றை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 149 உபபிரிவுக்கு அமைவாக வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை குறிப்பிட்ட ஆகக் கூடிய தொகையை விஞ்சாது அறவிடுவதற்கு பிரதேச சபைச் செயலாளருக்கு தத்துவமுண்டு.

(ii) இலங்கை அரசினாலோ மாகாண சபையினாலோ நடாத்தப்படும் நீச்சல் தடாகத்திற்கு கட்டணங்களிலிருந்து மட்டும் விலக்களிக்கப்படும்.

அறவீடுகளும் கட்டணங்களும்.

17. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் செயலாளருக்கோ அல்லது எந்தவொரு அலுவலருக்கோ கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

18. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.

19. இப்பகுதியினி துணை விதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலப்பகுதியில் பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கான உதவிகளைச் செய்வது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும் தத்துவமும் (19-21).

20. நீச்சல் தடாகம் பாவிக்கும் காலகட்டத்தில் சகல நீச்சல் தடாகங்களிலும் நீரின் மாதிரியைப் பெற்றுக்கொண்டு நீரின் தூய்மைத் தன்மையை விஞ்ஞான பண்பு ரீதியாக பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். அவ்வாறான மாதிரியை பெற்றுக் கொண்டவுடன் அந்த நேரத்திலேயே பி. எச் தன்மையையும்,கிருமிநாசனி அழிப்புத் தன்மையையும் பரிசோதனை செய்தல் வேண்டுமென்பதுடன் மேலும் அவ்வாறான பரிசோதனைகளை நிறுத்துவதற்காக எவரும் தடைகளை ஏற்படுத்தக் கூடாது.

*21.* நீச்சல் தடாகம் அமைந்துள்ள பிரதேசம் அல்லது அதனை அண்மித்த பிரதேசமொன்றில் ஏதேனும் பெருவாரியாகப் பரவும் நோய் அல்லது தொற்றுநோய் நிலவுவதாக சுகாதார மருத்துவ உத்தியோகத்தரால் தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய நீச்சல் தடாகத்தை மூடிவிடுமாறு நீச்சல் தடாகத்தின் உரிமையாளருக்கு அல்லது அதற்குப் பொறுப்பாக உள்ளவருக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் அல்லது பிரதேச ஆணையாளர் கட்டளையிட வேண்டும்.

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

*22.* உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

துணை விதிகள் மீறப்படுதல்.

*23.* இத் துணை விதிகளில் உள்ளடக்கப்பட்ட ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறானதாக அமைதல் வேண்டும்.

அபராதமும் தண்டனையும்.

*24.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள் கோடலும் வரை விலக்கணமும்.

*25.* இப்பகுதியின் துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

'பிரதேச சபையின் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச சபையின் தவிசாளர்எனப் பொருள்படுவார்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

'பிரதேச சபை' என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'உரிமப்பத்திரதாரர்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

'உரிமப்பத்திரம் பெற்ற இடம்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப் படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

'பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்' என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

'நீச்சல் தடாகம்' என்பது தேகப்பயிற்சிக்காகவோ பொழுது போக்கிற்காகவோ நீந்தக் கற்றுக்கொள்வதற்காகவோ நீந்துவதற்காகவோ வெளியில் இருந்து வருகின்ற எவரிடமிருந்தும் கட்டணம் அறவிட்டோ கட்டண அறவீடு இன்றியோ நீந்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் நீர்த்தடாகம் எனப்பொருள்படும்.

**இணைப்பு - 01**

**நீச்சல் தடாகம் நடாத்துவதற்கான வியாபாரவரி/வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம்**

1. நீச்சல் தடாகத்தின்பெயர் :.......................................................

2. நீச்சல் தடாகம் அமைந்துள்ளஇடம்:

   (i) வட்டாரம் :----.
   (ii) ஆதன இல. :----.
   (iii) வீதியின் பெயர் :----.
   (iv) கிராம அலுவலர் பிரிவு இலக்கமும் பிரிவின் பெயர் :----.

3. (i) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
   (ii) நிரந்தர முகவரி :----.
   (iii) விண்ணப்பதாரியின் கிராம அலுவலர்பிரிவு, இலக்கமும் பிரிவின் பெயரும் :----.
   (iv) விண்ணப்பதாரியின் அடையாள அட்டை இல. :----.
   (v) விண்ணப்பதாரியின் தொலைபேசி இல. :----.
   (vi) விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி :----.

4. (i) நீச்சல் தடாகம்ஆரம்பிக்கப்பட்ட திகதி :----.
   (ii) நீச்சல் தடாகத்தின் நடத்துநரின்/முகாமையாளரின்/பிரதிநிதியின்
      (அ) பெயர் :----.
      (ஆ) தொலைபேசி இல. :----.

5. கட்டடம்/ நிலம் வாடகைக்கு / குத்தகைக்குபெறப்பட்டதாயின்
   (i) உரிமையாளரின்பெயர் :----.
   (ii) முகவரி :----.

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா ? ஆம்/ இல்லை
   ஆம் எனில் உரிம இல. :----. திகதி :----.

7. பெரியவர், சிறியவர்களுக்காக தனித்தனியாக நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளதா? ஆம்/ இல்லை
   அவ்வாறு தனித்தனியாக நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளதாயின்,
   (i) பெரியவர்களுக்கானநீச்சல் தடாகத்தின் விஸ்தீரணம்(பரப்பு) - சதுர மீற்றரில் :----.
   (ii) சிறியவர்களுக்கானநீச்சல் தடாகத்தின் விஸ்தீரணம்(பரப்பு) - சதுர மீற்றரில் :----.

8. ஆடை மாற்றும் அறைகள்
   (i) ஆண்களுக்கான ஆடை மாற்றும் அறைகளின் எண்ணிக்கை :----.
   (i) பெண்களுக்கான ஆடை மாற்றும் அறைகளின் எண்ணிக்கை :----.

9. நீச்சல் தடாகத்தை நடாத்த அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை (முகாமையாளர் உள்ளடங்கலாக) :----.

10. மலசலகூடங்கள் -
   (i) ஆண் பாவனையாளர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :----.
   (ii) பெண் பாவனையாளர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :----.

11. நீர் -
   (i) நீச்சல் தடாகத்திற்கான நீர் பெறும் வழிமுறை/வழிமுறைகள், அவற்றின் எண்ணிக்கை :----.
   (ii) பாவனையாளர்களுக்கான குடிநீர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழிமுறை/வழிமுறைகள், அவற்றின் எண்ணிக்கை :----.
12. கழிவு நீர் அகற்றும் முறை :----.
13. திண்மக்கழிவுப்பொருட்களை இறுதியாக அகற்றும் முறையியல் :----.

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்ட நீச்சல் தடாகம் நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20........ ஆண்டுக்கான தொழில் உரிமப்பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்டவிதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :-----.

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

-----,
தவிசாளர்/செயலாளர்/
அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம் :-----. ஆதன இல. :-----.

வீதியின் பெயர்:-----.

உரிமையாளரின் பெயர் :-----.

ஆதன விபரம் :-----.

ஆண்டுப் பெறுமதி :----. வீதவரி நிலுவை :----.

உண்டு :----. இல்லை :----.

------,
நிர்வாக உத்தியோகத்தர்/
பகுதித் தவிசாளர்

திகதி :-----.

**வருமான வரிப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:-----.

செலுத்த வேண்டிய கட்டணம் :-----.

பிரிவு A B C :-----.

குறிப்பு :-----.

------,
வருமான வரிப் பரிசோதகர்

திகதி :-----.

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

**பொதுச்சுகாதார பரிசோதகரின் அறிக்கை**

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

------,
பொதுச் சுகாதார பரிசோதகர்.

திகதி :-----.

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

------,
சுகாதார வைத்திய அதிகாரி.

திகதி :-----.

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :-----. உபயோகம் மற்றும் :-----. சுற்றுச்சூழல் உரிமம் :-----.

சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :-----.

குடிபுகு சான்றிதழ் :-----. மதுவரி உரிமம் :-----.

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

------,
பிரதம வருமானப் பரிசோதகர்.

திகதி :-----.

**செயலாளரின்/கணக்காளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

------,
செயலாளர்.

திகதி :-----.

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை

------,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-----.

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. :-----. பற்றுச்சீட்டு திகதி :-----.

உரிம இல. :-----. உரிமத் திகதி :-----.

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

------,
இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்

திகதி :-----.

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

------,
கணக்காளர்/செயலாளர்

திகதி :-----.

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

------,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

திகதி :-----.

## அத்தியாயம் 5

## பகுதி I - பிரதேச சபை எல்லைப் பகுதிக்குள் பனிக்கட்டித் தொழிற்சாலைகளைக் கொண்டு நடாத்துதலை ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல் முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்

துணை விதியின் பெயர்.

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பேணிவரப்படுகின்ற பனிக்கட்டித் தொழிற்சாலைகளை ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல் முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

நோக்கம்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை பிரதேசத்தில் உள்ள பனிக்கட்டித் தொழிற்சாலை பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கும், சுற்றாடலுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பேணிவரும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

துணை விதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 126 உப பிரிவு (ix) (ஓ) பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்தத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்ற வேண்டிய பணிகள் (04-15).

4. இணைப்பு 01 இலுள்ள விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் வருடாந்த உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியும், பொறுப்புமாகும்.

5. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டும் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு பனிக்கட்டித் தொழிற்சாலைகளுக்கும் உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை தூய்மையாகவும் புதுப்பித்த நிலையிலும் காற்றோட்டமுள்ள நிலையிலும் பேணிவருதல் வேண்டும்;

(ii) ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்கள் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப்பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை;

(iii) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் ஒவ்வொரு அறையிலும் சீலிங் (உட்கூரை) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி சீலிங் நில மட்டத்திலிருந்து 3 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்;

(iv) கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்;

(v) தொழிற்சாலையில் பனிக்கட்டி உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள அனைத்து அறைகளின் சுவர்களின் உயரம் மூன்று மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பதோடு, செங்கற்கள் அல்லது சீமெந்துக் கற்களால் கட்டப்பட்டு உட்பக்கம் சாந்து பூசப்பட்டும் வர்ணப்பூச்சு பூசப்பட்டும் இருத்தல் வேண்டும். இல்லையேல் திடகாத்திரமான தகடுகளை உபயோகித்து வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vi) பலகையினால் ஆக்கப்பட்ட பகுதிகளில் எண்ணெய் சாயம் பூசப்பட்டு அல்லது வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்;

(vii) ஒவ்வொரு அறையிலும் தளப்பகுதி சீமெந்து இடப்பட்டு சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மினுக்கப்படல் அல்லது பீங்கான் கற்கள் (நில ஓடுகள்) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(viii) பனிக்கட்டித் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச்சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் வேண்டுமென்பது மாத்திரமன்றி குறைந்தபட்சம் ஒவ்வோர் ஆறுமாதங்களுக்கும் ஒருதடவை வீதம் இத்தரச்சான்றிதழ் பெறப்படல் வேண்டும். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்படுகின்ற நீர் பனிக்கட்டித் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படுமாயின் அத்தகைய தரச்சான்றிதழ் கிடைத்துள்ளதாக கருதப்படல் வேண்டும்;

(ix) பனிக்கட்டித் தொழிலுக்கும் அதனோடு தொடர்புடைய பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்ற நீர் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுமாயின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் நீர் அசுத்தமடைவதைத் தடுப்பதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(x) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற கழிவுகளை கையாள்வதற்காக இப் பகுதியின் 12ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு அமைவாக கையாளத்தக்க வகையில் செயலாற்றி இருத்தல் வேண்டும்;

(xi) பிரதேச சபையினால் கழிவுநீர் வடிகாலமைப்பு பேணிவரப்படுவதாயின் உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை மேற்படி கழிவுநீர் வடிகாலமைப்புக்கு வழிந்தோடச் செய்ய முடியுமென்பதுடன் அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில், மேற்படி கழிவுநீரை, நீர் உறிஞ்சிக்கொள்ளும் குழியொன்றுக்கு வடிந்தோடச் செய்தல் வேண்டும். இல்லையேல் சுழற்றி முறை நடவடிக்கை மூலம் சுத்தம் செய்து பொது நீர்வடிகாலொன்றுக்கு விடுவித்தல் வேண்டும். மேலும் மேற்படி நீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்கும் வகையில்

திறந்து வைத்தலாகாது என்பதுடன் அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கிணற்றிலிருந்து பதினைந்து மீற்றர் தூரத்திற்குக் குறையாத தூரத்தில் இது அமைந்திருத்தல் வேண்டும்;

(xii) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மலசலகூடம், கழிவுக் குழி அல்லது திறந்த கழிவு வடிகான் அல்லது உறிஞ்சியிழுக்கும் கிடங்கு, பனிக்கட்டி தயாரிக்கும் அறை மற்றும் பனிக்கட்டியை வெளியே விநியோகிக்கும் இடம் குறைந்தது 15 மீற்றர் தூரத்தில் நிர்மாணித்தல் வேண்டும்;

(xiii) சாதாரண தீயணைப்புக் கருவிகளும் மின்சாரத் தீயணைப்புக் கருவிகளும் தேவையான அளவில், இயங்கு நிலையில் காணப்படல் வேண்டும்.

6. வர்ணம் பூசப்பட்டிருக்க வேண்டுமென இத் இப் பகுதியின் 5ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு அமைவாக விதிக்கப்பட்டுள்ள சகல பகுதிகளும் அவ்வாறோ ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறையேனும் வர்ணம் பூசப்படுதல் வேண்டும்.

7. பனிக்கட்டி தயாரிக்கப்படுகின்ற இடமும் பனிக்கட்டியை வெளியே விநியோகிக்கும் இடமும் குறைந்தபட்சம் ஒரு நாளுக்கு ஒரு தடவை வீதம் நீரினால் கழுவிவிடப்பட ஆவன செய்வித்தல் வேண்டும்.

8. பனிக்கட்டி தயாரிக்கப்படுகின்ற தொழிற்சாலையொன்றின் சகல உரிமையாளர்களினாலும் அவரது பெயரையும் 'உத்தரவுபெற்ற பனிக்கட்டி தொழிற்சாலை' என்ற வசனத்தை மும்மொழிகளில் எழுதப்பட்ட பலகையொன்றினை உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் வெளிப்படையாக காட்சிக்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. பனிக்கட்டி தொழிற்சாலையொன்றின் உற்பத்திப் பொருட்களை விற்பனைக்காக கொண்டு செல்லும் ஆட்கள் பனிக்கட்டி தொழிற்சாலையொன்றின் உரிமையாளரினால் கையொப்பமிடப்பட்ட பதிவு செய்யபட்ட அனுமதியட்டையை வைத்திருத்தல் வேண்டும்.

10. பனிக்கட்டி தொழிற்சாலையொன்றின் உரிமையாளருக்கு வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தின் பிரதியை உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் வெளிப்படையாக காட்சிக்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. பனிக்கட்டித் தயாரிப்பில் ஈடுபடுகின்ற அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பு தலைக்கவசம், முகக்கவசம், கைக்கவசம் மற்றும் பிற தேவையான பாதுகாப்பு அணிகலன்களை வழங்க வேண்டியதும் மேற்படி ஊழியர்கள் பனிக்கட்டித் தயாரித்தல் பணியில் ஈடுபட்டுள்ள எல்லா வேளைகளிலும் மேற்படி பாதுகாப்பு அணிகலன்களை அணிந்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டியதும் உரிமப்பத்திரதாரரின் கடமையாக அமைதலும் வேண்டும்.

12. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் அவ்வப் பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுப்பொருட்களும் இப் பகுதியின் 13ஆம் துணைவிதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டு ஊடுருவாத பொருளொன்றினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள தொட்டியொன்றில் இடப்பட வேண்டுமென்பதுடன், மேற்படி கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது ஒருமுறை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மேற்படி தொட்டிகளில் கழிவுப் பொருட்களை கொட்டும் போதும் அவற்றை அகற்றும் போதும் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் மேற்படி தொட்டிகளை நல்லமுறையில் மூடிவைத்தல் வேண்டும்.

13. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் கழிவுப் பொருட்களை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்:-

(அ) உயிரியல் படியிறக்கம் செய்யப்படக்கூடிய கழிவுப் பொருட்கள்;
(ஆ) கண்ணாடி;
(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்;
(ஈ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்;

(உ) இரும்பு மற்றும் ஏனைய வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய வகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள் ;

(ஊ) உற்பத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின் போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும் ;

(எ) அபாயகரமான கழிவுகள் .

போன்றவாறு வகைப்படுத்தி ஒவ்வொரு வகையான கழிவையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைப்பது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபையின் தவிசாளரினால் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

14. உரிமப்பத்திரம் பெற்ற இடம், பாவிக்கப்பட்ட உபகரணங்கள் தினந்தோறும் சுத்தம் செய்யப்படல் வேண்டுமென்பதோடு சிறந்த நிலையில் பேணிவரப்படல் வேண்டும்.

15. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் உரிமப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

*நிறைவேற்றக் கூடாத பணிகள் (16 - 22).*

16. பிரதேச சபையின் தவிசாளர்அல்லது பிரதேச சபை ஆணையாளரினால் அப்பணிக்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமப்பத்திரமொன்று இருந்தாலேயன்றி எந்த ஒருவராலும் பிரதேச சபை பிரதேசத்தில் பனிக்கட்டித் தயாரிப்புத் தொழிற்சாலையொன்று பேணிவரப்படலாகாது.

17. ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி முடிந்தாலன்றி, மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தலோ ஆகாது.

18. நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொருவரும் உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் எவ்வகையான பணியிலும் ஈடுபடுதல் அல்லது ஈடுபட இடமளித்தல் ஆகாது.

19. பனிக்கட்டித் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக, ஒளி ஊடுருவாததும் எளிதாக சுத்தம் செய்யப்படக்கூடியதுமான கொள்கலன்களில் இட்டு வைக்க வேண்டுமென்பதோடு அப்பொருட்கள் பனிக்கட்டி உற்பத்திக்காக பனிக்கட்டி உற்பத்தி அறையில் வைக்கபட்டாலொழிய அப்பொருட்களை களஞ்சியப்படுத்தப்படும் இடத்திற்கு வெளியில் வைத்திருத்தல் ஆகாது.

20. (i) பனிக்கட்டி தயாரிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள அறை வேறுபணிகளுக்காக ஈடுபடுத்தப்படலாகாது.

(ii) எரிபொருள் களஞ்சியப்படுத்துவதற்காக தனிவேறான அறை அல்லது இடம் இருத்தல் வேண்டுமென்பதோடு, பனிக்கட்டிகளைக் களஞ்சியப்படுத்தும் அல்லது பனிக்கட்டிகளை வெளியே விநியோகிக்கும் அறைகளினூடாக எரிபொருள் எடுத்துச் செல்லல் ஆகாது'

21. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் யாதாயினுமொரு இடமொன்றில் அல்லது ஒரு பகுதியில் எந்தவொரு விலங்கையும் அல்லது பறவையையும் வைத்திருத்தலாகாது.

22. தொழிற்சாலையொன்றின் எந்தவொரு உரிமையாளராலும் பனிக்கட்டி உற்பத்தியின்போது பயன்படுத்தப்படும் பொருட்களும், பண்டங்களும் தவிர எந்தவொரு பொருட்களும், பண்டங்களும் தொழிற்சாலைக்குள் கொண்டு வருதல் கூடாது.

*பிரதேச சபையின் பணி (23-24).*

*23. பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஏதேனுமொரு உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பனிக்கட்டி உற்பத்தி மாதிரியை பரிசோதனை நோக்கத்திற்காக அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளல் சட்டபூர்வமானதாகும்.*

*24. இந்த துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள பனிக்கட்டித் தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபையின் தவிசாளர்அல்லது பிரதேச ஆணையாளரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.*

*அறவீடுகளும் கட்டணங்களும்.*

*25. யாதாயினுமொரு பனிக்கட்டித் தொழிற்சாலையொன்றை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச செயலாளருக்கு சட்டபூர்வமானதாகும்.*

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

*26. இத் துணைவிதியில் பிரதேச சபைத் தவிசாளர் அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் செயலாளருக்கோ அல்லது எந்தவொரு அலுவலருக்கோ கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.*

*உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.*

*27. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.*

*பரிசோதனை நடைமுறையும் தத்துவமும் (28-31).*

*28. இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் ஆணையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.*

*29. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.*

*30. இப் பகுதியின் 24ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலின் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.*

*31. இப் பகுதியின் 30ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர்அல்லது பிரதேச சபையின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு.*

*32.* உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும். முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

*33.* இத்துணை விதிகளில் உள்ளடக்கப்பட்ட ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறானதாக அமைதல் வேண்டும். துணை விதிகள் மீறப்படுதல்

*34.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமெரருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம்ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமெரருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும். அபராதமும் தண்டனையும்

*35.* இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து, பொருள்கோடலும் வரைவிலக்கணமும்

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

'பிரதேச சபை' என்பது பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்' என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

'உரிமப்பத்திரதாரர்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

'உரிமப்பத்திரம் பெற்ற இடம்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப் படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

'பனிக்கட்டித் தொழிற்சாலை' என்பது வணிக அடிப்படையில் நுகர்வுக்காக பொறிமுறை சார்ந்த வழிமுறையில் நீரை உறையச்செய்விக்கின்ற தொழிற்சாலை எனப் பொருள்படும்.

**இணைப்பு - 01**

**பனிக்கட்டித் தொழிற்சாலை நடாத்துவதற்கான வியாபாரவரி/வியாபார உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20............**

1. பனிக்கட்டித் தொழிற்சாலையின் பெயர் :----.
2. பனிக்கட்டித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்:
   (i) வட்டாரம் :----.
   (ii) ஆதன இல. :----.
   (iii) வீதியின் பெயர் :----.
   (iv) கிராம அலுவலர் பிரிவின் பெயரும் இலக்கமும் :----.

3. (i) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
   (ii) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி :----.
   (iii) விண்ணப்பதாரியின் கிராம அலுவலர் பிரிவு இலக்கமும் பிரிவின் பெயரும் :----.
   (iv) விண்ணப்பதாரியின் தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.
   (v) விண்ணப்பதாரியின் தொலைபேசி இல. :----.
   (vi) விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி :----.

4. (i) பனிக்கட்டிதொழில் ஆரம்பிக்கப்பட்ட திகதி :----.
   (ii) பனிக்கட்டித்தொழிற்சாலைநடத்துநரின்/முகாமையாளரின்/பிரதிநிதியின்
      (அ) பெயர் :----.
      (ஆ) தொலைபேசி இலக்கம் :----.

5. நிலம்/ கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு பெறப்பட்டதாயின்
   (i) உரிமையாளரின்பெயர் :----.
   (ii) முகவரி :----.

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா? ஆம்/ இல்லை
   ஆம் எனில் உரிம இல. :----. திகதி :----.

7. தொழில் நிலையத்தை நடாத்த அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை (முகாமையாளர் உள்ளடங்கலாக) :----.

8. மலசலகூடங்கள் -
   (i) ஆண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்க :----.
   (ii) பெண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :----.

09. நீர்பெறப்படும் வழிமுறை/ வழி முறைகள், அவற்றின் எண்ணிக்கை :----.

10. கழிவுநீர் அகற்றும் முறை / முறைகள் :----.

11. திண்மக் கழிவுப் பொருட்களை இறுதியாக அகற்றும் முறையியல் :----.
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்ட பனிக்கட்டித் தொழிற்சாலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20.......... ஆண்டுக்கான தொழில் உரிமப்பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்டவிதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

-----,
தவிசாளர்/செயலாளர்/
அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம் :-----. ஆதன இல. :-----.

வீதியின் பெயர்:-----.

உரிமையாளரின் பெயர் :-----.

ஆதன விபரம் :-----.

ஆண்டுப் பெறுமதி :----. வீதவரி நிலுவை :----.

உண்டு :----. இல்லை :----.

------,
நிர்வாக உத்தியோகத்தர்/
பகுதித் தவிசாளர்.

திகதி :-----.

**வருமான வரிப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:-----.

செலுத்த வேண்டிய கட்டணம் :-----.

பிரிவு A B C :-----.

குறிப்பு :-----.

------,
வருமானப் பரிசோதகர்.

திகதி :-----.

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

பொதுச்சுகாதார பரிசோதகரின் அறிக்கை

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

------,
பொதுச் சுகாதார பரிசோதகர்.

திகதி :-----.

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

------,
பிரதம சுகாதார வைத்திய அதிகாரி.

திகதி :-----.

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :-----. உபயோகம் மற்றும் :-----. சுற்றுச்சூழல் உரிமம் :-----.

சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :-----.

குடிபுகு சான்றிதழ் :-----. மதுவரி உரிமம் :-----.

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

------,
பிரதம வருமானப் பரிசோதகர்.

திகதி :-----.

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

------,
செயலாளர்.

திகதி :-----.

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை

------,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-----.

**நானாவித இறைவரிப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. :-----. பற்றுச்சீட்டு திகதி :-----.

உரிம இல. :-----. உரிமத் திகதி :-----.

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

------,
இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

திகதி :-----.

*பிரதேச சபைத் தவிசாளரின் கைபொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.*

------,
*செயலாளர்.*

*திகதி :-----.*

*உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.*

------,
*பிரதேச சபைத் தவிசாளர்/*
*அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.*

*திகதி :-----.*

---

**பகுதி II - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குளிர்பானத் (வாயுப்பானத்) தொழிற்சாலைகள் முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் பற்றிய நியமத் துணைவிதிகள்.**

*1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குளிர்பானத் தொழிற்சாலைகளை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என இவை அழைக்கப்படலாம்.* துணைவிதியின் பெயர்.

*2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சௌகரியத்திற்கும் சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்கிலும் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.* நோக்கம்.

*3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 உப பிரிவின் (ix) (இ) இன் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்தத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.* துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

*4. இணைப்பு 01 இலுள்ள விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் வருடாந்த உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியும், பொறுப்புமாகும்.* நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4-16).

*5. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டும் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு குளிர்பானத் தொழிற்சாலைகளுக்கும் உரிமப்பத்திரம் வழங்கப்படும்.*

(i) *குளிர்பானத் தொழிற்சாலையுள்ள இடத்தை தூய்மையாகவும் புதுப்பித்த நிலையிலும் பேணிவருதல் வேண்டும்;*

(ii) *குளிர்பானத் தொழிற்சாலையிலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்;*

(iii) *மேற்படி சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், இருபுறமும் சாந்து பூசப்பட்டு அல்லது மேற்பரப்பு சீமெந்தினால் மினுக்கப்பட்டு, தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் சமையலறை தவிர்ந்த வேறு அறைகள் பலகையினால் அல்லது யாதாயினும் உலோகத்தகடு வகையினால் அல்லது பலகை மற்றும் யாதாயினும் உலோக வகையினால் நிர்மாணிக்கப்பட்டு தீந்தை பூசப்பட்டிருப்பது இந்த நியமத்திற்கு உட்பட்டதாகக் கருதப்படும்;*

(iv) குளிர்பானத் தொழிற்சாலையின் ஒவ்வொரு அறையிலும் சீலிங் (உட்கூரை) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி சீலிங் நில மட்டத்திலிருந்து 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்;

(v) ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்கள் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப்பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை;

(vi) கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்;

(vii) ஒவ்வொரு அறையிலும் தளப்பகுதி சீமெந்து இடப்பட்டு சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மினுக்கப்படல் அல்லது பீங்கான் கற்கள் (நில ஓடுகள்) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(viii) குளிர்பான உற்பத்திக்காக பயன்படுத்தும் அறைகளிலிருந்து வெறுமையான போத்தல்கள் கழுவும்போதும், ஊழியர்களின் குளியல் அறைகளிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் தடையின்றி வழிந்தோடுவதற்குப் போதுமான வடிகாலமைப்பு முறையொன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(ix) குளிர்பான உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படும் கலவைப் பொருட்கள், பிற இரசாயனப் பொருட்கள், குளிர்பானங்களை பொதியிடுவதற்காக பயன்படுத்தப்படும் போத்தல் அல்லது வேறு ஏதேனும் பொதியிடல் பொருட்கள் களஞ்சியபடுத்தி வைப்பதற்காக ஆகக்குறைந்தது அறையொன்றாவது வேறாக இருத்தல் வேண்டுமென்பதோடு, இந்த அறைகள் எலிகள் உட்பட வேறு பிராணிகளின் தொல்லையின்றி பேணுவதற்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(x) குளிர்பானத் தொழிற்சாலையில் உற்பத்திக்காக உபயோகப்படுத்தும் நீர் மனித பாவனைக்கு உகந்ததென தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்படும் தரச் சான்றிதழொன்றை பெற்றிருக்க வேண்டுமென்பதோடு, ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருதடவை இந்த தரச் சான்றிதழை பெற்றுக் கொள்தலும் வேண்டும். தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபையினால் விநியோகிக்கப்படும் நீர் இந்த உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படுமாயின் இந்த தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாக கருதப்படுதல் வேண்டும்;

(xi) குளிர்பானத் தொழிற்சாலைக்கும் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கருமங்களுக்கும் பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைப்பதாயின், அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் நீர் அசுத்தமாவதைத் தடுப்பதற்குப் போதுமானளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(xii) வெற்றுப் போத்தல்களைக் கழுவுவதற்குரிய இடம் குளிர்பானங்கள் தயாரிக்கும் அறைகளிலிருந்து தனிவேறான ஒரு இடத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், மேலே (x) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்டவாறு தரச் சான்றிதழ் வழங்கப்பட்ட நீரையே அதற்காகப் பாவித்தல் வேண்டும்;

(xiii) குளிர்பான தொழிற்சாலையின் கருமங்களிலிருந்து பிறப்பிக்கப்படும் கழிவுப் பொருட்கள் இப் பகுதியின் 12 ஆம் துணைவிதியில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தி அகற்றுவதற்கேதுவாக தனித்தனியான பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் இருத்தல் வேண்டும்;

(xiv) குளிர்பான தொழிற்சாலை ஊழியர்களுக்காக குறைந்தது பத்துப் பேருக்கு ஒரு மலசலகூடம் வீதம் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறான மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் அம்மலசலகூடங்கள் குளிர்பானங்கள் தயாரிக்கும் அறைகளிலிருந்து நேரடியாகத் தொடர்புபடாதவாறு சுகாதாரத்தைப் பேணக்கூடியவாறான தூரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.;

(xv) குளிர்பானங்கள் தயாரிக்கப்படும் எந்தவொரு அறை அல்லது அதற்காகப் பாவிக்கப்படும் நீர், நிலத்துக்கடியிலுள்ள நீர்த் தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அவ்விடத்திலிருந்து 18 மீற்றருக்குக் குறையாத தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் வேண்டும் ;

(xvi) குளிர்பானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் நீர் கிணற்றிலிருந்து பெறப்படுவதாயின் அவ்விடத்திலிருந்து 18 மீற்றருக்குக் குறையாத தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் வேண்டும்.

6. தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டுமென இப் பகுதியின் 5 ஆம் துணைவிதியில் விதிக்கப்பட்டுள்ள சகல பகுதிகளும் அவ்வாறே ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறையேனும் தீந்தை பூசுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

7. குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் எல்லா அறைகளையும் தினந்தோறும் ஒரு தடவையேனும் கழுவுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8. குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் எல்லா அறைகளும் அவற்றின் சுற்றாடல், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் சுத்தமாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

9. குளிர்பானத் தயாரிப்பு தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் குளிர்பான வகைகளை பொதியிடுவதற்கு உபயோகிக்கும் போத்தல்களைச் சுத்தஞ் செய்கையில் -

(i) அப்போத்தல்களில் முன்னர் ஒட்டப்பட்டிருந்த லேபிள்களை அகற்றுவதற்கும் முதற்தடவைச் சுத்திகரிப்புக்கும், ஒரு தொட்டியும் ; அத்துடன்

(ii) அந்த போத்தல்களை இறுதியாகச் சுத்தஞ் செய்வதற்கு பிறிதொரு தொட்டியும் என குறைந்த பட்சம் இரண்டு தொட்டிகள் பாவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவற்றை இறுதியாக ஓடும் நீரில் சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

10. குளிர்பான பொதியிடலுக்காக கண்ணாடியால் தயாரிக்கப்பட்ட போத்தல்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் பொதியிடல் வகை அல்லது பொதியிடல் வகைகள் உபயோகிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பொதியிடல் வகையானது ஒரு தடவை மாத்திரம் பாவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை சுகாதார பாதுகாப்பு மிக்க பொருட்களால் தயாரிக்கப்பட்ட பொதியிடல் வகையென்பதை உறுதி செய்துகொள்ளல் உரிமப்பத்திரம் பெறுநரின் பணியாக இருத்தல் வேண்டும். இச்செயற்பாட்டின்போது சுகாதார அதிகாரியால் வழங்கப்படும் எழுத்து மூலமான சான்றிதழ் போதுமானதெனக் கருதப்படல் வேண்டும். மேலும் உபயோகிக்கப்பட்ட மூலப்பொருட்கள், உற்பத்தி திகதி, முடிவுறும் திகதி, விலை ஆகியன அடங்கிய சிட்டை உற்பத்தி பொருளின் பொதியில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

11. குளிர்பானத் தொழிற்சாலையில் பணிபுரியும் சகல ஊழியர்களுக்கும் பாதுகாப்பு முகத் திரை, கையுறை உட்பட தேவைப்படும் பிற பாதுகாப்பு அங்கிகள் வழங்கியிருப்பதும் இந்த ஊழியர்கள் குளிர்பான உற்பத்தி கடமையில் ஈடுபடும் சகல சந்தர்ப்பங்களிலும் இந்த பாதுகாப்பு அங்கிகளை அணிந்திருப்பதனை உறுதிப்படுத்துவதும் உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாதல் வேண்டும்.

12. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் அவ்வப் பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுப்பொருட்களும் இப் பகுதியின் 13 ஆம் துணைவிதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டு, ஊடுருவாத பொருளொன்றினால் உருவாக்கப்பட்டுள்ள தொட்டிகளில் இடப்படல் வேண்டும். மேற்படி கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு ஒருமுறை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்படல் வேண்டுமென்பதுடன் மேற்படி தொட்டிகளில் கழிவுப் பொருட்களைக் கொட்டும் போதும் அவற்றை அகற்றும் போதும் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் தொட்டிகளை நல்லமுறையில் மூடிவைத்தல் வேண்டும்.

13. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் அவற்றை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(ஆ) கண்ணாடி;

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்;

(ஈ) பொலித்தீன் ,பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்;

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள் ;

(ஊ) உற்பத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின்போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும் ;

(எ) அபாயகரமான கழிவுகள்.

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் இடுவது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(i) மேலே (i) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளல் வேண்டும்.

14. உரிமப்பத்திரம் பெற்ற குளிர்பான உற்பத்தி நிலையத்தின் சகல உரிமையாளர்களாலும் அவரது பெயரையும் 'அனுமதிக்கப்பட்ட குளிர்பான உற்பத்தி நிலையம்' என்ற வசனங்களை தெளிவாக சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் வரையப்பட்ட பலகையொன்றை உரிமப் பத்திர இடத்தில் வெளிப்படையாக தெரியுமிடத்தில் பொருத்தி வைக்க வேண்டும்.

15. குளிர்பான உற்பத்தி நிலையத்தின் சகல உரிமையாளர்களாலும் குளிர்பான உற்பத்தி நிலையத்தின் உரிமப்பத்திரத்தை பிரேமிட்டு உற்பத்தி நிலையத்தில் வெளிப்படையாகத் தெரியுமிடத்தில் தொங்கவிடப்படல் வேண்டும். குளிர்பான விற்பனையுடன் தொடர்புபட்டுள்ளவர்களது பெயர்களும் விலாசமும் கொண்ட பட்டியலை உற்பத்தி நிலையத்தில் வைத்திருக்கவும் அதை சகல பொதுவான நேரத்திலும் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பரிசோதனை செய்யக்கூடியவாறு வைத்திருக்கவும் அவர் ஏற்பாடு செய்தல் வேண்டும்

நிறைவேற்றக் கூடாத பணிகள் (17-20).

16. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

17. பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் குறித்த நோக்கத்துக்காக வழங்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமப்பத்திரம் இருந்தாலொழிய எவரேனும் ஆள் ஒருவரினால் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குளிர்பானத் தொழிற்சாலையொன்று நடாத்திச் செல்லப்படலாகாது.

18. குளிர்பான உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படும் கலவைப்பொருட்கள், பிற இரசாயனப் பொருட்கள் காலாவதியாகும் திகதிக்கு முன்னர் போதுமானளவு காலம் இருந்தாலொழிய ஏதேனும் சந்தர்பத்தில் அப்பொருட்களை குளிர்பான உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படலாகாது.

19.(i) ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி

முடிந்தாலன்றி, மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்துப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தலோ ஆகாது.

(ii) நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப் பத்திரத்திற்குரிய இடத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

20. குளிர்பானம் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற கலவை மற்றும் இரசாயனப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக, ஒளி ஊடுருவாததும் எளிதாக சுத்தம் செய்யப்படக்கூடியதுமான கொள்கலன்களை பயன்படுத்த வேண்டுமென்பதோடு அப்பொருட்களை குளிர்பான உற்பத்திக்காக குளிர்பான உற்பத்தி அறையில் வைத்திருக்க வேண்டுமொழிய வெளியில் வைத்திருத்தல் ஆகாது.

21. பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் குளிர்பானம் உற்பத்தி தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள குளிர்பான வகைகளின் மாதிரியை, அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளல் சட்டபூர்வமானதாகும்.

பிரதேச சபையின் பணி (21-22).

22. இந்த துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள குளிர்பான உற்பத்தி நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

23. யாதாயினுமொரு குளிர்பானத் தொழிற்சாலையை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 பிரிவுக்கு அமைவாக உச்சக் கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு பிரதேச சபைச் செயலாருக்குச் சட்ட பூர்வமானதாகும்.

அறவீடுகளும் கட்டணங்களும்.

24. இத் துணைவிதியில் பிரதேச முதல்வருக்கு அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

25. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம்.

26. இப்பகுதியின் இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

பரிசோதனை நடைமுறையும் தத்துவமும் (26-29).

27. இப் பகுதியின் துணை விதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

28. இப் பகுதியின் 22 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

*29.* இப் பகுதியின் 28ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றுவதை தவிர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்ட உரிமப்பத்திரம் பிரதேச சபையின் தவிசாளரினால் இரத்துச் செய்வதற்கு சட்டரீதியான தத்துவம் உண்டு.

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

*30.* உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

துணைவிதிகளை மீறுதல்.

*31.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

அபராதமும் தண்டணையும்.

*32.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள்கோடலும் வரை விலக்கணமும்.

*33.* இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

'பிரதேச சபை' என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'உரிமப்பத்திரதாரர்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

'உரிமப்பத்திரம் பெற்ற இடம்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப் படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

'பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்' என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

'குளிர்பானம்' என்பது பழங்கள், எஸ்என்ஸ், கலவை (சிறப்) அனைத்தும் அல்லது ஒருவகையை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் போத்தல்களில் அல்லது வேறு ஏதேனும் வகையில் பொதிசெய்யப்படுகின்ற வாயுப்பானம் என பொருள்படுவதுடன் சோடா குடிபானமும் அதற்குள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**இணைப்பு - 01**

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குளிர்பானத் தொழிற்சாலை மற்றும் இவையொத்த கடைகளின் வியாபார வரி/வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20..........**

1. வியாபார நிலையத்தின் பெயர் :-----.

2. (i) வியாபார நிலையம் அமைந்துள்ள இடம் : வட்டாரம் ----- ஆதன இல. -----.

(ii) வீதியின் பெயர் :-----.

(iii) கிராம அலுவலர் பிரிவு இல. :-----. பிரிவின் பெயர் :-----.

3. (i) விண்ணப்பதாரியின் பெயர் :-----.

(ii) முழுப்பெயர் :-----.

(iii) நிரந்தர முகவரி :-----.

(iv) கிராம அலுவலர் பிரிவு :-----.

(v) தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.

(vi) தொலைபேசி இல. :-----.

(vii) மின்னஞ்சல் முகவரி :-----.

4. (i) வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி :-----.

(ii) வியபாரத்தின் தன்மை :-----.

(iii) கைத்தொழில்/தொழில் நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்

(அ) பெயர் :-----.

(ஆ) தொலைபேசி இல. :-----.

(iv) முன்னைய தொழில்:-----.

5. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i) உரிமையாளரின் பெயர் :-----.

(ii) முகவரி :-----.

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா : ஆம் :-----. இல்லை :-----.

ஆம் எனில் உரிம இல. :-----. திகதி :-----.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20................. ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

-----,
தவிசாளர்/செயலாளர்/
அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம் :-----. ஆதன இல. :-----.
வீதியின் பெயர்:-----.
உரிமையாளரின் பெயர் :-----.
ஆதன விபரம்:-----.
ஆண்டுப் பெறுமதி :----. வீதவரி நிலுவை :----.
உண்டு :----. இல்லை :----.

------,
திகதி :-----. நிர்வாக உத்தியோகத்தர்/
பகுதித் தவிசாளர்.

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:-----.
செலுத்த வேண்டிய கட்டணம் :-----.
A B C :-----.
குறிப்பு :-----.

------,
திகதி :-----. வருமானப் பரிசோதகர்.

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

**பொதுச்சுகாதார பரிசோதகரின் அறிக்கை**

..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

திகதி :-----. ------,
பொதுச் சுகாதார பரிசோதகர்.

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

------,
பிரதம சுகாதார வைத்திய அதிகாரி.

திகதி :-----.

**பிரதம வருமான வரிப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :-----. உபயோகம் மற்றும் :-----. சுற்றுச்சூழல் உரிமம் :-----.
சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :-----.
குடிபுகு சான்றிதழ் :-----. மதுவரி உரிமம் :-----.

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.
.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

------,
திகதி :-----. பிரதம வருமான வரிப் பரிசோதகர்.

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

------,
திகதி :-----. செயலாளர்.

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை

------,
திகதி :-----. பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. :-----. பற்றுச்சீட்டு திகதி :-----.

உரிம இல. :-----. உரிமத் திகதி :-----.

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

திகதி :-----. ------,
இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

------,
செயலாளர்.

திகதி :-----.

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

------,
திகதி :-----. பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**அத்தியாயம் - 6**

**பகுதி I - பிரதேச சபை அதிகார எல்லைப் பகுதிக்குள் பொதுச் சந்தைகளை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்**

*துணை விதியின் பெயர்.*

1. பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் பொதுச் சந்தைகளை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

*நோக்கம்.*

2. பிரதேச சபைப் பிரதேசத்தில் உள்ள மக்களிற்கு சந்தை வசதிகளையும், பொருட்களை விற்றல் வாங்கல் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*துணை விதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 119-121 மற்றும் 122(1)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய126(xii) பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தான தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்தத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*நிறைவேற்ற வேண்டிய பணிகள் (04 - 32).*

4. (i) பொதுச் சந்தையிலுள்ள ஏதேனும் கடை அறையொன்றின் வாடகை பெறுநரோ ஏதேனும் வியாபார மேடையொன்றைப் பாவிப்பதற்கு அல்லது கையாள்வதற்கு அனுமதிச்சீட்டை பெற்றுள்ள எவரேனும் ஆளோ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கடை அறையில் அல்லது அதன் அருகில் அல்லது வியாபார மேடையில் அல்லது அதற்கு அருகில் பிறப்பிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் அனைத்தையும் -

(அ) உயிர் சிதைவு கழிவுப் பொருட்கள்;

(ஆ) கண்ணாடிப் பொருட்கள்;

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்;

(ஈ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்;

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக பாகங்கள் ;

(ஊ) ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

என்ற வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டு அத்தகைய ஒவ்வொரு வகையினத்தையும் சேர்ந்த கழிவுப் பொருட்களை இடுவதற்காக பிரதேச சபையால் அமைக்கப்பட்டுள்ள தனித்தனியான கிடங்குகளில் அல்லது பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடவேண்டியது மேற்படி வாடகை பெறுநரது அல்லது மேற்படி வியாபார மேடையில் அனுமதிச் சீட்டு பெற்றுள்ளவரின் கருமமாக அமைதல் வேண்டும்.

(ii) பொதுச் சந்தைக்கு வருகை தருகின்றவர்களினால் ஏற்படுத்தப்படுகின்ற கழிவுப் பொருட்களை இடுவதற்காக இப்பகுதியின் (i) வது பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அப்புறப்படுத்தல்களை இலகுபடுத்துகின்ற சிறிய அளவிலான பாத்திரங்களைப் பொதுச் சந்தையின் பொருத்தமான இடங்களில் வைக்கச் செய்வித்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்கள் போதுமான அளவு கால இடைவெளியில் கழிவுப் பொருட்களுடன் தொடர்புடைய கிடங்கில், பாத்திரத்தில் அல்லது தொட்டியில் இடச் செய்வித்தல் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் பணியாதல் வேண்டும்.

(iii) கழிவுப்பொருட்களை சேர்ப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பாத்திரங்களில் குறிப்பிட்ட கழிவுகளை தவிர வேறு ஒன்றையும் போடுதல் ஆகாது.

(iv) இத் துணைவிதியின் (i) வது பிரிவின் பணிப்புக்களின் கீழ் உயிர்ச் சிதைவு கழிவுப் பொருட்களை இடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள கிடங்கில், பாத்திரத்தில், தொட்டியில் கழிவுப் பொருட்களை கொட்டும்போதும் அவற்றை அகற்றும்போதும் தவிர்ந்த ஏனைய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தொட்டிகளை நல்ல முறையில் மூடிவைத்தல் வேண்டும்.

5. பொதுச் சந்தையில் மரக்கறிகள், பழங்கள், இறைச்சி, மீன் அல்லது வேறு உணவு அல்லது பான வகைகளை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு இடத்தையும், அத்தகைய கடைஅறை, மேசை, வாங்கு, பொருட்களை வைக்கும் பலகைகளையும் அன்றாடப் பணிகள் நிறைவடைந்ததும் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் கழுவியோ சுரண்டிச் சுத்தம் செய்ய வேண்டியதோ அவ்வாறு செய்விக்க வேண்டியதோ அத்தகைய இடத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவரின் பணியாதல் வேண்டும்.

6. பொதுச் சந்தையில் உள்ள ஒவ்வொரு மலசலகூடத்தையும் குறைந்த பட்சம் ஒரு நாட்களுக்கு மூன்று தடவை வீதம் கிருமிநாசினி பாவித்து கழுவிச் சுத்தம் செய்யவும் நீர் பாய்ந்தோட அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வடிகானையும் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யவும் ஏற்பாடு செய்ய வேண்டியது பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாக அமைதல் வேண்டும்.

7. இப் பகுதியின் 4ஆம் துணைவிதியின் (i) வது பந்தி மற்றும் இப் பகுதியின் 61 ஆம் துணைவிதியில் (xxiv) பந்தியில் பணிக்கப்பட்டவாறு அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கொள்கலன்களிலும், பாத்திரத்திலும் அல்லது தொட்டியிலும் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களைக் குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு ஒரு தடவை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அங்கிருந்து அப்புறப்படுத்தச் செய்விப்பது பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாக அமைதல் வேண்டும். அத்துடன் மேற்படி கழிவுப் பொருட்களை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தும்போது கழிவுப் பொருட்கள் ஏற்றப்பட்ட பாகத்தை முழுமையாக மூடப்பட்ட வாகனமொன்றில் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்வித்தல் வேண்டும்.

8. மரக்கறி அல்லது பழங்களைக் கழுவும் பொருட்டு ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒன்று சேர்கின்ற மண், மணல் அல்லது வேறு பொருட்களைக் குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு ஒரு தடவை வீதம் அப்புறப்படுத்தவும் அவ்விடத்தில் நீர் பாய்ந்தோடுவதில் ஏற்படுகின்ற தடைகளை நீக்கவும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியதும் பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாக அமைதல் வேண்டும்.

9. பொதுச் சந்தையில் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்புக் கருவிகளின் இயக்கம் முறையாக நிலவுகின்றதாவென குறைந்த பட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை வீதம் பரிசோதிக்க வேண்டியதும் செயலிழந்த தீயணைப்புக் கருவிகளுக்குப் பதிலாக புதிய கருவிகளைப் பொருத்தச் செய்விப்பதும் பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாக அமைதல் வேண்டும்.

10. பொதுச் சந்தையில்–

(i) கடை அறைகளில் உட்புறச் சுவர் தவிர்ந்த ஏனைய சுவர்களும், ஒவ்வொரு விற்பனை மேடையின் சிறிய மதில்களும் சீமெந்தினால் சாந்து பூசப்பட்ட பகுதிகளும் மற்றும் கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பினால் பூர்த்தி சய்யப்பட்டுள்ள நிர்மாணிப்புக்களும் மற்றும் கடையறைகளின் உட்புற உட்கூரையைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப் பூச்சு பூசச் செய்விக்க வேண்டியது பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாக அமைதல் வேண்டும்.

(ii) கடை அறைகளின் உட்புறச் சுவர், கடை அறைகளில் உள்ளே கல்வனைஸ் பண்ணப்பட்டு இரும்பினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிர்மாணிப்புகள், மற்றும் கடை அறைகளின் உட்கூரையை குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு ஒரு தடவை வர்ணப் பூச்சு பூச வேண்டியது மேற்படி கடை அறையின் வாடகை பெறுநரது கடமையாக அமைதல் வேண்டும்.

11. பிரதேச சபையினால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச் சந்தை திறந்து வைக்கப்பட வேண்டிய நாட்கள் மற்றும் நேரங்கள் காலத்திற்குக் காலம் பிரதேச சபையினால் தீர்மானிக்க வேண்டும். பிரதேச சபையினால் அவ்விதமாக தீர்மானிக்கப்பட்ட விதத்தில் பொதுச் சந்தை திறந்துவைக்கப்படுகின்ற நாட்கள் மற்றும் நேரங்கள்

யாவை என்பதை மும்மொழியிலுமான அறிவித்தல் மூலமாக அல்லது அறிவித்தல் தெளிவாகப் புலப்படத்தக்க வகையில் பொதுச் சந்தைக்குள் பிரவேசிக்கின்ற வாயிலின் அருகில் காட்சிக்கு வைக்கச் செய்வித்தல் பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாக அமைதல் வேண்டும். பிரதேச சபையால் தீர்மானம் மேற்கொள்ளாதவிடத்து சந்தை திறந்து இருக்கும் நேரம் மு.ப 5.00 மணி முதல் பி.ப 9.00 மணிவரையாகும்.

12. (i) பொதுச் சந்தையின் கடை அறைகளுக்கு வெளியில் உள்ள பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் விற்பனை மேடையைப் பாவிக்க அல்லது கையாள வேண்டிய அவசியம் நிலவுகின்ற ஒவ்வொருவரும் இப்பகுதி துணைவிதிகளின் பணிப்புரைகளின் கீழ் பிரதேச சபையின் அதிகாரத்தின் பேரில் அல்லது அதன் கீழ் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிச்சீட்டு ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ii) (i) ஆம் பிரிவிலான பணிப்பின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிச்சீட்டு இங்கு முதலாவது இணைப்பில் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கு அமைவாக தயாரித்துக்கொள்ளப்படல் வேண்டும்.

13. (i) பொதுச் சந்தைக் கட்டிடத்தில் இறைச்சிக்கடை அல்லாத ஏதேனும் கடை அறையினை பாவிக்க அல்லது கையாள வாடகை பெறுநரொருவரைத் தெரிவு செய்வதும் கடை அறைகளுக்கு வெளியிலுள்ள இடங்களில் வாடகை அறவிடுவதற்கான சந்தைக் குத்தகைதாரர் ஒருவரை தெரிவு செய்வதும் பகிரங்கமான கேள்விப் பத்திரம் கோரல் மூலமாக நடைமுறைப்படுத்த வேண்டியது பிரதேச சபையின் பணியாக அமைதல் வேண்டும்.

(ii) இத் துணைவிதியின் (i) பிரிவின் கீழ் ஏதேனும் கடை அறையினை வாடகைக்குக் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்களைக் கோரும் போது அக்கடை அறைக்காகச் செலுத்த வேண்டிய மாதாந்த வாடகையைத் தீர்மானித்தலானது பிரதான விலை மதிப்பீட்டாளரது மதிப்பீட்டுக்கு அமைவாக இடம்பெறல் வேண்டும்.

(iii) இத் துணைவிதியின் (i) பிரிவின் கீழ் கடை வாடகை பெறுநரொருவரைத் தெரிவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் கோரப்பட வேண்டிய சந்தர்ப்பங்களாக-

(அ) வாடகை பெறுநரால் தனது சுயவிருப்பின் பேரில் வாடகை உடன்படிக்கையை செல்லுபடியற்றதாக்கி உள்ளவிடத்து;

அல்லது

(ஆ) இப் பகுதியின் துணைவிதிகளின் ஏற்பாடுகளை மீறுதல் அல்லது வாடகை உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறியமை காரணமாக வாடகை உடன்படிக்கை செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ள அல்லது செல்லுபடியற்றதாகி உள்ளதாக கருதப்படுகின்றவிடத்து;

அல்லது

(இ) ஏதேனும் வாடகை பெறுநரின் வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை இல்லாத நிலையில் வாடகை பெறுநர் மரணமடைந்தவிடத்து;

கருதப்பட வேண்டுமென்பதோடு,

(iv) இப் பகுதியின் 55 ஆம் துணைவிதியில் குறிப்பிட்ட பணிப்பின் பிரகாரம் எவரேனும் வாடகை பெறுநரால் ஏதேனும் எதிர்வரும் ஆண்டுக்காக அத்தகைய வாடகை உடன்படிக்கை புதுப்பிக்கப்படுவது மறுக்கப்பட்டிருப்பின் அல்லது அத்தகைய செல்லுபடியாகும் தன்மையை வேண்டுமென்றே தவிர்த்து இருந்தாலேயொழிய பிரதேச சபையும் அத்தகைய வாடகை பெறுநரும் இணங்கி கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கை செல்லுபடியற்றதாகி விட்டதாகக் கருதப்படலாகாது.

14. இப் பகுதியின் 13 ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் பகிரங்க கேள்விப் பத்திரக் கோரல் மூலமாக ஏதேனும் கடை அறையைப் பாவித்தல் அல்லது கையாளலின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட வாடகை பெறுநர் பிரதேச சபையுடன் உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

15. இப் பகுதியின் 13 ஆம் துணைவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் இப்பகுதியின் துணைவிதிகள் வலுவுக்கு வருகின்றபோது பிரதேச சபைக்குச் சொந்தமாக உள்ள ஏதேனும் பொதுச் சந்தையில் ஒவ்வொரு கடை அறை சம்பந்தமாகவும் பிரதேச சபையுடன் இறுதியாக கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாடகை பெறுநர் அத்தகைய வலுவுக்கு வரும் தினத்தில் இருந்து அமுலாகக்கூடியவாறு இப் பகுதியின் 13 ஆம் துணைவிதியின் கீழ் அத்தகைய கடை அறையைப் பாவிக்கவோ கையாளவோ தெரிவு செய்யப்பட்ட வாடகை பெறுநராகக் கருதப்படுவது சட்டமுறையானதாகும். அத்துடன் தொடர்ந்தும் இந்த துணைவிதி ஏற்புடையதாகின்ற எவரேனும் வாடகை பெறுநர் இப்பிரிவின் துணை விதிகள் வலுவுடையதாக வருகின்ற நாளில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் இப் பகுதியின் 16 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகளுக்கு அமைவாக புதிய வாடகை உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

16. (i) இப்பகுதியின் 14வது மற்றும் 15வது துணைவிதிகளில் குறிப்பிட்ட பணிப்புக்களின் கீழ் பிரதேச சபையுடன் கைச்சாத்திடப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை ஒரு வருட காலத்திற்காக மாத்திரம் வலுவுடையதாக இருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒரு வருட காலம் நிறைவடைய ஒரு மாதத்திற்கு முன்னர் எதிர்வரும் ஆண்டுக்காக பிரதேச சபையுடன் புதிய உடன்படிக்கையைச் செய்துகொண்ட பின்னர் மேலும் ஒரு வருட காலத்திற்காக மேற்படி கடை அறையின் வாடகைக் காலத்தைச் செல்லுபடியானதாக்கிக் கொள்ளலாம். அவ்வண்ணமே ஏதேனும் தொடர்ச்சியான வருடத்திற்காக மேற்படி கடை அறையின் குத்தகைக் காலத்தை வருடந்தோறும் செல்லுபடியாக்கிக் கொண்டு அக்கடை அறையைப் பாவிக்கவோ கையாளவோ அத்தகைய வாடகை பெறுநருக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(ii) எவ்வாறாயினும் இத் துணைவிதியின் (i) பிரிவின் கீழ் எவரேனும் வாடகை பெறுநரால் தொடரும் வருடத்திற்கான வாடகைக் காலத்தை செல்லுபடியாக்கிக் கொண்டு அத்தகைய கடை அறையைப் பாவிக்கின்றமைக்காக அல்லது கையாளுவதற்காக அத்தகைய தொடரும் ஆண்டில் செலுத்த வேண்டிய மாதாந்த வாடகையை பிரதம விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கிணங்க தீர்மானிக்க வேண்டியது பிரதேச சபையின் பணியாக அமைதல் வேண்டும்.

17. காய்கறிகள், பழவகைகள், அல்லது வெவ்வேறு பொருட்களை விற்பவர்களுக்காக வெவ்வேறு இடங்கள் ஒதுக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

18. பொதுச் சந்தையிலாயினும் தனியார் சந்தையிலாயினும் அறைக் கடைகளில் நிரந்தர வியாபாரம் செய்பவர்கள் பிரதேச சபையின் கடைக்கான வருடாந்த வியாபார உரிமப்பத்திரத்தை பெற்றுக்கொள்வது அவர்களது பொறுப்பாகும்.

19. மீன் சந்தை பொதுச் சந்தையினுள் அடங்குமிடத்து விற்பனை மேடைகள் ஏற்கனவே சொல்லப்பட்ட நியதிகளின் பிரகாரம் அமைக்கப்படுவதுடன் இப்பகுதியின் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்ட சகல நிபந்தனைகளும் அதற்கும் பொருந்தும்.

20. (i) இறைச்சி, கோழி இறைச்சி விற்பவர்களினால் உருவாகும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு இப் பகுதியின் 4 ஆம் துணைவிதியில் குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii) உயிருள்ள கோழிகளை விற்பனை செய்வதற்கு சந்தையில் தனியான ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுத்தல் பிரதேச சபையின் பணியாதல் வேண்டும்.

21. (i) உரிமப்பத்திரத்தை வைத்திருப்பவர் அல்லது அவரின் இணைப் பிரதிநிதி அல்லது ஊழியர் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் முறையாக பதிவுசெய்யப்பட்ட அனுமதி அட்டையை பெற்ற ஒருவர் அன்றி வேறு எவரொருவராலும் சந்தையின் பகுதியை இடம்பிடித்தல், பாவனைக்கெடுத்தல், அல்லது பயன்படுத்தல் அல்லது அங்கு பொருட்கள் எதையாவது விற்றல் என்பவற்றை செய்தல் கூடாது என்பதுடன் உரிமையாளரும் அவரது ஊழியர்களும் உரிமப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் முன்பு ஒவ்வொரு வருடமும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அவ் அறிக்கையை பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) தமது கடை அறையில் இணைப்பிரதிநிதி அல்லது ஊழியராக எவராவது ஒருவரை சேவையில் ஈடுபடுத்த விரும்பும் கடை அறையை பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அதற்காக பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும். எல்லா விண்ணப்பப்பத்திரங்களுடனும் சம்பந்தப்பட்டவரது தேசிய அடையாள அட்டையின் பிரதிகள் இரண்டையும் கொடுத்தல் வேண்டும்.

(iii) அவ் விண்ணப்பம் கிடைத்தவுடன் பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் முறையாக இலக்கமிடப்பட்ட பதிவு செய்யும் அட்டையை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் கடை வாடகை பெறுநருக்கு கொடுக்க வேண்டும். மற்றைய தேசிய அடையாள அட்டையின் பிரதியை தம்முடன் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

(iv) இந்த துணைவிதியின் படி பதிவுசெய்யப்பட்ட அட்டையை பெற்ற ஒவ்வொருவரும் பிரதேச சபையின் எவராவது ஊழியர் ஒருவரால் பரீட்சிப்பதற்காக கேட்கப்படுமிடத்து அவ் அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

(v) இந்த துணைவிதியின்படி விநியோகிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட அட்டையை இரத்துச் செய்யவேண்டுமென பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் கருதினால் அவரால் எந்தவொரு நேரத்திலும் அதனை இரத்துச் செய்யலாம்.

(vi) ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் சேவையிலிருந்தவர்கள் மாற்றப்படுமிடத்து உரிமப்பத்திரம் பெற்றவரால் அதுபற்றி எழுத்து மூலம் பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அறிவிக்க வேண்டும்.

22. ஏதாவது பொதுச் சந்தையில் கடை அறை ஒன்றை பெற்றுக்கொண்டுள்ள அல்லது பயன்படுத்த உரிமப்பத்திரம் பெற்றுள்ளவர்களும் இறைச்சி, மீன் அல்லது வேறு பொருளை பொதுச் சந்தையில் விற்பதற்காக இப் பகுதியின் ஒழுங்குவிதிகளின் படி சட்ட ரீதியாக வழங்கப்படக்கூடிய விசேட உரிமப்பத்திரம் பெற்றுள்ளவர்களும் பிரதேச சபை தீர்மானிக்காதவிடத்து அக் கடை அறையை தினந்தோறும் மு.ப 5.00 மணிக்கும் பி.ப 9.00 மணிக்குமிடையிலான காலத்திற்குள் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்படல் வேண்டும். ஒழுங்கு முறையிலான இரண்டு நாட்களுக்கு அக் கடை அறையை அல்லது வியாபார நிலையத்தை பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் எழுத்து மூல அனுமதியின்றி மூடி வைக்க அல்லது வேண்டுமென்றே பொது மக்களுக்கு சேவையாற்றாது விடும் அல்லது மறுக்கும் எவராவது ஒருவர் குற்றமிழைத்தவராவதுடன் அவ்வாறு குற்றமிழைத்த ஒருவரது உரிமப்பத்திரத்தை பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் தற்காலிகமாக இடைநிறுத்துவது அல்லது இரத்துச் செய்தலும் அவருக்கு அதன்பின் அவ்வகையான ஏதாவது உரிமப்பத்திரம் வழங்கப்படுவதை நிறுத்துதல் சட்டரீதியானதாகும். அவ்வாறே கடை அல்லது வியாபார நிலையத்தை மீண்டும் சபைக்கே பெற்றுக்கொள்ளல் வேண்டும்

23. பொதுச் சந்தையின் கடை அறைகளைத் தவிர பொதுச் சந்தை வருடாந்த குத்தகைக்கு விடப்படவில்லையாயின் விற்பனை மேடைகளைப் பாவிக்க அல்லது கையாள தேவைப்படுகின்ற எவரேனும் ஆட்களுக்கு அனுமதிச் சீட்டுகளை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிச் சீட்டுகளுக்கான பணத்தை அறவிடவும் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது செயலாளரினால் அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தர் ஈடுபட முடியும். அத்துடன் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகைய அனுமதிச் சீட்டுகளை விநியோகிப்பதன் மூலமாக தினந்தோறும் சேகரிக்கப்படுகின்ற பணம் அன்றைய தினத்தின் பிற்பகல் 3.00 மணிக்கு முன்னராக பிரதேச சபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கச் செய்வித்தல் அத்தகைய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாக அமையும். ஏதேனும் தினமொன்றில் அத்தகைய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் சேகரிக்கப்படுகின்ற பணம் பிரதேச சபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட பின்னர் பொதுச் சந்தையில் அனுமதிச்சீட்டு விற்பனை மூலமாக சேகரிக்கப்பட்ட பணமேதும் இருப்பின் அது தொடர்ந்துவரும் வேலைநாளில் பிரதேச சபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

24. பொதுச் சந்தையின் கடை அறைகளைத் தவிர்ந்த விற்பனை மேடைகளைப் பாவிக்கவோ கையாளவோ ஆட்கள் எவருக்கேனும் அனுமதிச் சீட்டுகளை விநியோகித்தலும் அதற்காக பணம் சேகரித்தலும் தொடர்பில், இப் பகுதியின் 23 ஆம் துணைவிதியில் பணிக்கப்பட்டவாறு பிரதேச சபைச் செயலாளரினால் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவர் ஈடுபடுத்தப்பட இயலாதெனின் அக்கருமத்தை பகிரங்க கேள்விப் பத்திரக் கோரல் மூலமாகத் தெரிவு செய்யப்படுகின்ற (இதனகத்துப் பின்னர் 'குத்தகைக்காரர்' எனக் கூறப்படுகின்ற) ஆளிடம் ஒப்படைக்க பிரதேச சபை தத்துவமுடையதாயிருத்தல் வேண்டும்.

*25.* இப்பகுதியின் *24* ஆம் துணைவிதியின் கீழ் தெரிவு செய்யப்படுகின்ற எவரேனும் குத்தகைக்காரருக்கு அத்தகைய கருமம் ஒப்படைக்கப்படுதல் ஒரு வருடத்திற்காக மாத்திரம் செல்லுபடியாதல் வேண்டுமென்பதோடு தொடரும் வருடத்திற்காக மீண்டும் கேள்விப்பத்திரக் கோரல் மூலமாக குத்தகைக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

*26.* (i) இப் பகுதியின் *25* ஆம் துணைவிதியின் பணிப்புகளின் கீழ் குத்தகைக்காரர் தெரிவு செய்யப்பட்டவிடத்து அவர் -

(அ) அத்தகைய தெரிவு செய்யப்படுதலுக்கான கேள்விப் பத்திரம் கோரப்படுகின்ற தருணத்தில் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்டதும் மீளச் செலுத்தக்கூடியதுமான பிணை வைப்புத் தொகையை பிரதேச சபையில் வைப்புச் செய்யவும்;

(ஆ) அத்தகைய அனுமதிச்சீட்டு விநியோகித்தல் மற்றும் கட்டணம் சேகரித்தல் தொடர்பில் பிரதேச சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவும்;

(இ) (ஆ) ஆவது பிரிவின் ஏற்பாட்டின் கீழ் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் இணங்கியுள்ள வருடாந்தக் கட்டணத்தின் மூன்றிலொன்றுக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட வைப்புத் தொகையை பிரதேச சபையில் வைப்புச் செய்யவும் ;

நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii) இத் துணைவிதியின் (i) பந்தியில் குறிப்பிட்டுள்ள பணிப்புகளை அவ்வாறே பூர்த்தி செய்திருந்தாலொழிய எவரேனும் ஆளுக்கு பிரதேச சபையால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச்சந்தையில் விற்பனை மேடையை பாவிக்கும் அல்லது கையாளும் ஆட்களுக்கு அனுமதிச்சீட்டுக்களை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிப்பத்திரங்களுக்கான பணம் சேகரிக்கவும் இடமளித்தலாகாது.

*27.* இப்பகுதியின் *26* ஆம் துணைவிதியில் (i) பிரிவின் (ஆ) வது பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க எவரேனும் குத்தகைக்காரருடன் கைச்சாத்திடப்படுகின்ற உடன்படிக்கையில்–

(i) விற்பனை மேடையைப் பாவித்தல் அல்லது கையாளல் தொடர்பாக அனுமதிச்சீட்டு விநியோகிக்கப்பட வேண்டிய விதம்;

(ii) அத்தகைய அனுமதிச்சீட்டுக்காக பணம் அறவிடப்படுகின்ற விதமும் உச்சப் பணத்தொகையும்;

(iii) குத்தகைக்காரரால் உடன்படிக்கை செய்துகொள்ளப்படுகின்ற வருடத்திற்காக பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய முழுப் பணத்தொகையும்;

(iv) அத்தகைய வருடாந்த பணத்தொகையை சமமான பன்னிரண்டு தவணைகளில் பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டுமென்பதும் ஒரு தவணைப் பணத்தின் பெறுமதியும்;

(v) ஒவ்வொரு மாதத்திற்காகவும் செலுத்த வேண்டிய பணத் தொகையை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய திகதியும்;

(vi) உரிய தினத்தில் மாதாந்த பணத்தொகையைச் செலுத்தத் தவறுமிடத்து அத்தகைய பணத்தொகையில் நூற்றுக்கு பத்து வீதத்திற்குச் சமமான தொகையை தாமதக் கட்டணமாக பிரதேச சபைக்குச் செலுத்த குத்தகைக்காரர் கட்டுப்படுகிறார் என்பதும்;

(vii) பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை மூன்று மாதங்களுக்கு மேலாக செலுத்தத் தவறுமிடத்து இப் பகுதியின் *28* ஆம் துணைவிதியில் குறிப்பிட்ட பணிப்புக்களுக்கிணங்க உடன்படிக்கையை இரத்துச் செய்யக் கட்டுப்படுவதாகவும் அத்தகைய உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதாக பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட

அலுவலரிடமிருந்து கடித மூலமான அறிவித்தல் கிடைத்த தினத்தில் இருந்து அத்தகைய சந்தையில் விற்பனை மேடையைப் பாவிக்கவோ கையாளவோ ஆட்களுக்கு அனுமதிச்சீட்டுக்களை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிச்சீட்டுகளுக்காக பணம் அறவிடுவதற்கும் குத்தகைக்காரருக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரம் முடிவுறுத்தப்படுகின்றதென்பதும்

உடன்பட்ட நிபந்தனைகளாக உள்ளடக்க வேண்டியது பிரதேச சபையின் கருமமாகும்.

28. (i) குத்தகைக்காரரால் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள மாதாந்தக் கட்டணத்தை செலுத்தாமல் தவறவிட்டுள்ள மற்றும் அத்தகைய நிலுவைக் கட்டணம் மூன்று மாதங்களுக்கான கட்டணத்தைவிட அதிகமாக உள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நிலுவைப் பணத்தையும் தாமதக் கட்டணத்தையும் செலுத்துமாறு குத்தகைக்காரருக்கு கடிதமூலமான அறிவித்தலை ஒப்படைக்க செய்விக்க வேண்டியது பிரதேச சபைச் செயலாளரின் பணியாக அமைதல் வேண்டும்.

(ii) இத் துணைவிதியின் (i) பிரிவின் கீழான அறிவித்தல் கிடைத்த எவரேனும் குத்தகைக்காரரால் தனக்கு அந்த அறிவித்தல் கிடைத்த தினத்தில் இருந்து ஏழு நாட்களுக்குள் அத்தகைய நிலுவைப் பணத்தையும் தாமதக் கட்டணத்தையும் பிரதேச சபைக்குச் செலுத்தத் தவறின், அத்தகைய அறிவித்தல் அவருக்கு கிடைத்த தினத்தில் இருந்து ஏழு நாட்கள் கழிந்த நாளில் இருந்து அத்தகைய குத்தகைக்காரருடன் பிரதேச சபை கைச்சாத்திட்ட உடன்படிக்கை செல்லுபடியற்றதாக வேண்டுமென்பதோடு, அவ்வாறு செல்லுபடியற்றதாதல் சட்டமுறையானதாகும். அத்துடன் அத்தகைய உடன்படிக்கை செல்லுபடியற்றதென கருதப்படுகின்ற தினத்திலேயே அத்தகைய குத்தகைக்காரருக்கு அதுபற்றி கடிதமூலமாக அறிவிக்க வேண்டியது பிரதேச சபைச் செயலாளரின் பணியாக அமைதல் வேண்டும்.

(iii) இத் துணைவிதியின் (ii) பிரிவின் பணிப்புக்களின் கீழ் ஏதேனும் உடன்படிக்கை செல்லுபடியற்றதான தினத்தின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய உடன்படிக்கையின் ஒரு கட்சிக்காரரான குத்தகைக்காரரால் அத்தகைய பொதுச் சந்தையில் விற்பனை மேடைகளைப் பாவிக்க அல்லது கையாள்வதற்காக எவரேனும் ஆளுக்கு அனுமதிச்சீட்டு விநியோகிக்கப்படுதலோ அத்தகைய அனுமதிச்சீட்டினை விநியோகித்தமைக்கான பணம் சேகரிக்கப்படுதலோ ஆகாது.

(iv) இத் துணைவிதியின் (ii) பிரிவின் பணிப்புக்களின் கீழ் ஏதேனும் உடன்படிக்கை செல்லுபடியற்றதான தினத்திற்குப் பின்னர் அடுத்துறுகின்ற தினத்தில் இருந்து அத்தகைய பொதுச் சந்தையில் விற்பனை மேடைகளைப் பாவிக்கவோ கையாள்வதற்காகவோ அனுமதிச்சீட்டுகளை விநியோகிக்கவும் அத்தகைய அனுமதிச்சீட்டுகளுக்காக பணம் சேகரிக்கவும் பிரதேச சபையின் எவரேனும் உத்தியோகத்தரை ஈடுபடுத்த வேண்டியது பிரதேச சபைடிச் செயலாளரின் பணியாக அமைதல் வேண்டும். அத்துடன் மேற்படி உத்தியோகத்தரொருவரைக் கொண்டு அப்பணியைத் தொடர்ந்தும் மேற்கொள்ள இயலாதென்பது செயலாளரின் அபிப்பிராயமாகுமிடத்து இப் பகுதியின் 24வது துணைவிதியின் குறிப்பிட்ட பணிப்புகளுக்கிணங்க செயலாற்றும் பொருட்டு தனது அபிப்பிராயத்தை பிரதேச சபைத் செயலாளரின் ஊடாக பிரதேச சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்விதமான சபைத் தவிசாளர் அபிப்பிராயம் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இப் பகுதியின் 24வது துணைவிதியின் பிரகாரம் செயலாற்ற வேண்டுமென பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(v) இத் துணைவிதியின் (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் இப் பகுதியின் 24வது துணைவிதிக்கு அமைவாக செயலாற்ற பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில், அத்தகைய கேள்விப்பத்திர கோரல்களுக்கிணங்க கேள்விப்பத்திர விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்க செல்லுபடியற்றதாகியுள்ள உடன்படிக்கையின் ஒரு கட்சிக்காரரான குத்தகைக்காரருக்கு உரிமை கிடையாது.

*29.* ஏதேனும் தனியார் சந்தையின் உள்ளே கடை அறைகளிலும் விற்பனைக் மேடைகளிலும் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற ஒவ்வோர் ஆளும் இத் துணைவிதிகளின் பணிப்புக்களைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய ஆட்களால் அப்பணிப்புகள் கடைப்பிடிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அத்தகைய சந்தையின் உரிமப்பத்திரம் பெறுநரின் பணியாக அமைதலும் வேண்டும்.

*30.* இப் பகுதியின் 32வது துணைவிதியின் பணிப்புக்களைக் கடைப்பிடிக்க வேண்டியது ஒவ்வொரு தனியார் சந்தையினதும் உரிமப்பத்திரம் பெறுநரின் பணியாக அமைதல் வேண்டும்.

*31.* ஏதேனும் தனியார் சந்தையுடன் தொடர்புடைய துணைவிதியின் பணிகளுக்காக துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள -

(i) ''பொதுச் சந்தை'' என்பதற்குப் பதிலாக அத்தகைய தனியார் சந்தையும்;

(ii) ''வாடகை பெறுநர்'' என்பதற்குப் பதிலாக அத்தகைய தனியார் சந்தையில் ஏதேனும் கடை அறையில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர் அல்லது அவரது முகவர் அல்லது அச்சந்தர்ப்பத்தில் கடை அறையின் நிருவாகத்திற்கும் பொறுப்பான எவரேனும் ஆளும்;

(iii) ''பிரதேச சபைத் தவிசாளர்'' அல்லது ''பிரதேச சபை'' என்பதற்குப் பதிலாக அத்தகைய தனியார் சந்தையின் உரிமப்பத்திரம் பெறுநர் எனக் கருதப்படல் வேண்டுமென்பதோடு, அவரது முகவர் அல்லது அச்சந்தர்ப்பத்தில் அத்தகைய தனியார் சந்தையில் உரிமப்பத்திரதாரரின் பணி அல்லது கடமைக்குப் பொறுப்பாக உள்ள எவரேனும் ஆளும் எனக் கருதப்படல் வேண்டும்.

*32.* ஏதேனும் தனியார் சந்தை திறந்து வைக்கப்படுகின்ற நாட்களும் நேரங்களும் யாவையென மும்மொழிகளிலுமான அறிவித்தல் தெளிவாகப் புலப்படக்கூடியவாறு அத்தகைய தனியார் சந்தைக்குள் பிரவேசிக்கும் வாயிலுக்கு அருகாமையில் காட்சிக்கு வைக்கச் செய்வித்தல் உரிமப்பத்திரம் பெறுநரது பணியாக அமைதல் வேண்டும்.

*33.* கீழே குறிப்பிடப்படும் ஏதாவது செயலை எவராவது செய்வது சட்டரீதியற்றது:- நிறைவேற்றக் கூடாத பணிகள் (33-60).

(i) கடை அறையொன்று அல்லது இடமொன்றிற்காக உரிமப்பத்திரம் அல்லது பற்றுச்சீட்டு ஒன்றை கொண்டவராக இருக்கையில் அந்த வியாபார நிலையத்திற்கு வரும் எவராவது ஒருவருக்கு தேவையற்ற இடையூறு அல்லது தாமதத்திற்கு ஆளாக்குதல்;

(ii) பொதுச் சந்தையில் சமைத்தல்;

(iii) சந்தையில் அல்லது அதற்கு பக்கத்திலுள்ள வளவிற்குள் முறைகேடாக நடத்தல் அல்லது பிச்சையெடுத்தல் அல்லது இடையூறு ஏற்படுத்தல்;

(iv) பொதுச் சந்தையொன்று பி.ப 9.00 மணிக்கு மூடப்பட்ட பின்னர் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமின்றி பொதுச் சந்தையில் தங்கியிருத்தல்;

(v) பொதுச் சந்தையில் அல்லது அதனுள் உள்ள கட்டடங்களின் கடை அறைகளின் மின் விளக்குகள் அல்லது பிரதேச சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பகுதிகளுக்கு நட்டமேற்படுத்தல் அல்லது ஏதாவதொரு விதத்தில் மாற்றியமைத்தல் அல்லது பொதுச் சந்தையின் உபயோகத்திற்காக வழங்கப்பட்டுள்ள நீரை வீணழித்தல் அல்லது அதில் குளித்தல் அல்லது புடவைகள், வாகனங்கள், மிருகங்களைக் கழுவுதல்;

(vi) பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் முறைசார்ந்த வகையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தாலே ஒழிய தனது கடை அறையின் பெயர்ப்பலகை அல்லாத வேறு ஏதேனும் விதத்திலான விளம்பர அறிவித்தல் பலகையைப் பொருத்தல், பதாகைகளை காட்சிப்படுத்தல் அல்லது வேறு ஏதேனும் விதத்திலான பிரச்சாரப் பணியைச் செய்தல்;

(vii) மலசலகூடம் தவிர்ந்த ஏனைய இடங்களில் மல சலம் கழித்தல்;

(viii) விவசாய பொருட்களை விற்பனை செய்யும் உற்பத்தியாளர்களிடமிருந்து தரகு பணம் பெறுதல்;

(ix) விவசாய உற்பத்திப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய உலர் உணவு பொருட்களை விற்பனை மேடைகளில் விற்றல்.

34. பொதுச் சந்தையில் அல்லது அதற்கு பக்கத்திலுள்ள வளவில் சத்தமிடுதல், குழப்பமேற்படுத்தல் அல்லது கலவரம் செய்தல் அல்லது அருவருக்கத்தக்க, இழிவான வார்த்தைகளை உபயோகித்தல் ஆகிய செயற்பாட்டில் ஈடுபடும் எவரொருவரையும் பொதுச் சந்தையின் மேற்பார்வையாளரால் அல்லது அவரது உதவியாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறொருவரால் அங்கிருந்து வெளியேற்ற முடியும்.

35. பிரதேச சபையின் உரிமப்பத்திரமின்றி அல்லது அவ்வாறான உரிமப்பத்திரத்திலுள்ள நிபந்தனைகளிற்கு முரணாக எவரொருவராலும் (பிரதேச சபையால் வழங்கப்பட்டுள்ள பொதுச் சந்தையை தவிர) பிரதேச சபை எல்லைக்குள் எந்தவொரு இடத்திலும் அல்லது வீதியில் மீன், கோழி இறைச்சி, மாட்டு இறைச்சி, ஆட்டு இறைச்சி வகைகள் அல்லது குடற்தொகுதியை விற்பது அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்துவது அல்லது அங்குமிங்கும் கொண்டுசெல்வது ஆகாது. அத்துடன் பிரதேச சபையின் தீர்மானம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட விசேட உரிமப்பத்திரமின்றி பிரதேச சபையின் பொதுச்சந்தையிலிருந்து 0.5கி.மீ. (1/2) கிலோ மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் இறைச்சி வகைகள், மீன் விற்பனை செய்யக் கூடாது. மேலும் பிரதேச சபையின் பொதுச்சந்தையிலிருந்து 1/2 கிலோமீற்றர் சுற்றுவட்டத்துக்குள் மரக்கறிவகைகள் (தேங்காய் உட்பட), பழவகைகள் என்பவற்றை எவரும் விற்பனை செய்தலும் ஆகாது. பொதுச் சந்தையின் சுற்று வட்டம் என்பது பிரதேச சபையால் தீர்மானிக்காதவிடத்து பொதுச்சந்தையிலிருந்து 1/2 கிலோமீற்றருக்கு உட்பட்டதாக இருக்கும். 1/2 கிலோமீற்றருக்கு குறைந்த பொதுச்சந்தை சுற்று வட்டத்தை பிரதேச சபை தீர்மானித்து பிரகடனப்படுத்தலாம்.

36. மட்டி தவிர்ந்த உணவுக்காகப் பயன்படுத்தப்படும் மீன்களை நிறை மூலமாகவன்றி பொதுச் சந்தையின் எல்லைக்குள் விற்பனை செய்தல் கூடாது.

37. பொதுச் சந்தைக் கடைகளில் பிரதேச சபையால் வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் பொருளைத்தவிர வேறு எதையும் எவரொருவராலும் பொதுச் சந்தைக் கடைகளில் வைத்திருக்கவோ விற்கவோ கூடாது. பொது சந்தையினுள் அல்லது இப் பகுதியின் 22வது துணைவிதியில் விசேடமாக உரிமப்பத்திரம் வழங்கப்பட்ட இடத்திற்கு அல்லது இப் பகுதியின் 35வது துணைவிதியில் வழங்கப்பட்ட உரிமப்பத்திரமின்றி எவரொருவராலும் எந்தவொரு இறைச்சியையும் குடற்தொகுதியையும் விற்பது அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்தலாகாது. மேலும் இறைச்சி விற்கும் அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்தும் எவராவது ஒருவரிடம் குறிப்பிட்ட உரிமப்பத்திரத்தை காட்டுமாறு ஏதாவது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதேச சபை உத்தியோகத்தரால் அல்லது பொலிஸ் பதவிநிலை அதிகாரியால் கேட்பது சட்டரீதியாவதுடன் அதைக் காட்ட தவறுமிடத்து அவ்வாறான உரிமப்பத்திரமின்றி அல்லது உரிமப்பத்திர விதிகளுக்கு முரணாக பொதுச் சந்தையிலுள்ள இறைச்சி எதையும் தடை விதித்து பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிச்சயிக்கப்படும் விதத்தில் அல்லது நீதவானால் தீர்ப்பு வழங்கப்படும் விதத்தில் அப்புறப்படுத்துமுகமாக பிரதேச சபை அலுவலகத்திற்கு அல்லது பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லல் சட்டரீதியானதாகும்.

38. பிரதேச சபையின் முறையான உரிமப்பத்திரமின்றி எவரும் கோழி இறைச்சியை பொதுச் சந்தையின் எந்த கடைகளிலும் விற்பனை செய்தல் ஆகாது.

39. பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட உரிமப்பத்திரம் அல்லது அனுமதிப்பத்திரம் இன்றி எவரொருவராலும் பொதுச் சந்தையின் ஏதாவது கடை அறையில் அல்லது இடமொன்றில் ஏதாவது பொருளை விற்பது அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்துவது தொடர்பான இடங்களை வைத்துக்கொள்ளல் அல்லது உபயோகத்திற்கெடுத்தல் அல்லது பிடித்துக்கொள்ளுதல் கூடாது.

40. பிரதேச சபை அலுவலரினால் காலத்திற்கு காலம் நிச்சயிக்கப்படும் நாளாந்த கட்டணத்தை செலுத்தி காய்கறிகள், பழவகை, வேறு பொருட்களை விற்பவர்களுக்கு சந்தையில் முறையாக அடையாளமிட்டு இலக்கமிடப்பட்ட விற்பனை மேடைகள் இருத்தல் வேண்டும். எவரொருவரும் நுழைவுச் சீட்டு இல்லாது விற்பனை மேடைகளை பாவித்தலாகாது என்பதுடன் நுழைவுச்சீட்டில் குறிப்பிடப்படாத வேறு வகையான பொருட்களை அங்கு விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல் ஆகாது. பிரதேச சபைச் செயலாளரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரால் கையொப்பமிடப்பட்ட நுழைவுச் சீட்டை அப்பணம் செலுத்தும் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும்.

*41.* பொதுச் சந்தையின் ஏதாவதொரு இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை எவரொருவரும் வேறொருவருக்கு மாற்றிக் கொடுத்தல் அல்லது அவ்வாறான கடையை அல்லது இடத்தை அல்லது ஒரு பகுதியை உப வாடகைக்கு கொடுத்தல் கூடாது. மேலும் பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அனுமதியின்றி செய்யப்பட்டதென கூறப்படும் அவ்வாறான பெற்றுக்கொடுப்பதன் மூலம் எவரொருவராலும் கடை அறை அல்லது இடம் அல்லது ஒரு பகுதியை பாவனைக்கு கொடுத்தல், பாவித்தல், உபயோகித்தலை செய்யக்கூடாது.

*42.* பொதுச் சந்தையின் ஏதாவதொரு இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை அல்லது சீட்டை கொண்டுள்ள எவராவது ஒருவரால் ஏதாவது போலியாகவோ வேறு ஒருவருக்கு அந்த இடத்தை அதன் ஒரு பகுதியை உபயோகத்திற்கெடுக்க அல்லது பயன்படுத்த அல்லது அங்கு ஏதாவது ஒரு பொருளை விற்க அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்துவதற்கு இடமளித்தல் அல்லது அனுமதியளித்தலாகாது.

*43.* அனுமதிச் சீட்டுப் பத்திரம் வைத்திருப்பவரைத் தவிர வேறு எவரொருவராலும் பொதுச் சந்தையின் ஏதாவது ஒரு இடத்தை அல்லது இடத்தின் பகுதியை உபயோகத்திற்கெடுத்தல் அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்தலை செய்யக்கூடாது.

*44.* ஏதாவது அருவருக்கத்தக்க அல்லது தோல் அல்லது தீராத நோயால் பீடிக்கப்பட்டவராக இருக்கும்போது ஏதாவது பொது அல்லது தனியார் சந்தையில் ஏதாவது கடை அறையில் ஆசனமொன்றை அல்லது இடத்தை பாவிப்பது அல்லது ஏதாவது ஒரு பொருளை அச் சந்தையில் அல்லது பிரதேச சபையின் அதிகார எல்லைப் பரப்புக்களான ஏதாவது வீதியில் அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்தல் இல்லையேல் அங்குமிங்கும் கொண்டு செல்லல் மேலும் அவ்வாறான ஏதாவது நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் எவராவது ஒருவர் பொது அல்லது தனியார் சந்தையில் எவரொருவராலும் எந்தவொரு விதத்திலும் சேவையிலீடுபடுத்தக் கூடாததுடன் அவ்வாறான நோயால் பீடிக்கப்பட்டுள்ள ஒருவர் ஏதாவது சந்தையினுள் நுழையக்கூடாது. அவ்வாறான ஒருவர் சந்தை வளவிலிருந்து வெளியேற்றப்படவேண்டும்.

*45.* பொதுச் சந்தையின் ஏதாவது கடை அறைக்கான உரிமப்பத்திரம் வைத்திருக்கும் எவரொருவராலும் எந்த விதத்திலாயினும் வேறொருவருக்கும் அக்கடை அறையை அல்லது அதன் ஏதாவதொரு பகுதியை பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அனுமதியின்றி பாவிப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அல்லது ஏதாவது பொருளை அல்லது ஏதாவதொன்றை அங்கு விற்பதற்கு அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்துவதற்கு இடமளித்தல் அல்லது அனுமதியளித்தலாகாது.

*46.* பொதுச் சந்தையின் ஏதாவது கடை அறையில் அல்லது இடவசதிக்காக அனுமதிப்பத்திரம் அல்லது சீட்டை வைத்திருக்கும் ஒருவரால் வாடகைக்கு எடுத்துள்ள அறையில் அல்லது இடத்தில் அல்லது எல்லைக்கு வெளியே ஏதாவதொரு இடத்தை பாவிப்பதற்கு அல்லது பயன்படுத்த அல்லது அவருக்காக செயல்படும் எவராவது ஒருவருக்கு பயன்படுத்த அல்லது பாவிக்க இடமளித்தல் அல்லது அனுமதியளித்தலாகாது. மேலும் அவ்வாறான அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் ஒருவர் எந்தவொரு இணைப் பிரதிநிதி அல்லது ஊழியர் அவ்வாறான இடத்தை பயன்படுத்தல் அல்லது பாவித்தலாகாது.

*47.* எவரும் அதற்காக வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டியினுள் தவிர குப்பை கூழங்களையும், கழிவுகளையும், எலும்புகளையும், மிருகங்களின் தோல் அல்லது அவ்வாறான வேறு எதையும் பொதுச் சந்தையில் அல்லது அதன் சுற்றாடலுக்குள் அல்லது பொதுச் சந்தையின் சுற்றாடலுக்குப் பக்கத்தில் உள்ள காணியில் வீசியெறியக்கூடாது.

*48.* இப்பகுதியின் துணைவிதிகள், வேறு விதத்தினாலான ஒழுங்கு விதிகள் ஏற்பாடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர உள்ளூராட்சி நிறுவனத்தின் கொல்களத்தில் அறுக்கப்படாத எந்தவொரு மிருகத்தின் இறைச்சியையும் இப்பகுதியின் பொதுச் சந்தைக்கு அல்லது இப் பகுதியின் 22வது துணைவிதியின் ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதத்தில் விசேடமாக உரிமப்பத்திரம் வழங்கப்பட்ட ஏதாவதொரு இடத்திற்கு கொண்டு செல்லல் அல்லது விற்றல் அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்துவதை செய்தலாகாது. இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சிக்கு, மீன் போன்றனவற்றிற்கு இத் துணைவிதி பொருத்தமாகாது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சி அல்லது மீன் போன்றவற்றை விற்பதற்காக விசேட உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலேயே விற்க வேண்டும்.

*49.* எவரொருவராலும் பொதுச்சந்தைக்கு நாய் ஒன்றை கொண்டு வருவது அல்லது அவருக்கு சொந்தமான அல்லது அவரது பொறுப்பில் இருக்கும் எந்தவொரு நாயையும் ஏதாவது பொதுச் சந்தையின் சுற்றுப் புறத்தின் ஏதாவது ஒரு பகுதியிலிருக்க இடமளித்தலாகாது.

50. (i) பொதுச்சந்தைக்கு எடுத்துவரப்படுகின்ற ஏதேனும் பொருள் அல்லது பண்டம் வியாபாரத்திற்காக பாவிக்கப்படுகின்ற ஏதேனும் உபகரணம் அல்லது வேறேதும் அத்தகைய பொருள் அல்லது பண்டம் விற்பனைக்காக சந்தைக்குள் எடுத்து வருகின்ற வேளையிலோ அல்லது அங்கிருந்து எடுத்துச் செல்லும் வேளையிலோ அன்றி வேறு எச்சந்தர்ப்பத்திலும் ஏதேனும் விறாந்தையில் அல்லது மேடைச்சிறுமதில் மீது வைக்கப்படுதலோ அவ்வாறு செய்ய இடமளித்தலோ ஆகாது.

(ii) பொதுச் சந்தையினுள்ளே ஏதேனும் விறாந்தையில் அல்லது மேடைச்சிறுமதில் மீது எவ்விதத்திலும் வியாபாரத்தை மேற்கொள்ளலாகாது என்பதோடு சந்தையின் நடைபாதைகள், விறாந்தைகள், பொதுமக்கள் சென்று வருவதற்காக ஒதுக்கப்பட்ட இடங்கள், படிகள் (ஸ்டெப்ஸ்) ஆகிய இடங்களில் எவரும் பொருட்களை விற்பனை செய்தல், காட்சிக்கு வைத்தல், களஞ்சியப்படுத்தல் ஆகாது.

51. பிரதேச சபையின் முன்கூட்டியே தீர்மானித்துக்கொள்ளப்பட்ட கருமத்திற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலொழிய எவராலும் பொதுச் சந்தையின் ஏதேனும் கடை அறையின் நிர்மாணத் திட்டத்தை மாற்றியமைக்கின்ற அல்லது அத் திட்டத்திற்கு சேதம் விளைவிக்கின்ற வகையிலான எந்தவொரு நிர்மாணிப்பையோ அல்லது பொருத்துகையையோ அல்லது மாற்றத்தையோ அல்லது பகுதியாக்கலையோ செய்தலாகாது.

52. எவரொருவரும் பொதுச் சந்தைக்கு உள்ளே எங்கேனும் விற்பனைக் கொட்டிலை நிர்மாணித்தலோ பகுதியாக்கலோ ஆகாது.

53. இப் பகுதியின் 12வது துணைவிதியின் ஏற்பாட்டின் கீழ் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் அல்லது அவரது ஊழியர் அல்லது முகவரொருவர் இருப்பின் அத்துடன் இப் பகுதியின் துணைவிதிகளின் பணிப்புகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்தொழுகினாலேயன்றி பொதுச் சந்தையின் கடை அறைகளைக் கொண்ட பகுதிக்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ள விற்பனை மேடையொன்றைப் பாவித்தல் அல்லது கையாளல் ஆகாது. மேலும் பொதுச் சந்தை மூடுவதற்காக நிச்சயிக்கப்பட்ட நேரத்தின் பின்னர் எவரொருவராலும் அவ்வாறான ஏதாவதொரு இடத்தின் மீது எந்தவொரு பொருளையும் வைக்கக்கூடாது.

54. இப்பகுதியின் துணைவிதிகளிலான கீழ் பிரதேச சபையுடன் கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கையைச் செய்துள்ளவர், அவரது ஊழியர் அல்லது முகவரொருவர் இருப்பின் அத்துடன் இப்பிரிவின் துணைவிதிகளிலும் மேற்படி வாடகை உடன்படிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புக்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்தொழுகினாலேயன்றி எவராலும் பொதுச் சந்தைக் கட்டிடத்தின் ஏதேனும் கடை அறையினைப் பாவித்தலோ கையாளலோ ஆகாது.

55. ஏதேனும் கடை அறையின் வாடகைக் காலம் நிறைவடைகின்ற நாளில் இருந்து ஒரு மாத காலம் கழிவதற்கு முன்னராக இப் பகுதியின் 16வது துணைவிதியின் கீழ் எதிர்வரும் ஆண்டுக்காக வாடகைக் காலத்தை நீடித்திருந்தாலேயொழிய எவரேனும் வாடகை பெறுநருக்கு பாவிக்க அல்லது கையாள வழங்கப்பட்டுள்ள அத்தகைய கடை அறையை வாடகை காலம் முடிவடைகின்ற திகதிக்குப் பின்னர் பாவிக்கவோ கையாளவோ உரிமை இருத்தல் ஆகாது.

56. பொதுச் சந்தையின் ஏதாவது கடை அறையை எவரேனும் உப வாடகைக்கு எடுத்தலாகாது. எவரேனுமொருவரால் ஏதேனும் கடை அறையை உப வாடகைக்கு எடுத்ததன் காரணமாக அத்தகைய கடை அறையின் வாடகை பெறுநருடன் பிரதேச சபை செய்துள்ள உடன்படிக்கை செல்லுபடியற்றதாக்கப்பட்டமை காரணமாகவும் அத்தகைய கடை அறை மீண்டும் பிரதேச சபையினால் கையேற்கப்பட்டமை காரணமாகவும் அத்தகைய உப வாடகை பெறுநருக்கு விளைகின்ற ஏதேனும் நட்டம் அல்லது சேதம் அல்லது இழப்பு அத்தகைய வாடகை பெறுநரையே சாரும் என்பதோடு பிரதேச சபையோ அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரோ அது தொடர்பான பொறுப்பு வகிக்க கடப்பாடு உள்ளவராக மாட்டார்.

57. பொதுச் சந்தை வளவில் பொதுவான பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனும் மின்சுற்றில் இருந்தோ பொது நீர்வழிக்குழாய் வாயில் மூலமாகவோ, கடை அறைக்கான மின்சார இணைப்பையோ நீர்வளங்களையோ பெற்றுக்கொள்ளல் அல்லது அவ்வாறு பெற்றுக்கொள்ள இடமளித்தல் ஆகாது.

58. (i) எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் அல்லது விற்பனைக்கான அனுமதிச்சீட்டை பெற்றவரும் இப் பகுதியின் 62வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கொள்வனவை மறுத்தல் அல்லது அதற்கு தடையாக இருத்தல் ஆகாது.

(ii) இத் துணைவிதிகளின் துணைவிதிகளின் நியதிகளின் கீழ் தனியார் சந்தையில் உரிமப் பத்திரம் பெற்றுள்ள ஒருவர் மற்றும் பொதுச் சந்தையில் உள்ள எவரொருவரும் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு குறித்த சந்தைகளை பரிசோதனை செய்வதற்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

59. பொதுச் சந்தையின் மேற்பார்வையாளர் அல்லது குத்தகைக்காரர் அல்லது அவரினால் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளவராக இருப்பவர் கிடைக்க வேண்டிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ள குத்தகைக் கட்டணத்திற்கு மேலதிகமான தொகையை கேட்பது அல்லது பெற்றுக்கொள்வது அல்லது தமக்கு வழங்கப்பட்ட ஏதாவது வேலையொன்றை செய்யும் நடவடிக்கையில் எவராவது ஒருவருக்கு இடையூறு ஏற்படுத்தல்ஆகாது.

60. இப்பகுதியின் துணைவிதிகளின்கீழ் பொதுச் சந்தைக்கு தேவையான சகல பணிப்புக்களையும் அவ்வண்ணமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலேயொழிய பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு தனியார் சந்தைக்கும் உரிமப் பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

*பிரதேச சபையின் பணி (61-64).*

61. பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்டு பேணிவரப்படுகின்ற ஏதேனும் பொதுச் சந்தை தொடர்பில் இந்த துணைவிதிகளின் கீழே குறிப்பிடப்பட்ட பணிகளை பிரதேச சபை நிறைவேற்றுதல் வேண்டும்.

அத்தகைய பொதுச்சந்தையின்-

(i) நிரந்தரக் கட்டடங்கள் அனைத்தும் செங்கற்களால், சீமேந்து கற்களால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு சுவர்களின் உயரம் குறைந்த பட்சம் தரைமட்டத்தில் இருந்து 3 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

(ii) கூரை ஏதேனும் நிலையான திண்மப் பொருட்களால் ஆக்கப்பட்டு முழு நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(iii) உள்ளே இருக்கின்ற கடை அறைகளின் கூரைக்கு உட்கூரை (சீலிங்) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய உட்கூரை தரைமட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 3 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தலும் வேண்டும்;

(vi) கட்டடத்திற்கு உள்ளே கடை அறைக்கு முன்னால் குறைந்த பட்சம் 2.5 மீற்றர் அகலமுடைய விறாந்தையை கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு கடை அறையும் விறாந்தையுடன் தொடர்புபடுகின்ற இடத்தில் மடிக்கும் கதவு அல்லது பாகங்களாக கழற்றித் திறக்கக்கூடிய கதவினைக் கொண்டதாக இருத்தலும் வேண்டும்;

(v) கடை அறைகளைக் கொண்ட கட்டடத்தின் சுவர்களின் வெளிப்புற எல்லையிலும் விறாந்தைகளின் வெளிப்புற எல்லையிலும் குறைந்த பட்சம் ஒரு மீற்றர் அகலமுடைய மேடை மதிலும் மழை நீர் வழிந்தோடுவதற்கான வடிகால்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(vi) கட்டடத்தில் கடை அறைகளைக் கொண்ட பகுதிக்குப் புறம்பாக தற்காலிக வியாபாரிகளுக்கான விற்பனைக் மேடைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(vii) உள்ளே நிர்மாணிக்கப்படுகின்ற ஒவ்வொரு விற்பனை மேடையும் செங்கற்கள் அல்லது சீமெந்துக்கற்கள் அல்லது சுண்ணாம்பு கற்கள் அல்லது ஏனைய அங்கீகரிக்கபட்ட கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட சிறுமதிலின் மீது கொங்கிறீற் தகட்டினாலோ துருப்பிடியாத உலோகத் தகட்டினாலோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் கொங்கிறீற்

தகட்டினால் கட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளவிடத்து அக்கட்டு சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ நிலவோடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும். அவ்வாறு விற்பனை மேடைகளை அமைக்க இயலாத ஏதேனும் சந்தர்ப்பத்தில், நிலத்தின் மீது தட்டையான இடப்பகுதிகள் அமைக்கப்பட்டிருத்தல் என்பதோடு, அப்பகுதிகள் சுண்ணாம்பு கற்கள் அல்லது ஏனைய அங்கீகரிக்கபட்ட கற்களினால் பூர்த்தி செய்யப்பட்டு சீமெந்து சாந்து பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு ஒவ்வொரு பகுதியையும் பிரிக்கின்ற கோட்டுக் குறியீடுகள் வெள்ளை நிறத்தால் அடையாளமிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(viii) ஒவ்வொரு விற்பனை மேடையினதும் பரப்பளவு குறைந்த பட்சம் இரண்டு சதுர மீற்றராக இருத்தல் வேண்டும்;

(ix) ஒவ்வொரு விற்பனை மேடையையும் உள்ளடக்கக்கூடியதாக செங்கல்லினால் அல்லது சீமெந்து கல்லினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களால் அல்லது கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பு குழாய்களினால் அல்லது பலப்படுத்தப்பட்ட அலுமினிய குழாய்கள் இடப்பட்ட தூண்களின் மீது குறைந்த பட்சம் தரைமட்டத்திலிருந்து 2.25மீற்றர் உயரத்தை கொண்ட கூரை அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, தாழ்வாரம் குறைந்த பட்சம் தரைமட்டத்திலிருந்து 2.1 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மேற்படி தூண்கள் செங்கற்களால் அல்லது சீமேந்துக் கல்லால் அல்லது சுண்ணாம்புக் கல்லால் அல்லது ஏனையஅங்கீகரிக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்டிருப்பின் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பினால் அமைக்கப்பட்டிருப்பின் அத் தூண்கள் வர்ணப் பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்;

(x) ஒவ்வொரு கூரையும் நிலையான பொருளினால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு மழைநீர் கீழே வழிந்தோடப் போதுமான குழாய்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(xi) ஒவ்வொரு விற்பனை மேடையையும் சுற்றி தரைமட்டத்தில் குறைந்த பட்சம் 1 மீற்றர் அகலம் கொண்ட மேடைச் சிறுமதில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்;

(xii) பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்விற்கு பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் மாத்திரமன்றி குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை வீதம் இத் தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் வழங்கப்படுகின்ற நீரை பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாக கருதப்படல் வேண்டும்;

(xiii) இடத்தின் கருமங்களுக்காக பாவிக்கப்படும் நீரை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் நீர் மாசடைவதை தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(xiv) ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாக ஒதுக்கப்பட்ட மல சல கூடங்கள் போதுமான எண்ணிக்கையில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய ஒவ்வொரு மலசல கூடத்தினது தரையிலும் குறைந்த பட்சம் நிலமட்டத்திலிருந்து 2 மீற்றர் உயரம் வரை சுவர்களிலும் நில ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(xv) எல்லாக் கடை அறைகளுக்கும், விற்பனை மேடைகளுக்கும் அருகிலும் மலசல கூடங்களிற்கு உள்ளேயும் விறாந்தை உள்ளிட்ட பொதுப்பகுதிகளிற்கு உள்ளேயும் போதியளவு மின்சார வெளிச்சம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு ஒவ்வொரு மின்சுற்றும் மின் காவற்கட்டு பொருளினால் ஆக்கப்பட்ட உறையினால் மூடப்பட்டிருத்தலும் வேண்டும் ;

(xvi) ஒவ்வொரு கடை அறையிலும் மின்சார மானியொன்று வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, பொது இடங்களிற்கு ஒளியூட்டுவதற்காக செலவாகும் மின்சார அலகுகளின் எண்ணிக்கையை அளக்கும் பொருட்டு தனிவேறான மானியொன்று பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xvii) வளவினுள்ளே நீர் பெறுவதற்கு பொதுவான நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(xviii) மரக்கறி அல்லது பழங்களை கழுவுவதற்காக தனி வேறான இடம் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(xix) நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையிடம் நீர் பெறப்படுமிடத்து வியாபாரத்தின் தன்மைக்கேற்ப நீர் பாவிக்க வேண்டிய அவசியம் நிலவுகின்ற ஒவ்வொரு கடை அறைக்கும் ஒரு நீர் இணைப்பு வீதம் வழங்கப்படல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு நீரிணைப்பு தொடர்பிலும் வெவ்வேறான நீர்மானி வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு பொது நீர்க்குழாய் வாயிலிலும் மரக்கறி மற்றும் பழவகைகளை கழுவும் பொருட்டு ஒதுக்கப்பட்ட இடத்தின் நீர்பாவனையை அளப்பதற்காக தனிவேறான நீர்மானி ஒன்று வீதம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(xx) நேரடியாக உள்ளேயும், கூரை மீதும் விழுகின்ற மழைநீரும் மரக்கறி மற்றும் பழவகைகளை கழுவுவதற்காக ஒதுக்கியுள்ள இடத்திலிருந்து அப்புறப்படுத்தும் நீரும் முறையாக பாய்ந்தோட போதுமான அளவில் வடிகால் தொகுதியொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவு நீர் தடையின்றி பாய்ந்து செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(xxi) உள்ளே போதுமான அளவில் தீப்பாதுகாப்பிற்கான வேலைத்திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, மின்சாரம் காரணமாக தோன்றக் கூடிய தீ, எரிபொருள் மூலமாக தோன்றக்கூடிய தீ மற்றும் வேறு விதமாக தோன்றக்கூடிய தீயை கட்டுப்படுத்த அவசியமான வெவ்வேறு வகையைச் சார்ந்த தீ அணைப்பு கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(xxii) பாவனையாளர்களால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்களின் நிறையை அளந்து உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு பொதுவான நியமத் தராசு தெளிவாக புலப்படக்கூடியதான இடத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(xxiii) பொதுச் சந்தையில் கடை அறைகளின் இட அமைவை கருத்தில் கொண்டு பிரதேச சபையினால் இறைச்சி, மீன், பழங்கள், சில்லறைச் சாமான்கள் மற்றும் பிற வர்த்தக பொருட்களை விற்பனை செய்வதற்காக சந்தையை பகுதிகளாகப் பிரித்து ஒதுக்குவதும் பிரதேச சபையின் கருமமாக அமைதல் வேண்டும்;

(xxiv) வளவில் பிறப்பிக்கப்படும் கழிவுப் பொருட்கள் -

(அ) உயிரியல் படியிறக்கம் செய்யப்படக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(ஆ) கண்ணாடிப் பொருட்கள்;

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்;

(ஈ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்;

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக பாகங்கள் ;

(ஊ) ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்.

தனித்தனியாக சேகரிக்கக்கூடிய கிடங்குகளோ பாத்திரங்களோ அல்லது தொட்டிகளோ மேற்படி பொதுச் சந்தையில் தனி வேறான ஓரிடத்தில் அமைந்திருக்க வேண்டுமென்பதோடு உயிர் சிதைவு கழிவுப் பொருட்களை இடுவதற்காக அமைக்கப்பட்ட கிடங்குகள், பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் எலிகள், விலங்குகள், இலையான்கள், பூச்சிகள் அல்லது ஏதேனும் பறவைகள் நுழையா வண்ணம் நன்கு மூடப்பட்ட மூடி பொருத்தப்பட்டும் இருத்தல் வேண்டும்.

(xxv) சந்தைக்கு வருகை தருகின்ற பாவனையாளர்களினதும் பொருட்களை ஏற்றி இறக்குபவர்களதும் துவிச்சக்கர வண்டிகளையும் மோட்டார் சைக்கிள்களையும் மோட்டார் வாகனங்களையும் நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xxvi) விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் சந்தையில் வைத்து விற்பதற்கு தனியான பொதுவான இடமொன்றை ஒதுக்கிக் கொடுத்தல் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாதல் வேண்டும். அத்துடன் ஏனைய இந்த துணைவிதிகளில் கூறப்பட்ட நடைமுறைகளை கடைப்பிடித்தல் விவசாயிகளது கடமையாதல் வேண்டும்.

(xxvii) பிரதேச சபையால் பராமரிக்கப்படும் சந்தைக் கட்டடத் தொகுதியின் இட விளக்கப்படம் பொது மக்கள் இலகுவில் பார்க்கக் கூடிய ஓரிடத்தில் காட்சிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். பிரதேச சபையால் அங்கீகரித்தவாறு கடைத்தொகுதி, விற்பனை மேடைப்பகுதி, மீன் சந்தைப்பகுதி, இறைச்சிக் கடைப்பகுதி, விவசாய விளை பொருட்களை விற்பனை செய்யும் பகுதி என வகுக்கப்பட்டு வெளிக்காட்டப்படல் வேண்டும்.

62. பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் பொதுச் சந்தையில் அல்லது தனியார் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அல்லது காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் உணவுப் பொருளின் மாதிரியொன்றை அதற்கான விலையைச் செலுத்திப் பெற்றுக்கொள்வது சட்டமுறையானதாக அமைதல் வேண்டும்.

63. பொதுச் சந்தையின் இடவிளக்கப் படத்திற்கமைய விற்பனை மேடைகளில் மரக்கறி வகைகளும் கடைத் தொகுதிகளிலுள்ள கடைகளில் உடன்படிக்கைக்கு ஏற்றவாறு பொருட்களும் விற்கப்படுவதை உறுதிப்படுத்துவது பிரதேச சபையின் பணியாதல் வேண்டும்.

64. வலது குறைந்தவர்களும் அவர்களது சக்கர வண்டிகளும் சந்தைப்பகுதிக்குள் செல்லக்கூடியவாறு கட்டடத்தின் சாய்வு படிகள், கைப்பிடி அமைப்புக்கள் போன்றன அமைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

அறவீடுகளும் கட்டணங்களும்.

65. (i) சந்தைக்கடை அறை வாடகைகள் பிரதான விலைமதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கிணங்க கடை வாடகைக்கு பெறுநரிடமிருந்து செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் அறவிடுதல் பிரதேச செலாளருக்கு சட்டபூர்வமானதாகும்.

(ii) சந்தையில் விற்பனை மேடைகளை உபயோகிக்கும் நபர்களிடமிருந்து இணைப்பு ii இல் குறிப்பிட்டவாறு பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்களை அறவிட்டுக் கொள்ளவும் விற்பனை மேடைகளிற்கு மேலதிகமாக சந்தையின் பொது இடத்தில் வைத்து விற்கும் விவசாயிகள் அல்லது ஆட்களிடமிருந்து மொத்த விற்பனையில் 5 வீதத்திற்கு மேற்படாது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடல் சட்டபூர்வமானதாகும். மேலும் குறிப்பிட்ட கட்டணம் அறவிடும் உரிமையை வருடாந்த குத்தகைகாரரிடம் ஒப்படைத்து ஒப்பந்த பிரகாரம் குத்தகையை பிரதேச சபை அறவிடல் சட்டபூர்வமானதாகும். எவ்வாறாயினும் சகல கட்டண விபரங்களும் இலங்கை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தனியார் சந்தையொன்றை நடாத்திச் செல்வதற்கான 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 பிரிவுக்கு அமைவாக உச்சகட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப் பத்திரக் கட்டணத்தை அறவிடுவது பிரதேச சபைச் செயலாளருக்கு சட்டபூர்வமானதாகும்.

(iv) தனியார் சந்தைக்கு கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருட்கள் மொத்த விற்பனை செய்யும்போது விற்பனையில் 5வீதத்திற்கு மேற்படாது (ii) பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படும் குறித்த வீதத்திற்கான கட்டணங்களை தனியார் சந்தை நடத்துநர் அறவிட்டுக்கொள்ளும்போது அதில் 25 வீதத்தை பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

அதற்கான தனியான ஒப்பந்தம் ஒன்றும் செய்துகொள்ளப்பட வேண்டும். இதற்காக பிரதேச சபையால் அனுமதிக்கப்பட்ட பற்றுச் சீட்டு புத்தகங்களை மாத்திரமே இந்த அறவீடுகளுக்கு உபயோகித்தல் வேண்டும். தனியார் மீன் சந்தைகளிற்கும் இந்த துணைவிதி ஏற்புடையதாதல் வேண்டும்.

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

66. இப்பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேசசபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

*உரிமப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.*

67. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (68-71).*

68. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிக்க பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்குப் பரிசோதிப்பதற்காக, அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதற்கு ஏதேனும் பொதுச் சந்தை அல்லது தனியார் சந்தை, வியாபார நடவடிக்கைகளுக்காகத் திறந்து வைக்கப்படுகின்ற எந்தவொரு தருணமும் எனப் பொருள்படும்.

69. பிரதேச சபை இடப்பரப்பிற்குள் தனியார் சந்தை நடாத்துவதற்கான விண்ணப்பத்திற்கு பொது நன்மை கருதி உரிமப்பத்திரம் வழங்குவதற்கோ, மறுப்பதற்கோ பிரதேச சபைக்கு தத்துவம் உண்டு. இப்பிரிவின் துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதேனும் தனியார் சந்தை பேணி வரப்படுகின்ற இடம் இப்பகுதியின் 61வது துணைவிதியின் வாசிக்கப்பட வேண்டிய மற்றும் இப்பகுதியின் 4 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாட்டிற்கமைவாக முடிவுற்றால் அல்லது இந்த பகுதியில் வேறு ஏதேனும் துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமையும் சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற தினமொன்றுக்கு முன்னராக அத்தகைய இடத்தை அப்பணிப்புக்கு அல்லது பணிப்புகளுக்கு அமைவான நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு அவசியமானஅனைத்தையும் நிறைவேற்றுமாறு உரிமப்பத்திரம் பெறுநருக்குப் பணிப்புரை விடுக்கின்ற அறிவித்தல் ஒன்றை பிரதேசசபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அத்தகைய உரிமப்பத்திரம் பெறுநரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

70. இப் பகுதியின் 69வது துணைவிதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தல் கிடைத்த எவரேனும் உரிமப்பத்திரம் பெறுநர் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னராக அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கான அதிகாரத்தை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் கொண்டிருத்தல் வேண்டும். ஆயினும், அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சுதல் ஆகாது.

71. இப் பகுதியின் 70வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவரேனும் உரிமப்பத்திரம் பெறுநர் அத்தகைய அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னராக அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுவதைத் தவறவிட்டுள்ள தருணத்தில், அந்த இடத்திற்கான உரிமப்பத்திரத்தை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் செல்லுபடியற்றதாக்குவது சட்டமுறையானதாக அமைதல் வேண்டும்.

*முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும் (72-73).*

72. ஏதாவது கடை அறை, இடம், குப்பைத்தொட்டி, வாடகை அல்லது கட்டணம் சம்பந்தமாக ஏதாவது கருத்து வேறுபாடுகள் ஏற்படுமிடத்து அதை நிவர்த்தி செய்யப் பொருத்தமென தாம் கருதும் கட்டளையிட பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அதிகாரமுண்டு.

73. உரிமப்பத்திரதார் அல்லது யாராயினுமொருவர் எழுத்து மூலமான அல்லது வாய்மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

துணை விதிகள் மீறப்படுதல்.

74. இத்துணை விதிகளில் உள்ளடக்கப்பட்ட ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறானதாக அமைதல் வேண்டும்.

அபராதமும் தண்டனையும்.

75. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள்கோடலும் வரை விலக்கணமும்.

76. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

"செயலாளர்" என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவேரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

"வாழ்க்கைத்துணை" என்பது, எவரேனும் குத்தகை பெறுநரின் சட்டரீதியான மனைவி அல்லது கணவரையும்'

"பொதுச் சந்தை" என்பது, பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு பேணிவரப்படுகின்ற வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக அமைக்கப்பட்ட கடை அறை மற்றும் தத்தமது விவசாயத் தோட்டத்திலோ வீட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற காய்கறிகள் அல்லது பழங்களையும் உள்ளடக்கிய வேறு பொருட்கள் அல்லது பண்டங்களை விற்பனை செய்வதற்கான இடங்களை ஏற்படுத்தியுள்ளதும் ஏதேனும் உற்பத்தியை மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்யப்படுகின்ற இடமும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்

"தனியார் சந்தை" என்பது, பிரதேச சபை அல்லாத வேறு எவரேனும் ஒருவராலோ ஆட்களின் குழுவினாலோ, கூட்டு நிறுவனத்தாலோ பொதுச் சந்தையின் பணிகளுக்கு ஒத்த பணியை அல்லது பணிகளை நடத்தி வருகின்ற இடம் எனக் கருதப்படல் வேண்டும்

"பிரதம விலைமதிப்பீட்டாளர்" என்பது, விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம விலை மதிப்பீட்டாளர் எனக் கருதப்படுவதோடு, பிரதேச சபை அடங்குகின்ற நிர்வாக மாவட்டத்திற்காக அத்தகைய திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரும் அதில் உள்ளடங்க வேண்டும்.

"கடை அறை வாடகை பெறுநர்" என்பது, பிரதேச சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை சகிதம் ஏதேனும் பொதுச் சந்தையில் ஏதேனும் கடை அறையினைப் பேணிவருகின்ற ஆள் எனக் கருதப்படல் வேண்டும்.

"விற்பனை மேடை" என்பது, ஏதேனும் சந்தையில் கடை அறைகளிலிருந்து பிரிக்கப்பட்டதும் அத்தகைய பொதுச் சந்தைக்குள்ளே அன்றாடம் வியாபாரத்தை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டு கோடுகளால் பிரிக்கப்பட்ட மேடை எனக் கருதப்படுவதோடு அத்தகைய பொதுச் சந்தையில் தரையின் மீது கோடுகளால் குறியீடு அடையாளமிடப்படுவதன் மூலமாக வியாபார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் இடமும் அதில் உள்ளடங்க வேண்டும்.

"சந்தைக் குத்தகைதாரர்" என்பது பொதுச் சந்தையின் விற்பனை மேடையை அல்லது தரையை பாவிக்கும் அல்லது கையாளும் ஆட்களுக்கு அனுமதிச்சீட்டுக்களை வழங்கி அவற்றுக்கான பணங்களை அறவிடும் கட்டணம் சேகரிப்பவர் என்பதும் அவர் அவ்வாறு சேகரிப்பதற்காக வருடாந்த குத்தகைக்கு பெற்றுக்கொண்டவருமானவர் எனக் கருதப்படல் வேண்டும்.

"ஏதேனும் பொதுச் சந்தையில் வியாபரத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தின் அளவு" என்பது கடை அறையினைப் பொறுத்த மட்டில் அத்தகைய கடை அறையின் பின்புறச் சுவரில் இருந்து இத் துணைவிதியின் 61வது பிரிவில் (iv) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு பொருத்தப்பட்டுள்ள எல்லை வரையான பகுதியாகவும், வியாபார மேடையை பொறுத்தமட்டில் அத்தகைய வியபார மேடையின் மேற்புற பரப்பளவு மற்றும் வியாபாரத்தில் ஈடுபடுகின்றவருக்கு இருப்பதற்கான இடமளிக்கப்பட்டுள்ள அத்தகைய வியாபார மேடை அல்லது நிலப்பகுதியெனவும் கருதப்படல் வேண்டும்.

**இணைப்பு** - I

**பிரதேசசபை பொதுச் சந்தை விற்பனை மேடையைப் பாவித்தல் அல்லது கையாளல் தொடர்பான அனுமதிச்சீட்டு**

அனுமதிச்சீட்டு உரிமையாளரின் பெயர் : ......................................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................

ஒதுக்கப்பட்ட விற்பனைக் கூடத்தின்/கோடுகள் வரையப்பட்ட பகுதியின் இல.: ...................

ஒதுக்கப்பட்ட காலம் : 20..... திகதி முதல் 20 ...... திகதி வரை

ஒதுக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை : 01 நாள்/07 நாட்கள்/01 மாதம்

அறவிடப்பட்ட கட்டணம் : ரூபா ................................................

விநியோகித்த திகதி: ................................................

.................,
கட்டணம் சேகரிப்பவரின் கையொப்பம்
செயலாளருக்காக/குத்தகைக்காரருக்காக.

**இணைப்பு - II**

**பொதுச் சந்தையொன்றில் விற்பனை மேடையைப் பாவித்தல் அல்லது கையாளல் தொடர்பாக அறவிடப்படுகின்ற கட்டண வாய்ப்பாடு**

| விற்பனை மேடையின் தன்மை | ஒரு நாளுக்கான கட்டணம் ரூ. | ஏழு நாட்களுக்கான கட்டணம் ரூ. | ஒரு மாதத்திற்கான கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| நிலத்திற்கு மேலாக அமைக்கப்பட்ட விற்பனை கொட்டில் | ....... | ......... | ....... |
| நிலத்தின் மீது கோடு அடையாளம் இட்டு பிரிக்கப்பட்ட பகுதி | ........ | ......... | ......... |

**இணைப்பு - III**

**பிரதேச சபை**

**தனியார் சந்தை நடாத்துவதற்கான வியாபார வரி/வியாபார உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20...**

1. சந்தையின் பெயர் :......................................

2. சந்தை அமைந்துள்ள இடம்:

(i) வட்டாரம்................

(ii) ஆதனஇல..............

(iii) வீதியின்பெயர் :............... ......................

(iv) கிராம அலுவலர் பிரிவு இலக்கமும் பிரிவின் பெயரும் :......................

3. (i) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :.............................

(ii) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி............................

(iii) விண்ணப்பதாரியின் கிராம அலுவலர் பிரிவு இலக்கமும் பிரிவின் பெயரும் :-...........

(v) விண்ணப்பதாரியின் அடையாளஅட்டை இல. :.........................

(v) விண்ணப்பதாரியின் தொலைபேசி இல. :........................

(vi) விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி :.........................

4. (i) சந்தை ஆரம்பிக்கப்பட்ட திகதி :..............................

(ii) சந்தை நடத்துநரின்/முகாமையாளரின்/பிரதிநிதியின்

(a) பெயர் : ................................

(b) தொலைபேசி இல. :................................

5. நிலம்/ கட்டடம் வாடகைக்கு/ குத்தகைக்கு பெறப்பட்டதாயின்-

(i) உரிமையாளரின் பெயர்:..................................

(ii) முகவரி :.................................

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா :

ஆம்/ இல்லை

ஆம் எனில் உரிம இல. :............. திகதி:...............

7. துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான

(i) விற்பனை மேடைகளின் எண்ணிக்கை:.....................................................................................

(ii) சந்தைக் கடைகளின் எண்ணிக்கை:- ...............................................................................

8. சந்தையை நடாத்த அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை (முகாமையாளர் உள்ளடங்கலாக): ...........

9. மலசலகூடங்கள்-

(i) ஆண் பாவனையாளர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :- ...............................

(ii) பெண் பாவனையாளர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை:- .................................

10. நீர் -

(i) பாவனையாளர்களுக்கான குடிநீர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழிமுறை /வழிமுறைகள், அவற்றின் எண்ணிக்கை: ................

(ii) மரக்கறி கழுவுவதற்கு நீர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழிமுறை /வழிமுறைகள், அவற்றின் எண்ணிக்கை :- ....................

11. கழிவுநீர்அகற்றும்முறை/முறைகள் :-............................

12. திண்மக்கழிவுப்பொருட்களை இறுதியாக அகற்றும் முறையியல் : .............................................................

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்ட தனியார் சந்தையை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20..... ஆண்டுக்கான தொழில் உரிமப்பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்டவிதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

..........................,

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-............................

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

................................................................................

தவிசாளர்/செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம்:.................. ஆதன இல:................

வீதியின் பெயர்:......................................

உரிமையாளரின் பெயர்:....................................

ஆதன விபரம்:.......................................

ஆண்டுப் பெறுமதி:.............. வீதவரிநிலுவை.........

உண்டு........ இல்லை......

....................,
நிர்வாக உத்தியோகத்தர்/பகுதித் தலைவர்.

திகதி :-............................

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:..................................

செலுத்த வேண்டிய கட்டணம்:................................ பிரிவு A B C

குறிப்பு...................

..........................,
வருமானப் பரிசோதகர்.

திகதி :-............................

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

**பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை**

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................,
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.

திகதி :-............................

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................,
பிரதம சுகாதார வைத்திய அதிகாரி.

திகதி :-............................

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :....... உபயோகம் மற்றும் :........சுற்றுச்சூழல் உரிமம் :.......

சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :.......... குடிபுகு சான்றிதழ் :........ மதுவரி உரிமம் :.......

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

..........................,
பிரதம வருமானப் பரிசோதகர்.

திகதி :-............................

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

..........................,
செயலாளர்.

திகதி :-............................
அங்கீகாரம் வழங்கப்படுகின்றது./வழங்கப்படவில்லை.

..........................,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-............................

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. :......... பற்றுச்சீட்டுத் திகதி:.....................

உரிம இல. :............. உரிமத் திகதி :.............

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

..........................,
இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

திகதி :-............................

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது

..........................,
செயலாளர்.

திகதி :-............................

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

..........................,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-............................

## பகுதி II - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை கைப்பற்றுதல், பறிமுதல் செய்தல், அகற்றுதல், அழித்தல் தொடர்பான நியமத் துணை விதிகள்

துணைவிதியின் பெயர்.

1. பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் பாவனைக்குதவாத பொருட்களை கைப்பற்றுதல், பறிமுதல் செய்தல், அகற்றுதல், அழித்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

நோக்கம்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

துணை விதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) (எ) உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு இந்தத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

4. பால் பண்ணையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல அங்காடி பால் வியாபாரிகளுக்கும் உரிய மாதிரிப் படிவத்தில் பதிவு செய்யப்பட்ட அட்டைக்கு விண்ணப்பித்தலும் தொடர் இலக்கமிடப்பட்ட அட்டையை வருடாந்தம் பெற்றுக் கொள்வதும் பால் பண்ணையாளரின் பொறுப்பும் கடமையுமாகும். மேற்படி அட்டையில் பால் வியாபாரியின் பெயர், முகவரி, விற்பனை செய்யும் இடங்கள் ஆகியன குறிப்பிடப்படுவதுடன் வியாபாரியின் புகைப்படப் பிரதி ஒன்றும் ஒட்டி இருத்தல் வேண்டும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள் (05 - 15).

5. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் நடப்பு ஆண்டிற்காக வழங்கப்பட்ட அட்டை இருந்தாலன்றி எவரொருவரும் பாலை விற்றல், இடத்துக்கு இடம் கொண்டு செல்லல், விற்பதற்காக காட்சிப்படுத்தல் ஆகாது.

6. பண்ணையாளரின் கீழ் தொழில் செய்பவராயின் பண்ணையாளரின் பெயர் விபரம் அட்டையில் உள்ளடக்கப்பட்டிருந்தாலன்றி பால் விற்பனை செய்யும் போதும் கூவி விற்றல் அல்லது பால் விற்பனை செய்தல், விற்பதற்கு காட்சிப்படுத்தல் ஆகாது.

7. கீழே அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ள பால் பதார்த்தங்களை கொண்டிருக்காத பால், பால் பொருட்கள் எதையும் எவரும் விற்பனை செய்தலோ அதற்கு இடமளித்தலோ அல்லது அதற்கு ஏற்பாடு செய்தலோ கூடாது.

8. மனித நுகர்வுக்கு பொருத்தமில்லாத எந்தவொரு விலங்கின் இறைச்சி, மீன், விலங்குணவு, மரக்கறிகள், பழவகைகள், வேறு உணவுப் பொருட்கள் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கொண்டு வருதல், விற்பனை செய்தல், காட்சிப்படுத்தல் ஆகாது.

9. உணவுப் பொருட்களை அந்த நிலையிலேயே விற்கும் நோக்குடன் ஏதாவது ஒன்றை சேர்த்தல், கலத்தல், அதை மெருகூட்டல், சாயமூட்டல் அவ்வாறு செய்வதற்கு கட்டளை இடல் அல்லது இடமளிப்பதை செய்யக்கூடாது.

10. கலப்படம் செய்யப்பட்ட, மெருகூட்டப்பட்ட, சாயமூட்டப்பட்ட ஏதாவது பொருளை எவரொருவரும் விற்றல், விற்பதற்கு இடமளித்தல் ஆகாது.

11. மனித பாவனைக்கு உதவாத அல்லது காலாவதியான தகரத்திலடைக்கப்பட்ட அல்லது உப்பிட்ட இறைச்சி, மீன், வேறு உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் ஆகாது.

12. எவரொருவராலும் பாலாடை அகற்றப்பட்ட பாலை அவரால் விற்பதற்கு அல்லது விற்பதற்கு ஏற்பாடு செய்யும் நபருக்கு அதில் பாலாடை அகற்றப்பட்டுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டாலன்றி விற்பதோ விற்பதற்காக ஏற்பாடு செய்யவோ கூடாது.

13. எவரொருவராலும் ஏதாவது சமைக்கப்பட்ட உணவு, மாவினால் செய்யப்பட்ட உணவு, இனிப்புப் பண்டம், சுவையுள்ள உணவு, குளிரூட்டப்பட்ட அல்லது காய்ந்த பழவகைகளைத் தூசிகளிலிருந்து, ஈக்களிலிருந்து அல்லது துர்நாற்றத்திலிருந்து பாதுகாப்பதற்கு தேவையான முழுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலன்றி மனித பயன்பாட்டிற்காக நோக்கமாகக் கொண்டு விற்பதற்கு ஏற்பாடு செய்யக்கூடாது.

*14. மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த அல்லது கலப்படம் செய்யப்பட்ட முழு ஆடைப்பால் எதனையும் எவரும் விற்பனை செய்தல் கூடாது.*

*15. எவரொருவரிடமிருந்தாவது தகரத்திலடைத்த அல்லது உப்பிட்ட இறைச்சி, மீன், வேறு உணவுப் பொருட்கள் விலை கொடுத்து பெறப்பட்ட பற்றுச் சீட்டை சுகாதார வைத்திய அதிகாரி அல்லது கால்நடை வைத்தியர் அல்லது பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரால் கேட்கப்படும் போது அந்த பற்றுச்சீட்டை வழங்குவதற்கு மறுத்தலாகாது.*

*பிரதேச சபையின் பணி.*

*16. பதிவு செய்யப்பட்ட பால் பண்ணையாளரிடம் சேவையில் ஈடுபடுத்தியுள்ள சகல ஊழியர்களுக்கும் தொடரிலக்கமிடப்பட்ட அட்டையை வருடாந்தம் வழங்குவது பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாகும். வழங்கப்படும் அட்டையில் ஒட்டப்பட்ட புகைப்படத்தின் பிரதி ஒன்று பிரதேச சபை அலுவலகத்தில் இருத்தல் வேண்டும். பிரதேச சபையால் வழங்கப்படும் அட்டையில் பால் பண்ணை உரிமையாளரின் பெயர், முகவரி, விற்பனை செய்தல், கொண்டு செல்லல், காட்சிப்படுத்தல் ஆகியன உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

*17. இப்பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபைத் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.*

*பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (18-20).*

*18. சுகாதார வைத்திய அதிகாரியால் அல்லது கால்நடை வைத்தியரால் அல்லது பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரொருவராலும் அனுமதிப்பத்திரம் பெற்ற பாற் பண்ணை உரிமையாளர் அல்லது விற்கும், விற்பதற்காக இடத்திற்கிடம் கொண்டு செல்லும் அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்தும் எவரிடமாவது எந்தவொரு நேரத்திலும் பரிசோதனை நோக்கத்திற்காக பால்மாதிரியொன்றைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாற் பண்ணையாளர் அல்லது எவராவது ஒருவர் குற்றமிழைப்பவர் ஆவார்.*

*19. அங்காடி பால் வியாபாரிகளுக்கு வருடாந்தம் விநியோகிக்கப்படும் அடையாள அட்டையை பரீட்சிப்பதற்கு அதிகாரம் பெற்ற பிரதேச சபை உத்தியோகத்தருக்கு அல்லது பொலிஸ் உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு சமர்ப்பிக்கத் தவறுமிடத்து அவர் குற்றவாளி ஆவார். குறித்த உத்தியோகத்தர் அவரைக் கைது செய்து அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடன் கொண்டு செல்லல் வேண்டும். அவர் குற்றவியல் வழக்கொன்றின் சட்ட விதிகளின்படி அழைப்பாணை இன்றி பொலிஸ் உத்தியோகத்தரால் கைது செய்யப்பட்டவராக அந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் செயற்படல் வேண்டும். மேலே குறிப்பிட்ட அட்டையை இரத்துச் செய்தல் பொது மக்களின் சுகாதாரம் பற்றி தேவையென பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தெரியவரின் அது எந்தச் சந்தர்ப்பமாயினும் அவ்வாறு இரத்துச் செய்ய முடியும்.*

*20.* (i) *குளிர்பானம் உற்பத்தி அல்லது விற்பனைக்காக உபயோகப்படுத்தப்படும் ஏதாவதொரு இடத்திற்கு அந்த இடம் திறக்கப்பட்டிருக்கும் ஏதாவது ஒரு நேரத்தில் பிரவேசித்து அந்த உற்பத்தி செய்யும் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு குளிர்பான மாதிரிப் போத்தலொன்றை சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரொருவராலும் கொள்வனவு செய்யப்படுவது சட்டபூர்வமவதுடன் அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது. அந்த மாதிரியை உடனடியாக இரசாயனப் பரிசோதகருக்கு அனுப்ப வேண்டுவதுடன் பாவனைக்கு பொருத்தமற்றதென கூறி அரச இரசாயன பகுப்பாய்வாளரால் வழங்கப்படும் சான்றிதழ் மனித நுகர்விற்கு பொருத்தமற்றது என்பதற்கு சான்றாகும்.*

(ii) *பால் மாதிரியை பெறுமிடத்து சுகாதார வைத்திய அதிகாரி அல்லது கால்நடை வைத்தியர் அல்லது அதிகாரம் பெற்ற பிரதேச சபை உத்தியோகத்தரால் மூன்று மாதிரிகளை பெற்றுக்கொள்ள வேண்டுவதுடன் அதைப் பெற்றுக்கொண்ட பதிவு செய்யப்பட்ட பால் பண்ணையாளர் அல்லது வேறொருவர் முன்னிலையிலே அவற்றிற்கு முத்திரையிட்டு அவற்றில் ஒன்றை பால் பண்ணையாளருக்கு அல்லது வேறொருவருக்கு கொடுத்து இரண்டாவதை பிரதேச அல்லது அரச இரசாயன பரிசோதனையாளருக்கும் மூன்றாவதை பிரதேச சபை காரியாலயத்திற்கும் அனுப்ப வேண்டும். மாதிரியாக பெற்றுக் கொண்ட பால் தரம் குறைவாக இருந்ததென்பதற்கு பிரதேச சபை அல்லது அரச இரசாயன பரிசோதகரால் கையொப்பமிடப்பட்ட தரச் சான்றிதழ் சான்றாகும்.*

(iii) தகரத்திலடைக்கப்பட்ட அல்லது உப்பிட்டு இறைச்சி விற்பதற்காக வைக்கப்பட்டுள்ள கடையொன்றிற்கு அல்லது வேறு இடத்திற்கு அக்கடை அல்லது அந்த இடம் திறந்திருக்கும் எந்தவொரு நேரத்திலும் பிரவேசித்து மனித பாவனைக்கு உதவாதது என பொதுவாக சந்தேகிக்கப்படும் தகரத்திலடைத்த அல்லது உப்பிட்ட இறைச்சி எதையும் சந்தர்ப்பத்திற்கேற்ப சுகாதார வைத்திய அதிகாரி அல்லது கால்நடை வைத்திய அதிகாரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபை உத்தியோகத்தரால் கைப்பற்றப்படல் வேண்டுமென்ப துடன் அந்த தகரத்திலடைத்த அல்லது உப்பிட்ட இறைச்சி அவரால் தாமதிக்காது அரச இரசாயனப் பகுப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும். அந்த தகரத்திலடைத்த அல்லது உப்பிட்ட இறைச்சி மனித பாவனைக்கு உகந்ததல்ல என அதிகாரம் பெற்ற அரச இரசாயன பகுப்பாய்வளரின் சான்றிதழ் மூலம் தெரிவிக்கப்படின் அதற்கு மாறாக உறுதிப்படுத்தப்படும் வரை அச் சான்றிதழ் அது சம்பந்தமான சான்றாக இருக்கும். மேலும் அந்த தகரத்திலடைத்த அல்லது உப்பிட்ட இறைச்சியை கைப்பற்றப்பட்டமை ஏதாவது கடையில் அல்லது இடத்திலாயின் அந்த வியாபார நிலையத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாக இருப்பவர் மேலே குறிப்பிட்டவாறு மாறாக உறுதிப்படுத்தினாலன்றி குற்றமொன்றுக்கு குற்றவாளியாவார்.

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

*21.* உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

துணைவிதிகளை மீறுதல்.

*22.* இப்பகுதியின் துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறொன்றாகும்.

அபராதமும் தண்டணையும் (28 - 31).

*23.* (i) மேலே துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏதாவது பால் மாதிரி தரங்குறைக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டால் அது எடுக்கப்பட்டது எவராவது ஒருவரிடம் வைத்திருக்கப்படும் போதாயின் அவர் குற்றவாளியாவார். அவர் எவராவது ஒரு பண்ணையாளரின் பாலை விற்பவராயின் அல்லது பால் பண்ணை உரிமையாளரின் கீழ் வேலை செய்பவராயின் அல்லது பால் பண்ணையராக செயல்படுவாராயின் அவரும் பால் பண்ணையாளருமான இருவரும் குற்றமிழைத்த குற்றவாளியாவார்.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபை உத்தியோகத்தரால் மனிதப் பாவனைக்கு பொருத்தமில்லாததென இறைச்சி, மீன், விலங்குணவு, மரக்கறி, பழவகை, வேறு உணவுப் பொருட்களை கைப்பற்ற எடுக்கும் நேரத்தில் அவற்றை சுகாதார வைத்தியரிடமோ, கால்நடை வைத்திய அதிகாரியிடமோ அல்லது அவர்கள் இல்லாதவிடத்து பிரதேச சபை எல்லையிலுள்ள நீதிமன்ற நீதவான் முன்னிலைக்கு கொண்டு செல்வது சட்டபூர்வமானதென்பதுடன் இறைச்சி, கோழி, மீன், விலங்குணவு, மரக்கறி, பழவகை, வேறு உணவுப் பொருட்கள் மனித உணவிற்காக பொருத்தமற்றதென சுகாதார வைத்திய அதிகாரிக்கு அல்லது கால்நடை வைத்திய அதிகாரிக்கு அல்லது நீதவானிற்கு தெரியவரின் அவற்றை அழித்துவிடவோ உணவாகப் பயன்படுத்துவதை தடை செய்யும் விதத்தில் அப்புறப்படுத்துமாறு அவரால் கட்டளையிட முடியும்.

(iii) இப்பகுதியின் துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

*24*. இப்பகுதியின் துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப் பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து, பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

'பிரதேசசபை' என்பது, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்' என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

'உரிமப்பத்திரதாரர்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் எனப் பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

'உரிமப்பத்திரம் பெற்ற இடம்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

'பொலிஸ்அத்தியட்சகர்' என்பது, குறித்த பணிக்காக தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் எழுத்து மூலமான ஆவணமொன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்திலுள்ள யாராயினுமொரு அலுவலர் கருதப்படுவார்.

'குளிர்பானம்' என்பது பழங்கள், எஸ்என்ஸ், கலவை (சிறப்) அனைத்தும் அல்லது ஒருவகையை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் போத்தல்களில் அல்லது வேறு ஏதேனும் வகையில் பொதிசெய்யப்படுகின்ற வாயுப்பானம் என பொருள்படுவதுடன் சோடா குடிபானமும் அதற்குள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை 1 - பாலுக்குத் தேவைப்படும் சேர்வைப் பொருள்**

| நிரல் I<br>பாலின் இனம் | நிரல் II<br>பால் வகை | நிரல் III<br>பாற் கொழுப்பு ஆகக் குறைந்த நூற்று வீதம் | நிரல் IV<br>பாற் கொழுப்பு தவிர்ந்த பாற் திண்மங்களின் ஆகக் குறைந்த நூற்று வீதம் |
|---|---|---|---|
| 1. எருமைப்பால் | பச்சை, பாசிச்சர் முறையில் காய்ச்சப்பட்டது அல்லது கிருமி நீக்கப்பட்டது. | 7.0 | 9.0 |
| 2. பசுப்பால் | மேற்படி | 3.5 | 8.5 |
| 3. தரப்படுத்தப்பட்டது | பாசிச்சர் முறையில் காய்ச்சப்பட்டது அல்லது கிருமி நீக்கப்பட்டது. | 3.25 | 8.25 |
| 4. தணிக்கப்பட்டது | மேற்படி | 2.0 | 8.5 |
| 5. சுவையூட்டப்பட்டது | மேற்படி | 2.0 | 7.2 |
| 6. ஆடை நீக்கியது அல்லது கொழுப்பற்றது | மேற்படி | - | 8.5 |

## பகுதி III - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான தொழில்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்

*துணைவிதியின் பெயர்.*

*1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான தொழில்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.*

*நோக்கம்.*

*2. பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை பேணிவரும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.*

*துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

*3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix)(ஓ) உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு இந்தத் துணைவிதிகள்ஆக்கப்பட்டுள்ளன.*

*நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4-15).*

*4. இணைப்பு I இலுள்ள விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வது உரிமப்பத்திரதாரரின் பணியும் பொறுப்புமாகும்.*

*5. இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே, பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு சகிக்கமுடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் அபாயகரமானதுமான சகிக்கமுடியாத தொழில்களிற்கும் உரிமப்பத்திரம் வழங்கப்படும்.*

(i) *உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை தூய்மையாகவும் புதுப்பித்த நிலையிலும் பேணிவருதல் வேண்டும்.*

(ii) *உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்.*

(iii) *மேற்படி சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது சுண்ணாம்புக்கல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், இருபுறமும் சாந்து பூசப்பட்டு அல்லது மேற்பரப்பு சீமெந்தினால் மினுக்கப்பட்டு, தீந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும்.*

(iv) *உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை(சீலிங்) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி உட்கூரை நில மட்டத்திலிருந்து 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்.*

(v) *ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்கள் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப்பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை.*

(vi) *கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்.*

(vii) ஒவ்வொரு அறையிலும் தளப்பகுதி சீமெந்து இடப்பட்டு சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் மினுக்கப்படல் அல்லது பீங்கான் கற்கள் (நில ஓடுகள்) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை சேகரிப்பதற்காகக் கழிவுகளைச் சேகரிக்கும் தொட்டிகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஈக்கள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் நுழைய முடியாதவாறு மூடிகளால் மூடி இருத்தல் வேண்டும்.

(ix) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை அகற்றுவதற்கு இப் பகுதியின் 08ஆம் துணைவிதிக்கு அமைய செயற்படக்கூடியவாறு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் எந்தவொரு பகுதியிலும் உபயோகத்தின் பின்னர் வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் தடைகளின்றி வழிந்தோடுவதற்கு உகந்த வடிகாலமைப்பு ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xi) பிரதேச சபையினால் கழிவுநீர் வடிகாலமைப்பு பேணிவரப்படுவதாயின் உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை பிரதேச சபையின் அறிவுறுத்தலுக்கமைய கழிவுநீர் வடிகாலமைப்புக்கு வழிந்தோடச் செய்ய முடியும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் மேற்படி கழிவுநீரை, நீர் உறிஞ்சிக்கொள்ளும் குழியொன்றுக்கு வடிந்தோடச் செய்தல் வேண்டும். இல்லையேல் சுத்திகரிப்புச் செய்து பொது நீர்வடிகாலொன்றுக்கு விடுவித்தல் வேண்டும். மேற்படி நீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்காத வகையில் மூடிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கிணற்றிலிருந்து பதினைந்து மீற்றர் தூரத்திற்குக் குறையாத தூரத்தில் இது அமைந்திருத்தல் வேண்டும்.

6. தீந்தை பூசப்பட்டிருக்க வேண்டுமென இப் பகுதியின் 5 வது துணைவிதியில் விதிக்கப்பட்டுள்ள சகல பகுதிகளும் அவ்வாறே ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறையேனும் தீந்தை பூசப்படுதலை உறுதி செய்தல் உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

7. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தை ஆகக்குறைந்தது நாளொன்றுக்கு இரு தடவை வீதம் பெருக்குதல் வேண்டும்.

8. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் அவ்வவ் பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுப்பொருட்களும் இப் பகுதியின் 9ஆம் துணைவிதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டு, ஊடுருவாத பொருளொன்றினால் உருவாக்கப்பட்டுள்ள தொட்டிகளில் இடப்படல் வேண்டும். மேற்படி கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு ஒருமுறை அல்லது அவசியமேற்படின் அதற்கு மேற்பட்ட தடவைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்படல் வேண்டுமென்பதுடன் மேற்படி தொட்டிகளில் கழிவுப் பொருட்களைக் கொட்டும் போதும் அவற்றை அகற்றும் போதும் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் தொட்டிகளை நல்லமுறையில் மூடிவைத்தல் வேண்டும்.

9. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் அவற்றை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(ஆ) கண்ணாடி;

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்;

(ஈ) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்;

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள் ;

(ஊ) உற்பத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின் போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும் ;

(எ) அபாயகரமான கழிவுகள் ;

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் இடுவது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளல் வேண்டும்.

10. ஒவ்வோர் உரிமப்பத்திரம் பெற்றவரும் கைத்தொழிலை கொண்டு நடாத்துவதற்கு தேவையான சகல பொருட்களையும் துர்மணம் வீசுவதையும் வேறு அருவருக்கத்தக்க விடயங்கள் தோன்றுவதனையும் தவிர்க்கும் வகையில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

11. அருவருக்கத்தக்க நிலைமை தோன்றுதல் அல்லது துர்மணம் வீசுவதற்கு வாய்ப்பான பொருட்களை பொது இடத்தில் அல்லது வீதிகளில் கொண்டு செல்லும்போது எவ்வித அருவருக்கத்தக்க நிலைமை தோன்றுவதனை தவிர்க்கக் கூடிய விதத்தில் மூடப்பட்ட உறிஞ்சிக்கொள்ளாத பாத்திரங்களிலிட்டு ஒவ்வோர் உரிமப்பத்திரம் பெறுநரும் கொண்டு செல்லுதல் வேண்டும்.

12. உரிமப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவருக்கும் யாதேனும் உற்பத்தி நடவடிக்கையின்போது வெளியேறுகின்ற சகிக்கமுடியாத ஆவியை அல்லது வாயுக்களை அவை பரவி ஆபத்தான அல்லது சகித்துக்கொள்ள முடியாத விளைவுகள் தோன்றுவதற்கு இடமேற்படாத வகையில் உயரத்தில் வாயுமண்டலத்தில் கலக்கச் செய்தல் வேண்டும். அல்லாவிட்டால் தீ அல்லது திண்மமாக்கும் உபகரணம் மூலம் அகற்றப்படல் வேண்டும்.

13. உரிமப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற தொகுதியின் சுவர்கள் அசுத்தமான நீர் போன்றவற்றை உறிஞ்சிக் கொள்வதினின்றும் பாதுகாப்பு பெறும் விதத்தில் நல்ல நிலையில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

14. உரிமப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் தொழில் நடவடிக்கைகளின் போது பாவிக்கப்படும் உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்களை சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் தினசரி சுத்தம் செய்தலும் வேண்டும்.

15. உரிமப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவருக்கும் தோல் அல்லது வேறு பொருட்களை கழுவுவதற்காக அல்லது ஊறவிடுவதற்காக பயன்படுத்தும் தொட்டிகள் துர்மணம் வீசுவதனை தவிர்ப்பதற்கு தேவையானவாறு வெறுமையாக்கித் துப்புரவு செய்யப்படுதல் வேண்டும்.

*நிறைவேற்றக் கூடாத பணிகள் (16-18).*

16. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இணைப்பு I விண்ணப்பபடிவம் மூலம் கோரப்படுகின்ற கோரிக்கைகள் மீது உரிய பணிக்காக வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரம் இருந்தாலன்றி எவரேனும் ஆளொருவரினால் பிரதேச சபை எல்லைக்குள் சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான தொழில்களை நடாத்திச் செல்லல் ஆகாது.

17. உரிமப்பத்திரதாரர் அல்லது யாராயினுமொருவர் எழுத்து மூலமான அல்லது வாய்மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

*18.* உரிமப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் யாதாயினும் ஓர் ஆறு நீரோடை, கால்வாய் மடை, கிணறு, வாவி, குளம் வடிகால், கடல் அல்லது திறந்த நீர் நிலைகள் ஏதாவது அசுத்தமான துர்மணம் வீசுகின்ற அல்லது சகிக்க முடியாத நீரை அல்லது வேறு ஏதாவது திரவத்தினை அனுப்புவதற்கு அல்லது வழிந்தோட விடுவதன் மூலம் அல்லது வேறு விதத்தில் மேற்குறிப்பிடப்பட்ட இடங்களை அசுத்தப்படுத்தல் ஆகாது.

*பிரதேச சபையின் பணி (19-21).*

*19.* இந்த துணைவிதியின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமான தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்ற இடமானது இந்த பகுதியின் ஏதேனும் ஒரு துணைவிதியின் நியதிகளுக்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்கு பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

*20.* பிரதேச சபையினால் நிச்சயிக்கப்பட்ட சகிக்க முடியாத கைத்தொழில்கள் அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான, தொழில்கள் முறையே (i) (ii), மற்றும் (iii) ஆம் அட்டவணைகளின் உள்ளடக்கப்பட்ட விடயங்களை கொண்டுள்ளவற்றிற்கு உரிமப்பத்திரம் வழங்குதலை விண்ணப்பதாரிக்கு அறிவிப்பது பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கடமையாகும்.

*21.* இப் பகுதியின் துணை விதிகளின் கீழ், யாதாயினும் ஒரு தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக அனுமதிப்பத்திரம் பெறும் பொருட்டு யாராவது ஒரு நபரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்று தனக்குக் கிடைத்த முப்பது (30) தினங்களுக்குள் குறித்த இடமானது இத் துணை சட்டங்களுக்கு இயைபுடையதாயின் உரிமப்பத்திரம் வழங்குதல் அல்லது மறுதலிப்பதாக இருந்தால், காரணங்களைக் குறிப்பிட்டு அது பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்க வேண்டியது பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கடமையாகும்.

*அறவீடுகளும் கட்டணங்களும்.*

*22.* யாதாயினுமொரு சகிக்கமுடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமான தொழில்கள் நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 பிரிவுக்கு அமைவாக உச்ச கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவது பிரதேச சபைச் செயலாளருக்கு சட்டபூர்வமானதாகும்.

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

*23.* இப்பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல் லுபடிக் காலம்.*

*24.* இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (25 - 27).*

*25.* இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப்பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் பரிசோதனை செய்வதற்கான உதவிகளைச் செய்வது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன் மேலும் அவ்வாறான பரிசோதனைகளை நிறுத்துவதற்காக தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

*26.* இப் பகுதியின் 19வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலின் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றவேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

*27.* இப் பகுதியின் 26வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றுவதை தவிர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்ட உரிமப்பத்திரம் பிரதேச சபைத் தவிசாளரினால் இரத்துச் செய்வதற்கு சட்டரீதியான தத்துவம் உண்டு .

*முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.*

*28.* உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல்வேண்டும்.

*துணைவிதிகளை மீறுதல்.*

*29.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறாகும்.

*அபராதமும் தண்டணையும்.*

*30.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொருஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமெருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122 (2) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

*பொருள் கோடலும் வரை விலக்கணமும்.*

*31.* இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

'பிரதேச சபைத் தவிசாளர்' என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

'செயலாளர்' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவேரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

'பிரதேசசபை' என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

'அதிகாரமளிக்கப்பட்டஅலுவலர்' என்பது உரிய பணிக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

'பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்' என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

'உரிமப்பத்திரதாரர்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

'உரிமப்பத்திரம் பெற்ற இடம்' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கை களையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

## அட்டவணை I

### சகிக்க முடியாத கைத்தொழில்கள்

1. காரீயம் சுத்திகரித்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல்
2. பசளை அல்லது இரசாயனப் பசளை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனைக்காக வைத்திருத்தல்
3. தோல் பதனிடுதல்
4. தோல் விற்பனைக்காக வைத்திருத்தல்
5. கால்நடை வளர்ப்பு (இறைச்சி, பால் அல்லது முட்டைக்காக) மேற்கொள்ளப்படும் இடம்
6. மாசி கருவாடு உற்பத்தி செய்தல் அல்லது 50 கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்துதல்
7. இறப்பர் உற்பத்தி செய்தல் அல்லது இறப்பர் தகடுகளை (sheet) வைத்திருத்தல்
8. கால்நடை வைத்திய நிலையமொன்றினை நடாத்திச் செல்லல்
9. மொத்த விற்பனைக்காக பழுதடையக்கூடிய உணவு வகைகளை அல்லது உணவுப் பொருட்களை வைத்திருத்தல்
10. கருவாடு, உப்பிடப்பட்ட மீன் 100 கிலோ கிராமுக்கு அதிகமாக வைத்திருத்தல்
11. மீன் அல்லது இறைச்சி உப்பிடப்படுதல் அல்லது உலரவிடல் அல்லது பனிக்கட்டி இடப்படுதல்
12. சிரட்டைக்கரி அல்லது விறகுக்கரி உற்பத்தி செய்தல்
13. புகையிலை உலரவிடுதல்
14. கால்நடை உணவு உற்பத்தி செய்தல்
15. புண்ணாக்கு தயாரித்தல்
16. மிருக மாமிசம் அல்லது இரத்தம் அவிக்கப்படுதல்
17. சவர்க்கார உற்பத்தி
18. மிருக எலும்புகளை அரைத்தல் அல்லது வைத்திருத்தல்
19. தகரப் பெட்டிகள் தயாரித்தல்
20. புதிய உலோகங்கள் அல்லது பழைய உலோகங்களை வைத்திருத்தல்
21. உலோக உடைசல்களை வைத்திருத்தல்
22. வீட்டுத் தளபாடங்கள் தயாரித்தல்
23. பிரம்புப் பொருட்கள் உற்பத்தி செய்தல்
24. மரத் தொழிற்சாலை நடாத்துதல்
25. பானங்கள் மற்றும் பழச்சாறு வகை தயாரித்தல்
26. இனிப்புப் பண்டங்கள் தயாரித்தல்
27. தென்னந் தும்பு ஊறவிடல்
28. தூரிகை வகைகள் தயாரித்தல் (பற்தூரிகை தவிர்த்து)
29. பற்தூரிகை தயாரித்தல்
30. கள்ளு சேகரித்தல்
31. காடி (வினாகிரி) தயாரித்தல்
32. மரம் அரிதல்
33. பூச்சுக்களும், மெருகெண்ணெய்யும் (வானிஸ் அல்லது டிஸ்ரெம்பர்) தயாரித்தல்
34. சோடா உப்பு தயாரித்தல்
35. துணிகளிற்கு சாயமிடுதல்
36. தோற்பொருட்கள் தயாரித்தல்
37. பழங்கள், மீன் அல்லது வேறு உணவு வகைகளை தகரக் குவளைகளில் அடைதல்
38. கோப்பி, தானியங்களை அரைத்தல்
39. பேக்கிங் பவுடர் தயாரித்தல்
40. வாயு விளக்குச்சுடர் வலைப்பை (Mantle) தயாரித்தல்
41. மரத் தளபாடங்களுக்கான பசை தயாரித்தல்
42. மெழுகுதிரி தயாரித்தல்
43. கற்பூரம் தயாரித்தல்
44. எழுதும் மை, அச்சடிக்கும் மை அல்லது ஸ்டென்சில் மை தயாரித்தல்
45. உடுப்பு கழுவும் நீலம் தயாரித்தல்
46. முத்திரை அரக்கு தயாரித்தல்

47. வாசனைத் தைலங்கள் தயாரித்தல்
48. பாடசாலை வெண்கட்டிகள் தயாரித்தல்
49. வண்டிக்கான றப்பர் சக்கரம் அல்லது காற்றுப் பை தயாரித்தல்
50. றப்பர் சக்கரம் மீள் நிரப்புதல்
51. றப்பர் சக்கரம் வோல்கனைசிங் செய்தல்
52. சீமெந்து தயாரித்தல்
53. சீமெந்து பொருட்கள் அல்லது அஸ்பஸ்டஸ் சீமெந்து பொருட்கள் தயாரித்தல்
54. மணல் கடதாசி தயாரித்தல்
55. பிலாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல்
56. செங்கல் சுடுதல்
57. இயந்திரம் மூலம் புடவை நெய்தல்
58. அமிலம் தயாரித்தல் அல்லது மீள் நிரப்பல்
59. ஓடுகள் தயாரித்தல்
60. பசளை, சுண்ணாம்பு, மா அல்லது வேறு பொருட்கள் இடப்பட்டிருந்த உறைகளை சுத்திகரித்து விற்பனை செய்தல்
61. இயந்திரம் மூலம் சீமெந்து செங்கற்கள் தயாரித்தல்
62. தைக்கப்பட்ட ஆடை தயாரித்தல்
63. கோழி விற்பனை நிலையம் நடாத்துதல்
64. கிருமி நாசினிகள் தயாரித்தல்
65. ரயர், ரியூப்புக்களை திருத்துதலும் புதுப்பித்தலும்
66. பாதணிகள்/பைகள்/தோற்பொருட்கள் உற்பத்தி செய்தல்
67. புகையிலை உபயோகித்து செய்யப்படுகின்ற சிகரட், பீடி, சுருட்டு ஆகியன தயாரித்தல்

## அட்டவணை II

### அபாயகரமான தொழில்கள்

1. கருங்கல் உடைத்தல்
2. குளிர் பானங்கள் தயாரித்தல்
3. பனிக்கட்டி தயாரித்தல்
4. மரக்கறி எண்ணெய் தயாரித்தல்
5. தேங்காய் நெய் தயாரித்தல்
6. தீப்பெட்டி உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தல்
7. மெத்திலேட் மதுசரம் தயாரித்தல்
8. தேயிலைப் பெட்டி தயாரித்தல்
9. தும்பு அல்லது வேறு தும்பு வகைகள் தயாரித்தல்
10. தும்பு அல்லது வேறு தும்பு வகைகளினால் பொருட்கள் தயாரித்தல்
11. வைக்கோல் வைத்திருத்தல்
12. பாவித்த ஆடைகளை களஞ்சியப்படுத்தல்
13. தங்க நகை உற்பத்தி,புதுப்பித்தல்
14. இயந்திரம் மூலம் மரம் அரித்தல்
15. சுண்ணாம்புக் கற்கள் அகல்தல்
16. இயந்திரோபகரணங்கள் பயன்படுத்தும் தொழிற்சாலை நடாத்துதல்
17. வெற்றுச் சாக்குகள் அல்லது வெற்றுப் போத்தல்கள் வைத்திருத்தல்
18. மிதிவண்டி அல்லது மோட்டார் சைச்சிள் பழுதுபார்த்தல்
19. பாவிக்கப்பட்ட கடதாசி அல்லது செய்தித்தாள் வைத்திருத்தல்
20. வர்ணப்படங்கள் வரைதல்
21. வான வேடிக்கை அல்லது பட்டாசு களஞ்சியப்படுத்துதல்
22. இயந்திரோபகரணங்கள், ஆயுதங்கள், உபகரணங்கள் தயாரித்தல்
23. உலோக இணைப்பு வேலைத்தளம் நடாத்துதல்
24. பற்றரி நிரப்புதல், தயாரித்தல், புதுப்பித்தல்

25. அச்சகம் நடாத்திச் செய்தல்
26. வெடிக்கும் பொருட்கள் வெடிமருந்து களஞ்சியப்படுத்துதல்
27. விளம்பர அறிவித்தல்கள் காட்சிப்படுத்துதல்

**அட்டவணை III**

**சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான கைத்தொழில்கள்**

1. மைக்கா ஈயம் சுத்திகரித்தல்
2. இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி கறுவா,கராம்பு,ஏலக்காய் அல்லது தும்பு வகை உற்பத்தி செய்தல்
3. உலர்த்தி சுத்திகரித்தல் அல்லது சாயமிடுதல்
4. புடவை அச்சுப் பதித்தல் அல்லது சாயமிடுதல் அல்லது பற்றிக்கிடுதல்
5. இலத்திரனியல் உலோக முலாம் பூசுதல்
6. எண்ணெய் அல்லது மிருகக் கொழுப்பு தயாரித்தல்
7. சுண்ணாம்புச் சூளை நடாத்துதல்
8. வானவேடிக்கைப் பொருட்கள் அல்லது பட்டாசு தயாரித்தல்
9. மீன் எண்ணெய் தயாரித்தல்
10. படகுகள் உற்பத்தி செய்தல்
11. பற்றரிக்கலன்கள் பதித்தல் அல்லது புதுப்பித்தல்
12. உலோக வகைகளை இணைப்பு செய்தல்
13. மோட்டார்வாகனங்கள் பழுதுபார்த்தல்
14. மோட்டார் வாகனங்களை சர்விஸ் பண்ணுதல்
15. இயந்திர பாவனையுடன் உலோகங்களை தூளாக்குதல்
16. வார்ப்பு வேலைத்தளம் நடாத்திச் செல்லல்
17. தகடு வேலைத்தளம் நடாத்துதல்
18. மோட்டார்வாகன கூடு தயாரித்தல்
19. பூச்சிக் கொல்லி,பூஞ்சி நாசினிகளை தயாரித்தல்
20. கிருமி நாசினி தயாரித்தல்
21. நுளம்பு சுருள் தயாரித்தல்
22. மரப் பாதுகாப்பு எண்ணெய் தயாரித்தல்
23. தார்உற்பத்தி
24. கண்ணாடிப் பொருட்கள் தயாரித்தல்
25. முகம் பார்க்கும் கண்ணாடி தயாரித்தல்
26. இரும்புத் தகடுகளுக்கு முலாம் பூசுதல்
27. பொருத்தும் வெள்ளீயம் தயாரித்தல்
28. அலுமினியப் பொருட்கள் உற்பத்தி செய்தல்
29. முட்கம்பி உற்பத்தி செய்தல்
30. கம்பி ஆணிகள் உற்பத்தி செய்தல்
31. காபன் கடதாசி அல்லது காபன் நாடா உற்பத்தி செய்தல்
32. முலாமிட்ட பாத்திரங்கள்,உருக்கு பீப்பாய்கள்,காபன் தொட்டிகள் தயாரித்தல்
33. இரும்பு வாளிகள் உற்பத்தி செய்தல்
34. குளிரூட்டி இயந்திரம்,குளிர்சாதன பெட்டி அல்லது அதிகுளிர்சாதனப் பெட்டி உற்பத்தி செய்தல்
35. குளிரூட்டி இயந்திரம்,குளிர்சாதன பெட்டி அல்லது அதிகுளிர்சாதனப் பெட்டி பழுது பார்த்தல்
36. பிரேக் லைனர்,கிளச் லைனர்உற்பத்தி செய்தல்
37. இயந்திரோபகரணங்கள் உற்பத்தி செய்தல்
38. மின்சாரப் பொருட்கள் தயாரித்தல்
39. றப்பர்கலந்த நார் தயாரித்தல்
40. கலன்களை சேமிக்கும் பெட்டரி தயாரிப்பு
41. ட்ரக்டர்வாகனம் பொருத்துதல்
42. ரேடியேற்றர் தயாரித்தல்

43. மின்சார உபகரணங்கள் தயாரித்தல் அல்லது புதுப்பித்தல்
44. உலர்கலன் பற்றரி தயாரித்தல்
45. அரிசி ஆலைகள்
46. சவப் பெட்டிகள் தயாரித்தல்
47. தொலைபேசி தயாரித்தல் அல்லது பழுதுபார்த்தல்
48. மின்சார உபகரணங்கள் பழுதுபார்த்தல் பொருத்துதல்
49. கணினி மற்றும் செய்தித் தொழிநுட்ப உபகரணங்களை பொருத்துதல் அல்லது பழுதுபார்த்தல்
50. அந்திமகால சேவைநிலையம் (மலர்ச்சாலை) நடாத்துதல்.

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான தொழில்களின் வியாபார வரி/வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் - 20** ........

1. வியாபார நிலையத்தின் பெயர்:...............................

2. (i) வியாபார நிலையம் அமைந்துள்ள இடம்: வட்டாரம்....... ஆதன இல. :.........
   (ii) வீதியின் பெயர் :..................................
   (iii) கிராம அலுவலர் பிரிவு இல. :........ பிரிவின் பெயர்:...............

3. (i) விண்ணப்பதாரியின் பெயர்: .................................
   (ii) முழுப்பெயர் : ..................................
   (iii) நிரந்தர முகவரி : ..................................
   (iv) கிராம அலுவலர் பிரிவு :..................................
   (v) அடையாள அட்டை இல. :...............................
   (vi) தொலைபேசி இல. :................................
   (vii) மின்னஞ்சல் முகவரி :................................

4. (i) வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி:...........................
   (ii) வியபாரத்தின் தன்மை:.................................
   (iii) கைத்தொழில்/தொழில் நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்
      (a) பெயர் : .................................
      (b) தொலைபேசி இல. :...............................
   (iv) முன்னைய தொழில்:..................................

5. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்.-
   (i) உரிமையாளரின் பெயர்:................................
   (ii) முகவரி :...................................

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா? :

ஆம்:.......... இல்லை :............

ஆம் எனின் உரிம இல. :.............

திகதி:...............

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20... ஆம் ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

.........................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :–............................

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக.–

................................................................................

தவிசாளர்/செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம்:................. ஆதன இல. :................

வீதியின் பெயர்:.....................................

உரிமையாளரின் பெயர்:....................................

ஆதன விபரம்:.......................................

ஆண்டுப் பெறுமதி:............. வீதவரி நிலுவை.........

உண்டு........ இல்லை......

....................,
நிர்வாக உத்தியோகத்தர்/ பகுதித் தலைவர்.

திகதி :–............................

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:..................................

செலுத்த வேண்டிய கட்டணம்:............................... பிரிவு A B C : .......................

குறிப்பு...................

.........................,
வருமானப் பரிசோதகர்.

திகதி :–............................

**பிரதம சகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

பொதுச் சுகாதாரபரிசோதகரின்அறிக்கை

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..........................,

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.

திகதி :-............................

சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..........................,

பிரதம சுகாதார அதிகாரி.

திகதி :-............................

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :....... உபயோகம் மற்றும் :........சுற்றுச் சூழல் உரிமம் :.......

சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :.......... குடிபுகு சான்றிதழ் :........ மதுவரி உரிமம் :.......

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..........................,

பிரதம வருமானப் பரிசோதகர்.

திகதி :-............................

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

.........................,
செயலாளர்.

திகதி :-............................

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது./வழங்கப்படவில்லை.

.........................,
பிரதேச சபை தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-............................

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. :......... பற்றுச்சீட்டு திகதி:.....................

உரிம இல. :............. உரிமத் திகதி :.............

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

.........................,
இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

திகதி :-............................

பிரதேசத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

.........................,
செயலாளர்.

திகதி :-............................

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

.........................,
பிரதேச தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-............................

---

## பகுதி IV - பிரதேச சபை எல்லைக்குள் கொல்களங்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், நிர்வகித்தல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்

1.பிரதேசசபைஅதிகாரஎல்லைக்குள் கொல்களங்களை முறைப்படுத்துதல்,ஒழுங்குபடுத்தல், நிர்வகித்தல், கண்காணித்தல்மற்றும்கட்டுப்படுத்தல்தொடர்பிலான நியமத்துணைவிதிகள் என அழைக்கப்படும். துணைவிதியின் பெயர்.

2.1987 ஆம்ஆண்டின் 15 ஆம் இலக்கபிரதேசசபைகள் சட்டத்தின் 3ஆம்பிரிவுக்குஅமைய பிரதேசசபைஅதிகார எல்லைக்குள் கொல்களத்தின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பேணிவருவதுடன் அங்கு வசிக்கின்ற பொதுமக்களிற்கு தகுந்த உணவுப் பொருட்களை வழங்கும் நோக்கத்துடன்இத்துணைவிதிகள் ஆக்கப்படுகின்றன. நோக்கம்.

*துணை விதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

*3.1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 102, மற்றும் 122(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (xi) (ஐ) உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டும் இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் iii ம் அத்தியாயத்திற்கு அமைவாகவும் இந்தத் துணைவிதிகள் ஆக்கிக்கொள்ளப்படுகின்றன.*

*நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4-30).*

*4. பகிரங்க கொல்களம் ஒவ்வொன்றும் தகுந்த அதிகாரியினால் இதற்கென நியமிக்கப்பட்ட அலுவலரொருவரின் கண்காணிப்பின் கீழ் இருத்தல்வேண்டும். இவர் விலங்கறுமனையின் கண்காணிப்பாளரென அழைக்கப்படல் வேண்டும்.*

*5. பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் காலத்திற்கு காலம் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய நேரங்களில் மட்டுமே உரிமம் பெற்ற இறைச்சிக்கடைகாரருக்கு அல்லது விசேட அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு விலங்குகளை அறுப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.*

*6. உரிமம் பெற்ற இறைச்சிக்கடைகாரரொருவர் அல்லது விசேட அனுமதிப்பத்திரம் பெற்றவர் கொல்களத்தின் கண்காணிப்பாளரினால் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டவாரான கொல்களத்தில் உள்ள அத்தகைய இடங்களில் மட்டுமே விலங்குகளை அறுத்தல் வேண்டும்.*

*7. பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அச்சிடப்பட்ட படிவத்தில் உரியமுறையில் நிரப்பப்பட்ட அனுமதிப் பத்திரமொன்றை உரிமம் பெற்ற இறைச்சிக்கடைகாரர் எவருக்கும் வழங்கியிருந்தாலொழிய கொல்களத்தின் கண்காணிப்பாளர் ஏதேனும் விலங்கை அறுப்பதற்கு அனுமதித்தலாகாது. அச்சிடப்பட்ட அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னர் கொல்களத்தில் கண்காணிப்பாளரினால் உரியமுறையில் நிரப்பப்படுதலும் அவரினால் அது வழங்கப்படும் இறைச்சிக்கடைகாரரினாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டுமென்பதுடன் வழங்குகைத் திகதியைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

*8. இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்திற்கமைவாக கொல்களம் பிரகடனப்பட்டிருத்தல் வேண்டும்.*

*9. இப் பகுதியின் 38டவது துணைவிதியின் பிரகாரம் அனுப்புவதற்கான விலங்குகள் கொல்களத்தின் வளவுகளினுள் அனுமதிக்கப்பட முன்னர் கொல்களக் கண்காணிப்பாளருக்கு காண்பிக்கப்படல் வேண்டும்.*

*10. அறுக்கப்படுவதற்கு முன்னர் கொல்களத்தின் வளவுகளில் பகிரங்கமாக வெளிக்காட்டி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் விலங்கை எவரேனும் ஆளொருவர் உரிமைகோரினால் அத்தகைய விலங்கு தொடர்பில் வருமதியாகவுள்ள எவையேனும் கட்டணங்களை உடனடியாகச் செலுத்துவதற்கும் தேவை ஏற்படின் அதனை கொல்களத்திலிருந்து அப்புறப்படுத்தலும் வேண்டும். .*

*11. கொல்களத்திற்கு கொண்டுவரப்பட்ட அல்லது அதில் விட்டுவைக்கப்பட்ட எல்லா விலங்குகளும், அவை தப்பியோடுவதைத் தடுப்பதற்கு கயிறுகளால் பிணைக்கப்படுதல் வேண்டும்.*

*12. உரிமம் பெற்ற இறைச்சிக்கடைக்காரர் ஒவ்வொருவரும் தமது உரிமப்பத்திரத்தினதும் கொல்களத்தில் தாம் தொழிலுக்கமர்த்துகின்ற ஒவ்வொரு சேவையாளரினதும் பதிவுச் சான்றிதழினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அவற்றை அவர் பெற்றவுடன் கொல்களத்தின் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.*

*13. அறுக்கப்பட்ட விலங்குகளின் தோல்களும், குடல்களும், கழிவு இறைச்சியும், அவை அகற்றப்படுமுன்னர் கழுவப்பட்டு துப்பரவாக்கப்படுவதற்கென அதற்காக ஒதுக்கிவிடப்பட்ட இடங்களில் இறைச்சிக்கடைக்காரரினால் அல்லது அவரது ஊழியர்களினால் சேகரிக்கப்படுதல் வேண்டும்.*

*14. உரிமம்பெற்ற இறைச்சிக்கடைக்காரர் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சேவையாளர்கள் கொல்களத்தைப் பயன்படுத்தும்போது அவரது சொந்தச் செயலினால் அல்லது அவரது சேவையாளர்களுள் எவரினதும் செயலினால் கொல் களத்திற்குச் செய்யப்பட்ட ஏதாவது சேதத்துக்கு தகுதியானதென பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் மதிப்பிடக்கூடியவாறான அத்தகைய தொகையைக் கோரப்பட்டதன் மீது செலுத்துவதற்கு அவர் ஆளாதலும் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஒன்றில் அவரது உரிமத்தை இல்லாததாக்குவதற்கான அல்லது உரிமம்பெற்ற இறைச்சிக்கடைக்காரரிடமிருந்து அல்லது பிணைகாரர் களிடமிருந்து அல்லது இருவரிடமிருந்தும் அத்தகைய சேதத்தொகையை அறவிடுவதற்கான விருப்பத் தெரிவை உடையவராதல் வேண்டும்.*

*15.* கொல்களத்திலிருந்து இறைச்சியை கொண்டு செல்வதற்கு துணைவிதியால் தேவைப்படுத்தப்பட்டுள்ள இறைச்சிக் கடைக்காரர்களும் ஏனையோர்களினதும் மோட்டார் வாகனங்கள் கொல்கள வளவுகளினுள் நுழையும்போதெல்லாம் சோதனைக்கென கொல்கள கண்காணிப்பாளர் முன்பாக காண்பிக்கப்படுதல் வேண்டும். அவை குறித்த கண்காணிப்பாளருக்கு திருப்திகரமாகவும் துப்பரவாகவும் சேவைக்குகந்த நிலையிலும் காணப்பட்டாலொழிய கொல்களத்திலிருந்து இறைச்சியை கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

*16.* பின்வரும் நோக்கங்கள் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் தீர்மானத்தின் மூலம் காலத்திற்கு காலம் சபையினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும் – ஆடு / மாடு ஒன்றுக்கு

(i) பின்வருவனவற்றினால் கொல்களம் பயன்படுத்துவதற்காக:-

(அ) மாடு (எருமைகள் தவிர)

(ஆ) பன்றிகள்

(ஈ) ஆடு, செம்மறி ஆடு

(ii) பின்வருவனவற்றுக்குத் தீனியளிப்பதற்காக (இருபத்தி நான்கு மணித்தியாலங்களை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக்கொண்ட காலப்பகுதி ஒவ்வொன்றுக்கும்)

(அ) ஆடு மாடுகள்

(ஆ) பன்றி

(iii) மேடையில் இருப்பாட்சி கொள்வதற்கு

(அ) ஆடு மாடுகள்

*17.* பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஒலிபெருக்கி அறிவிப்பின் மூலம் இரண்டு நாட்கள் அறிவித்தலின் பின் அதன்மீது வருமதியான கட்டணங்களை கொடுப்பனவு செய்வதிலான தவறுகைக்காக கொல்களத்தில் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் விலங்கைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யலாம் என்பதுடன் அத்தகைய விலங்கு தொடர்பில் வருமதியான எவையேனும் கட்டணங்களையும் ஏற்பட்ட செலவுகளையும் விற்றுவரவுகளிலிருந்து வைத்துக் கொள்ளுதலும், மேன்மிகை இருப்பின் அதனை விண்ணப்பத்தின்மேல் அறுப்பதற்கென அத்தகைய விலங்கை கொல்களத்திற்கு கொண்டுவந்துள்ள ஆளுக்குச் செலுத்துதலும் வேண்டும்.

*18.* தொற்று அல்லது தொடுநோயினால் பீடிக்கப்பட்ட விலங்குகள் கொல்களத்திற்கு கொண்டு வரும் போது அவை கைப்பற்றப்பட்டு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் காலத்துக்கு காலம் நியமிக்க வேண்டிய அத்தகைய இடத்துக்கு அல்லது இடங்களுக்கு பிரதேச சபையினால் தகுந்ததென எண்ணுகின்றவாறு அங்கு அழித்துவிடப்படுவதற்கு அல்லது கையாண்டு தீர்க்கப்படுவதற்கு கொண்டு செல்லப்படல் வேண்டும்.

*19.* எந்த விலங்கை அறுப்பதற்கான அனுமதிப்பத்திரம் மறுக்கப்பட்டுள்ளதோ அல்லது எந்த விலங்கை அறுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளதோ அந்த விலங்கை கொல்களத்திற்கு கொண்டுவந்துள்ள ஆள் அத்தகைய மறுப்புக்கு அல்லது தடைக்குப்பின்னர் பன்னிரெண்டு மணித்தியாலங்களுள் கொல்களத்தின் வளவுகளிலிருந்து அதனை அகற்றத் தவறினால் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒலிபெருக்கி அறிவிப்பின் மூலமான இரண்டுநாட்கால அறிவித்தலுக்குப் பின்னர் அத்தகைய விலங்கை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்விக்கலாமென்பதுடன் அத்தகைய விலங்கு தொடர்பில் வருமதியான கட்டணங்களினதும் ஏற்பட்ட செலவுகளினதும் தொகையை விற்று வரவுகளிலிருந்து பிடித்து வைத்துக்கொள்ளுதலும் மேன்மிகை ஏதுமிருப்பின் அதனை விண்ணப்பத்தின் மேல் அறுப்பதற்கென அத்தகைய விலங்கை கொல்களத்திற்கு கொண்டு வந்துள்ள ஆளுக்கு செலுத்துதலும் வேண்டும்.

*20.* இப் பகுதியின் 41வது துணைவிதியின் பிரகாரம் அத்தகைய இறைச்சியை, தோலை, குடல்களை அல்லது மிருக கழிவு இறைச்சியை அகற்றும் ஆள் எவரேனும் பிரதேச அலுவலரின் அல்லது பொலிஸ் அலுவலரின் கோரிக்கையின் மீது சோதனைக்கென அத்தகைய அனுமதிச்சீட்டை அல்லது அனுமதிச்சீட்டுக்களை காண்பித்தல் வேண்டும். அத்தகைய ஆள் அவ்வாறு செய்யத்தவறின் அத்தகைய இறைச்சி, தோல், குடல்கள் அல்லது மிருக கழிவு இறைச்சி கைப்பற்றப்படுவதற்கும் சொந்தக்காரருக்கு நட்டஈடு எதுவுமின்றி பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பணிக்கக்கூடியவாறாக கையாளப்படுவதற்கென பிரதேச சபை அலுவலகத்துக்கு அல்லது பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசெல்வதற்கும் உட்பட்டதாதல் வேண்டும்.

21. இப்பகுதியின் 44 ஆம் துணைவிதியின் பிரகாரம் (473ம் அத்தியாயமான) ஆடுமாடுகளுக்குக் குறிசுடுதலும், அவற்றை விற்பனை செய்தலும், கைமாற்றுதலும் பற்றிய கட்டளைச் சட்டத்திற்கான அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட படிவம் 'அ' வில் அடங்கியுள்ளதற்கொத்தான விலங்கைக் குறிப்பீடு செய்யும் தகவலை அத்தகைய விசேட அனுமதிபத்திரத்திற்கான விண்ணப்பம் கொண்டிருத்தல் வேண்டும். விலங்கானது விண்ணப்பகாரருக்கு உரித்தானதென அத்தாட்சிப்படுத்துகின்றதும், பிரதேச பொலிஸ் அலுவலர் அல்லது பிரதேச சபை அலுவலர் அல்லது கிராம சேவையாளர் என்போரிடமிருந்ததுமான அறிக்கையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும். இவ் விசேட அனுமதிப்பத்திரத்திற்கு சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.

22. கொல்களம் ஒவ்வொன்றும் பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் நாள்தோறும் ஆகக்குறைந்தது இரு தடவையாவது முழுமையாகக் கழுவப்பட்டு பெருக்கப்படுதல் வேண்டும்.

23. கொல்களம் ஒவ்வொன்றும் உள்ளேயும் வெளியேயும் ஆகக்குறைந்தது ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது சுண்ணாம்புப் பூச்சிடப்படுதல் அல்லது வண்ணச்சாயம் பூசப்படல் வேண்டும்.

24. கொல்களம் ஒவ்வொன்றினதும் தளப்பகுதி கருங்கல், செங்கல், நில ஓடுகள், கொங்கிறீற் அல்லது கல் பதித்து இருப்பவைகளில் ஏற்படும் உடைசல்களை வருடத்திற்கொருமுறை சம்பந்தப்பட்டவர்களால் களிம்பு பூசி புதிதாக அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

25. மேற்கூறப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் அறுக்கப்பட்ட விலங்கு உடலானது நோய் வாய்ப்பட்டதாக அல்லது மனித உணவுக்குப் பயன்பாட்டுக்கு தகுதியற்றதாக குறித்த கண்காணிப்பாளருக்கு தோன்றுமிடத்து, குறித்த இறைச்சியை உடனேயே அழித்துவிடும்படி அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டப்படுவதை அல்லது மனித உணவுக்குப் பயன்படுத்துவதை தடுக்கும் வகையில் கையாண்டு தீர்க்கும்படி பிரதேச சபையின் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் செய்வித்தல் வேண்டும்.இறைச்சியானது மனித உணவுக்குத் தகுதியற்றதென்பது மறுக்கப்படின், சொல்லப்பட்ட கண்காணிப்பாளர் அல்லது வேறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் உடனடியாக விலங்கு அறுவை மருத்துவரை அல்லது சுகாதார மருத்துவ அலுவலரைக் கொல்களத்திற்கு அழைத்து குறித்த இறைச்சியைச் சோதனையிடுமாறும் கோருதல் வேண்டும். இறைச்சியானது மனித உணவுக்குத் தகுதியற்றதென விலங்கு அறுவை மருத்துவரினால் அல்லது சுகாதார மருத்துவ அலுவலரினால் முடிவு செய்யப்படின் (இக்கருமத்தில் இவர்களின் முடிவு இறுதியாதல் வேண்டும்) இத்துணைவிதியில் இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அதனை அழித்துவிடுதல் அல்லது கையாண்டு தீர்த்தல் அத்தகைய கண்காணிப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

26. கொல் களத்தினைப் பயன்படுத்தும் இறைச்சிக்கடைக்காரர்கள், அவர்களின் உதவியாளர்கள், பிரதேச சபை அலுவலர்கள், அனுமதியளிக்கப்பட்டவர்கள் ஆகியோர் மட்டுமே விலங்கறுத்தல், தோல்உரித்தல், அல்லது உடல்களை வெட்டுதல் என்ற நடைமுறையின்போது வளவுகளினுள் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

27. இறைச்சிக்கடைக்காரர்களினால் அல்லது உதவியாளர்களினால் கொல்களத்தில் விடப்பட்ட எல்லாக் மிருக கழிவு இறைச்சியும், குடல்களும், அல்லது வேறு குப்பை கூழமும் மிருக இறைச்சிக் கழிவாகக் கையாண்டு தீர்க்கப்படுதல் வேண்டும்.

28. கண்காணிப்பாளரின் அனுமதியின்றி நிருணயிக்கப்பட்ட மணித்தியாலங்களுக்குப் பின்னர் கொல்களத்தில் விடப்பட்ட தோல்களும், மிருக கழிவு இறைச்சியும், குடல்களும், அல்லது வேறு குப்பை கூழமும் கைவிடப்பட்டதாகக் கொள்ளப்பட்டு பிரதேச சபையின் ஆதனமாக வருதல் வேண்டும். பிரதேச சபை தகுதியென எண்ணுகின்றவாறாக அவற்றைக் கையாண்டு தீர்க்கலாம்.

29. கொள்களத்தின் கண்காணிப்பாளர் அல்லது மேற்சொல்லப்பட்டவாறு அதிகாரமளிக்கப்பட்டவர் ஆடு, மாடுகளினதும் அவற்றின் குறிசுடுதல்களினதும் விவரணமொன்றையும், பிரதேச சபையினால் அதிகாரமளிக்கப்பட வேண்டிய அத்தகைய படிவத்தில் தரப்பட்டுள்ள வேறு விபரங்களையும் கொண்ட அவரினால் சோதனையிடப்பட்ட எல்லா ஆடு, மாடுகளும் பற்றிய இடாப்பொன்றை வைத்திருத்தல் வேண்டும். அத்தகைய இடாப்பு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொது விடுமுறை நாட்களிலும் தவிர பி.ப 1.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கும் இடையே கொல்களத்தின் அலுவலகத்தில் பொது மக்களுக்கு கிடைக்கக்கூடியதாகயிருத்தல் வேண்டும்.

30. பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் விசேட அனுமதியொன்றைப் பெறாமல் அல்லது அத்தகைய உரிமத்தின் தாற்பரியத்திற்கு முரணாக உரிமம் பெற்ற இறைச்சிக் கடைக்காரராகவிராத எவரேனுமாள், ஏதேனும் மாடு, செம்மறியாட்டை, வெள்ளாட்டை, அல்லது பன்றியை கொள்கலத்தில் அறுப்பது அவருக்குச் சட்டமுறையானதாதலாகாது. தீர்மானத்தின் மூலம் பிரதேச சபையினால் முடிவு செய்யப்பட்டவாறான ஒரு கட்டணம் அத்தகைய ஒவ்வொரு விசேட உரிமத்துக்கும் அறவிடப்படுதலும் வேண்டும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள் (31 -44).

31. உரிமம்பெற்ற இறைச்சிக் கடைக்கார் ஒவ்வொருவரும் கொல்களத்தில் தாம் தொழிலுக்கமர்த்த விரும்புகின்ற சேவையாளர்களின் பெயர்களை பிரதேச சபை அலுவலகத்தில் , பதிவு செய்தல் வேண்டும். பிரதேச சபையின் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் குறிப்பிட்ட ஏதேனும் பெயரைப் பதிவு செய்ய மறுக்கலாம் அல்லது ஏலவே பதிவு செய்யப்பட்டவற்றுள் எப்பெயரையும் இல்லாததாக்கலாம். அத்தகைய உரிமம்பெற்ற இறைச்சிக் கடைக்காரர் அவ்வாறு பதிவு செய்யப்படாத எவரேனுமாளை அல்லது அவரது பெயர் அவ்வாறு இல்லாததாக்கப்பட்டுள்ள எவரேனுமாளைத் தொழிலுக்கமர்த்துதலோ தொடர்ந்து தொழிலுக்கமர்த்துதலோஆகாது.

32. ஏதேனும் சருமநோயினால், குஷ்டநோயினால் அல்லது ஏதேனும் தொற்று அல்லது தொடுநோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஆளெவரும் கொல்களத்தினுள் அனுமதிக்கப்படுதலாகாது.

33. நோய்வாய்ப்பட்டதாக அல்லது மனித உணவுக்கு அறுக்கப்படுவதற்கு வேறு வகையில் தகுதியற்றதாக காணப்பட்ட ஏதேனும் விலங்கை அத்தகைய விலங்கை அறுப்பதற்கான ஓர் அனுமதிப்பத்திரம் ஏலவே வழங்கப்பட்டிருப்பினும் சரி அல்லாவிடினும், அறுப்பதனைத் தடைசெய்தல் கொல்களத்தின் கண்காணிப்பளருக்கு அல்லது விலங்கு அறுவை மருத்துவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும். அத்துடன் ஆளெவரும் அத்தகைய ஏதேனும் விலங்கை அறுத்தலாகாது.

34. நோய்வாய்ப்பட்ட மாடு, செம்மறியாட்டை, வெள்ளாட்டை, அல்லது பன்றி எவையும் கொல்களத்திற்குக் கொண்டு வரப்படுதலாகாது.

35. (i) ஆளெவரும் , பிரதேச சபையின் எல்லைப் பகுதிகளுக்கு வெளியே அறுக்கப்பட்ட ஏதேனும் மாட்டின், ஆட்டின், செம்மறியாட்டின், வெள்ளாட்டின், பன்றியின் அல்லது பண்ணைப் பறவையின் இறைச்சியை பிரதேச சபையினுள் கொண்டு வருதலாகாது. ஆயினும் இப்பகுதியின் முற்போந்த துணைவிதிகளில் ஏற்பாடுகளுக்கமைவாக காற்றுப்புகாதபடி இலச்சினையிடப்பட்ட தகரங்களில் அடைக்கப்பட்ட இறைச்சிக்கு ஏற்புடையவையாதலாகாது.

(ii) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 102 ஆம் பிரிவுக்கு அமைவாக பிரதேச சபையின் கொல்களம் நடாத்துவதற்கான உரிமப்பத்திரம் இல்லாமல் எந்த இடத்தையும் எவரும் கொல்களமாக பாவித்தல் ஆகாது. பிரதேச சபையின் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் தற்றுணிவின்படி அதற்கான அனுமதியை வழங்கலாம். அல்லது மறுக்கலாம் நிறுத்தி வைக்கலாம் அல்லது மீள பெற்றுக்கொள்ளலாம்.

(iii) உரிமப்பத்திரம் பெற்ற இறைச்சிக் கடைக்காரர் அல்லது இப்பகுதியின் 30 ஆம் துணைவிதியின் அமைவாக விசேட அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தாலன்றி எந்த மிருகங்களை அறுப்பதற்கு அனுமதிக்கப்படலாகாது.

36. ஆளெவரும் , பிரதேச சபை எல்லைகளினுள் பின்வருவனவற்றை விற்றலோ அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ ஆகாது :-

(i) பிரதேச சபை அதிகார எல்லைகளுக்கு வெளியே அறுக்கப்பட்ட ஏதேனும் செம்மறியாட்டின், வெள்ளாட்டின், ஆடு, மாடு, பன்றியின் அல்லது பண்ணைப் பறவையின் இறைச்சி;

அல்லது

(ii) தீவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட (குளிரூட்டப்பட்ட, உறையவைக்கப்பட்ட, உப்பூட்டப்பட்ட, புகையூட்டப்பட்ட அல்லது வேறு வகையில் பதனிடப்பட்ட) ஏதேனும் இறைச்சி, பிரதானமாக கால்நடை வைத்திய

அதிகாரியினால் அல்லது பிரதேச சபையின் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் சோதனையிடப்பட்டு மனித பாவனைக்குத் தகுதியானதென அனுமதிக்கப்பட்டாலொழிய,

எவ்வாறாயினும் இத்துணைவிதியின் முற்போந்த ஏற்பாடுகள் காற்றுப்புகாதபடி இலச்சினையிடப்பட்ட தகரங்களில் விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் இறைச்சிக்கு ஏற்புடையவையாதலாகாது.

37. ஆளெவரும் ஏதேனும் விலங்கின் இறைச்சியை பிரதேச சபை கொல்களத்திலிருந்து அல்லது வேறேதேனும் அறுக்குமிடத்திலிருந்து பிரதேச சபை பிரதேசத்தினுள் உள்ள சந்தைக்கு அல்லது வேறு இடத்துக்கு சூரிய ஒளியிலிருந்தும், தூசியிலிருந்தும், மழையிலிருந்தும் பயனுள்ள வகையில் பாதுகாப்பதற்கும் பொதுமக்களின் பார்வையிலிருந்து மறைப்பதற்கும், சொல்லப்பட்ட இறைச்சியை அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட ஒரு மோட்டார் வானில் கொண்டு செல்லப்பட்டாலொழிய அகற்றுதலோ அல்லது அகற்றப்பட அனுமதித்தலோ, செய்வித்தலோ ஆகாது. அத்துடன் இடத்துக்கிடம் கொண்டு செல்லப்படும்போது ஏதேனும் விலங்குத் தோல்களை ஆளெவரும் வெளிக்காட்டச் செய்வித்தலோஆகாது.

38. (473 ஆம் அத்தியாயமான) ஆடு மாடுகளுக்கு குறிசுடுதலும், அவற்றை விற்பனை செய்தலும், கைமாற்றுதலும் பற்றிய கட்டளைச் சட்டத்திற்கான அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட படிவம் அவ் உரிமம்பெற்ற இறைச்சிக் கடைக்காரர், அவருக்கான ஒரு சான்றிதழைக் காண்பித்தாலொழிய விலங்கை இறைச்சிக் கடைக்காரருக்கு விற்க விரும்புகின்ற ஆள் இறைச்சிக் கடைக்காரருடன் கொல்களத்தின் கண்காணிப்பாளருக்கு முன்னர் தோன்றி அவருக்கான இதையொத்த சான்றிதழொன்றைக் காண்பித்து இறைச்சிக் கடைக்காரருக்கு விற்பனை செய்யத் தாம் தயாராக உள்ளாரென்ற ஒரு வெளிப்படுத்துகையை கையொப்பமிட்டாலொழிய ஆடு, மாடுகளை அறுப்பதற்கான அனுமதிப்பத்திரமெதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

39. காண்பிக்கப்பட்ட விலங்கு தொடர்பில் வழங்கப்படாததும், அல்லது எவையேனும் விபரங்களில் பொய்யானதாகவுள்ளதும் அல்லது அதிலுள்ள பதிவீடுகள் அது எந்த விலங்குக்கென காண்பிக்கப்படுகின்றதோ அந்த விலங்கின் விவரணத்துடனும் குறிசுடுதல்களுடனும் ஒவ்வொரு விபரத்திலும் நேரோத்ததாகவிராததும், விலங்கறுப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெறும் நோக்கதுக்கு தேவைப்பட்டதுமான ஏதேனும் சான்றிதழைக் காண்பித்தல், எவரேனும் உரிமம்பெற்ற இறைச்சிக் கடைக்காரருக்கு அல்லது வேறு ஆளுக்கு சட்டமுறையானதாதலாகாது. அத்தகைய ஏதேனும் விலங்கு அதனைக் கொண்டு வந்துள்ள ஆளினால் உடனடியாக அப்புறப்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன் கொல்களத்தின் வளவுகளினுள் அனுமதிக்கப்படுதலுமாகாது.

40. ஆளெவரும் அறுப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதான ஏதேனும் விலங்கை கொல்களத்திற்கு வருமதியான எல்லாக் கட்டணங்களும் செலவுகளும் செலுத்தப்பட்டிருக்கும் வரையும் அறுத்தலாகாது என்பதுடன் செலுத்தப்படாமையின் விடயத்தில் விலங்கானது இப் பகுதியின் 19 ஆம் துணைவிதியின் கீழ் கையாளப்படலாம்.

41. ஆளெவரும் பகிரங்க கொல்களத்தில் அறுக்கப்பட்ட ஏதேனும் விலங்கின் இறைச்சி, தோல், குடல்கள் அல்லது கழிவு மிருக இறைச்சி எதனையும் பிரதேச சபையின் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அதிகரமளிக்கப்பட்ட படிவத்தில் அமைந்ததும் கொல்களத்தின் கண்காணிப்பாளரால் அல்லது அத்தகைய அனுமதிச் சீட்டுக்களை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட வேறு அலுவலரால் கையொப்பமிடப்பட்டதுமான அனுமதிச் சீட்டுடன் சேர்த்தனுப்பப்படாமல் கொண்டு செல்லல் ஆகாது.

42. நாய்கள் எவையும் கொல்களத்திற்குள்அனுமதிக்கப்படலாகாதென்பதுடன் ஒரு நாயின் சொந்தக்கரர் அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளெவரும் ஏதேனும் கொல்களத்திற்குள் அதனைக் கொண்டு வருதலோ அதனை நுழைய அனுமதித்தலோஆகாது. அங்கு காணப்படும் நாய்கள் எல்லாம் கட்டாக்காலியான நாய்களெனக் கையாளப்படுவதற்காகப் பொலிசாரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

43. உரிமம்பெற்ற இறைச்சிக் கடைக்காரரெவரும் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சேவையாளர்களுள் எவரும் அல்லது கொல்களமொன்றினுள் உரிமப்பத்திரம் பெறப்பட்டவேறு ஆள் எவரும் ஏதேனும் சத்தமிடுதலோ அல்லது சண்டை பிடித்தலோ அல்லது அவதூறன நிந்தனையான அல்லது ஆபாசமான மொழியைப் பயன்படுத்துதலோ ஆகாது என்பதுடன் இத்துணைவிதியை மீறுகின்ற ஆளெவரும் கண்காணிப்பாளரினால் அல்லது அவரது உதவியாளரினால் கொல்களத்திலிருந்து வெளியேற்றவும்படலாம்.

44. பிரதேச சபையின் பிரதேசத்தினுள் உரிமம்பெற்ற இறைச்சிக் கடைக்காரராகவிராத எவரேனுமாளுக்கு பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து ஒரு விசேட உரிமத்தை அவர் பெற்றிருந்தாலொழிய எவையேனும் ஆடு, மாடுகளை அறுத்தல் சட்டமுறையானதாதலாகாது என்பதுடன் அத்தகைய விசேட உரிமத்தைப் பெறும் எவரேனும் ஆள் அத்தகைய உரிமத்தில் பெயர் குறிப்பிட்ட இடத்தில் தவிர அல்லது அதன்கண் தரப்பட்டுள்ள எவையேனும் நிபந்தனைகளின் கீழ் தவிர விலங்கறுத்தலாகாது.

45. பகிரங்க கொல்களத்தில் அறுக்கப்பட்ட விலங்கின் இறைச்சியை மட்டும் இறைச்சிக் கடைகளில் விற்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக பரிசோதனை நடாத்துவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரியால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு தத்துவம் உண்டு. பிரதேச சபையின் பணி.

46. பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் கட்டணங்கள் இத்துணைவிதியில் குறிப்பிட்டவாறு பிரதேச சபைக்கு ஒவ்வொரு மிருகமும் அறுக்கப்பட முன்னர் செலுத்தப்படல் வேண்டும். அறவீடுகளும் கட்டணங்களும்

47. இப் பகுதியின் துணைவிதியில் பிரதேச சபைத் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது மிருக வைத்தியர் அல்லது பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும். தத்துவங்களை ஒப்படைத்தல்.

48. மிருகங்களை அறுப்பதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குச் செல்லுபடியாகும். அனுமதி அல்லது உரிமப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.

49. இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப் பகுதிக்குள் சம்பந்தப்பட்டுள்ள இடத்தை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு பிரதேச சபையின் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. பரிசோதனை நடைமுறையும், தத்துவமும்.

50. அனுமதிப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற் கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும். முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

51. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும். துணைவிதிகளை மீறுதல்.

52. (i) இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை கள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர்குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும். அபராதமும் தண்டணையும்.

(ii) இப் பகுதியின் 35(ii) இல் உள்ள ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் ஊஉரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 102(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 102(2) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

53. இப் பகுதியின்துணைவிதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து– பொருள் கோடலும் வரை விலக்கணமும்.

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச சபைத் தவிசாளர் எனப் பொருள்படும்.

''தகுதி வாய்ந்த அதிகாரி'' என்பது பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

''செயலாளர்'' என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவேரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது உரிய உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

''உரிமப்பத்திரதாரர்'' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

''உரிமப்பத்திரம் பெற்ற இடம்'' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப் படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

''பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய உரிய காலம்'' என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

''மிருகவைத்திய அதிகாரி'' என்பது பிரதேச சபையின் மிருகவைத்திய அதிகாரி எனப் பொருள்படும்.

"விலங்கு" என்பது கால்நடை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றிகள், கடலாமைகள் எனவும் "கால்நடை" அத்துடன் ''உரிமம்பெற்ற இறைச்சிக் கடைக்காரர்'' என்பதும் இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கும்.

**பகுதி V - பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் இறைச்சி விற்பனையை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணை விதிகள்**

துணைவிதியின் பெயர்.

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் இறைச்சி விற்பனை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பிலான நியமத்துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

நோக்கம்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

துணைவிதியை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. அத்தியாயம் 201 இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டத்துடன் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix)(ஒ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்ற வேண்டிய பணிகள் (4-15).

4. இணைப்பு 01 இலுள்ள விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளக் கோருகின்ற விற்பனை நிலையம் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் அமைந்தொழுகினால் மட்டுமே தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவோர் ஆளுக்கும் இறைச்சி விற்பனை நிலையமொன்றைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமப்பத்திரம் வழங்கப்படும்:-

(i) விற்பனைக்காக இறைச்சிகளைக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற இடம், நிலஓடுகள் (மாபிள் ஓடுகள்) அல்லது சீமெந்து சாந்து பூசப்பட்டு அல்லது துருப்பிடியாத உலோகத் தகடுகள் போடப்பட்டிருத்தல் வேண்டும்;

(ii) இறைச்சி விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படும் நிலையத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தின் தரை, சீமெந்து சாந்து பூசப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்;

(iii) இறைச்சி விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படும் நிலையத்தின் ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்கள் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப் பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை;

(iv) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்;

(v) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் ஒவ்வொரு அறையிலும் சீலிங் (உட்கூரை) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி சீலிங் நிலமட்டத்திலிருந்து 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்;

(vi) கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப்பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக் குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்;

(vii) கழிவு நீர் பாய்ந்தோடுவதை வசதிப்படுத்துவதற்கு அவசியமான சரிவினைக் கொண்டதாக சீமெந்து சாந்து பூசப்பட்ட அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட வடிகான்களைக் கொண்டிருந்தல் வேண்டும்;

(viii) (vii) பிரிவில் குறிப்பிட்ட வடிகான்களின் ஊடாக பாய்ந்து செல்கின்ற கழிவுநீர், ஏதேனும் பொது நீர்வழியில் பாய்ந்து செல்வதைத் தடுக்கப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், மேற்போந்த கழிவு நீர் உறிஞ்சிக்கொள்ளக் கூடிய கிடங்கில் பாய்ந்து செல்ல ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்;

(ix) கழிவுநீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்காத வகையில் மூடிவைக்கப்படல் வேண்டும்;

(x) இறைச்சி விற்பனை நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்களை இடுவதற்கு போதுமானளவு பாத்திரங்களை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அன்றாட வியாபார நடவடிக்கைகள் முடிவடைந்ததும் அக்கழிவுப் பொருட்களை தரைமட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 0.5 மீற்றர் ஆழத்தில் புதைத்தல் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படுகின்ற விதிகளுக்கு அமைவாக பிரதேச சபையின் குப்பை சேகரித்தல் வாகனத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்;

(xi) விற்பனை செய்யும் இடத்தில் பணியாற்றும் ஆட்களின் உபயோகத்திற்காக போதியளவு மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டுமென்பதோடு, மலசலகூட பாவனையின் பின்னர் பாவனைக்குகந்த துப்பரவு ஏற்பாட்டு முறைகளும் பொருட்களும் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(xii) இறைச்சி விற்பனைக் கூடத்தின் உரிமம்பெற்றவர் ஒவ்வொருவரும் ஆகக்குறைந்தது ஒரு படிக்கத்தையேனும் வளவுகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்கள் அவற்றை இலகுவாக அணுகக்கூடிய வகையில் உரிமம்பெற்ற வளவுகளில் வைத்திருக்கச் செய்தல் வேண்டும்;

(xiii) இறைச்சி விற்பனைக் கூடத்தின் உரிமம்பெற்றவர் ஒவ்வொரு வரும் அவரது வளவுகளிற்கு வெளியே துலாம்பரமானவொரு நிலையில் அவரது பெயரும், ‘ உரிமம்பெற்ற இறைச்சி விற்பனைக்கூடம்’ என்ற சொல்லையும் தமிழிலும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் அதன் மீது தெளிவாகத் தீந்தையிடப்பட்ட ஒரு பலகையைப் பொருத்தி வைத்தல் வேண்டும்.

(xiv) இறைச்சி விற்பனைக் கூடத்தில் உரிமம்பெற்ற வர் ஒவ்வொரு வரும் இறைச்சி விற்பனையாளர் உட்பட எல்லா ஊழியர்களினதும் பெயர்கள், முகவரிகள் என்பன பற்றிய ஒரு நிரலை சோதனைக்கென உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

(xv) தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எழுத்தில் கட்டளையிடப் படக்கூடியவாறான அத்தகைய வேறு நேரங்களிலும் இறைச்சி விற்பனைக் கூடத்தின் உரிமம்பெற்றவர் ஒவ்வொருவரும், இறைச்சி விற்பனைக் கூடத்தின் பாகமாக அமைகின்ற ஒவ்வொரு அறையினதும் சுவர்களை, நிலஓடுகளினால் மூடப்பட்ட அல்லது சீமெந்து சாந்திடப்பட்ட அத்தகைய பாகங்கள் தவிர , ஆகக் குறைந்தது ஆண்டுக்கு நான்கு தடவையாவது சுண்ணாம்பு பூச்சிடப்படவும், அத்துடன் எல்லா மரவேலைப்பாடுகளும் பூச்சிடப்படவும் அல்லது எண்ணெய்த் தீந்தையிடப்பட்டிருப்பின் வெந்நீரினாலும் சவர்க்காரத்தினாலும் கழுவப்படவும் செய்வித்தல் வேண்டும்.

5. உரிமப்பத்திரம் பெற்ற எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் நாளாந்த நடவடிக்கைகளின் இறுதியில், அவ்விடத்தின் தரையும் சுவர்களும் நிலஓடுகள் (மாபிள்) பதித்த அல்லது சீமெந்து சாந்து பூசப்பட்ட பகுதிகளும், இறைச்சி வெட்டுவதற்கு உபயோகிக்கப்படுகின்ற மரக்குற்றிகளும் உபகரணங்களும், இறைச்சி விற்பனையின் பொருட்டு இறைச்சியை காட்சிக்கு வைக்கும் இடங்களும் கிருமிநாசினித் திரவங்களை உபயோகித்து சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

6. இலையான்கள், பூச்சிகள் அல்லது வேறு ஏதேனும் பிராணிகள் உட்புகாதவாறு நன்றாக மூடிவைக்கக்கூடிய வாகனத்தில் அல்லது பெட்டியில் அல்லது வேறு ஏதேனும் பாத்திரத்தில் மூடி எடுத்துச் செல்வதாயின் அன்றி எந்த ஒரு ஆளும் எந்தவொரு இறைச்சி வகையையும் எடுத்துச் செல்லுதல் ஆகாதென்பதுடன், அத்தகைய இறைச்சியைக் கொண்டுசென்ற பின்னர் அவ்வாறு இறைச்சியைக் கொண்டு செல்வதற்காக பாவிக்கப்பட்ட வாகனம், பெட்டிகள் அல்லது ஏனைய பாத்திரங்களை கிருமிநாசினிகளை உபயோகித்து நன்றாகக் நீரினால் கழுவுதல் வேண்டும்.

7. உரிமப்பத்திரம் பெற்ற எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள வடிகான்களும், இறைச்சியைக் களஞ்சியப்படுத்துதல், தயார்படுத்தல் சம்பந்தமாக உபயோகிக்கப்படுகின்ற சகலவிதமான பாத்திரங்களும் உபகரணங்களும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்டும் மற்றும் துர்நாற்றமின்றியும் வைக்கப்படல் வேண்டும்.

8. உரிமப்பத்திரம் பெற்ற எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையங்களில் நாய்கள், பூனைகள், எலிகள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் உட்புகாதவாறு வைத்திருத்தல் வேண்டும்.

9. இறைச்சி விற்பனை நிலையத்தில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் அவசியமான வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் உரிமப்பத்திரம் பெற்றுள்ளவரின் பணியாதல் வேண்டும்.

10. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

11. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் பாவனையின் பொருட்டு தூய குடிநீர், சுத்தமான துவாய், நகச்சுத்தம் செய்யும் தூரிகை, சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் ஆகியவற்றை வைத்திருத்தல் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவரின் பணியாதல் வேண்டும்.

*12.* (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள் சுழற்சிக்குட்படுமாயின் அவற்றை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் :-

(அ) உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(ஆ) கண்ணாடி;

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்;

(ஈ) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்;

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள் ;

(ஊ) உற்பத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின்போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும்,

(எ) அபாயகரமான கழிவுகள்.

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடிவைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைப்பது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளல் வேண்டும்.

*13.* பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், இறைச்சி விற்பனை கூடத்தில் உரிமம்பெற்றவரினால் அவருக்கு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் கொள் களத்திலிருந்து இறைச்சி விற்பனைக் கூடத்திற்கு கொண்டு செல்வதில் அத்தகைய உரிமம்பெற்றவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு ஆளினதும் பயன்பாட்டுக்காக இலவசமாக பதிவு அட்டைகளை வழங்குதல் வேண்டும்.

*14.* சகல இறைச்சிக்கடை உரிமையாளர்களாலும் அனுமதி பெற்ற இடத்தில் குடிப்பதற்கேற்ற போதுமான நீரை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

*15.* சகல இறைச்சிக் கடை உரிமையாளர்களாலும் உரிமப்பத்திரம் பெறப்பட்ட கடையை, அல்லது விற்பனை நிலையத்தை இலங்கைஅரசினால் அல்லது பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் மூடிவைக்கப்படல் வேண்டும் என நிச்சயிக்கப்படும் நாட்களை தவிர ஏனைய சகல நாட்களிலும் திறக்கப்படல் வேண்டும். மேலும் பிரதேச சபையால் தீர்மானிக்கப்படாதவிடத்து திறக்கப்படும் நேரம் மு. ப. 7.00 மணி தொடக்கம் பி. ப. 7.00 மணி வரையாக இருத்தல் வேண்டும்.

*16.* எவரேனும் ஆளொருவர் சந்தை அல்லாத வேறு ஏதேனும் இடத்தில் பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமப்பத்திரமின்றி இறைச்சி விற்பனைக்காக இடமொன்றைப் பாவித்தல் ஆகாது. *நிறைவேற்றக் கூடாத பணிகள் (16-25).*

*17.* இறைச்சி விற்பனைக் கூடத்தின் உரிமம்பெற்றவர் எவரும், பிரதேச சபையின் நிர்வாக எல்லைகளினுள் உள்ளதும் (201 ஆம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர்கள் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் உரிய முறையில் வெளிப்படுத்தப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டதுமான பகிரங்க விலங்கறுமனையில் இறைச்சிக் கடைக்காரர்கள் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தகுந்த அதிகாரியினால் அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட ஓரிடத்தில் இறைச்சிக்கடைக்காரர்கள் கட்டளைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் கீழ் அறுக்கப்பட்ட விலங்குகளின் இறைச்சியல்லாத ஏதேனும் இறைச்சியை உரிமம்பெற்ற வளவுகளில் விற்றலோ விற்பனைக்கென காட்சிப்படுத்தலோ ஆகாது. அவ்வாறு அறுக்கப்பட்ட இறைச்சியை அறிந்துகொள்வதற்காக கால்நடை வைத்திய அதிகாரி அல்லது அவரால் அனுமதி வழங்கப்படும் வேறு அதிகாரி உரிமப்பத்திரம் பெறப்பட்ட முத்திரையை இடல் வேண்டும்.

18. உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் நாளாந்த வியாபார நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் விற்பனை செய்ய இயலாமல் எஞ்சியுள்ள இறைச்சி மிகைக்குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்படுமாயின் அவை களஞ்சியப்படுத்தப்பட்ட தருணத்தில் இருந்து அடுத்த நாளன்று இறைச்சி விற்பனை நிலையம் திறக்கப்படும் தருணம் வரை மேற்படி மிகைக்குளிரூட்டி உரிய வகையில் இயங்கினாலன்றி எஞ்சியுள்ள எந்தவொரு வகையைச் சேர்ந்த இறைச்சியையும் அடுத்த நாளில் விற்கவோ விற்பனைக்காகக் காட்சிக்கு வைக்கவோ அல்லது மிகைக்குளிரூட்டியிலோ அல்லது உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் வைத்திருத்தலோ ஆகாது.

19. ஆளெவரும், உரிமம்பெற்ற வளவுகளில் எத்தகையதுமான எக்காரணத்திற்காகவேனும் ஏதேனும் விலங்கை அல்லது பறவையை வைத்திருத்தல் ஆகாது.

20. ஆளெவரும், அந்நோக்கத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட படிக்கத்தினுள் தவிர, இறைச்சி விற்பனை கூடத்தினுள் துப்புதல் ஆகாது.

21. எவரொருவரும் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் இறைச்சியை இடத்துக்கிடம் கொண்டுசென்று விற்பனை செய்தல் ஆகாது.

22. இந்த துணைவிதியின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்ட எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும், எந்தவொரு நபரும் நித்திரை கொள்ளல் கூடாது .

23. ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதி முடிந்தாலன்றி, மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தலோ ஆகாது.

24. நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

25. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் இறைச்சி வைத்திருக்க அல்லது தயார்ப்படுத்த அல்லது விற்பனை செய்ய உபயோகிக்கும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர்ந்த வேறேதேனும் பண்டத்தை அல்லது உடையை அல்லது வேறுபொருளை வைத்திருத்தல் ஆகாது.

பிரதேச சபையின் பணி (26-27).

26. பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது உள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் இறைச்சிவகையின் மாதிரியை பரிசோதனை நோக்கத்திற்காக அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளல் சட்டபூர்வமானதாகும்.

27. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள இறைச்சி விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்காக உரிமப்பத்திரம் பெற்றவர் துணைவிதிகளின் ஏற்புடையவாறு பேணப்படுவது நிறைவடையாவிடத்து அல்லது இந்த துணைவிதிகளில் பிற ஏதேனும் ஒரு துணைவிதியின் நியதிகளுக்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்கு பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

அறவீடுகளும் கட்டணங்களும்.

28. யாதாயினுமொரு இறைச்சி விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக வருடாந்த உரிமப் பத்திரக் கட்டணத்தை அறவிடுவது பிரதேச சபைச் செயலாளருக்கு சட்டபூர்வமானதாகும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

29. இப் பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

*30.* இத் துணைவிதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல் லுபடிக்காலம்.*

*31.* இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய உரிய காலப் பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு தத்துவம் உண்டு.

*பரிசோதனை நடைமுறையும் தத்துவமும் (31-34).*

*32.* இப் பகுதி துணைவிதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

*33.* இப் பகுதியின் 27ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக்கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப் பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

*34.* இப் பகுதியின் 33 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு.

*35.* உரிமப்பத்திரதாரர் அல்லது யாதாயினும் ஒருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

*36.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறொன்றாகும்.

துணைவிதிகளை மீறுதல்.

*37.* இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

*அபராதமும் தண்டணையும்.*

*38.* இந்த துணைவிதிகளில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

பொருள்கோடலும் வரை விலக்கணமும்.

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச சபைத் தவிசாளர் எனப் பொருள்படும்.

"செயலாளர்" என்பது ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவேரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை" என்பது, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பது, இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என, பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது, இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

"பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்" என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

"இறைச்சிக்கடை அல்லது இறைச்சி விற்பனை நிலையம்" என்பது, இறைச்சி விற்பனைக்காக அல்லது இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படும் இடம் அல்லது விற்பனைக்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் இடத்தைக் குறிக்கும்.

"இறைச்சி" என்பது ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, கோழி இறைச்சி எனப் பொருள்படும்.

**இணைப்பு** - I

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் இறைச்சி விற்பனை நிலையங்களை நடாத்துவதற்கான வியாபார வரி / வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20**........

1. இறைச்சி விற்பனை நிலையத்தின் பெயர்:..............................

2. (i) இறைச்சி விற்பனை நிலையம் அமைந்துள்ள இடம்: வட்டாரம்....... ஆதன இல.........
   (ii) வீதியின் பெயர் :..................................
   (iii) கிராம அலுவலர் பிரிவு இல. :........ பிரிவின் பெயர்:...............

3. (i) விண்ணப்பதாரியின் பெயர்: .................................
   (ii) முழுப்பெயர் : ..................................
   (iii) நிரந்தர முகவரி : ..................................
   (iv) கிராம அலுவலர் பிரிவு :..................................
   (v) ஆள் அடையாள அட்டை இல. :...............................
   (vi) தொலைபேசி இல. :................................
   (vii) மின்னஞ்சல் முகவரி :................................

4. (i) இறைச்சி விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதி:............................
   (ii) இறைச்சி விற்பனை நிலைய முகாமையாளரின் / பிரதிநிதியின்
      (a) பெயர் : .................................
      (b) தொலைபேசி இல. :................................
   (iv) முன்னைய தொழில்:..................................

5. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i) உரிமையாளரின் பெயர்:................................

(ii) முகவரி :...................................

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா :

ஆம்:.......... இல்லை :............

ஆம் எனில் உரிம இல:.............

திகதி:...............

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20...ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

..........................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-............................

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

.................................................................................

தவிசாளர்/செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலைவரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம்:................. ஆதன இல. :................

வீதியின் பெயர்:.....................................

உரிமையாளரின் பெயர்:....................................

ஆதன விபரம்:.......................................

ஆண்டுப் பெறுமதி:............. வீதவரிநிலுவை.........

உண்டு........ இல்லை......

....................,
நிர்வாக உத்தியோகத்தர்/பகுதித் தலைவர்.

திகதி :-............................

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:..................................

செலுத்த வேண்டிய கட்டணம்:...............................

பிரிவு A B C ........................

குறிப்பு....................

..........................,
வருமானப் பரிசோதகர்.

திகதி :-............................

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

**பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை**

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.........................,
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.

திகதி :-............................

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.........................,
பிரதம சுகாதார வைத்திய அதிகாரி.

திகதி :-............................

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :....... உபயோகம் மற்றும் :........சுற்றுச்சூழல் உரிமம் :.......

சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :.......... குடிபுகு சான்றிதழ் :........

மதுவரி உரிமம் :.......

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.........................,
பிரதம வருமானப் பரிசோதகர்.

திகதி :-............................

**செயலாளரின் சிபார்சு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

.........................,
செயலாளர்.

திகதி :-............................

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது./வழங்கப்படவில்லை.

..........................,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-.............................

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல:......... பற்றுச்சீட்டு திகதி:.....................

உரிம இல :............. உரிமத் திகதி :.............

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

..........................,
இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

திகதி :-.............................

சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது

..........................,
செயலாளர்.

திகதி :-.............................

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

திகதி :-............................. ..........................,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

## பகுதி VI - பிரதேச சபையின் மீன் விற்பனையை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகள்

*துணைவிதியின் பெயர்.*

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மீன் விற்பனை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பிலான நியமத்துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

*நோக்கம்.*

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*துணைவிதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix)(ஒ) உப பிரிவுகளின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

*நிறைவேற்ற வேண்டிய பணிகள் (04-15).*

4. இணைப்பு 01 இலுள்ள விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளக் கோருகின்ற விற்பனை நிலையம் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் அமைந்தொழுகினால் மட்டுமே பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவோர் ஆளுக்கும் மீன் விற்பனை நிலையமொன்றைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமப்பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும்.

(i) விற்பனைக்காக மீன்களைக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற இடம், மாபிள் ஓடுகள் அல்லது சீமெந்து சாந்து பூசப்பட்டு அல்லது துருப்பிடியாத உலோகத் தகடுகள் போடப்பட்டிருத்தல் வேண்டும்;

(ii) மீன் விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படும் நிலையத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தின் தரை, சீமெந்து சாந்து பூசப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்;

(iii) மீன் விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படும் நிலையத்தின் ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வொவ்வொரு அறையினதும் சாளரங்கள் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப் பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதாவதில்லை;

(iv) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்;

(v) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை (சீலிங்) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி உட்கூரை நில மட்டத்திலிருந்து 3.0 மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்;

(vi) கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்;

(vii) கழிவு நீர் பாய்ந்தோடுவதை வசதிப்படுத்துவதற்கு அவசியமான சரிவினைக் கொண்டதாக சீமெந்து சாந்து பூசப்பட்ட அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட வடிகான்களைக் கொண்டிருந்தல் வேண்டும்;

(viii) (vii) பிரிவில் குறிப்பிட்ட வடிகான்களின் ஊடாக பாய்ந்து செல்கின்ற கழிவுநீர், ஏதேனும் பொது நீர்வழியில் பாய்ந்து செல்வதைத் தடுக்கப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், மேற்போந்த கழிவுநீர் உறிஞ்சிக் கொள்ளக்கூடிய கிடங்கில் பாய்ந்து செல்ல ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்;

(ix) கழிவுநீர் உறிஞ்சிக் கொள்ளும் குழியை வளியுடன் கலக்காத வகையில் மூடிவைக்கப்படல் வேண்டும்;

(x) மீன் விற்பனை நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்களை இடுவதற்கு போதுமானளவு பாத்திரங்களை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அன்றாட வியாபார நடவடிக்கைகள் முடிவடைந்ததும் அக்கழிவுப்பொருட்களை தரைமட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 0.5 மீற்றர் ஆழத்தில் புதைத்தல் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படுகின்ற விதிகளுக்கு அமைவாக பிரதேச சபையின் குப்பை சேகரித்தல் வாகனத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்;

(xi) விற்பனை செய்யும் இடத்தில் பணியாற்றும் ஆட்களின் உபயோகத்திற்காக போதியளவு நீரடைக் கப்பட்ட மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டுமென்பதோடு, மலசலகூட பாவனையின் பின்னர் பாவனைக்குகந்த சுகாதார ஏற்பாட்டு முறைகளும் பொருட்களும் விநியோகிக் கப்பட்டிருத்தல் வேண்டும்;

(xii) மீன் விற்பனைக் கூடத்தின் உரிமம் பெற்றவர் ஒவ்வொரு வரும் ஆகக் குறைந்தது ஒரு படிக்கத்தையேனும் வளவுகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்கள் அவற்றை இலகுவாக அணுகக் கூடிய வகையில் உரிமம் பெற்ற வளவுகளில் வைத்திருக்கச் செய்தல் வேண்டும்;

(xiii) மீன் விற்பனைக்கூடத்தின் உரிமம் பெற்றவர் ஒவ்வொரு வரும் அவரது வளவுகளிற்கு வெளியே துலாம்பரமானவொரு நிலையில் அவரது பெயரும், 'உரிமம் பெற்ற மீன் விற்பனை க்கூடம்' என்ற சொல்லையும் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் அதன்மீது தெளிவாகத் தீந்தையிடப்பட்ட ஒரு பலகையைப் பொருத்திவைத்தல் வேண்டும்.

(xiv) மீன் விற்பனைக்கூடத்தில் உரிமம் பெற்றவர் ஒவ்வொரு வரும் சோதனைக்கென எல்லா நேரங்களிலும் கிடைக்கக்கூடிய வகையில், மீன் விற்பனையாளர்கள் உட்பட எல்லா ஊழியர்களினதும் பெயர்கள், முகவரிகள் என்பன பற்றிய ஒரு நிரலை வளவுகளில் அவர் வைத்திருத்தலும் வேண்டும்.

(xv) பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எழுத்தில் கட்டளையிடப்படக் கூடியவாறான அத்தகைய வேறு நேரங்களிலும் மீன் விற்பனைக் கூடத்தின் உரிமம் பெற்றவர் ஒவ்வொருவரும், மீன் விற்பனைக் கூடத்தின் பாகமாக அமைகின்ற ஒவ்வொரு˙ அறையினதும் சுவர்களை, வழுவழுப்பான ஓடுகளினால் மூடப்பட்ட அல்லது சீமெந்து அடிக்கப்பட்ட அத்தகைய பாகங்கள் தவிர, ஆகக்குறைந்தது ஆண்டுக்கு நான்கு தடவையாவது சுண்ணாம்பு பூச்சிடப்படவும், அத்துடன் எல்லா மர வேலைப்பாடுகளும் பூச்சிடப்படவும் அல்லது எண்ணெய்த் தீந்தையிடப்பட்டிருப்பின் வெந்நீரினாலும் சவர்க்காரத்தினாலும் கழுவப்படவும் செய்வித்தல் வேண்டும்.

5. உரிமப்பத்திரம் பெற்ற எந்தவொரு மீன் விற்பனை நிலையத்திலும் நாளாந்த நடவடிக்கைகளின் இறுதியில், அவ்விடத்தின் தரையும் சுவர்களும் நிலஓடுகள் (மாபிள் ஓடுகள்) பதித்த அல்லது சீமெந்து சாந்து பூசப்பட்ட பகுதிகளும், மீன் வெட்டுவதற்கு உபயோகிக்கப்படுகின்ற மரக் குற்றிகளும் உபகரணங்களும், மீன் விற்பனையின் பொருட்டு மீன்கள் காட்சிக்கு வைக்கும் இடங்களும் கிருமிநாசினித் திரவங்களை உபயோகித்து சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

6. இலையான்கள், பூச்சிகள் அல்லது வேறு ஏதேனும் பிராணிகள் உட்புகாதவாறு நன்றாக மூடிவைக்கக் கூடிய வாகனத்தில் அல்லது பெட்டியில் அல்லது வேறு ஏதேனும் பாத்திரத்தில் மூடி எடுத்துச் செல்வதாயின் அன்றி எந்த ஒரு ஆளும் எந்தவொரு மீன் வகையையும் எடுத்துச்செல்லுதல் ஆகாதென்பதுடன், அத்தகைய மீன்களை கொண்டு சென்ற பின்னர் அவ்வாறு மீன்களைக் கொண்டு செல்வதற்காக பாவிக்கப்பட்ட வாகனம், பெட்டிகள் அல்லது ஏனைய பாத்திரங்களை கிருமிநாசினிகளை உபயோகித்து நன்றாகக் நீரினால் கழுவுதல் வேண்டும்.

7. உரிமப்பத்திரம் பெற்ற எந்தவொரு மீன் விற்பனை நிலையத்திலும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள வடிகான்களும், மீன்களைக் களஞ்சியப்படுத்துதல், தயார்படுத்தல் சம்பந்தமாக உபயோகிக்கப்படுகின்ற சகல விதமான பாத்திரங்களும் உபகரணங்களும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்டும் மற்றும் துர்நாற்றமின்றியும் வைக்கப்படல் வேண்டும்.

8. உரிமப்பத்திரம் பெற்ற எந்தவொரு மீன் விற்பனை நிலையங்களை நாய்கள், பூனைகள், எலிகள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் உட்புகாதவாறு வைத்திருத்தல் வேண்டும்.

9. மீன் விற்பனை நிலையத்தில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் அவசியமான வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் மீன் விற்பனை செய்யும் இடத்தில் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் உரிமப்பத்திரம் பெற்றுள்ளவரின் பணியாதல் வேண்டும்.

10. உரிமப் பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

11. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் பாவனையின் பொருட்டு தூய குடிநீர், சுத்தமானது வாய், நகச்சுத்தம் செய்யும் தூரிகை, சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் ஆகியவற்றை வைத்திருத்தல் உரிமப்பத்திரம் பெற்றுள்ளவரின் பணியாதல் வேண்டும்.

12. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள் சுழற்சிக்குட்படுமாயின் அவற்றை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் :-

(அ) உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(ஆ) கண்ணாடி;

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்;

(ஈ) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்;

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோகவகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகவகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள்;

(ஊ) உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின் போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும்;

(v) அபாயகரமான கழிவுகள்.

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைப்பது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளல் வேண்டும்.

13. பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் , மீன் விற்பனை கூடத்தில் உரிமம்பெற்றவரினால் அவருக்கு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், மீன் விற்பனைக்காக கொண்டு செல்வதில் அத்தகைய உரிமம்பெற்றவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு ஆளினதும் பயன்பாட்டுக்காக இலவசமாக பதிவு அட்டைகளை வழங்குதல் வேண்டும்.

14. சகல மீன் கடை உரிமையாளர்களாலும் அனுமதி பெற்ற இடத்தில் குடிப்பதற்கேற்ற போதுமான நீரை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

15. சகல மீன் கடைஉரிமையாளர்களாலும் உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்திற்கான கடையை அல்லது விற்பனை நிலையத்தை இலங்கை அரசினால் அல்லது பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் மூடிவைக்கப்பட வேண்டும் என நிச்சயிக்கப்படும் நாட்களை தவிர ஏனைய சகல நாட்களிலும் திறக்கப்படல் வேண்டுமென்பதுடன் திறக்கப்படும் நேரம் மு. ப 7.00 மணி தொடக்கம் பி.ப 7.00 மணி வரையாக இருத்தல் வேண்டும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள் (16-25).

16. எவரேனும் ஆளொருவர் சந்தை அல்லாத வேறு ஏதேனும் இடத்தில் பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமப்பத்திரமின்றி மீன் விற்பனைக்காக இடமொன்றைப் பாவித்தல் ஆகாது.

17. உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் நாளாந்த வியாபார நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் விற்பனை செய்ய இயலாமல் எஞ்சியுள்ள மீன்கள் மிகைக் குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்படுமாயின் அவை களஞ்சியப்படுத்தப்பட்ட தருணத்தில் இருந்து அடுத்த நாளன்று மீன் விற்பனை நிலையம் திறக்கப்படும் தருணம் வரை மேற்படி மிகைக்குளிரூட்டி உரிய உரிய வகையில் இயங்கினாலன்றி எஞ்சியுள்ள எந்தவொரு வகையைச் சேர்ந்த மீனையும் அடுத்த நாளில் விற்கவோ விற்பனைக்காகக் காட்சிக்கு வைக்கவோ அல்லது மிகைக் குளிரூட்டியிலோ அல்லது உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் வைத்திருத்தலோ ஆகாது.

18. ஆளெவரும் , உரிமம்பெற்ற வளவுகளில் எத்தகையதுமான எக்காரணத்திற்காகவேனும் ஏதேனும் விலங்கை அல்லது பறவையை வைத்திருத்தல் ஆகாது.

*19. ஆளெவரும் , அந்நோக்கத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட படிக்கத்தினுள் தவிர , மீன் விற்பனை கூடத்தினுள் துப்புதல் ஆகாது.*

*20. அங்காடி வியாபாரம் செய்வதற்காக உரிமப்பத்திரம் பெற்று மீன் விற்பவர்களால் மீன் விற்கப்படும் போது தம்மால் சுத்தப்படுத்தப்படும் மீன்களின் கழிவுகளை பாதையின் ஓரங்களில் அல்லது பொது இடங்களில் வீசக் கூடாது என்பதுடன் அக்கழிவுப் பொருட்களை முறையாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*21. பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட உரிமப்பத்திரமின்றி எவரொருவராலும் பிரதேச எல்லைக்குள்அங்காடி மீன் வியாபாரம் செய்ய முடியாது. மூடப்பட்ட வாகனத்தில் அல்லது மூடப்பட்டவேறு பொருத்தமான பாத்திரத்திற்குள் அன்றி தமது உரிமப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து வியாபாரம் செய்வதற்கான மீன் எதையும் கொண்டு செல்வதற்கு எந்தவொரு மீன் கடை உரிமையாளராலும் எவரொருவருக்கும் அனுமதியளிக்கக் கூடாது. அவ்வாறான சகல வாகனம், கூடை, தகரப்பாத்திரம் அல்லது வேறு பாத்திரங்கள் எப்பொழுதும் சுத்தமாகவும் நல்ல நிலையிலும் இருப்பதை உரிமப்பத்திரம் பெற்றவர் கவனித்தல் வேண்டும்.*

*22. இந்த துணைவிதியின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்ட எந்தவொரு மீன் விற்பனை நிலையத்திலும், எந்தவொரு நபரும் நித்திரை கொள்ளல் கூடாது .*

*23. ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டகாலப் பகுதி முடிந்தாலன்றி, மேற்படி உரிமப் பத்திரத்திற்குரிய இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தலோ ஆகாது.*

*24. நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.*

*25. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் மீன் வைத்திருக்க அல்லது தயார்ப்படுத்த அல்லது விற்பனை செய்ய உபயோகிக்கும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர்ந்த வேறேதேனும் பண்டத்தை அல்லது உடையை அல்லது பாய் அல்லது வேறு பொருளை வைத்திருத்தல் ஆகாது.*

*பிரதேச சபையின் பணி (26-27).*

*26. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஏதேனுமொரு உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அல்லது மீன் விற்பனை நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் மீன் வகையின் மாதிரியை பரிசோதனை நோக்கத்திற்காக அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளல் சட்டபூர்வமானதாகும்.*

*27. இந்த துணைவிதியின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள மீன் விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப் பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.*

*அறவீடுகளும் கட்டணங்களும்.*

*28. யாதாயினுமொரு மீன் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக உச்சக் கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவது பிரதேச சபைச் செயலாளருக்கு சட்டபூர்வமான தாகும்.*

*தத்துவங்களை ஒப்படைத்தல்.*

29. இப் பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.*

30. இத்துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம்31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும், தத்துவமும் (31-34).*

31. இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப் பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

32. இந்த பகுதியின் துணைவிதியின்நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல்கூடாது.

33. இப் பகுதியின் 27ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப் பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

34. இப் பகுதியின் 33 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு.

*முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.*

35. உரிமப் பத்திரதாரர் அல்லது யாராயினுமொருவர் எழுத்து மூலமான அல்லது வாய்மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபைத் தவிசாளரிற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்அலுவலரினால் முறையான விசாரணை மேற் கொண்டு தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

*துணைவிதிகளை மீறுதல்.*

36. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் தவறொன்றாகும்.

*அபராதமும் தண்டணையும்.*

37. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

*பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.*

38. இந்த துணைவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச தவிசாளர் எனப் பொருள்படும்.

"செயலாளர்" என்பது, ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை" என்பது, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பது, இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது, இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப் பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப் படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

"பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்" என்பதனால் உரிய உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

"மீன் கடை அல்லது மீன் விற்பனை நிலையம்" என்பது, மீன் விற்பனைக்காக அல்லது மீன் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படும் இடம் அல்லது வளவுகளின் கடைகளில் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் இடத்தைக் குறிக்கும்.

**இணைப்பு** - I

**பிரதேச சபை அதிகாரஎல்லைக்குள் மீன் விற்பனை நிலையங்களை நடாத்துவதற்கான வியாபாரவரி /வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 20** ..........

1. மீன் விற்பனை நிலையத்தின் பெயர்:..............................

2. (i) மீன் விற்பனை நிலையம் அமைந்துள்ள இடம்: வட்டாரம்....... ஆதன இல. :.........
   (ii) வீதியின் பெயர் :..................................
   (iii) கிராம அலுவலர் பிரிவு இல. :........ பிரிவின் பெயர்:...............

3. (i) விண்ணப்பதாரியின் பெயர்: .................................
   (ii) முழுப்பெயர் : ..................................
   (iii) நிரந்தர முகவரி : ..................................
   (iv) கிராம அலுவலர் பிரிவு :..................................
   (v) அடையாள அட்டை இல. :...............................
   (vi) தொலைபேசி இல. :................................
   (vii) மின்னஞ்சல் முகவரி :................................

4. (i) மீன் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படும் திகதி:............................
   (ii) மீன் விற்பனை நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்
      (a) பெயர் : .................................
      (b) தொலைபேசி இல. :................................
   (iii) முன்னைய தொழில்:..................................

5. கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i) உரிமையாளரின் பெயர்:................................

(ii) முகவரி :...................................

6. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா :

ஆம்:.......... இல்லை :............

ஆம் எனில் உரிம இல. :.............

திகதி:...............

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20...ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

.........................,

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-............................

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

.................................................................................

தவிசாளர்/செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலைவரிப் பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம்:.................. ஆதன இல. :................

வீதியின் பெயர்:.....................................

உரிமையாளரின் பெயர்:....................................

ஆதன விபரம்:.......................................

ஆண்டுப் பெறுமதி:............. வீதவரி நிலுவை.........

உண்டு........ இல்லை......

....................,

நிர்வாக உத்தியோகத்தர்/

பகுதித் தலைவர்.

திகதி :-............................

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:..................................

செலுத்த வேண்டிய கட்டணம்:................................ பிரிவு A B C

குறிப்பு...................

.........................,

வருமானப் பரிசோதகர்.

திகதி :-............................

**பிரதம சுகாதார வைத்திய அலுவலரின் அறிக்கைக்காக**

**பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை**

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.........................,
*பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.*

*திகதி* :–............................

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.........................,
*பிரதம வைத்திய சுகாதார அதிகாரி.*

*திகதி* :–............................

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

*வாடகை ஒப்பந்தம் :....... உபயோகம் மற்றும் :........சுற்றுச்சூழல் உரிமம் :.......*

*சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை :.......... குடிபுகு சான்றிதழ் :........ மதுவரி உரிமம் :.......*

*விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.*

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.........................,
*பிரதம வருமானப் பரிசோதகர்.*

*திகதி* :–............................

**செயலாளரின் சிபார்சு**

*உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.*

.........................,
*செயலாளர்.*

*திகதி* :–............................

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது./வழங்கப்படவில்லை.

.........................,
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-............................

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல:......... பற்றுச்சீட்டு திகதி:....................

உரிம இல :............ உரிமத் திகதி :............

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

.........................,
இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

திகதி :-............................

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது

.........................,

செயலாளர்.

திகதி :-............................

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

□.........................
பிரதேச சபைத் தவிசாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திகதி :-............................

2-495

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.